அ: 56

# இந்திரா

## ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின்
## ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விசேஷ மலர்







2700





INDIRA · CHETTINAD




RAJAH SIR ANNAMALAI CHETTIAR OF CHETTINAD

SIXTIETH BIRTHDAY COMMEMORATION VOLUME.

# காலப்போக்கை உங்களால் நிறுத்தமுடியாது



காலம். அது நடந்துகொண்டேயிருக்கிறது. அதை நிறுத்திவைக்க எவருக்கும் வலிமை கிடையாது.

மனிதனுக்கு முக்கிய கடமைகள் பல உண்டு. இன்று செய்யக்கூடிய ஒரு கடமையைச் செய்யாவிடின், நாளை அதைச் செய்யமுடியாமலே போயினும் போகும்.

உங்கள் மனைவி மக்கட்காகவும், உங்களின் முதிர்கால உபயோகத்திற்காகவும் ஒரு சொத்துத் தேவை. அதைத் தேடி வைக்கவேண்டியது உங்கள் கடமை.

அத்தேட்டத்தை ஒரு மிட்லண்ட் பாலிஸிமூலம் ஏற்படுத்துவதே எளிதான நேர்வழி. அதை இன்றே செய்யுங்கள்.

சேர்மன்:

குமாரராஜா

SIR. M. A. முத்தையா செட்டியார், Kt.

of Chettinad

டைரக்டர்கள்:

AL. SP. PL. சுப்பிரமணியன் செட்டியார் Avl.

ராவ் பகதூர் C.V.CT.V. வெங்கடாஜலம் செட்டியார் Avl.

R. ராமநாதன் செட்டியார் Avl. (Under-Sheriff of Madras).

ST. MR. VR. முருகப்ப செட்டியார் Avl.

T. S. ஷண்முகம் Avl.

---

விபரங்கட்கு எழுதுங்கள்—Mr. A. V. தியாகராஜா, மானேஜர்

# மிட்லண்டு

## இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

POST BOX 276

சென்னை

# 'இந்திரா'

ராஜா சர் அண்ணுமலை செட்டியார் அவர்கள்

## சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விசேஷ மலர்

☆

ஆசிரியர்:

ராம. பழனியப்ப செட்டியார்

☆

## பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| சமர்ப்பணம் | ... | | 1 |
| எம் குலவேந்தனின் இணையற்ற சேவை | ... | ராம பழனியப்ப செட்டியார் | 3 |
| கோடிக்கு ஒருவன் | ... | கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனர் | 7 |
| வாழ்த்து | ... | லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் | 10 |
| வாழ்த்துக் கடிதங்கள் | ... | | 11 |
| ஆசிச் செய்திகள் | ... | | 12 |
| பாராட்டுரை | ... | கூர்மா வேங்கட ரெட்டி நாயுடு | 13 |
| வாழ்த்து | ... | | 14 |
| யோகம் பிறக்கிறது | ... | ப. நீ. | 15 |
| அன்பின் அரசியல் | ... | நா. கனகராஜய்யர் பி. ஓ. எல். | 17 |
| சொற் செல்வம் | ... | அ. மு. சரவண முதலியார் | 20 |
| அச்சமென்பதில்லையே | ... | 'குகப்ரியை' | 30 |
| அரசரின் ஆர்வம் | ... | வி. என். குட்வா, ஐ. ஸி. எஸ். | 34 |
| மகிழ்ச்சியுரை | ... | எம். கே. தியாகராஜ பாகவதர் | 35 |
| அறம் வளர்த்த நாயகி | ... | கிருபானந்தவாரி | 36 |
| தமிழில் கீர்த்தனைகள் | ... | எஸ். பாலகிருஷ்ணன், பி. எஸ். ஸி. ஆனர்ஸ். | 39 |
| தமிழ் பாட்டு | ... | சங்கீத வித்வான் வீணைதீர்த்தான் செட்டியார் | 43 |
| மாதவர் நோன்பும் மடவார் கற்பும் | ... | வித்வான் மு. அருணசலம் பிள்ளை | 45 |
| தமிழ் வள்ளல் | ... | வித்வான் இ. சிவகுருநாதன் | 48 |
| வாழ்த்து | ... | ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர் | 50 |
| நினைவின் அருமை | ... | மு. வரதராசனர், பி. ஓ. எல். | 51 |
| கலையோ கலை | ... | பி. கோதண்டராமன், எம். ஏ. பி. எல். | 54 |
| மூளை மூனையில் | ... | எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் | 57 |
| வைதண்டத்தில் வீடு | ... | வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. சி | 61 |
| செட்டி நாட்டு ராணி அவர்களின் சிறப்பு | ... | சா. மு. வி. சிவகாமி ஆச்சி | 63 |

| | | | |
|---|---|---|---|
| பெண் கல்வி | ... | சுப. விசாலாட்சி | 64 |
| ராஜா சர் அண்ணமலை மன்னர் 60-ம் ஆண்டு நிறைவு விழா | ... | மோசூர் கந்தசாமி முதலியார் | 65 |
| கீதாஞ்சலி | ... | வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ. | 66 |
| ஆராரோ! | ... | மு. அருணசலம். எம். ஏ. | 69 |
| சிவாஜி ராமதாஸ் | ... | சுவாமி சுத்தானந்த பாரதியார் | 74 |
| பேசும் தெய்வம் | ... | ஜி. சதாசிவம் | 81 |
| ஸி. ஓய். சிந்தாமணி, டி. கே. சி. | | ஆர். திருஞான சம்பந்தம் | 87 |
| அண்ணமலை சர்வகலாசாலை | ... | | 89 |
| செட்டி நாட்டரசர் தம் சிறப்பியல்பு | ... | வித்வான் விசு. திருநாவுக்கரசு செட்டியார் | 98 |
| அருந்திருப்பணிகள் | ... | பரிதிமால் தில்லை | 100 |
| என்று திருந்தும்? | ... | நீலாவதி ராமசுப்பிரமணியம் | 102 |
| பண்டைத் தமிழ் நாடு | ... | வே. இராமநாதன் செட்டியார் | 105 |
| மகிழ்ச்சியுரை | ... | பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள் | 108 |
| பருந்தும் நிழலும் | ... | டி. கே. சிதம்பரநாத முதலியார், பி. ஏ. பி. எல். | 110 |
| | | | 114 |
| வாழ்த்து | ... | | |
| உதாரண புருஷர் | ... | ப. நீலகண்டன் | 115 |
| "அண்ண மலையானைப் பாடுதுங்காண் அம்மானய்" | ... | சு. அ. இராமசாமி | 117 |
| குமாரராஜாவுடன் ஒரு மணி நேரம் | ... | ராம. பழ. | 119 |
| ராஜா சர் அண்ணமலைச் செட்டியார் அவர்கள் சரித்திரம் | ... | | 121 |
| ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் பிரசங்கமும் உபசாரப் பத்திரங்களும் | ... | | 134 |
| செட்டிநாட்டு ஜோதி | ... | எப். ஜி. நடேசய்யர் | 143 |
| ஏழைச் சிறுவன் | ... | 'கண்டன்' | 145 |
| நாட்டியலும் நல்லறமும் | ... | ரா. பி. சேதுப் பிள்ளை பி. ஏ. பி. எல். | 149 |
| வாழ்த்துப் பா | ... | சி. தேசிக விநாயகம் பிள்ளை | 152 |
| குழந்தைப் பாடல்கள் | ... | சொ. முருகப்பா | 153 |
| குமாரராஜா சர் முத்தையா செட்டியாரவர்கள் சரித்திரம் | ... | | 157 |
| திருவாளர் சி. வி. சிடி. வேங்கடாசலம் செட்டியாரவர்கள் | ... | | 162 |
| வாழ்த்து | ... | சுந்தரேச சாஸ்திரிகள் | 165 |
| "புகழாய பொருளோடு" | ... | திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், எம். ஏ. | 166 |
| தமிழ் இசை நலம் | ... | கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. எம். எல். | 169 |
| வாரும் தோழரே | ... | எம். கே. எஸ். | 176 |
| வாழ்த்துப் பாடல்கள் | ... | எம். என். எம். பாவலர் | 177 |
| தமிழ் மறு மலர்ச்சி | ... | பி. ஸ்ரீ. | 181 |

# Index to ADVERTISEMENTS


A. K. & Sons 179
Alliance Co. 44
AL. RM. Co 178
American New Gold Co. 136
Anandas Manufacturing Co. 112
Andhra Process Studio 118
Appaswamy Chetty & Co. M. C. 165
Arumugam A. 10
Azeeze D. K. A. 104
Chandra Art & Photo Studio 103
Chellappa & Sons 112
Chockalingam Chettiar C. S. 42
Cycle Mart S. V. R. 88
Chary D. G. R. R., L. I. M. 172
Dasen Studio R. 68
Doctor Mani V. S. S. 133
Doctor Ponnuswamy Naidu N. V. 99
Gopalakrishna Kone E. M. 119
Governor's War Fund 86
Indian Bank Ltd. 161
Indira 170
Iyengar & Co. I. S. S. 180
Jupiter Films 16
Kailas New Studio 183
Kamala Book Depot 172
Kandan & Co. 175
Kanthur Legiyam Depot 73
Kathiresan Stores 113
Kesari Soaps & Candle Works Ltd. 142
" " 144
Kumaran Calendar Co. 88
" " 47
Lingam & Co. Coimbatore Wrapper 3rd Page
Lingy Chetty C. 44
Lotus Biscuit Factory 138
Madura Lodge 56
Madura South India Corporation Limited 47
Magic Chemical Works 183
Midland Insurance Co. 1
Minsara Rasam Co., Ltd. 38
Munusamy Raju S. N. 174
Murugan & Co. 182
Muthuveeranna Chetty & Son V. 150
Perry's Dinner Co. 168
Raja Rajeswari Jothida Nilayam 60
Raju Chettiar & Bro. P. A. 164
Ramani Agency V. K. 56
Ramaswamy Chettiar N. M. K. 139
Salem Provident Fund Society Ltd. 182
Santana Krishna Naidu R. 177
Shanta Book Depot 97
Sivam & Co. V. M. P. 151
South India Corporation (Madras) Ltd. Wrapper Last Page
South Indian Products Ltd., Madras 184
Super Handlooms Co. 109
Tamil Nool Pathippakam 19
The Madura Fruit Store 101
The New Guardian of India Life Insurance Co., Ltd. Cover 2nd Page
The Press Art Service 156
Thiruvalluvar Nilayam 107
Udipi Boarding Lodge 168
Vetrimurasu 160
Visalakshmi Films 177
Vivekananda Press 103




மகிழ்ச்சி பொங்கும் இந் நந்நாளில், அன்பர்களால் தொடுக்கப்பட்ட இம் மலர்மாலையைக் கலைமகளின் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ராஜா சர் அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியை நாம் ஒரு மலர் வெளியிடப்போவதன் மூலம் கொண்டாடத் தீர்மானித்திருப்பதாக அறிவித்ததும், தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் பலர் தங்கள் அன்பான ஆதரவை எங்கட்குத் தெரிவித்தார்கள். அவசியமான காரியத்தைச் செய்ய முன்வந்த எங்கள் யோசனை வரவேற்கத் தக்கதும் பாராட்டத் தக்கது மாகும் என்று பல பெரியார்கள் கடிதம் எழுதினர். நாங்கள் தொடுக்க எண்ணிய மலர், அன்பர்களின் ஆசியாலும் ஆதரவாலும் இன்று மலர்ந்தது.

கலைகளை ஆதரிப்பதையே தம் கடமையாகக் கொண்ட ராஜா சர் அண்ணாமலைச் செட்டியா ரவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவைத் தமிழ் நாட்டினரின் சார்பில் ஒரு விசேஷ மலர் வெளியிடுவதன் மூலம் கொண்டாட வேண்டியது கலை யபிவிருத்தியையே நோக்கமாகக் கொண்ட 'இந்திரா'வின் கடமையாகும். கடமை பரிபூரணமாக நிறைவெய்தியது குறித்து 'இந்திரா' மகிழ்ச்சி யடைகிறாள்.

தங்கள் அளப்பரிய வேலைகட் கிடையே, எங்கள் வேண்டுகோட் கியைந்து, விஷய தானம் புரிந்த எல்லா தமிழன்பர்கட்கும், ஆசிச் செய்திகள் அனுப்பிய ஆன்றோர் கட்கும் எங்கள் இதய பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எங்கள் இதயத்தின் ஒளியான இந்த அன்பு மலரை செட்டிநாட்டு அரசர் ராஜா சர் டாக்டர் சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியா ரவர்களின் திருக்கரங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ராஜா சர் அவர்களும், அவர்கள் தம் குடும்பமும், எல்லா செல்வங்களும் பெற்று, இப் பாரில் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

# தமிழ்த் தாத்தாவின் மகிழ்ச்சி



வே. சாமிநாதய்யர்

தன வைசியர்களுள் முதன்மை பெற்று விளங்கும் புகழ்மணியாகிய ஸ்ரீமான் டாக்டர் ராஜா சர் மு. அண்ணாமலைச் செட்டியா ரவர்களுடைய அறுபதாம் ஆண்டு விழாவைத் தாங்கள் ஒரு விசேஷ மலர் வெளியிடுவதன் மூலம் மிகவும் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டுகின்றேன்.

எல்லாத் தானங்களிலும் முதன்மையாகக் கருதப்படும் வித்தியாதானத்தைப் பல துறைகளிலும் செய்திருக்கும் அவர்களுடைய வள்ளன்மை உலகுள்ளளவும் யாவராலும் போற்றத் தக்கது. அவர்கள் பாலுள்ள அருமையான சிறந்த குணங்களை யெல்லாம் நான் எத்தனையோ முறை அனுபவித்து இன்புற் றிருக்கிறேன். கல்வி விஷயத்தில் ஏக தேசத்தில் லக்ஷக்கணக்கான திரவியத்தைச் செலவிட்டுப் பேருதவி புரிந்துள்ள மகா புருஷர்களாகிய அவர்களைப் போல் வேறு யாரையும் நான் இக்காலத்திற் கண்டதில்லை. எடுத்த காரியம் ஒவ்வொன்றையும் வெற்றிகரமாக நிறைவேற்றும் திறமை வாய்ந்த அவர்களுடைய ஜன்மதினம் விஜயதசமியாகிய விசேஷ நாளில் கொண்டாடப் பெறுவது மிகவும் பொருத்தமானதே.

இத்தகைய பெருந்தகையா ரவர்கள் தீர்க்காயுளுடன் இருந்து விளங்கும்படி செய்வித்தருளும் வண்ணம் ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம் அன்புள்ள,

வே. சாமிநாதயர்.

---

அன்புள்ள

பழனியப்ப செட்டியாரவர்களுக்கு,

செட்டி நாடு ராஜா சர் அண்ணாமலை செட்டியா ரவர்களின் ஷஷ்டி யப்த பூர்த்தி விழாவை முன்னிட்டுத் தாங்கள் வெளியிடும் விசேஷ மலர் வரவேற்புக்குரியது. ராஜா சர் அவர்கள் கலையபிவிருத்திக்காகச் செய்யும் முயற்சிகளை மிகவும் போற்றுகிறேன்.

தங்களுடைய "இந்திரா" சஞ்சிகை கண்டு மகிழ்வுற்றேன். தங்களுடைய சஞ்சிகை மேலும் மேலும் அபிவிருத்தியடைந்து, தமிழுக்குத் தொண்டாற்றுவதுடன் தென் நாட்டின் பெருமையை விளக்க வேண்டு மென்பது எனது பேரவா.

பி. ஸ்ரீ. ஆச்சார்யா

அன்பு மிக்க ஐயா,

செட்டி நாட்டரசர் கனம் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களது சஷ்டியப்த பூர்த்தி விழாவன்று "இந்திரா" வின் விசேஷ மலர் வெளியிடத் தாங்கள் முயற்சித் திருப்பதை அறிந்து அகமகிழ்கிறேன்.

நகரத்தார்களின் தவப் பயனைத் தோன்றிச் சமூகத்திற்குப் பெருமை தந்த அச் சான்றோனுக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள, இந்த நாடு பனையளவு காரியத்தைச் செய்தாலும் தினையளவேயாம். அந்நிறைநாளில் தாங்கள் சமர்ப்பிக்க விருக்கும் நன்மலர் நறுமணத்துடன் விளங்குவதாக.

தங்களன்புள்ள,

சி. மு. அரு. நாராயணஞ் செட்டியார்.

Supplement to INDIRA issue dated 1-10-41




தனவணிகக் குலம் தழைக்கவந்த வேந்தன் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள். தனவணிகர்களைப்பற்றி இந்தியா முழுமையும், வெளியுலகும்கூட அறிந்து கொள்ள முடிந்ததற்கு ஒரே ஒரு மனிதர்தான் காரணம். அவர்தான் செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள்.

"தனவணிகர்கள் வட்டித் தொழில் செய்து பணம் சம்பாதிப்பார்கள். கோயில் கட்டுவார்கள்" என்றுதான் ஒரு சில ஆண்டுகட்கு முன்வரை, தனவணிகர்களைப் பற்றிப் பிறர் எண்ணி வந்தனர். இவ்வளவுதானா? இல்லை, அவர்கள் கோயில் கட்டுவார்கள், கலைக் கோயிலையும் எழுப்புவார்கள்; உலகம் முழுமையும் சுற்றுவார்கள்; உன்னதத் தொழில் யாவையும் செய்வார்கள், உலகோர் வியக்கும் கொடையளிப்பார்கள், ஆட்சியும் புரிய வல்லவர்கள், அரசாங்கத்தையும் நடத்தும் திறமை பெற்றவர்கள் என்பதைத் தமிழ் நாட்டுக்கும் இந்தியாவுக்கும் உலகுக்கும் நிரூபித்தவர்கள் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களும் அவர் தம் குடும்பத்தாருமே யாவர்.

நட்பும், தயையும், கொடையும் பிறவிக் குணமல்லவா? இந்தக் குணங்களோடுதான் இவர்கள் பிறந்தார்கள். இன்னும், இந்தக் குணங்களே உருவெடுத்தவர்கள் இவர்கள் என்றும் சொல்லலாம். இவர்களது தந்தை பொன் வேய்ந்தார்கள். தமையன் புனல் பொழிந்தார்கள். இவர்கள் மாநிலம் புகழ மதியைப் பெய்தார்கள்.

கானாடுகாத்தான் வெ. சா. குடும்பத்தார் தமிழ் நாட்டின் திவ்ய ஸ்தலமாகிய சிதம்பரத்தைத் தங்கள் தருமங்களுக்கு ஏற்றவிடமாகத் தேர்ந்தெடுத்தனர். தில்லை நடராசர் திருக்கோயிலைத் திருத்தியமைக்க இலட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவிட்டனர். அந்தக் கோபுரம் நிமிர்ந்து நின்று ஒளி வீசுகின்றது. அதற்கடுத்தாற்போன்று, மற்றொரு கோயில் வானளவாக நிமிர்ந்து நிற்கிறது பாருங்கள். கல்விக் கோயில், கலைக்கோயில் அண்ணாமலை நகரை அழகு செய்கிறது. தாரணியில் தன் பெயரால் ஒரு பதியமைத்த தார்வேந்தனன்றோ நமது ராஜா சர். பதியும் பல்கலைக் கழகமும் தன் பெயரால் நிறுவிய தனிப் பெருமை நமது ராஜாவுக்குத் தான் உண்டு. இந்தியாவில் வேறெங்குமே இப்படி யில்லை. உலகிலும் கூட அமெரிக்காவில்தான் இப்படி ஒன்றிருப்பதாகச் செப்புகின்றனர்.

இவர்கள் வள்ளல் என்பதற்கு வேறு எடுத்துக்காட்டும் தேவையா? தேவையானால் இன்னும் எவ்வளவோ கூறலாம். எத்தனை கோயில்கட்கு மூலதனம் கொடுத்துள்ளனர். எத்தனை ஆலயத் திருப்பணிகள், எத்தனை உண்டிச்

சாலைகள், எவ்வளவு தண்ணீர்ப் பந்தல்கள், எவ்வளவு பசு மடங்கள் ஏற்படுத்தி யுள்ளார்கள். இப்பகுதியில் பெண்கள் மருத்துவ சாலையொன்று கட்டப்பட்டு கணக்கற்றோர் பயன் பெறுகின்றனர். இவர்களது உதவி பெறாத கல்விச் சாலைகளும், வைத்திய ஸ்தாபனங்களும், கலையபிவிருத்திக் கழகங்களும், தேவார பாட சாலைகளும் மிகச் சொற்பம்தான். (இவர்கள் அளித்துள்ள கொடை விவரம் இவர்களது சரித்திரத்தில் விரிவாகக் காண்க).

மிக முக்கியமான விஷயம் ஒன்று. இவர்கள் இச் சமூகத்திலுள்ள அனைவராலும் அன்புடன் நேசிக்கப்படுகின்றார்கள். எல்லாருடைய பரிபூரணத் திருப்தியை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் இச் சமூகத்தின் பிரதான்ய புருஷராக விளங்குகிறார்கள்.



ராம. பழனியப்ப செட்டியார்

இச் சமூகத்தின்பால் இவர்கட்குப் பேரபிமானம் உண்டு. சமயம் நேர்ந்தபோதெல்லாம் இவர்கள் இச் சமூகத்தினரின் நலனுக்கு அரும் பாடுபட்டிருக்கிறார்கள். இன்னும் பல அரிய காரியங்களைச் செய்து இச் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருக்கிறார்கள்.

இவர்கள் பர்மா இந்தியப் பிரதிநிதியாக லண்டன் சென்றார்கள். ராணியும் உடன் சென்றார்கள். அங்கு இச் சமூகத்திற்காகத் தங்களாலான பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். செய்கோனில் செட்டியார்கள் நால்வர் நாடு கடத்தப்பட்டபோது, பிரஞ்சு சர்க்காருடன் விவாதம் புரிந்து இந்த விதியை ரத்து செய்தார்கள். இப்படி இன்னும் பல.

1929-ம் ஆண்டு தம்முடைய கடைகளை யெல்லாம் லிமிடெட் ஆக்கிக் கம்பெனிச் சட்டத்தின் கீழ் ஒன்றுபடுத்தினார்கள். இவர்களுக்கு எவ்வளவு முன் யோசனையும் ஆழ்ந்த அறிவும் இருக்கிறதென்பதை இதிலிருந்தே யறியலாம்.

தோன்றிற் புகழோடு தோன்ற வேண்டும். அத்துடன் எல்லாச் செல்வங்களும் நிறைய இருக்க வேண்டும்.

இறையருளால் எல்லாச் செல்வங்களையும் பெற்றவர்கள் இவர்கள். செல்வப் பெருக்கு, கொடைச் சிறப்பு, நன் மக்கட்பேறு. தந்தையைப் போன்றே தனயனும் என்பதற்குச் சான்றாக விளங்குகிறார்கள் குமார ராஜா சர் முத்தையா செட்டியாரவர்கள். நம் இளவல், இளவயதிலேயே பல நலமும் வாய்க்கப் பெற்றிருக்கிறார்கள். உலகெலாம் நன்கு வாழ, செல்வமோங்க, தீதெலாம் நீங்க, மாந்தர் வாழ்வு வளம்பெற எங்கும் கல்வி நிரம்ப வேண்டுமென்ற தந்தையாரின் கொள்கையையே இவர்களும் பின்பற்றுகிறவர்கள். அனைவரும் கல்வி கற்றவர்களாக ஆகவேண்டுமென்பது இவர்களது பேரவா. மனப்பூர்வமாக விரும்பப்படும் ஒரு காரியம் தெய்வத் திருவருளால் கூட்டிவைக்கப்படும் என்பது பெரும் உண்மையல்லவா? இதனால்தான் அவர்கள் கல்வி மந்திரியானார்கள். கல்விக்காக அவர்கள் விடாமல் தொண்டாற்றி வருகிறார்கள்.



ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் 1935-ஆம் ஆண்டு லண்டனில் எடுத்தது

ராஜா சர் அவர்களின் இளைய குமாரர் திரு. இராமநாதன் செட்டியாரவர்கள் சுறுசுறுப்பு நிரம்பிய இளைஞர். பல முறை மேனாட்டுச் சுற்றுப் பிரயாணம் செய்தவர்கள். தொழிற் கல்வியில் தேர்ந்தவர்கள். வணிகத் துறையில் நிபுணர். இவர்கள் சென்னை உப ஷெரிபாக இருக்கின்றார்கள். இன்னும் பல உயர் பதவி இவர்களை யடையக் காத்துக் கொண்டிருக்கிறது.

மூன்றாவது குமாரர் திரு. சிதம்பரம் செட்டியாரவர்கள். ராஜா சர் அவர்களின் குடும்பத்தினருக்கு மிகமிகப் பிரியமானதும் முக்கியமானதுமான ஸ்தலம் நடராஜப் பிரபு வாழும் சிதம்பரமேதான். அப்பதியின் பெயரே இந்த இளைஞருக்கு இடப் பெற்றிருக்கிறது. அப்பதியின் மீது இக்குடும்பத்தினருக்கு அன்பு இருக்கிறது போலவே இவர்கள் அனைவரின் அன்புக்கும் பாத்திரமாகி யிருக்கிறார்கள்.

இவர்கள் நிர்வாகத் திறமை நிரம்பியவர்கள். சுறுசுறுப்பையே பூஷணமாகக் கொண்டவர்கள். அதிவிரைவில் இவர்கள் முன்னேற்றமடைவார்களென்பதற்கு இதுவே சான்று.

ராஜா சர் அவர்கள் நியதியான திட்டத்தின்கீழ் தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். அவர்கள் கலைஞர்; சங்கீத ரசிகர், காலை 4½ மணிக்குப் பிறகு அவர்கள் படுக்கையில் இருக்கமாட்டார்கள். 6 மணிக்குள் காலைக் கடன்களெல்லாம் முடிந்துவிடும். காலத்தைப் பொன்போலக் காப்பாற்றுகிறார்கள். சலியாத உழைப்பு; தீர்க்க யோசனை. அவர்களுடைய வாழ் நாளில் ஒரு நிமிஷத்தைக் கூட அவர்கள் வீணே கழிப்பதில்லை.

அவர்களுக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. எவரையும், எந்தச் சம்பவத்தையும் என்றைக்குமே அவர்கள் மறக்கமாட்டார்கள். அவர்களைப் பார்க்கப் போகிறவர்களைப் பரிவுடன் வரவேற்றுக் கனிவுடன் பேசி அன்புடன் உபசரித்து அனுப்புகின்றார்கள். அவர்கள் குணக்குன்று என்று சொன்னால் அது மிகையாகாது. தெய்வ பக்தி நிரம்பியவர்கள். தமிழ் பாஷை மீதும் தமிழ்ச் சங்கீதத்தின் மீதும் அளவில்லாக் காதல் கொண்டவர்கள். அவர்கள் ஆற்றியுள்ள, ஆற்றிவரும் தமிழ்ப் பணி குன்றின் மேலிட்ட விளக்கைப்போலப் பிரகாசிக்கிறது. அவர்களுக்கு பாஷை துவேஷம் கிடையாது. அவர்கள் தனவணிகர்கள் என்கிற கடலில் உதித்த சூரியன். எங்கள் குலத்திரு விளக்கு இறையருளால் எல்லா நலனும் பெற்று இன்பமுடன் வாழ்க வாழ்க! இம் மண்மிசை நீடு வாழ்க!!



செட்டிநாடு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் இரண்டாவது குமாரரும் சென்னையின் உபஷெரிபுமான ஸ்ரீமான் இராமநாதன் செட்டியாரவர்கள்

**“இந்திரா” மாதப் பதிப்பில் விளம்பரம் செய்து நீங்கள் லாபம் அடையுங்கள்**



செட்டிநாட்டு ராணி

**ஸ்ரீமதி சீதை ஆச்சி அவர்கள்**

பெண்கள் முன்னேற்றத்தில் மிகுந்த
ஆர்வம் கொண்டவர்கள்

தனவணிக சமூகத்தில் முதல் முதல்
இங்கிலாந்து சென்று வந்தவர்கள்



கோகிலகான இசைவாணி

ஸ்ரீமதி

**எம். எஸ். சுப்புலட்சுமி**

தமிழ் சங்கீத அபிவிருத்திக்கு இவர்கள்
அருந்தொண்டு ஆற்றி வருகிறார்கள்

Supplement to INDIRA issue dated 1-10-41




இந்நிலவுலகம் அளவிடலரியபடி பல கோடி பொருள்களால் நிரம்பியுள்ளது. எண்ணரிய அப்பொருள்கள் எவற்றினும் மனித வர்க்கம் உன்னத நிலையில் ஓங்கி ஒளிர்கின்றது. இந்த மனிதப்பிறப்பு எளிதில் எய்துவதன்று. அளவில் காலம், அளவறு பிறவிகள் கடந்து பெறலரும் பேறாக அது பெறப்பட்டுள்ளது. மக்கட் பிறவி அடைதற்கு அரியதோர் தெய்வீக நிலையதென்று நூலோரும் மேலோரும் சாலவும் இதனை வியந்து புகழ்ந்திருக்கின்றனர். புல் புழு முதலிய பல்வகை நிலைகளையும் தப்பி இந் நல்லுடம்பை நாம் அடைந்தது, வடகடலில் இட்ட ஓர் நுகத் தடியின் துளையுள் தென்கடலில் போட்ட ஒரு சிறு கழி வந்து அரிதின் மருவியது போலாம் என்று சீவகசிந்தாமணி என்னும் செந்தமிழ்க் காவியத்தில் நம் சிந்தை வியப்ப அந்நூலாசிரியர் உவமை ஒன்று குறித்திருக்கிறார். அக்குறிப்பினால் இப்பிறப்பின் அருமையும் பெருமையும் அறியலாகும்.

உலக நிலை, உயிர் நிலை, பரமநிலை என்னும் இந்நிலைமைகளை உணர்ந்து தனி முதல் தலைமையை யடையத்தக்க தகுதி மனிதனிடம் இனிதமைந்திருத்தலால் இப்பிறப்பிற்கு இவ்வளவு சிறப்பு ஏற்பட்டுள்ளது. இன்ப நலங் கனிந்த இத்தகைய தெய்வ அமைதியை யுடையதாயிருந்தும் மனிதக்குழு அதனை அடையமாட்டாமல் மயல் மிகுந்து அயல் மருண்டு வெய்ய நிலையில் விழுந்துழல்கின்றது.

“ கடல்புடைசூழ் உலகமெலாம் காலோடிக்
கண்ணூன்றிக் கருதி நோக்கின்
உடல்புடைசூழ் உயிரினங்கள் உயர்நிலையை
அடையாமல் உழந் துழன்று
குடல்புடைசூழ் பசியஞ்சிக் கும்பிக்கே
கூழ்வார்த்துக் கும்பு கூடி
அடல்புடைசூழ் தரவோடி அவநிலைக்கே
ஆளாகி ஆழு கின்ற”

என்றபடி யாவரும் பாழாய் வீழுகின்றனர். தாம் இனிது வாழுகின்றதாக எண்ணி வருகின்ற மானுடங்களின் வீழ் நிலையை நினைந்து பரநோக்குடையார் இவ்வாறு பரிதாபமடைகின்றார். நீர் ஓட்டத்துட்பட்ட நீள் துரும்புபோல் உலகப் போராட்டத் துட்பட்டுப் புலையாடிப் போகின்ற மக்கட் குழுவில் ஏகதேசம் அருமையாக இனிமையானவர் சிலர் எதிர்ப்படுகின்றனர். அந்த அருமையாளரே தாம் பிறந்த நாட்டிற்குப் பெருமை தருகின்றனர். அரிய பண்புகள் உள்ளே அமைந்துள்ள பொழுதுதான் மனிதன் வெளியே பெரியனாகிப் பேரொளி பெறுகின்றான். மலர் மணத்தாலும், மணி ஒளியாலும் மாண்புறுதல்போல் மனிதன் குண நலங்களால் உயர்வுறுகின்றான். குணமும் செயலும் மணமும் உருவும்போல மருவி உள்ளும் புறனும் உயிரினங்களுக்கு உறுதி தருகின்றன. அத்தகைய உயிர்க் குணங்கள் பல உள்ளன. அவ்வெல்லாவற்றுள்ளும் அருள் நலம் தலைமையாய்

அகநிலையில் ஒளிர்கின்றது. அவ்வாறே கொடைப்பண்பு புறநிலையில் பொலிந்து நிற்கின்றது. அருளும் கொடையும் உயிரும் உடலும்போல் ஒருவா உருவாய் மருவியுள்ளன. உள்ளத்தின் உயிரிரக்கம் புறத்தில் ஓர் உதவி நலனைப் பூரித்து வருகின்றது.

கொடை என்னும் சொல், கொடுத்தல் என்னும் குறிப்புடன் பிறந்தது. இம்மொழியைக் கேட்டவுடனே எவருள்ளத்தும் ஓர் இன்பவுணர்ச்சி இனிது தோன்றும். வீரம் கொடை நியாயம் என்பன பேரரசுக்குரிய பேரியல்புகளாக மதிக்கப்பட்டுள்ளன. அங்ஙனம் உயர்ந்த அம்மூன்றனுள்ளும் கொடையை இடையே வைத்துள்ளமையால் அதன் எடையுயர்வு புலனாம்.

இக்கொடை நலம் எவரிடமும் எளிதில் அமையாது; அது மிகவும் அருமையானது. சிறந்த வயிரம் உயர்ந்த மலையில் தோன்றுமேயன்றி, இழிந்த கற்பாறைகளில் தோன்றாது; அழகிய தாமரை விழுமிய பொய்கையில் பூக்குமேயன்றிக் கழிநீர்க் குழியில் பூவாது. அதுபோல் இனிய ஈகைக்குணம் உயர்ந்த குடிப்பிறப்புடைய குல மக்களிடம் கூடியிருக்குமேயல்லாமல் பிறரிடம் இராது.

> "இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
> குலனுடையான் கண்ணே உள"
>
> (குறள் 223.)

என்றது பொய்யாமொழி. இலன் எனின், அவன் குலமகன் அலன் என விநயமாக வைத்திருக்கும் இந்த அருமைத் திருக்குறளின் பொருள் நயங்களை ஆழ்ந்து நோக்கி ஈகைக்கும் குலனுக்கும் என்ன சம்பந்தம்? என்பதை ஊன்றியுணரவேண்டும்.

கொடை வள்ளல்களை இந்த நாடு அடைந்திருந்ததுபோல் வேறு எந்த நாடும் இதுவரையும் அடையவில்லை. மரம் கொடி செடி முதலிய ஓரறிவுயிர்களிடத்தும் அருள் நலம் கனிந்து அருங்கொடைபுரிந்து நம்முன்னோர் பெரும் பெயர் பெற்றுள்ளனர். அப்பேராளர்களுடைய உள்ளப் பண்பும் வள்ளற்குணமும் உள்ளுந்தோறும் எவர்க்கும் வியப்பும் விம்மிதமும் விளைத்து வருகின்றன. வரையாது கொடுத்தல், வந்தவன் வாய் திறந்து கூறாமல் குறிப்பறிந்து கொடுத்தல், தகுதிக்கு மிஞ்சிக் கொடுத்தல், தாம் ஒன்றையும் கருதாமல் உறுபயனையும் ஓராமல் பெரிதும் வாரிப் பெட்புடன் கொடுத்தல் என இன்னவாறு கொடை ஏக்கங்கொண்டு முன்னவர் முனைந்து கொடுத்து வந்தார். எண்ணி நோக்காமல் எவர்க்கும் ஈந்து வந்தமையால் அது கொடை மடம் எனக் குறிக்க வந்தது. அந்த அருமை மடமையைத் தமக்கோர் இனிய ஆபரணமாக அக்காலத்து வள்ளல்கள் ஆதரித்து நின்றனர்.

> "கொடை மடம் படுதல் அல்லது
> படை மடம் படான்" (புறம். 142.)

எனப் பேகனைக் குறித்துப் பரணர் பாடியிருக்கும் இதனால் அவனது கொடைப் பெருமையும், போர் வீரமும் ஒருங்கே புலனாம்.

இங்ஙனம் பெருங் கொடை வள்ளல்கள் பலர் பெருகியிருந்த இந்நாடு இஞ்ஞான்று அருங்கோடையாய் அலமந்துள்ளது.

> "இல்லாத நிலைமையிலும் தன்பால்வந்
> திரந்தவருக் கில்லை என்று
> சொல்லாமல் தலைகொடுத்துத் தலைக்கொடை
> எனக்குமணன் தோன்றி நின்றான் [யான்
> வல்லாரும் மலையளவு வளமுறினும்
> அரைக்காசும் வழங்கா தந்தோ
> கல்லான மனமுடைய பொல்லாதார்
> இக்காலம் கலித்தா ரம்மா!"

என்று கவன்றிருக்கும் இக்காலத்தில் ஒரு கொடை வள்ளல் அருமையாக இடையே கண்ணெதிர்ப்படின் அது எவ்வளவு இன்பமாம்? அவ்வின்பப் பேற்றை இன்று நாம் எதிர்ப்பட்டிருக்கின்றோம். அத்தகைய வள்ளல் தம் வாழ்நாளில் அறுபதாண் டெல்லையை அடைந்துள்ளதை உவந்து நாம் ஆர்வத்துடன் கொண்டாட வந்திருக்கின்றோம்.

எல்லாரும் உலோபிகளாய் உள்ளனரே! கொடையாளிகள் இல்லையே! என்று உலக நிலை தெரியாமல் உள்ளங் கவறுதல் கூடாது. கொடை அருமையுடையது, ஆதலால் அதனை எளிதில் காண முடியாது. "தாதா கோடிக்கு ஒருவன்"



குமாரராஜா முத்தையா செட்டியாரவர்கள்
மேயர்

என்றார் ஔவையார். இங்கே கோடி என்றது எல்லையின்மை குறித்து நின்றது. கோடானு கோடி பேர்களில் கொடை வள்ளல் ஒருவனை அரிதாகக் காணலாமே யன்றி மலிவாக யாண்டும் அவனை அடைய முடியாது. தரும நலம் கனிந்த இனிய காலத்தே தான் கொடையாளிகள் பெரிதும் பெருகி வருவர். பொல்லாத காலத்தில் நல்லார் ஒருவரைக் காணின் அக்காட்சி எல்லார்க்கும் ஓர் மாட்சியாகும். உள்ள நலனைக் கண்டு உவகை கூரவேண்டும்.

உள்ளம் கனிந்து, உறுபயன் நோக்காமல், உண்மை நோக்கில் பெருந்தன்மையுடன் உதவிபுரியும் உயர் வள்ளல்கள் இந்நில மண்டலத்தில் எவ்வளவு பேருள்ளனர்? எண்ணிப் பாருங்கள்! அங்ஙனம் எண்ணி நோக்கின் உண்மை புலனும். சுண்டு விரலும் துரிதமாய் மடக்க முடியாமல் மறுகி நிற்கும் நிலையை மன நிலையில் அறியலாம்.

உண்மையான வள்ளல்களுக்குத் தம் உள்ளத்துள்ளேயே ஓர் இன்பம் உண்டாம்; ஆதலால் அவர் அயலறியாமலே ஈகையில் ஆர்வம் புரிகின்றனர்.

"ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல்
தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்." (குறள் 228.)

என அந்த இன்பப் பேற்றை இழந்திருக்கும் உலோபிகளது மடமையை நினைந்து வள்ளுவப் பெருந்தகை இங்ஙனம் வருந்தியிருக்கின்றார்.

பிறர்க்கு உதவிபுரியின் அவ்வுபகாரத்தைப் பெற்றவர் உள்ளத்தே உவகை மீக்கொள்வர்; கொள்ளவே அவரது முகம் மலரும்; அம்முக மலர்ச்சியைக் கண்ட பொழுது உதவியாளர்க்கு அகம் மிக மகிழும். ஆதலால் அம்மகிழ்ச்சி, "ஈத்துவக்கும் இன்பம்" என வந்தது. பிறரறியாமல் அந்தரங்கத்தில் நிகழ்வதாதலால் உண்மையான ஆன்ம இன்பமாய் வள்ளல்களுள்ளே அது ஓங்கியுள்ளது.

"The Secret pleasure of the generous act,
Is the great mind's great bribe"

(Jhon Dryden)

என மேல்நாட்டுக் கவிஞரான டிரைடன் கூறியுள்ளதும் ஈண்டெண்ணத் தக்கது. "செயற்கரிய செய்வார் பெரியர்" என்றார் நாயனர். "இட்டார் பெரியோர்" என்றார் ஔவையார். மனிதனைப் பெருமைப்படுத்தி, திவ்விய புருடனுக்கி, தெய்வீக நிலையில் சேர்க்கவல்ல ஈகைக் குணம் போல் ஒருவனுக்கு உறுதித் துணையாவது யாண்டும் இல்லை. அத்தகைய அருமைக் கொடைப் பண்பை உரிமையாகப் பெற்றுப் பலவகையிலும் நலம் புரிந்து வரும் பெரியாராகிய ராஜா சர் அண்ணுமலைச் செட்டியாரவர்களுடைய அறுபதாண்டு நிறைவின் திருவிழாவை உரிமையுடன் கொண்டாடிப் பல்லாண்டு பாடி எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எம்பெருமான் திருவருளைச் சிந்தித்திருக்கின்றேன்.

---

வாழ்க! வாழ்க!

வ. மு. இரத்தினேசுவரையர்

காவரசின் மேலான கருணையுடன் கனகமாரி
கலைவல்லார் களிக்கும் வள்ளல்
பாவரசர் பரவுமுயர் குணனெல்லாம் பாங்குபெறச்
சிவணிநீதி நிறைந்த செம்மல்
பூவரசாய் மதிப்படைந்த புகழண்ணு மலைப்
பெரியோன்
புவனிமிசை நீடு வாழ்க.

தேவரசின் திருவருளால் பலநலனுஞ் சிறந்துமேவத்
திருமகளுஞ் செழிக்கமாதோ.

புத்திர பௌத்திரரும் பொற்பாருஞ் சுற்றமுடன்
எத்திசையுங் கீர்த்தி இயைபவே—இத்தரையில்
அண்ணு மலைவள்ளல் ஆறுபத் தாண்டுவிழா
நண்ணிமிக வாழி நயந்து.

Supplement to INDIRA issue dated 1-10-41

# வாழ்த்து

தன வணிகர் குலத்துத் திலகம்போல் விளங்கும் டாக்டர் செட்டி நாட்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் **Kt. L L. D.** அவர்களை யாவரும் நன்கறிவர்; இவர்கள் அறுபதாம் ஆண்டு 28-9-41-ல் நிறைவெய்துகிறது.

அண்ணாமலை யரசர், ஆட்சித் திறனும், நுண்ணறிவும், எண்ணிய எண்ணியாங் கியற்றுந் திண்மையும், பெருவண்மையும், கேட்டார்ப் பிணிக்குஞ் சொல் வன்மையும் நிகரற்றனவென அறிஞர் பலராலும் வியந்து பாராட்டப் பெறுகின்றன.

இவர்கள் முன்னையோரும், இவர்களுஞ் செய்த பற்பல அறங்கள், பொற்புற்று இன்றும் நின்று நிலவுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய செயற்கருஞ் செயலும், அரசாங்க சபையிலும், பிற சபைகளிலும் அமர்ந்து ஆற்றிய அரும்பெருந் தொண்டுகளும், லண்டன்மாநகரில் மன்னர் பெருமானால் நன்கு மதிக்கப்பெற்ற பெருமாண்பும் மறக்க வியலாதன.



லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

நாட்டிற்கும் மொழிக்கும் நலம் பல புரிந்து பொன்றுப் புகழ் பெற்ற இவ்வள்ளலை முடிசூடா மன்னரென்று கூறுதல் மிகையாகாது.

இவர்களின் ஒப்புயர்வற்ற தகுதிகளை யறிந்து பல பட்டங்களை வழங்கிய அரசாங்கத்தார், இன்னும் பல பட்டங்களும், பதவிகளும் வழங்கிச் சிறப்பிப்பாராக.

உலகப் பெருமக்களுள் ஒருவராகிய இவர்கள் உருவச் சிலை பெரிய நகரங்களெங்கும் நிறுவப் பெறுக. அறுபதாம் ஆண்டு நிறைவுத் திருநாள் எல்லா இடங்களிலுங் கொண்டாடப் பெறுக.

இம்மன்னர் எல்லா நலமும் மல்கப்பெற்று நீடூழி வாழ இறைவன் திருவருள் புரிவானாக

இங்ஙனம்:

பண்டிதர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்,
தமிழாசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

---

கெட்டிச் சாயங்களில் தயார் செய்யப்பட்ட நூல், பட்டு ஜமக்காளங்களும், ஜமக்காளப் பைகளும், சதுர ஜமக்காளங்களும் குறித்த காலத்தில் கோருகிறபடி தயார் செய்து அனுப்பப்படும்

**அ. ஆறுமுகம்,**

ஜமக்காள வியாபாரம், பவானி.

தேவையுள்ள விபரங்களுக்கு எழுதவும்.

Supplement to INDIRA issue dated 1-10-41

# வாழ்த்துக் கடிதங்கள்

### சர் ஆர்தர் ஹோப்,
சென்னை கவர்னர்.

ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை தகுந்த முறையில் கொண்டாட விரும்பியுள்ளதைக் கண்டு மகிழ்வெய்துகிறேன். அவருடைய நற் செய்கை பெரும்பாலும் வியாபித்துள்ளது. பிற்கால மக்கள் அன்புடனும், ஆர்வத்துடனும் அவரைப் போற்ற அவர் தென்னாட்டிலுள்ள அண்ணாமலை சர்வகலாசாலையை ஸ்தாபித்துள்ளதே என்றும் அழியாத கீர்த்தியை நிலையுறுத்தும்.

* *

### எம். கே. காந்தி

செட்டிநாடு, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் பல ஆண்டுகள் வாழ்ந்து மக்களுக்கு இன்னும் அதிகமான உதவிகளை அளிக்க நான் கடவுளை வணங்குகிறேன்.

* *

### லார்ட் எர்ஸ்கின்,
லண்டன்.

செட்டிநாடு, ராஜா சர் அண்ணாமலை செட்டியார் ஸ்தாபித்துள்ள அண்ணாமலை சர்வகலாசாலையின் வாயிலாக தனக்குக் கல்வியின் பொருட்டுள்ள ஆர்வத்தை வெளியிட்டதுடன் அரும் பெரும் அழியாக் கீர்த்தியைப் பெற்றுள்ளார். அவருக்குத் தமிழ் நாடு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. தென் இந்தியாவின் கல்வியை அபிவிருத்தி செய்தவர் என்ற முறையில் அவர் பெயர் என்றும் மறக்கற்பாலது. அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ நான் விரும்புகிறேன்.

* *

### கொச்சி மகாராஜா

செட்டிநாடு, ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களுக்கு 60-வது ஆண்டு நிறைவு விழா இனிது நடைபெற யான் பெரிதும் விரும்புகிறேன். இன்னும் அநேக வருடங்கள் அவர் வாழ்ந்து மக்களுக்குப் பெரிதும் பயனளித்துவர விரும்புகிறேன். ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற அண்ணாமலை சர்வகலாசாலையில் என் மைந்தன் கல்வி கற்ற காலையில் அதனுடைய பெருமைகளை அவன் எடுத்துரைத்தது என்றும் என் உள்ளத்திலிருந்து அகலவில்லை.

* *

### சர் எஸ். ராதாகிருஷ்ணன்,
கல்கத்தா, சர்வகலாசாலை உப அத்யக்ஷகர்.

அண்ணாமலை சர்வகலாசாலை ஸ்தாபகரின் அறுபதாம் ஆண்டு செப்டம்பர்மீ 28உ பூர்த்தியடைவதைக் கண்டு மகிழ்வுறுகின்றேன். இந்நாட்டில் ஒருவருடைய சொந்த முயற்சியிலேயே ஸ்தாபிக்கப் பெற்ற சர்வ கலாசாலை இவர்களுடையது ஒன்றே. பல வருடங்களாக அது மாணவர்களுக்கு மிகவும் உபயோகத்தையளிக்கக்கூடிய முறையில் நடந்து வருகின்றது. ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் இன்னும் அதிக ஊக்கத்துடன் தம்முடைய தொண்டை ஆற்றி வரவும், நீண்டகாலம் சுக வாழ்வு வாழவும் நான் பெரிதும் விரும்புகிறேன்.

* *

### புதுக்கோட்டை மகாராஜா

தமிழ் நாட்டிலுள்ள ஒரே தமிழ் சமஸ்தான அரசர் என்றமுறையில் நான், தென் நாட்டில் பெருமை பெற்ற அரும் பெரும் வள்ளலாகிய ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் அறுபதாண்டு சிறப்பு விழாவை முன்னிட்டு அவரால் ஸ்தாபிக்கப்பட்ட அண்ணாமலை சர்வ கலாசாலை உப அத்யக்ஷகருக்கு வாழ்த்து அனுப்பக் கடமைப் பட்டுள்ளேன்.

புதுக்கோட்டையிலுள்ள எண்ணற்றவர்களும், மற்ற நகரங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களும் அடைந்துள்ள நன்மைகளால் அவரையும் அவருடைய புதிய சர்வகலாசாலையையும் போற்றின் அது மிகைபடாது.

* *

### திவான் பகதூர் எஸ். இ. இரங்கநாதன்,
லண்டன்.

தம்முடைய பொதுஜன சேவையால் ராஜா சாஹிப் இந்தியமக்களின் உள்ளத்தைக் கவர்ந்தாரெனில் அது மிகையாகாது. அவருடைய சர்வகலாசாலை நன்கு வளர்ந்து தேசத்தில் ஒற்றுமையை நிலவவும், ராஜா சர் அவர்கள் நீண்ட நாள் வாழவும், நான் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

* *

**These seven messages are reproduced from Rajah of Chettinad Commemoration Volume: Edited by Dr. Narayanaswamy Naidu, Published by Annamalai University.**

Supplement to INDIRA issue dated 1-10-41

# ஆசிச் செய்திகள்

ஆசிரியர் 'இந்திரா'

அன்புடையீர்,

டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு வெளியிடும் விசேஷ மலரை யான் பெரிதும் போற்றுகிறேன்.

செட்டி நாட்டரசர் தம் குடும்பத்தினர் புகழ் இந்தியா முழுதும் பரவியிருக்கிறது. அவர்கள் கல்விக்கு ஆக்கமளித்து வரும் முயற்சி எந்நாளும் பயனளிக்க வேண்டுமென்பதே எனது அவா. செட்டி நாட்டரசர் பொது ஜன ஊழியத்தையே வாழ்க்கையின் இலக்ஷியமாகக்கொண்டவர். இம்மலர் ராஜா சாஹிப்புக்கும் அவர்களுடைய வம்சத்தினருக்கும் சமூக ஊழியம் புரிய தூண்டுகோலாயிருப்பதுடன், அவர்களைப் போன்று மற்றவர்களையும் சமூக சேவிகளாக்குமென்பதில் ஐயமில்லை.

தங்கள் உண்மையுள்ள,

புல்லா ரெட்டி.

கமிஷனர், கார்ப்பொரேஷன், சென்னை.

*  *

ஆசிரியர் 'இந்திரா'

அன்புடையீர்,

அண்ணாமலை சர்வ கலாசாலையின் ஸ்தாபகரும் நிர்வாகியுமான டாக்டர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தியை முன்னிட்டு வெளியிடும் விசேஷ மலர் உயர்ந்த முறையில் வெளிவருமென்று கூறின் மிகையாகாது. அவர்களுடைய தர்மத்தையும் கல்விக்கு அளித்துள்ள நன்கொடையையும் கவனிப்பின் அரச வம்சத்தினர் எனக் கொள்ளுதலே தகுதியாம்.

டாக்டர் எல். காமேஸ்வர சர்மா,

புதுக்காட்டை.

*  *

ஆசிரியர் 'இந்திரா'

அன்புடையீர்,

அன்பர் பணி செய்தலையே, தம்வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு, தமிழ் நிலத்தாருக்கு அன்புடனும் ஆர்வத்துடனும் அரிய பெரிய நன்மைகளைச் செய்துவரும் பெரும் வள்ளலாகிய கனம் செட்டிநாட்டு டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, தாங்கள் "இந்திரா" விசேஷ மலர் ஒன்று வெளியிடுவதை அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன்.

வையகம் புகழும் நமது ராஜா அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி விழா சரியான சந்தர்ப்பமாகும். அதன் சிறப்பினைத் தாங்கள் நன்கு உணர்ந்தவராதலால், "இந்திரா" விசேஷ மலர் எல்லா வகையிலும் சிறந்து விளங்கி, அனைவரையும் களிக்கச் செய்யுமென நம்புகிறேன்.

இங்ஙனம்,

தங்கள் அன்புள்ள,

அ. சேஷாத்திரி சர்மா.

ஆசிரியர் 'செட்டிநாடு' காரைக்குடி

ஆசிரியர் 'இந்திரா'

நமஸ்காரம்,

தாங்கள் அன்புடன் தெரிவித்த விருப்பத்தை நிறைவேற்ற எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. மூச்சுவிடவும் எனக்கு அவகாசம் கிடைப்பது கடுமையா யிருக்கிறது. எனக்காக வேறு யாராவது மூச்சுவிட்டால் நல்லது என்ற நிலைமையில் இருக்கிறேன். ஆகையால் கட்டுரை எழுதாததற்காக மன்னிக்க வேண்டும்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் நாட்டில் செய்திருக்கும் தர்மங்கள் அவருடைய புகழுக்கு என்றும் அழியாத சிரஞ்சீவித் தன்மையை அளித்திருக்கின்றன. சமீப காலத்தில், நமது நாட்டு சங்கீதத்தைத் தமிழோடு இணைப்பதற்காக அவர்கள் ஆரம்பித்திருக்கும் தொண்டு என்போன்றவர்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. அத்தகைய பெரியாரின் சஷ்டியப்த பூர்த்தியைத் தாங்கள் ஒரு தனி மலர் கொண்டு வந்து கொண்டாடுவது போற்றத் தக்கதாகும்.

இப்படிக்கு,

ரா. கிருஷ்ணமூர்த்தி,

ஆசிரியர், 'கல்கி', சென்னை

Supplement to INDIRA issue dated 1-10-41

# பாராட்டுரை

அண்ணாமலைப் பல்கலைக் கழக வைஸ் - சான்சலர்

சர் கூர்ம வேங்கட ரெட்டி நாயுடு அவர்கள்

(பி. ஏ. பி. எல்., டி. லிட்., எம். எல். ஏ.)

## அனுப்புஞ் செய்தி

உயர்திருவாளர் டாக்டர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியா ரவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நாளின்கண் என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டையுஞ் சேர்க்க விரும்புகின்றேன். வியக்கத்தக்க அவருடைய வண்மையைப் போற்றுதற்கு எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததற்காக மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவருடைய குடும்பத்தார் நூறாண்டாகச் செய்துவரும் பொது தருமங்களினாலும் மத சம்பந்தமான தருமங்களினாலும் புகழ் படைத்தவர்கள். தங்கள் குடும்பத்தாரின் "முயன்று பொருளாற்றித் தொண்டு செய்க" என்ற குறிக் கோளின்படி செட்டிநாட்டரசர் சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் அரிதின் முயன்று, பொருளீட்டிச் சேமித்து, பாராட்டத்தக்க வகைகளில் எல்லாம் உதவிசெய்து இத்தேச மக்களின் நன்மைக்காகத் தொண்டு செய்து வருகின்றார்.

அவருடைய கொடைகள் அரசர் கொடுக்குங் கொடையனைய. அக்கொடைக்குப் பாத்திரமாயுள்ள செய்திகள் மனிதவுள்ளம் நினைக்கக்கூடிய சீரிய செய்திகளுள் தலைமையும் பெருமையும் உடையவை. சமய சம்பந்தமான திருப்பணிகளுக்கும் பண்டைய கோயில்களைப் புதுப்பித்தற்கும் அவர் கொடுத்திருக்கும் பெருநிதியங்களைத் தவிர, இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பல்கலைக் கழகமொன்று நிறுவுதற்குப் பெருங் கொடையளித்தது குறிப்பிடற்பாற்று. அப் பல்கலைக் கழகம் உரியவாறே அவர் பெயரொடு இணைக்கப்பட்டு நடைபெறுகின்றது. அஃது அவருடைய வண்மையை மாத்திரமன்றி நல்வகையான பேருதவியைத் தேர்ந்தெடுக்கும் அவரது அறிவு நலத்தையுஞ் செவ்வன் காட்டும்.

இப்பல்கலைக் கழகத்தை நிறுவியதாலன்றியும் பிற பலவகையாலும் அவர்தம் தமிழ்ப் பற்றும் தமிழரிடத் தன்பும் வெளிப்பட் டிருக்கின்றன. தமிழிசை வளர்ச்சி கருதியும் புதிய தமிழ்ப் பாட்டுக்களைப் புனைவோரைப் புறந்தருதல் பொருட்டும் அண்மையில் அவர் பதினாயிர ரூபாய் அளித்துள்ளார்.

இந்தியப் பெண்டிரின் முன்னேற்றத்தில் அவர் மிக்க விருப்ப முடையவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தே இருபாலாருங் கல்வி பயில்கின்றனர்; ஈண்டு இப்பொழுது ஏறத்தாழ 50 மாணவியர் உண்டு. அண்ணாமலை நகரில் மகளிர் கூடியளவளாவும் மன்றத்திற்கென அழகிய கட்டடமொன்று நேர்த்தியான முறையில் அவர் அமைத்துத் தந்துள்ளார். அவர் ஆற்றியுள்ள பல்வகைக் கொடைகளையும் தருமங்களையும் புகல்வதென்றால் மிக விரியும். அவர் உவந்து பிறர்க்குக் கொடுத்துள்ள பொருள் கோடி ரூபாயாயினும் அதிகம் எனிற்சாலும். இக்காலத்தில் பொது நன்மைக்காகத் தமது பொருட் செல்வத்திலிருந்து இவ்வளவு பொருள் கொடுத்த பிறரொருவரைக் குறிப்பிடுதல் என்பதரிது. அவருடைய பரோபகாரம் இணையற்றது. இவ்வளவு பெருந் தொகைகளை அவர் இன்னவற்றிற் குரியவென வழங்கியிருக்கின்றவாற்றை நோக்கின், அவையெல்லாம் தற்காலத் தேவைகளுக்கு மிக்க பொருத்தமுடையன என்பதில் ஐயமில்லை. இவ்வள்ளல் நீடூழி வாழ்வாராக!

Supplement to INDIRA issue dated 1-10-41

# வாழ்த்து

டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய அறுபதாவது ஆண்டு விழாவை யொட்டி தங்கள் ஸ்பெஷல் இதழ் வெளிவருவதைப்பற்றி சந்தோஷப்படுகிறேன். முக்கியமாக தமிழ்க் கலைக்கு போதிய ஆதரவு இல்லாத இந்தக் காலத்தில், செட்டியார் அவர்கள் மற்ற பல தருமங்களுடன் தமிழை வளர்க்கவும், தமிழ் இசையை நம் நாட்டில் நிலை நாட்டவும் செய்துவரும் பெரும் முயற்சிகளுக்காக, அவர்களுடைய அரிய சேவைகளை நாம் எல்லோரும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்த சந்தர்ப்பத்தைத் தகுந்தபடி உபயோகித்துக் கொண்டு தமிழ்ச் சேவை செய்ய முன்வந்திருக்கும் தங்கள் பத்திரிகைக்கு வேண்டிய ஆதரவு நம் நாட்டில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
சி. என். முத்துரங்க முதலியார்,
சென்னை.

---



செட்டி நாட்டுப் பெரியார் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களது 60-வது ஆண்டு விழா நடக்கப் போவது கேட்டு நான் ஏற்றவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ராஜா சர் அவர்களது வாழ்க்கையும் புகழும் நம் மாகாணத்திற்கே ஒரு அணிகலனாகும். அவர் உண்மையில் ஒரு பெரிய கர்ம வீரராவர். அவரது அறிவும் ஆற்றலும் நம் மக்களில் பத்து லக்ஷத்தில் ஒருவருக்குக்கூட எதிர்பார்க்க முடியாத உயர்வு பெற்றதாகும்.

நம் நாட்டில் செல்வவான்கள் பலர் உண்டு. எனினும் ராஜா சர் அவர்களைப் போல் செல்வம் ஈட்டுவதிலும் தக்க வழி கண்டு செலவழிப்பதிலும் நிபுணத்துவம் கொண்டவர்கள் அவருக்கு மூன்றாவது நான்காவதாகக் கூட ஆள் இல்லை என்றே சொல்லவேண்டும். அவரது கொடைகள் பெரிதும் மிகவும் கீர்த்தி வாய்ந்ததும் மக்களுக்கு ஏற்றவும் பயன் படத் தக்கதுமாகும்.

சுருங்கச் சொன்னால் ராஜா சர் அவர்களைப்போல் பெருந் தொகையைப் பொது நலனுக்காகச் செலவழித்த வள்ளல் தென்னாட்டில் இன்று வேறு ஒருவரைக் காண்பது அரிதாகும்.

இப்படிப்பட்ட வள்ளற் பெரியார் இனியும் மேலான புகழோடும் கொடையோடும் செல்வத்தோடும் உடல் நலத்தோடும் நீண்ட நாள் வாழ வேண்டும் என்பதாக என் மனப் பூர்வமாய் ஆசைப்படுகிறேன்.

ஈ. வே. ராமசாமி நாய்க்கர்,
ஈரோடு.

Supplement to INDIRA issue dated 1-10-41



# யோகம் பிறக்கிறது

ப. நீ



ஆம், தமிழர்களாகிய நமக்குத்தான் யோகம் பிறக்கிறது. தமிழ் சங்கீதத்துக்கு யோகம் பிறக்கிறதென்றால் அது நமக்குப் பிறப்பதாகத்தானே அருத்தம்?

எந்த நாட்டிலும் இல்லாத ஒரு அதிசயம் இந்தத் தமிழ் நாட்டில் இத்தனை காலமாக நடந்து வந்திருக்கிறது, இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

தமிழர் வீட்டில் கச்சேரி நடக்கிறது, தமிழர்தான் பாடுகிறார். தமிழர்கள் தான் கேட்கின்றனர். என்றாலும், பாடுபவர்க்கோ, கேட்பவர்க்கோ, பணம் கொடுப்பவர்க்கோ புரியாத பாஷையில் பாடப்படுகிறது. இருந்தாலும் உங்களுக்கும் நமக்கும் தெரியாத அந்தப் பாட்டை சிலர் நன்றாக அனுபவிக்கிறார்கள் போலும்! தலை யசைக்கிறார்கள், தொடையில் பலமாகத் தட்டிக் கொள்கிறார்கள். இன்னும் கொஞ்சம் மேலே போய் "ஆஹா பேஷ்! பேஷ்" என்று ஆரவாரிக்கத் தொடங்கி விடுகிறார்கள். பாடப்படும் பாட்டின் பொருள் அவர்களுக்குத் தெரியாதென்பது மட்டும் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற உண்மை. கச்சேரி முடிவில் சில தமிழ்ப் பாட்டுக்களைப் பாடுகிறார்கள். இதற்குத் துக்கடா என்று பெயர்! வேடிக்கை எப்படியிருக்கிறது? ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் கூறியபடி, தமிழ் அல்லாத இதர பாஷைகளில் பாடப்படும் பாட்டுக்களின் நுணுக்கங்களைத் தான் தமிழர்கள் அறியமுடியும். அப்பாட்டின் கருத்தை உணரமுடியாது என்பது குறிப்பிடத் தகுந்த விஷயம். பொருள் தெரியாத ஒன்றை அனுபவிப்பதாகக் கூறுவது வெறும் ஏமாற்றம். அவர்கள் தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

சங்கீத வித்வான்களுக்கு என் இப்படி பிற பாஷைப் பாட்டுக்களின் மீது அபார மோகம் இருக்கிறது? அது ஒரு பெரிய ரகசியம். சில வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு ஆண்டு விழாவுக்குப் போயிருந்தோம். விழா ஆரம்பிப்பதற்குமுன் ஒரு பாட்டுப் பாடும்படி ஒரு பையனைக் கேட்டுக் கொண்டார்கள் சிலர். அந்தப் பையன் கொஞ்சம் நாணிக் கோணிக் கொண்டு பாட ஆரம்பித்தான். "பறி கொடுத்தோமே, பண்டித மோதிலால் நேரை, பறி கொடுத்தோமே" என்று அவன் வெகு சுவாரஸ்யமாக ஆரம்பித்தது தான் தாமதம், கூட்டத்தில் ஒரே ரகளை. 'த்சு' கொட்ட ஆரம்பித்து விட்டார்கள். "உட்காரப்பா" என்றார் ஒரு பெரியவர். பையன் உட்கார்ந்து விட்டான். "விழாவிலே, ஒரு திருப்புகழ், தேவாரம், திருவாசகம் பாடுவாயா, இதைப் பாடறயே?" என்று கேட்டார் ஒருவர். கூட்டத்தினர் தன்னை அவமானம் செய்து விட்டதாகப் பையன் மனம் வருந்தினான். ஆனால் அந்தப் பாட்டு, ஹிந்துஸ்தானியிலோ, தெலுங்கிலோ இருந்திருக்குமானால், கூட்டத்தினர் தலை யசைத்திருப்பர், தாளமும் போட்டிருப்பர், பொருள்தான் விளங்காதே!

பாகவதர்கள் தமிழ்ப் பாட்டைப் பாடாததற்கு இதுவும் ஒரு காரணம். தமிழ்நாட்டில், ஆயிரத்திற்கொருவர் தான் தெலுங்குப் பாட்டுக்குப் பொருள் தெரிந்தவர். வித்வான்களில் சிலர் தெலுங்கைக் கொலை செய்கிறார்கள் என்று தெலுங்கு தெரிந்த ஒருவர் அர்த்த பாவத்தோடு விளக்கிக் கூறினார்.

சங்கீதக் கச்சேரிகளில் தமிழில் தான் பாட்டுக்கள் பாடவேண்டுமென்ற கிளர்ச்சி தமிழன்

பர்கள் பலரால் வெகு தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டது. தமிழில் பாட்டுக்கள் இல்லையே என்று சொன்னவர்களுக் கெல்லாம் "இதோ இருக்கிறதே பாட்டு, பாருங்கள்" என்று எடுத்துக் காட்டினார்கள் தமிழ்ப் பாட்டுப் பாட வேண்டு மென்ற கிளர்ச்சிக்காரர்கள். இந்தக் கிளர்ச்சியை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் கவனித்துக் கொண்டே வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. கிளர்ச்சியினால் மட்டும் இந்தக் காரியம் சுலபத்தில் நிறைவேறி விடமுடியாது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். திடீரென ஒரு பெரிய காரியத்தைச் செய்தார்கள்: தமிழ்ப் பாட்டுக்களைத் தேடிப் பிடிப்பதற்கும், இயற்றுவதற்கும், பாடுவதற்குமாக ரூபாய் பதினாயிரத்தை அள்ளிக் கொடுத்தார்கள். இந்தக் காரியத்தை முன்னின்று செய்து முடிக்க அண்ணாமலை யூனிவர்சிட்டி பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. ராஜா சர் அவர்களின் இந்த அரியபெரிய காரியத்தை இன்று தமிழுலகமே பாராட்டுகிறது. தமிழ் சங்கீதத்துக்கு, தமிழர்களுக்கு யோகம் பிறந்திருக்கிறது என்றே தமிழர்கள் நம்புகிறார்கள்.

அண்ணாமலை நகரில் நடந்த தமிழ் சங்கீத மகா நாட்டைக் கண்டதும் இந்த எண்ணம் ஊர்ஜிதமாகி விட்டது. ரசிகர்கள், பண்டிதர்கள், பத்திரிகாசிரியர்கள், பாடகர்கள், வித்வான்கள் முதலியோர்கள் ஒன்று சேர்ந்து இதற்குத் திட்டம் வகுத்துள்ளனர்.

"எடுத்த காரியம் யாவினும் வெற்றி" என்பதற்கு ராஜா சர் அவர்கள்தான் உதாரணம். இந்தக் காரியம் அதி விரைவில் வெற்றிகரமான பலனைத் தருமென்பதில் சந்தேகமே வேண்டியதில்லை. அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டும். இப்படிப்பட்ட புரட்சிகரமான காரியத்தை ராஜா சர் அவர்களைத் தவிர வேறு யாரால் செய்ய முடியும்?

இது திருவனந்தபுரம்

### திரு. லட்சுமணப்பிள்ளை அவர்கள் பாடியது

பாவேந்தர் போற்றும் பசுந்தமிழைப் போற்றுதற்காய்
மூவேந்தர் முன்னாள் முனைந்(து) எழுந்தார்—காவேந்திப்
பண்ணார் தமிழ்ப்பாப் பயிர்வளர்க்க ஈண்டெழுந்தான்
அண்ணா மலையாம் அரசு.

---


காக்ஷிக்குத் தயார்

நான், நீ என்பதெல்லாம் வீண் அகங்காரம்!
பாஸ், பெயில் என்பதெல்லாம் மாயை!

தமிழ் நாட்டை மகிழ்விக்க வருகிறது




தமிழ்
சமூகப்படம்

நடிகர்கள்:

P. A. குமார் | C. S. D. சிங் | P. S. ஞானம் | T. S. ஜெயா
P. G. வெங்கடேசன் | மாஸ்டர் தங்கவேல் | P. R. மங்களம் | குமாரிசெல்வா

டைரக்ஷன்: கிருஷ்ணரத்னம்

விபரங்களுக்கு:

ஜுபிட்டர் பிலிம்ஸ் (புதுக்கோட்டை)

9, வாசு தெரு :: கீழ்ப்பாக்கம், மதராஸ்



செட்டிநாட்டு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின்
மூன்றாவது குமாரர் திருவாளர் சிதம்பரம் செட்டியாரவர்கள்



சென்னை அடையாரிலுள்ள ராஜா சர் அவர்களின்
"செட்டி நாடு ஹவுஸ்"



# அன்பின் அரசியல்

நா. கனகராஜய்யர். பி.ஓ.எல்

இது ஒரு கனவு; இன்பமயமாகத் தோன்றியது, பகற் கனவுதான்; பலிக்கவேண்டும். கண்ட காட்சி உண்மையே என்ற எண்ணம் உண்டு.

ஒளி நிறைந்த பெரிய மண்டபம் ஒன்று. அம் மண்டபத்திற்குப் பதினாறு வாயில்கள். ஒவ்வொரு வாயிலாலும் பலர் நுழைந்தார்கள். கிழவர் சிலர். ஆனால் தலை நரைக்கவில்லை. நடையில் நடுக்கம் இல்லை. குமரர் சிலர்; அவரிடம் துடுக்கும் எடுப்பும் இல்லை. குழந்தைகளும் உண்டு. பெண்களும் மெள்ள நடந்து வந்தனர்.

மண்டபத்தின் நடுவில் ஒரு மேடை இருந்தது. அம் மேடை மேல் பொன்னும் மணியும் பொருந்த அமைத்த ஒரு சிங்காதனம் இருந்தது. உள்ளே வந்த எல்லாரும் அந்த மேடையைச் சுற்றி வட்டமாக இட்ட மணைகளில் அமர்ந்தார்கள். மேடையை ஒட்டிய ஆசனங்களில் சில பெரியோர் இருந்தனர். கண கண என்று ஒரு மணி முழங்கியது.



பண்டித நா. கனகராஜய்யர் பி. ஓ. எல்.

சிங்காதனத்தில் தலைவர் வந்து அமர்ந்தார். அவர் எந்த வழியால் நுழைந்தார் என்பது தெரியவில்லை. அவரைக் கண்டதும், எல்லாரும் எழுந்து வணங்கினர். அவர் கை அசைத்ததும் எல்லாரும் இருக்கைகளில் அமர்ந்தார்கள். ஐந்து சிறு குழந்தைகள் மேடை மேல் ஏறி நின்று கை கோத்து இனிய கீதம் பாடி நடனம் ஆடினார்கள். மணி முழங்கியது. எங்கும் மவுனம் குடிகொண்டது. தலைவர் எழுந்தார். எல்லாரும் மேடையை நோக்கினர்.

**தலைவர்:** பூமண்டலம் கலங்குகிறது. நாம் அங்கே கண்ட நன்மைகள் எல்லாம் மறைந்தன. மனிதன் வன மிருகம் போல ஆய்விட்டான். அவனை நல் வழிப்படுத்த வழி ஏதாவது உண்டா என்று பார்க்க வேண்டும். அன்பின் செல்வம் விளங்கிய இடங்கள் துன்பக் காடுகள் ஆகின்றன. ஏதாவது பரிகாரம் தேட வேண்டும். உங்களுக்குத் தோன்றுகிற யோசனைகளைச் சொல்லுங்கள். தகுந்த முடிவு செய்வோம்.

**ஒரு கிழவர்:** தந்தையே! நீ இப்படிப் பேசினால் நாங்கள் என்ன சொல்வோம்? அன்பின் உருவம் நீ; அருளின் உருவம் நீ; அறிவின் உருவம் நீ. உலகத்திற் காணும் எல்லாம் நீ. காணாதவையும் நீ. எல்லாம் வல்ல உனக்கே இது பெரிய காரியமாகத் தோன்றினால், மனிதன் குற்றத்தை மாற்றுவது எப்படி?

**தலைவர்:** ஞானானந்த, நோயைக் கண்டால் மருந்து தேடவேண்டும் என்பது உனக்குத் தெரியாதா?

**ஞானானந்தர்:** தெரியும். நோய் முற்றிவிட்டதே அது தான் கலங்குகிறேன். பூமியில் இவ்வளவு வம்புகள் நடப்பதற்குக் காரணம் நீயே. மனிதன் உண்ண உடுக்க வேண்டிய அறிவோடு

பற்பொடிகளில் சிறந்தது பழநியப்பா'ஸ் பற்பொடி

இருந்தபோது இவ்வளவு வம்பு இல்லை. நுட்பமான அறிவைக் கொடுத்ததும் அமுதத்திற்கூட நஞ்சு எடுக்கும் வழியில் இறங்கி விட்டான். உண்மை அறிவு இன்ப வுருவமான உனக்கே நூறு உருவம் உண்டாக்கி விட்டான். கோடிக் கணக்கான கோயிலைக் கட்டிவிட்டான். கல்லைப் பிளந்தும் மண்ணைப் பிசைந்தும் மரத்தை அறுத்தும் இரும்பைத் தட்டியும் உனக்கு மாளிகை கட்டுகிறான். அம் மாளிகையில் நீ இருப்பதாகவே நினைக்கிறான். உனக்கு அமைந்த உயிர்க் கோயில்களைப் பாழ் பண்ணுகிறான். இது என்ன கொடுமை! கல்லிலும் மண்ணிலும் உன்னைத் தேடுகிற மனிதன், தான் செய்த சிலைகளிலே உன்னைத் தேடுகிற மனிதன், நீ படைத்த படைப்பிலே உன்னைக் காணவில்லையே. ஒருவன் கற்பூரம் காட்டுகிறான். ஒருவன் சாம்பிராணி தூபம் போடுகிறான். ஒருவன் மணி அடிக்கிறான். ஒருவன் விளக்கு ஏற்றுகிறான். எங்கும் இருக்கும் உன்னைச் சில சிறைகளிலே அடைத்துவிட்டு மற்ற இடங்களில் நீ இல்லை என்று எண்ணி அக்கிரமங்களை செய்கிறான். மனிதன் அறிவு பெற்றதே இவ்வளவு குற்றங்களையும் துணிந்து செய்ய இடம் கொடுத்தது.

**தலைவர் :** இனி அவன் அறிவை எடுக்க முடியுமா? நாம் கொடுத்தது கொஞ்சம். அவனாகத் தேடிக்கொண்டதே அதிகம். வாள் இருந்தால் அது கொலைக்கே உதவவேண்டுமா? நஞ்சும் மருந்துக்கு உதவுமே. நெருப்பு ஊர் அழியவே உதவியாக வேண்டுமா? பல கோடி மக்களுக்கு உணவு தர உதவக் கூடாதா? ஏன் இப்படி மனிதன் கெட்டழிந்தான்?

ஒரு பெண்மணி எழுந்து நின்றாள். மெல்லிய இனிய குரலாற் பேசினாள். முதலில் ஒரு பாட்டும் பாடினாள். பிறகு தன் கருத்தைச் சுருக்கி விளக்கினாள். அது கேட்ட தலைவர் "குழந்தாய் பிரேமவல்லி! நீ கூறுவது நியாயந்தானா என்பதை யோசித்துப் பேசவேண்டும்" என்றார். அவள் மறுபடியும் பெருஞ்சினமும் ஆவேசமும் கொண்டு பேசினாள்.

**பிரேமவல்லி :** தந்தையே, பலர் உம்மைத் தந்தை என்றாலும், எனக்குத் தாயும் நீரே. தந்தையும் நீரே. உம் உள்ளத்தில் அன்பு உண்டு என்றால் நான் கூறுவதைக் கேளும். மனிதன் ஏன் கெட்டான்? அறிவு அவனுக்கு நன்மையே செய்கிறது. அவன் கையில் அதிகாரம் இருப்பதே, அவன் கேட்டுக்குக் காரணம். 'உனக்கு அதிகாரம் இல்லை' என்று ஆணையிடும். உடனே அவன் திருந்தி விடுவான். அன்பின் உருவமாகிய பெண்ணை அடிமை போல் நடத்த அவனுக்கு அதிகாரம் கொடுத்தீர். அன்பையே அவன் மறந்தான். உலகத்தைக் கொலைக்களம் ஆக்கிவிட்டான். அதிகாரம் பெண்கள் கைக்கு வரவேண்டும். பெண்கள் சொன்னபடி ஆண்மகன் கேட்கவேண்டும். வம்பு, வழக்கு, சண்டை சச்சரவு, பிணக்கு, கலகம், திருட்டு, கொலை, கொள்ளை முதலிய சொற்களே இல்லாமற் போய்விடும். உலகம் நன்மை பெறும். மனிதனும் மிருகத் தன்மை மாறி முன்னுக்கு வருவான்.

ஒரு குழந்தை எழுந்து நின்றாள். மழலை பேசினாள்.

**குழந்தை :** அப்பா, நான் ஒன்று சொல்கிறேன். பூமியிற் பிறந்த மனிதன் எப்பொழுதும் குழந்தையாய் இருக்கும்படி வைத்துவிட்டால், ஒரு வம்பும் வராது. எங்களுக்குள் பகை இல்லை. வயிரம் இல்லை. ஒரு நிமிஷம் சண்டை போடுவோம். மறு நிமிஷம் சேர்ந்து கொள்வோம். எங்கள் சண்டைகளில் மண்டை உடையாது. ஒருவருக்கும் உயிர் போகாது. பொம்மைகள் தானே கீழே விழும். உடைந்த பொம்மைகளும் எங்களுக்கு உதவும்.

**தலைவர் :** குழந்தாய், உண்மையே. பிறந்த குழந்தை வளராமல் இருப்பது எப்படி? முளை கிளம்பிச் செடியாகி மரம் ஆவது போல மனிதனும் வளரத்தானே வேண்டும்?

**குழந்தை :** இப்படித்தான் வளரவேண்டுமோ? நேற்று ஒரு சண்டை. இன்று ஒரு சண்டை. உள்ளூரில் வீட்டுச் சண்டை. அயலூரில் சாதிச் சண்டை. பக்கத்தூரில் மதச் சண்டை. வீட்டுக்குள்ளே ஆண் பெண் சண்டை. நாட்டுக்குள் சோற்றுச் சண்டை. என்ன அநியாயம்! உலகமே சண்டை மயம் ஆய்விட்டது. இப்படி மனிதன் வளர்ந்து வாழ்வதைவிட அவன் எப்பொழுதும் குழந்தையாகவே இருந்துவிட்டால் ஒரு வம்பும் வராது.

எல்லாரும் சிரித்துக் கைகொட்டினர்.

**தலைவர் :** வால்மீகி, காளிதாஸா, நீங்கள் ஒன்றும் சொல்ல விரும்பவில்லையா?

**வால்மீகி :** என்ன சொல்வது? இராமராஜ்யம் வரவேண்டும். வேறு வழி இல்லை. உலகம் முழுவதும் ஒரு அரசன் கீழ் வந்தால் நன்மை உண்டாகலாம். என் இராமனே உலகத்தை ஆள வரவேண்டும்.

**காளிதாஸன் :** மனிதர் எல்லாரும் ஒரே பாஷை பேசவேண்டும். ஒரே மதத்தைத் தழுவ வேண்டும். ஒரே நிறமாகப் பிறக்க வேண்டும். எல்லா நாடும் சேர்ந்து ஒன்றாக வேண்டும். கடல் மலை ஆகாயம் எல்லாம் பொதுவாக வேண்டும்.

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

**தலைவர்:** இது நடக்கக்கூடிய காரியமா!

**வால்மீகி:** தந்தையே, உலகம் முழுவதும் ஒரே மனத்தோடு பார்க்கும் குழந்தைகளை உலகத்துக்கு அனுப்ப உமக்குச் சக்தி இல்லையா? எங்கள் தம்பி ரவீந்திரன் உலகப் பொது நன்மையையே நினைத்தான்; பேசினான். அவனையும் இங்கே அழைத்து விட்டீர். இனி அங்கே யார் நல்லது சொல்லப் போகிறார்கள்?

**காளிதாஸன்:** ரவீந்திரனும் இங்கே வந்துவிட்டானா? அட கஷ்டமே! பூமிக்கு விமோசன காலம் இப்பொழுது இல்லை.

**தலைவர்:** அப்படி நினைக்காதே. நல்ல பிள்ளைகள் சிலர் இன்னும் இருக்கிறார்கள். அப்பா, பாரதி நீ என்ன நினைக்கிறாய்? உலகம் திருந்துமா?

**பாரதி:** ஆகா திருந்தும். மலைகளைத் தகர்த்துக் கடல்களைத் தூர்த்துப் பாலைவனங்களை நாடு நகரம் ஆக்கி எங்கும் மனிதனைக் குடியேற்ற வேண்டும். ஒரு தனி மனிதன் உணவு இல்லாமல் இருக்கக் கூடாது.

**தலைவர்:** நீ சொன்னபடி செய்தால் மழை பெய்யுமா?

**பாரதி:** மக்களைப் படைத்த நீ எல்லாரையும் நல்ல நிலையில் வைத்துப் பார்க்கவேண்டும். சிலர் கோடீசுவரராக இருப்பதால் உனக்கு வரும் பெருமை என்ன? ஏழைகள் எண்ணாயிரம் கோடி உள்ள நகரங்களை ஏன் படைத்தாய்? சிலரிடம் பணத்தைத்தான் வைத்தாயே! பக்கத்தில் இருப்பவர்களுக்கு அதைக் கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணத்தை ஏன் அவர்களுக்குக் கொடுக்க வில்லை? உலகம் இப்பொழுது இந்தக் கஷ்டப் படுவதற்குக் காரணம் நீயே. நாடுகளைத்தான் படைத்தாயே, வன்மை மென்மை என்ற வேற்றுமைகளை ஏன் வைத்தாய்? எல்லாம் ஒரே நிலையில் இருக்கும்படி வைக்கக் கூடாதா?

**தலைவர்:** உலக நன்மைக்கு வழி ஏதாவது உண்டா?

**பாரதி:** நீயே பூமி யுலகத்துக்குப் போய் மனிதனோடு மனிதனாக அல்லற்பட்டு அவனுக்கு உதவி புரிந்து அன்பை வளர்க்க வேண்டும். வேறு வழியில்லை.

**தலைவர்:** அப்படியே செய்வோம். அன்பு வெல்க! அன்பு பொலிக! அன்பு வாழ்க!

கூட்டம் கலைந்தது. கனவும் முடிந்தது.


# வால்மீகி ராமாயண வசனம்

(அடக்க விலைப் பதிப்பு எப்போதும் கேட்டிராத விலை)

ஏழு காண்டங்களும் **1350** பக்கங்கள்

(2 பாகம்)




காஞ்சீபுரம் மகாவித்வான் ஸ்ரீமான்

**P. B. அண்ணங்கராச்சாரியார்**

மொழி பெயர்ப்பு

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலிய பல அறிஞர்களாலும், தமிழ்நாட்டு சிறந்த பத்திரிகைகளாலும் சாலச் சிறந்தது, விலை மிகக்குறைந்தது என மதிப்புரை பெற்றது.

கிலேஸ் காகிதம் காலிகோ பைண்டு 2 வால்யம் ரூ. 4
ரப் காகிதம் ராப்பர் பைண்டு 2 வால்யம் ரூ. 3




தபாலில் அனுப்ப ரூ. 1-ம், ரயில் பார்சலில் அனுப்ப அணா 7-ம் சார்ஜ் ஆகும்

V. P.-யில் அனுப்பமுடியாது. முன்பணமாகவே அனுப்பவேண்டும்.

**தமிழ் நூற்பதிப்பகம் :: 60-B, நெல்லுக்காரத் தெரு :: காஞ்சீபுரம்.**

எல். பழனியப்பா'ஸ் பற்பொடி பற்களை கெட்டிப் படுத்தும்

Supplement to INDIRA issue dated 1-10-41



# சொற் செல்வம்

"பெருஞ்சொல் விளக்கனர்"
அ. மு. சரவண முதலியார்

'சொற்செல்வம்' என்னும் இத்தொடர் 'சொல்லாகிய செல்வம்' எனப் பண்புத்தொகையாகவும், 'சொல்லால் வருஞ் செல்வம்' என மூன்றும் வேற்றுமை யுருபும் பயனும் உடன்தொக்க தொகையாகவும் விரிக்க இடந்தந்து, அல்வழி, வேற்றுமை இரண்டற்கும் பொதுவாக நிற்பதொன்று. பண்புத் தொகையாக விரியுங்கால், 'செல்வம்' என்பது பொருளுடைமையையும், வேற்றுமைத் தொகையாக விரியுமிடத்து அது மேம்பாடுடைமையையும் குறிக்கும். மேம்பாடுடைமை என்ற பொருளிற் செல்வம் என்ற சொல் வருதலை, "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" என்ற திருக்குறள் உரையில் 'அருட் செல்வம்— அருளான் வரும் செல்வம்; அருளான் வருஞ் செல்வமாவது உயிர்களை யோம்பி அவ்வறத்தான் **மேம்படுதல்'** எனப் பரிமேலழகர் கூறுவதால் அறிக.



பெருஞ்சொல் விளக்கனர்
அ. மு.
சரவண முதலியார்

### பலவகைச் செல்வங்கள்

செல்வம் என்பது பொருளுடைமை என்றும், வறுமை என்பது பொருளின்மை என்றுங் கொள்வது தான் உலகிற் காணப்படும் பெரு வழக்காக இருக்கிறது. எனினும் நமது 'எய்ப்பினில் வைப்'பாகிய பழைய இலக்கியங்களிற் பலகாலும் பழகுங்கால் அவற்றுள் பற்பல செல்வங்கள் காணப்படுகின்றன. அவ்விலக்கிய ஆசிரியர்களும் உலகத்தாரால் கொள்ளப்படுகின்ற பொருட்செல்வத்தையும் விலக்காமல் உடன்பட்டுக்கொண்டே மேற்கொண்டும் பல செல்வங்களைக் கூறுகின்றார்கள். அங்ஙனம் கூறுங்குறிப்பாற் 'செல்வமென்பது பொருளுடைமையன்று' என்பதும் பல இடங்களிற் புலப்படுகின்றது. அவ்வாறு அவர்கள் குறிப்பதற்குரிய அடிப்படையான காரணமும் உய்த்துணர்ந்தால் அறிய முடியாத தொன்றன்று.

செல்வம் (பொருளுடைமை) தன்னையுடையானுக்கு இன்பந் தரல் வேண்டும்; வறுமை (பொருளின்மை) துன்பந் தரல் வேண்டும். 'அறமீனும் இன்பமும் ஈனும்' என்பது' வள்ளுவர் வாய்மொழி. 'நடுவணதெய்த இருதலையும் எய்தும்' என்பர் சமணத் துறவி ஒருவர். உயிர்களின் இயக்கமனைத்தும் துன்ப நீக்கத்திற்கும் இன்ப ஆக்கத்திற்குமே யன்றி வேறொன்றற்கு மில்லை என்பது யாவரும் ஒப்பமுடிந்ததொன்று. அங்ஙனம் இன்பம் பெற விரும்பும் மக்கள் அதைத் தரவல்லது பொருள் என்பதை யறிந்து தான் அதைத் தேடும் பொருட்டுச் 'சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்' அல்லும் பகலும் அலமருகின்றனர் என்பதை யாரே மறுக்கவல்லார்? அவ்வாறு, தான் காரணமாக நின்று இன்பமாகிய காரியத்தைச் செய்ய வல்லதாகிய செல்வம் எங்கும் அவ்விலக்கணத்திற்கு மாறுபடாமல் நிகழவேண்டிய தொன்றா யிருக்க, பல இடங்களில் அது மாறுபட்டு இன்பந் தராமையையும், அம்மட்டிலன்றி ஒரோவழித் துன்பந் தருதலையுங் கண்கூடாகக் காண்

டாக்டர்கள் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

கின்றோ மல்லவா! இனி, ஒரோ வழி வறுமையுந் தன் காரியமாகிய துன்பந் தரா திருத்தலைக் காண்கின்றோம். இவ்வுண்மை எக்காலத்தும் உள்ளதென்பதை,

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

என்ற பொய்யா மொழியாலும், 'தத்தம் நிலையினன்றி மாறி நிற்றலால் தாமிடுக்கட் படுதலும் உலகிற்குத் துன்பஞ் செய்தலும் இரண்டற்கும் ஒக்குமாயினும், திருக்கல்லாரைக் கெடுக்க, வறுமை நல்லாரைக் கெடாது நிற்றலான், வறுமையினுந் திரு இன்னாதென்றார்' எனப் பரிமேலழகர் கூறிய அதன் விளக்க வுரையாலுங் காணலாம். உலக அநுபவத்தில் இவ்வாறு நிகழ்தலைக் கண்டமையாலேதான் புலவர் பெருமக்கள் 'காரணத்தோடு காரியம் மாறுபடுமாயின் காரணத்துள் ஏதேனும் தவறு இருப்பதாக அறியவேண்டும்' என்ற முறையில் பொருளுடைமையைச் செல்வம் என்ற சொல்லாற் கூறாமல் மாறு படுவாராயினர். மாமரம் மாங்காய்தான் காய்க்கும். அஃது அங்ஙன மன்றிக் காஞ்சிரங்காய் காய்க்குமானால் அதனை மாமரம் என்று யாருஞ் சொல்லத் துணியாரன்றோ! இனி, மாங்கனி எங்கெங்க மரத்திற் காய்க்கின்றதோ அந்த அந்த மரத்தையெல்லாம் மாமரம் என்று கூறுவது போல எது எது மக்களுக்கு இன்பந்தருமோ அதனை அதனைச் 'செல்வம்' என அப் புலவர் பெருமக்கள் கருதித் தாமியற்றிய நூல்களுட் கூறிப்போந்தனர்; ஆதலாற் செல்வங்கள் பலவாயின. அச்செல்வங்கள் எவை எவை எனக் காண்போம்.

## தேவர் செப்பும் செல்வம்

தெய்வப் புலவர் தமது எய்யாமொழியாம் பொய்யா மொழியுட் கூறும் செல்வம் சில. மக்கள் நுகரும் இன்பங்களுட் சிறந்தது மகப்பேற்றால் வருவதே. ஐம்புல இன்பங்களையும் ஆரத் தரவல்ல வற்றுள் மகவும் ஒன்று. "குழலினிதி யாழினி தென்பதம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்" "அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள் சிறு கை யளாவிய கூழ்" "மக்கள் மெய் தீண்டல் உடற்கின்ப மற்றவர் சொற் கேட்ட லின்பஞ் செவிக்கு" என்பன மகப் பேறில்லாத வள்ளுவர் வாய்மொழிகள். இங்ஙனம் இன்பந்தரவல்லது மகவாதலாற்றான் அதனையுடையவர்களே பொருளையுடையவர்களென்பது தோன்ற.



சகாதேவன் பேசுகிறான்

"தம்பொருள் என்பதம் மக்கள்"

என்றார் அப் பொய்யில் புலவர். மகச் செல்வமில்லாதவர் எத்துணைப் பொருட் செல்வமுடையராயினும் இன்பம் அடையார் என்பதை "படைப்புப் பல படைத்து" என்று தொடங்கிப் பாண்டியன் அறிவுடை நம்பியாற் பாடப் பெற்ற புற நானூற்றுப் பாடலால் அறிக. கூலியாள் இன்றி 'அரசன் ஒறுப்புக்கு ஆளாதல் கூடுமோ' என அஞ்சிக் கவன்ற வந்தி என்பாள் அவ்வாள் கிடைத்தவுடனே பெற்றுள்ள பெருமகிழ்ச்சிக்கு உவமை கூறவந்த பரஞ்சோதி முனிவர் தமது திருவிளையாடற் புராணத்தில்,

பற் பூச்சிகளை ஸம்ஹரிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

"செல்வமகத், தந்தபோதெழு மகிழ்ச்சி தலைக் கொள்ளப் புறம் போந்தாள்" என மகப்பேறாகிய செல்வத்தைப் பெற்றவர்கள் அடையும் மகிழ்ச்சியையே கூறினார்.

இன்னும் அவ்வள்ளுவப் பெருந்தகையார், "ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வம் கல்வியே யன்றி, அழியுந் தன்மையையுடைய மற்ற மணியும் பொன்னும் செல்வமாகா" என்றும் "அக்கல்விச் செல்வத்தாற் பெற்ற அறிவை வலியுறுத்துகின்ற கேள்விச் செல்வம் மற்றச் செல்வங்களை விடச் சிறந்தது" என்றும், "அவ்வறிவுடையார் எல்லாமுடையவராகக் கருதப் பட்டாலும்" 'பிறிதின் நோய் தன்னைப்போற் போற்றாக்கடை' அவரறிவாற் பெறும் பயன் யாதொன்றுமில்லை யாதலால், அங்ஙனம் போற்றுதற் கேதுவாகிய அருட் செல்வமே செல்வத்து ளெல்லாம் சிறந்த செல்வமாகும்; மற்றப் பொருட் செல்வமோ தீயவரிடத்திலும் இருக்கும்" என்றும் கூறுவதை முறையே கீழ்வரும் திருக்குறள்களாற் காணலாம்; அவை,

"கேடில்விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை"

"அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்
பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள"

என்பன. இவையெல்லாம் வள்ளுவர் வகுத்த வான் செல்வங்கள்.



அரசன் முன்னிலையில் கண்ணகி பேசுகிறாள்

## நாலடியார் நவிலும் நற் செல்வம்

நுண்ணறிவுடையா னொருவன், தனக்கு எத்துணைத் துன்பம் நேரினும் தன் கூர்த்த மதியால் அவற்றைப் போக்குதற்குரிய வழிகளை அறிந்து போக்குதலும், அவை பின்னரும் வாராதபடி முன்னறிந்து காத்தலுமாதியவற்றால் எஞ்ஞான்றும் இன்புற்றிருப்பதையும், அஃதில்லாத ஒருவன், தன்னிடம் இன்பந்தரும் பிற கருவிகளிருப்பினும், அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளும் முறையை அறியாமையானும் பிறவாற்றானும் எக்காலும் துக்கமென்பதைத் தன் பக்கத்தே வைத்திருத்தலையும் காண்கின்றோமல்லவா! முன்னவன் இன்புறுதற்குக் கருவியாயிருப்பது அவன் நுண்ணுணர்வும், பின்னவன் துன்புறுதற்கேதுவாக இருப்பது அவன் நுண்ணுணர்வின்மையுமே யாதலால், இன்பந் தருவதைச் செல்வமென்றும், துன்பந் தருவதை வறுமை என்றும் சொல்லுமுறைபற்றி,

"நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்"

என நாலடியார் நவின்றது.

இனி, பற்றற்ற இறைவன் திருவடியை இறுகப்பற்றி உலகப்பற்றை விட்ட மெய்யுணர்வுடையார்க்கு "யாதனில் யாதனில் நீங்கியான் நோதல், அதனில் அதனில் இலன்" என்றபடி யாதொரு துன்பமுமில்லை யாதலால், "திருப்புத்தூரனைச் சிந்தை செயச் செயக், கருப்புச்சாற்றினும் அண்ணிக்கும்" என்னும் திருநாவுக்கரசரின் அநுபவ வாக்கிற்கிணங்க, அம்மெய்யுணர்வுடையார் நுகரும் இன்பத்திற்கேது

பற்களை உறுதி செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

வாகிய செல்வம் இறைவன் திருவடியை நினைந்து நினைந்து கசிந்து கசிந்து வாழ்த்தி வணங்குதலே யாம் என்பதனை,

"செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே"

என்ற திருஞான சம்பந்தர் என்னும் சிறிய பெருந்தகையார் திருவாக்காலறிக. இத்தேவார அடியைக் கருத்துட்கொண்டு திருநீலகண்ட நாயனார் வாழ்க்கைச் சிறப்பைக் கூறுமுகத்தால்,

"நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடும்
நலத்தின் மிக்கார்"

என்று சேக்கிழார் பெருமான் கூறியதையுங் காண்க. 'நலம்' என்பது இங்குச் செல்வம் என்னும் பொருளையுடையது.

## குமரகுருபரர் கூறுங் கோதிலாத செல்வம்

உலகத்திற் பொருளுடையாருட் பலர், தாம் மேலும் மேலும் அதனை ஈட்டும் அவா மிக்குடையவராய் முயற்சியை மேற்கொண்டு நல்லுணவு முதலியவற்றால் உண்டாகும் எளிய இன்பத்தையும் நுகரப் பெருதவராய் மன அமைதியின்றி அலைந்தொழிவதையும், எளிய மக்கள் பலர் தமக்கு அன்றன்று கிடைத்ததைக் கொண்டு மனமகிழ்ந்து, 'போதுமென்ற மனம் பொன் மனம்' என்ற பழமொழிக்கு இலக்காய் இன்புறுதலையுங் கண்ட குமரகுருபர அடிகள், இவ்விருதிறத்தாரும் முறையே துன்புறுதற்கும் இன்புறுதற்குங் காரணம் என்ன என்பதை நன்கு ஆராய்ந்து அவை அவாவும், சிந்தையின் நிறைவும் என அறிந்து தமது சிதம்பர மும்மணிக்கோவை என்ற நூலில்,

"செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவாவெனப் படுமே"

எனக் கூறுகிறார்.

இங்ஙனம் கூறிய இப்புலவர் பெருமான், முன் காட்டிய புலவர் பெருமக்களைப் போலாது தமது முடிபைக் காரணங் காட்டி நிலை நிறுத்துவது போற்றத் தக்கது. அவர் கூறுங் காரணம் என்ன வென்பதைக் காண்போம்.

பேரரசன் ஒருவன். அவன்,

"கொடியும் முரசும் கொற்றவெண் குடையும்
பிறர்கொளப் பொறாஅன் தானே கொண்டு
பொதுநீக்கு திகிரி திசை திசை போக்கிச்
செவிபிற் கண்டு கண்ணிற் கூறி
இருநிலம் புரக்கும் ஒருபெரு வேந்தன்"

இத்துணை ஆட்சிச் சிறப்பையுடையவனயினும், 'மாமிக்கோர் மாமியுண்டு' என்னு முதுமொழிப்படி, உலகின் ஏதோ ஒரு பகுதியில் தன்னினும் பெரியவனுக ஓர் மன்னன் வாழ்கின்றுன் என்பதை அறிகிறுன். அறிந்ததும் அவனுடைய இடம் பொருள் முதலியவற்றோடு தனது இடம் பொருள் முதலியவற்றை ஒப்பிட்டு நோக்கத் தன்னுடைமை மிகச் சுருக்கமாகத் தோன்றுகிறது. அதனால் மனமாழ்கி 'அத்துணைப் பொருளை நாம் ஈட்டவேண்டும்' என எண்ணியதனால் சுவையுள்ள உணவு அவற்கு நஞ்சாகத் தோன்றுகிறது; 'பிரமானந்தமாக இரவு தூங்கினேன்' என ஓர் ஏழை மகனுங் கூறி இன்புறுதற்குரியதும், பகல் முழுதும் பாடுபடும் மக்களின் அகக் கருவிகளும் புறக்கருவிகளும் நன்கு ஓய்வெடுத்துக்கொண்டு மறுநாள் அவை அலுவலுக்கு நன்றாகப் பயன்படுதற் பொருட்டு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வரப்பிரசாதமா யுள்ளதுமாகிய உறக்கம் அவனால் மறக்கப்படுகிறது; பெருந் திருவைப் போன்ற பேர் எழிலும், அருந்ததியன்ன கற்பும் வாய்ந்த மனையாள் நெருங்கி 'உங்கள் உடலுக்கென்ன நேர்ந்தது; என்னிடங் கூறலாகாதா?' என அன்பு கனிந்து வினவினால் நாற்காற் பிராணிபோல அவள்மீது பாய்கிறுன்; அவன் மூக்கிலிருந்து வருங் காற்று கொல்லன் உலைத்துருத்திக் காற்றுப் போலப் பெருமூச்சாக இருக்கிறது. இங்ஙனமாக இவன் கவலையுற்று அழிகிறுன் என்பதை,

"மற்றது பெறுதற் குற்றனன் தெரீஇ
அயிற்சுவை பெறுஅன் துயிற்சுவை யுறுஅன்
மாணிழை மகளிர் தோள்நலங் கொளாஅன்
சிறு காற்று வழங்காப் பெருமூச் செறிந்து
இழப்புறு விழுமமெய்தி அழுக்கறுத்து
கவலையுற் றழிவதுங் காண்டும்"

என்ற அடிகளால் விளக்குகிறார். இக்காட்சியைக் கண்ட அவர் அம்மட்டோடு அமையாது அதற்கு எதிரான மற்றொரு காட்சியுங் காண்கின்றார். அக்காட்சியை,

"அதான்று; விறகெடுத் தூர்தொறுஞ் சுமந்து விற்றுக்
கூலிகொண்டு, புற்கையும் அடகும் மாந்தி மக்களொடு
மனையும் பிறவும் நோக்கி அயல்மனை
முயற்சியில் மகனை இழித்தனன் எள்ளி
எனக்கிணை இலையென வினையன் மற்றொருவன்
மனக்களிப்புறீஇ மகிழ்வதுங் காண்டும்"

என்ற அடிகளால் நமக்கு விளக்கிக் காட்டிவிட்டு, 'இக்காரணத்தாலேதான் செல்வம் சிந்தை நிறைவு; வறுமை அவாவாகும் என்ற முடிவுக்கு வந்தேன்' என்பார்; 'செல்வமென்பது சிந்தையின் நிறைவு அல்காநல்குரவு அவாவெனப் படுமே' என்று கூறியருளினர்.

எல்லோரும் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

## கம்பர் காட்டிய கவின்மிகு செல்வம்

யாம் இக்கட்டுரைக்குத் தலைப்பாக எடுத்துக் கொண்ட 'சொற் செல்வம்' என்பது 'கவியரசு' எனப்புவி யரசுகளாற் போற்றப்பட்ட கம்பர் பெருமானுற் கூறப்பட்டது. சுக்கிரீவன் ஆணையால் முதன்முதலாக இராமபிரானையும் இலக்குவப் பெருமாளையுங் காணும் பொருட்டு மாணவனுக வந்த ஆஞ்சநேயனை, அவன் பேசிய விநய வார்த்தைகளால் மகிழ்ந்த சக்கரவர்த்தி திருக்குமாரன், இளையபெருமாளை நோக்கி,

"இல்லாத உலகத்தெங்கும் ஈங்கிவனிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே என்னுங்காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே யார்கொலிச்
சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இளையவீர விரிஞ்சனே விடை
வல்லானே"

என வியந்து கூறியதாகக் கம்பநாடர் "சொல்லைச் செல்வமாகக் கொள்ளவேண்டும்" என்னும் தமது கருத்தை வெளியிடுகிறார். அவர் கருதுகின்ற 'சொற் செல்வம்' எது என்பதைப் பார்ப்போம்: மாணவனுக வந்த மாருதி இராமபிரானையும் இலக்குவனையும் நோக்கிக் "கவ்வையின்றாகநுங்கள் வரவு" என, இராமபிரான் அவ்வநுமானை நோக்கி, "எவ்வழி நீங்கியோய் நீ யார் என" வினவ, அம்மாருதி இராமபிரான் தோற்றத்தில் ஈடுபட்டவனய்,

"மஞ்செனத்திரண்ட கோல மேனிய மகளிர்க்
கெல்லாம்
நஞ்செனத் தகையவாகி நளிரிரும் பனிக்குத்
தேம்பாக்
கஞ்சமொத் தலர்ந்த செய்ய கண்ண"

என அவனை விளித்து "யான் காற்றின் வேந்தர்க்கு, அஞ்சனை வயிற்றில் வந்தேன் நாமமும் அநுமனென்பேன்" எனக் கூறிப் பின்னும்,

"இம்மலை யிருந்துவாழும் எரிகதிர்ப் பரிதிச்
செல்வன்
செம்மலுக் கேவல்செய்வேன் தேவ நும்
வரவுநோக்கி
விம்மலுற் றனையனேவ வினவிய வந்தேன்"

என்று கூறினதாகக் கம்பர் எழுதுங் கவிகளின் உட்கிடையைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தால் மேலே கூறியவாறு கம்பர் கருதுஞ் 'சொற் செல்வம்' எது என்பதை அறிந்து கொள்ளலாம். இராமபிரான் மாருதியைக் கேட்ட கேள்விகள் இரண்டு; அவை 'நீ எங்கிருந்து வருகிறாய்? யார்?' என்பன. இவ்வினைக்களுக்குப் பொருத்தமான விடைகளாக 'யான் ரிஷியமுக பருவதத்திலிருந்து வருகிறேன்; அநுமானென்பது என் பெயர்' எனக் கூறினுற் போதும். ஆனல் மாருதி அவ்வள்விற் கூறி முடிக்கவில்லை. 'என் தந்தை பெயர் வாயுவேந்தர்; தாய் அஞ்சன தேவி என்று சொல்லப்படுவாள்; என்னை அநுமன் என்று அழைப்பார்கள்; நமக்கு எதிரில் இதோ தெரிகிறதே அம்மலையில் எங்கள் அரசன் இருக்கிறுன்; அவன் சூரியனுடைய புதல்வன்; சுக்கிரீவன் என்பது அவன் பெயர்; தேவரீராகிய நுமது வரவை யறிந்து மகிழ்ந்து அவன் உங்களை அறிந்து வருமாறு என்னை அனுப்பினுன்; ஆதலால் யான் இங்கு வந்தேன்' என மிக விரிவாகக் கூறுகிறுன். அங்ஙனங் கூறியதற்குக் காரணம் என்ன? மேலே காட்டியவாறு இரண்டு வினைக்களுக்கும் இரண்டு விடைகள் கூறியிருப்பின், அவனை நன்கு அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதிய இராமபிரானுற் பல கேள்விகள் கேட்கப்படும். அவையாவன:—'உன் தந்தை யார்? தாய் யார்? அநுமானென்பதைத் தவிர வேறு பெயர் உனக்குண்டா? நீ இப்போது என்ன தொழிலை மேற்கொண்டிருக்கிறாய்? உன் தலைவன் யார்? அவன் யாருடைய மகன்?' என்பன முதலிய பல கேள்விகள். 'ஒருவனை நன்கு அறிந்து கொள்ளக் கருதுகின்றவர்கள் இத்துணைக் கேள்விகள் கேட்கவேண்டுமா? எனின் இக்கேள்விகளின் இன்றியமையாமையை நோக்குங்கள். சிலரை அவர்கள் தந்தை மூலமாக அறிந்து கொள்ளலாம்; அதாவது சாத்தன் என்பவன் தன்னையறிந்து கொள்ள விரும்பிய ஒருவனுக்குத் தன்னைச் சாத்தன் என்று தெரிவித்துக் கொள்வதைவிடத் தன் தந்தையின் பெயரைச் சுட்டி 'யான் கொற்றன் மகன்' என்றால் நன்கு விளங்கும் என்பது. இங்ஙனமே தாயின் பெயரைக் கூறிய அளவாலே அறிந்துகொள்வாரும் உண்டு. ஒருவனுக்குப் பல பெயர்கள் இருக்கலாம். தாய்தந்தையர் இட்ட பெயர் ஒன்று; அவர்கள் அழைக்கும் பெயர் மற்றொன்று; பள்ளிக்கூடத்துப் பெயர் வேறொன்று. இப்பெயர்களுள் ஒரு பெயரால் அவனை ஒருவர் அறிந்திருக்கலாம்; ஆனல் மற்றொரு பெயரால் அவனைச் சுட்டும்போது அவரறியார். 'நாமமும் அநுமன் என்பேன்' என்றதால் தன் பெயரைச் சுட்டிய அவன், 'காற்றின் வேந்தன் பிள்ளையான்' என்கின்றுன். அவ்வாயுவின் பரியாய நாமங்களுள் ஒன்று மாருதம் என்பது. எனவே 'மாருதத்தின் மகன் யான், ஆகையால் என்னை மாருதி என்பார்கள்' என்றும், 'அஞ்சனை புதல்வனதலால் என்னை ஆஞ்சநேயன் என்பார்கள்' என்றும், அநுமான் கூறியதில் 'சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்' முதலிய அழகுகள் அமைந்து நயஞ்செறிந்திருத்தலை ஓர்க. இங்குக் காட்டியவற்றால், ஒருவன் மற்றொருவனை நோக்கி அன்போடு ஒரு

எல். பழநியப்பா'ஸ் பற்பொடியை உபயோகியுங்கள்

கேள்வி கேட்பின், அதற்குரிய விடையை மட்டும் அவன் தராமல், 'அக்கேள்வியை யொட்டி எத்துணைக் கேள்விகள் வரலாம்' என நன்கு ஆராய்ந்து, அக்கேள்விகளை அந்த மற்றொருவன் கேளாமுன்னரே அவற்றுக்குரிய விடைகளை நயம்படக் கூறுதலே 'சொற்செல்வம்' எனக் கம்பர் கருதுகிறார் என்று கொள்ளலாமன்றோ! அங்ஙனம் அநுமான் பேசிய சொற்செல்வத்தில் ஈடுபட்ட இராமன் 'யார் கொலிச் சொல்லின் செல்வன்' என்பதோடமையாது,

"மற்றுமிவ்வுலகத்துள்ள முனிவர் வானவர்களார் இச்
சொற்றிறமுடையார் மற்றுச் சுருதிபின் தொகுதியாவும்
முற்றறிதரு மிம்மாணிமொழிக் கெதிர் முதல்வராய
பெற்றியர்மூவர்க் கேயும் பேராற்றலரிது மன்னோ"

என்று அவன் பேசும் திறத்தையே பலபடப் புகழ்ந்து கூறுகிறான். 'மும்மூர்த்திகள்கூட இந்த அநுமான் பேசுவதுபோலப் பேசமாட்டார்கள்' என்பதை இச்செய்யுள் காட்டுகின்றது.

இங்ஙனமே இவன் பேச்சு வன்மை உள்ள தென்பதை இராமாயணத்துள் அநுமான் பேசுவதாக வரும் பல பகுதிகளிலுங் காணலாம். இராவணன் புதல்வனாற் கட்டிக்கொண்டு வரப்பட்ட அநுமானை நோக்கி அந்த இராவணன் 'வாலிவலியன்கொல்' என்று வினவியகாலை, சொற்செல்வன் விடைகூறிய அழகு நினைந்து நினைந்து வியக்கத் தக்கதொன்று. அவன் கேள்வி 'வாலி நலமாக இருக்கிறானா?' என்பது. இவன் விடை "அஞ்சலை அரக்க! பார்விட்டு அந்தரம் அடைந்தான் அன்றே; வெஞ்சின வாலிமீளான்; வாலும்போய் விளிந்ததம்மா; அஞ்சனமேனியான் றன் அடுகணை யொன்றால் மாழ்கித், துஞ்சினன்; எங்கள் வேந்தன் சூரியன்தோன்றல்" என்பது. இவ்விடையுள் 'பார்விட்டு அந்தரம் அடைந்தான்' என்றபின் 'வெஞ்சின வாலிமீளான்' என்றது, வாலி உயிரோடுள்ளபோழ்து அடிக்கடி தேவலோகஞ் சென்று வருபவனாதலால் 'இந்த முறையும் அப்படித்தான் போயிருப்பானோ?' என இராவணனுக்குத் தோன்றும் ஐயத்தை விலக்குதற்கென்க.

இனி, 'அவன் இறந்தான்' என்று சொன்னபின், அவன் வாலும் அழிந்தொழிந்தது' எனக் கூறியது, பொருள் நிறைந்ததும் நகைச் சுவை தரவல்லதுமாகும். இராவணனுக்கு வாலியினிடமிருந்த அச்சத்தைக் காட்டிலும் அவன் வாலினிடத்துள்ள அச்சந்தான் அதிகம். அதுதான் அவனைக் கட்டித் துன்புறுத்தியது. இச்செய்தியை உத்தரகாண்டத்திலுள்ள 'வாலி வாலாற் கட்டுண்ட படல'த்தால் அறிக. 'அத்துணை உடல் வலியும் உள வலியுமுள்ள வீரன், இராகவன் வாளி ஒன்றே ஒன்றினால் மிக வருந்தி இறந்தான்' என்று கூறிய குறிப்பால் அவ்விராகவனுடைய வலிமை விளக்கப்பட்டது. 'அவன் இறந்த பின் உங்கள் அரசன் யார்?' என்ற கேள்வி இராவணனாற் கேட்கப்படாமலே 'எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல்' என்று கூறும் நயம் போற்றத்தக்கது. இன்னும் அநுமான் கூறிய இக்கூற்றிலுள்ள நயங்களனைத்தையும் உய்த்துணர்ந்து மகிழ்க.

இனி, சொற்செல்வ முடையவர்கள் எந்தச் செய்தி எங்குப் பேசப்படினும், அதனைப் பற்றிய, தன் கருத்தை யாரேனும் ஒரு பெரியார் கேட்டாலன்றி முந்துறக் கிளத்த மாட்டார்க ளென்பதையும் அநுமான் வாயிலாகக் கம்பர் விளக்கிக் காட்டுகிறார். இராவணனாற் கடிந்து துரத்தப்பட்ட விபீடணனென்பான் இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்தகாலை, 'அவனைச் சேர்த்துக்கொள்வதா அன்றி நீத்துத் தள்ளுவதா?' என்பதுபற்றி ஓர் பெரிய ஆராய்ச்சி நடக்கிறது. அதில் வானர வீரர்கள் பலருங் கலந்துகொண்டனர். சுக்கிரீவன் முதல் நீலன் இறுதியாக உள்ளா ரனைவரும் தத்தமக்குத் தோன்றிய காரணங்களைக் கூறி 'அவனைத் தள்ளிவிடுவதே தகும்' எனக் கூறினர். அப்படிக்கூறுங்கால், ஒருவர் தம் கருத்தை விளக்கிக் கூறி முடிப்பதற்குள்ளாகவே மற்றொருவர் தாம் பேசுதற்குத் துடிதுடித்துக்கொண் டிருப்பர். இங்ஙனமாக ஆஞ்சநேயன் நீங்கலாக மற்றவரனைவரும் தத்தங் கருத்தை இராமன் கேட்பதற்குமுன்னரே சாற்றிவிட்டனர். இவர்களனைவரும் பேசிமுடித்த பின்னரும் வாய் மூடியிருந்த மாருதியை நோக்கி இராகவன் 'இதுபற்றிய நின் கருத்து யாது?' என வினவிய பின்னரே சொற்செல்வன் சொல்வானாயினன். நுணங்கிய கேள்வியனாதலால் வணங்கிய வாயினனாகி இராகவனை நோக்கிப் 'பெருமானே! நீ அறியாததொன்றையா எம்போல்வார் கூறப்போகின்றனர்? நின்னைச் சார்ந்தோர் எம்போலும் மடமையராயினும் அவர்களையும் ஆலோசித்து ஒன்று செய்வதே உன்போன்ற பேரறிவாளர் இயல்பு போலும்' என அவன் பெருமையைக் கூறிய பின், தனக்கு முன்னே பேசியவர்களின் கருத்தை யெல்லாம் ஒருங்கே மறுக்கப் புகுந்தவன் 'ஐயனே! உன் அவையிலுள்ள அறிஞர்களனைவரும் ஒரு பொருளை 'அன்று' என மறுத்துக் கூறியபின், அவர்கள் தகுதியுள் ஒரு சிறிதும் பெறாத யான் அதற்கு

டாக்டர்கள் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

மாறாக என்ன மாற்றம் உரைக்கப் போகின்றேன்' எனக் கூறு முகத்தால், தனக்கு மாறுபட்ட கருத்தை யுடையவர்களின் பெருமையையும், அவர்கள் முன் தனக்குள்ள சிறுமையையும், அவர்களிடம் தான் வைத்துள்ள நன் மதிப்பையும் விளக்கிக் காட்டிவிட்டு, பின்னர், 'ஆயினும் எனக்குத் தோன்றுவதொன்றைச் சொல்லுங் கடப்பாடுடையேன்' என்று தொடங்கி, முன் கூறியவர் 'சேர்க்கக் கூடாது' என்பதற்கு என்னென்ன காரணங் கூறினார்களோ அத்துணையும் மறுத்தொதுக்கிச் சேர்த்துக்கொள்வதே அறமும் நீதியுமாகும்' என்னும் தன் கருத்தை நிலைநிறுத்தினான். இந்நிகழ்ச்சிகளைக் கீழ் வருங் கம்பநாடர் கவிகளாற் காண்க. அவை,

" உறுபொருள் யாவரும் ஒன்றாக் கூறினார்
செறிபெருங் கேள்வியாய் கருத்தென் செப்பென
நெறிதரு மாருதி என்னும் நேரிலா
அறிவனை நோக்கினான் அறிவின் மேலுளான் "

" இணங்கினர் அறிவிலரெனினும் எண்ணுங்கால்
கணங்கொள்கை நும்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியான் நுவல்வதாயினான் "

" எத்தனையுளர் தெரிந்தெண்ண வேய்ந்தவர்
அத்தனைவரும் ஒரு பொருளை யன்றென
உத்தமரது தெரிந்துணர வோதினார்
வித்தக இனிச்சில விளம்பல் வேண்டுமோ "

" தூயவர் துணிதிறன், நன்று தூயதே
ஆயினும் ஒரு பொருளுரைப்பன் ஆழியாய்
தீயனென்றிவனை யானயிர்த்தல் செய்கிலேன்
மேயின சில பொருள் விளம்ப வேண்டுமால் "

என்பன முதலியன.

இனி, 'சொற் செல்வ முடையார் முந்துறக் கிளத்தலை மேற்கொள்ளமாட்டார்' என்பதை மாருதி செயலாலே யன்றிப் பாண்டவருள் ஒருவனாகிய சகாதேவன் என்னும் அறிவாளி யிடத்திலுங் காணலாம். பாண்டவர் ஐவரும் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டிற் கழித்து, ஓராண்டு மறைந்து வதிந்து பின்னர் நாடு போந்து தமது நாட்டைப் பெறுதற்குச் செய்த முயற்சிகளுள் ஒன்று கண்ணனைக் காவலனாகிய சுயோதனனிடந் தூதனுப்பியது. இக்கருத்தை முதன்முதலில் வெளியிட்டவன் தருமன். ஆனால், அது சகாதேவனொழிந்த மற்றவர்களாற் கடுமையாகத் தாக்கிப் பேசி மறுக்கப்படுகின்றது. அங்ஙனம் மறுத்தவரனைவரும் கண்ணன் கேளாமலே மேல்விழுந்து பேசினர். ஆனால் சாதேவனோ யாதொன்றும் கூறாது வாய் வாளாமையை மேற்கொண்டிருந்தனன். இதனை யறிந்த கண்ணன் சகாதேவனை நோக்கி 'எல்லாருந் தத்தங் கருத்தினை வெளிப்படுத்தினர்; நின் கருத்து என்னை?' என வினவிய பின்னரே அவன் பேசத் தொடங்கினான் என்பதை,

" நகுலனிவை யுரைத்ததற்பின் நன்றெனக்
கையமைத்தருளி நகுலன் சொல்லும்
இகல்விசயன் தன்மொழியும் இகல்வீம
னியம்பியதும் யாவுங்கேட்டோம்
புகலரிய உணர்வுடையோய் புகழுடையோய்
திறலுடையோய் புகல் நீ என்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின்றானே "

என்னும் பாரதப் பாட்டா லறியலாம்.

இவ்விநய முடையான் அப்போது பேசிய சொற் செல்வத்தாற்றான் மற்ற நால்வரும் கண்ணபிரானாற் காக்கப்பட்டனர் என்பதைப் பாரதம் படித்த அனைவரும் அறிவர்.

இனி, கணவனை யிழந்த கற்புத் தெய்வமாகிய கண்ணகி என்பாள் பாண்டியன் நெடுஞ்செழியனிடஞ் சென்று, தன் நாயகன் குற்றவாளி அல்லன் என்று மெய்ப்பிக்க வழக்குரைத்தபோது அவள் பேசிய பேச்சு, 'கம்பர், மக்கள் எப்படிப் பேசினால் அதனைச் சொற் செல்வம் எனக் கருதுகிறார்?' என நாம் மேலே காட்டிய கருத்தை யொட்டி இருப்பதைக் கீழ் வரும் இளங்கோவடிகள் கூற்றால் அறிக. அது, கண்ணகி மாறன் வாயிலில் வந்து நின்று, அவ்வாயிற் காப்போரை நோக்கி, " வாயிலோயே வாயிலோயே, அறிவறைபோகிய பொறியறு நெஞ்சத், திறைமுறை பிழைத்தோன் வாயிலோயே, இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள், கணவனை யிழந்தாள் கடையகத்தாளென்று, அறிவிப்பாயே அறிவிப்பாயே" என்று கூற, அவர்கள் சென்று அரசனை வணங்கி அதனைக் கூற, அரசன் 'அவளை அழைத்து வருக' எனக் கட்டளையிட, அக்கட்டளையால் மன்னன் முன் சென்று நின்ற மாபெருங் கற்புடையாளை நோக்கி, அவன் 'நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய் யாரையோ நீ மடக்கொடி' என்று வினவ,

" தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோ னன்றியும்
வாயிற்கடைமணி நடுநா நடுங்க
ஆவின்கடைமணி யுகு நீர் நெஞ்சு சுடத்தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்ப் புகார் என்பதியே; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனையாகி
வாழ்தல்வேண்டி ஊழ் வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல்வேண்டி நின்பாற்
கொலைக்களம் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி என்பதென் பெயரே "

ஆனந்தமளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

என்பது. இப்பகுதியுள், பாண்டியன் கண்ணகியை நோக்கி, ‘நீரொழுகுங் கண்ணோடு இங்கு வந்த பெண்ணே, நீ யார்?’ என வினவியதற்குக் கண்ணகி என்பாள், தன் ஊரின் பெயரையும், அவ்வூரை ஆண்ட அரசர்களின் ஆட்சிச் சிறப்பையும், அம்மன்னர்களின் செங்கோலைச் சிறப்பித்த குறிப்பாற் பாண்டியன் கொடுங்கோலன் என்பதையும், அவ்வூரில் யாதொரு மாசு மின்றி வழிவழியாக புகழ் பூண்டு வந்த தன் கணவன் பெருங்குடிச் சிறப்பையும், அச்சிறப்பைக் கூறுங் குறிப்பாலே தன் கணவன் கனவிற்கூட தவறு செய்யானென்பதையும், அவன் பெயரையும், அவன் தந்தை பெயரையும், தன் கணவன் மதுரைபோந்த காரணத்தையும், தனது காற்சிலம்பை விற்கும் பொருட்டு வந்து பாண்டியனாற் கொலை செய்யப்பட்டான் என்பதையும், ‘என் காற் சிலம்பு’ என்ற குறிப்பால் அதனை விற்றற்குரியவன் அவன் என்பதையும், தனக்குரிய செயலை ஒருவன் செய்யும்போது அவனைக் கொலை செய்தது அநீதி என்பதையும், தன் பெயரையும் விளக்கிக் கூறிய சொற் செல்வத்தைக் காண்க; இது துன்பத்துட் காட்டிய சொற் செல்வமானால், இன்பத்துள் அஃது எப்படி இருந்திருக்கும் என்பதை உய்த்துணர வல்லார் அறிவாரன்றே!

இனி, பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்துட் கூறப்படும் சொற் செல்வங்களுள் இரண்டைக் காண்போம். அவற்றுள் ஒன்று, அப்பூதியடிகளின் தண்ணீர்ப் பந்தலிலுள்ள பணியாளரிடங் காணப்படுவது; மற்றொன்று, சிறுத்தொண்ட நாயனாரின் மனைவியாரிடங் காணப்படுவது. முன்னதை முதலிற் காண்போம்:

அப்பூதியடிகளென்பார் அந்தணக் குலத்தவர்; செந்தண்மை பூண்டவர்; குல்ச் செருக்கு என்னும் குழியில் வீழாதவர்; கல்வி, அறிவு. ஒழுக்கம், கடவுட்பேணல் முதலிய நலங்கள் எவரிடத்துக் காணப்படுகின்றனவோ, அவருக்கு அடிமையாகும் மனப் பண்பு வாய்ந்தவர். இவர் தம் காலத்திலிருந்த திருநாவுக்கரசரின் திப்பிய வரலாற்றைக் கேட்டார்; அவர் ஆண்டவனிடம் வைத்த அகன்ற அன்பும், இறைவன் அவருக்குச் சுரந்த அருளும் அறிந்தார். அதனால் அந் நாவுக்கரசரையே தம் நற்றெய்வமாகப் பேணி வழிபடலானார். வழிபாடு முதிர்ந்து மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் முறுகி வெளிப்படுவதாயிற்று. மனத்தால் இடையறாது நினைந்து அன்பு செய்தார்; வாயாலே தமது வீட்டிலுள்ள அறிவுப் பொருள், அஃதில்லாத பொருள் அனைத்திற்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரையே வைத்துச் செப்பலானார்; மெய்யாலே பல மடங்கள்; தண்ணீர்ப் பந்தல்கள், சாலைகள், சோலைகள், குளங்கள், முதலிய அற நிலையங்கள் அமைத்து அவையனைத்தும் திருநாவுக்கரசுக் குரியன எனப் பெயர் பொறித்தனர். திருவையாற்றுக்குக் கிழக்கே இரண்டு கல் தொலைவிலுள்ள திங்களூர் என்னும் பதியே அவர் பிறப்பதற்குத் தவம் செய்தது.

இந்நிலையில் அவர் வாழ்க்கை நடக்குங்கால், அவரை முன் கேட்டுமறியாத திருநாவுக்கரசர் திருப்பழனத்திலுள்ள சிவபெருமானை வணங்கி, மற்றுமுள்ள திருப்பதிகட்குச் சென்று தேவதேவனை வணங்கும்பொருட்டுச் சாலை வழியே வருவார் அழகிய அறநீர்ச் சாலை ஒன்றைக் கண்டனர்; கண்டவர் அங்குச் சென்று தண்ணீர் பருகினார்; மற்றும் அங்குள்ள செயலனைத்தும் அவருக்கு ‘இவ்வறத்துக் குரியவர் தூய உளமுடையவரா யிருத்தல் வேண்டும்; இவ்வறங்கள் ஆரவாரத்துக்காகச் செய்யப்பட்டன அல்ல’ என்னும் எண்ணத்தை உண்டு பண்ணின. அதனால் வியப்புற்று வெளியே வருவார், அந்நீர்ச்சாலையின் நான்கு புறத்திலும் ‘திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்’ என அழகுபட எழுதியிருப்பதைக் கண்டார்; ஐயங் கொண்டார். அங்குள்ள பணியாளரை நோக்கி ‘இப்பந்தர் இப்பெயரிட்டிங் கமைத்தார் யார்?’ என்று வினவினர். அவர்கள் ‘நமது அப்பூதியடிகளை யாருந் தெரியாதிருக்க முடியாது; ஆதலால் இவரும் தெரிந்திருப்பார்; ஆனால் அவர் செய்யும் அறச் செயல்கள் இன்னின்ன என அறியாதிருப்பார்’ என எண்ணினர்; அங்ஙனம் அவர்கள் கருதியது தமது தலைவரிடத்துத் தாங்கள் வைத்த அளவற்ற அன்பாலும் மதிப்பாலுமே. அங்ஙனம் எண்ணிய அவர் தாம் கருதியதற்கேற்ப “ஆண்ட அரசெனும் பெயரால் செப்பருஞ் சீர் அப்பூதியடிகளார் செய்தமைத்தார் தப்பின்றி எங்குமுள சாலை குளங்கா” என்று விடை கூறினர். இதனைக் கேட்ட பெரியார் ‘திருநாவுக்கரசர் என்னும் பெயர் இந்த நீர்ச்சாலைக் குரியவருக்கும் இருக்குமோ’ என முன்தோன்றிய ஐயம் நீங்கப் பெற்றவரானார். ஆனால், ‘இந்த அறம் செய்பவரின் கருத்து என்ன’? என்பதில் உள்ளம் ஊன்றியது. அங்ஙனம் ஊன்றி நினைப்பதற்குக் காரணம் என்ன? உலக அநுபவம். முற்றும் பிறர் பொருளை அழித்துத் தாம் புகழ் தேடிக்கொள்பவர் பலர்; அங்ஙன மின்றித் தம் பொருள் சிறிது செலவிட்டுப் பெரும் பெயரடைய எண்ணுவோரும் பலர் உண்டு. இவ்வநுபவமிகுந்த உலகத்தில் பெரும் பொருளைச் செலவிட்டுச் செய்யும் அற

பூரணமனத் திருப்தியளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

நிலையங்களில் ஒருவர் தமது பெயரைக் குறிக்காமல் மற்றொருவர் பெயரைக் குறிப்பதற்குக் காரணம் யாதாயிருக்கலாம் எனக் கருதியவராய அந்நாவுக்கரசர், அப்பணியாளரை நோக்கி அவர் 'எவ்விடத்தார்' என வினவினர். அப்பணியாளர், "நாம் முதலில் 'இவருக்கு நமது தலைவரைத் தெரிந்திருக்கும்; ஆனால் நாவுக்கரசர் பெயரால் அவர் செய்யும் அறங்களை அறிந்திருக்க மாட்டார்' என எண்ணி அதற்குரிய விடை கூறினோம்; இவர் இப்போது கேட்பதை நோக்கின் நம் தலைவரைப்பற்றி இவருக்கு யாதுந் தெரியாதெனக் கருதவேண்டி யிருக்கிறது; அதனால் இவர் இப்போது கேட்கும் கேள்விக்குத் 'திங்களூரார்' என்று மட்டும் விடை கூறுவோமானால் அந்த ஊர் எங்குள்ளது? அவர் என்ன மரபு? இப்பொழுது அங்குப்போனால் இருப்பாரா? அந்த ஊரில் அவர் வீடு எந்த வீதியிலுள்ளது? என மேன்மேலுங் கேட்பார்; ஆதலால் அங்ஙனம் கேட்டு இப்பெரியார் இந்த உச்சிப்போதில் வருத்தப்பட வேண்டாம்; அவர் கேளாமலே அக் கேள்விகளுக்குரிய விடைகளை நாம் கூறிவிடலாம்" எனக் கருதியவராய்,

"நிறைந்து, துன்றிய நூல் மார்பருமித் தொல்பதியார்
மனையின்கட்
சென்றனர் இப்பொழுததுவும் சேய்த்தன்று
நணித்தென்றார்"

எனப்பணியாளர் சொற் செல்வத்தைத் தெய்வச் சேக்கிழார் பெருமான் பாரித் துரைத்தமை காண்க. 'துன்றிய நூல் மார்பர்' என்றதனால் அவர் மரபையும், 'இத்தொல் பதியார்' என்றதனால் ஊரின் அணிமையையும்; அவர் பழங் குடிச் சிறப்பையும், 'மனையின்கட் சென்றனர் இப்பொழுது' என்றதனால் நீங்கள் இப்பொழுது போனால் வீட்டில் அவரைக் காணலாம் என்பதையும், 'அதுவும் சேய்த்தன்று நணித்து' என்றதனால் அவர் வீடுள்ள இடத்தையுங் குறிப்பிட்டமையை அறிந்து மகிழ்வார் வேறு மகிழ்வையும் வேண்டுவரோ? வேண்டார்! வேண்டார்!!

இனி, மற்றொரு சொற் செல்வமுடையாரையுங் காண்போம். சிறுத்தொண்ட நாயனார் என்பவரின் இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. இவர் அரசனுக்குப் படைத்தலைவரா யிருந்தவர். ஒரு முறை அரசன் ஆணைப்படி வடநாட்டிற் படையெடுத்து 'வாதாவி' என்னும் நகரத்தை அழித்தார்; அதன் அரசனாகிய இரண்டாம் 'புலிகேசி' என்னும் வீரனைப் புறங்கண்டார். இவரது ஆண்மையைக் காவலன் புகழ்ந்து கூறியகாலை, அவரது உள்ளக் கிடையை அறிந்த அமைச்சர்கள் அரசனை நோக்கி "மன்னர் மன்ன! நமது படைத்தலைவர் மற்றவரைப் போன்றவரல்லர்; அவர் ஓர் சிறந்த சிவனடியார். மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்த வலியுடைமையினால், எதிரிவருக் கிவ்வுலகில் இல்லை" என்று கூறினார்கள். அச்செய்திகேட்ட மன்னவன் 'எம்பிரானடியார் என அறியாமற் போருக்குப் போகுமாறு செய்தோமே' என உளங்கலங்கி, அவரை வணங்கி 'ஐயனே, இனி உங்கள் விருப்பம் எங்கோ, அங்குச் சென்று இறைவற்குத் தொண்டுபுரிக' என்று கூறி அளவிறந்த பொருளும் நல்கினன்.

சிறுத்தொண்டரும் திருச்சங்காட்டங்குடி போந்து, தம் மனைவியாரோடு இல்லறம் நடத்தி வருங்காலை, நாடோறும் கிடைக்கும் அடியார்களை அமுதுசெய்வித்த பின்னரே, தாமுண்ணுங் கடப்பாட்டை மேற்கொண்டார். ஒருநாள் வழக்கம்போல அடியாரைத் தேடிப்போனார். யாரும் அகப்படவில்லை. தொண்டர்கள் தம் தொண்டுக்கு முட்டுவருங்காலை, உயிரைவிட்டு அத்தொண்டை நிலைநிறுத்துவார்களே யன்றித் தொண்டினை விட்டு உயிரை வைத்திருக்க மாட்டார்களாதலின், 'நமது வாழ்க்கை இன்றோடு ஒழிந்தது' என்னுங் கருத்துடையவராய்த் தமது வீட்டிற்கு வந்தார். வந்தவர் மனைவியாரை நோக்கிப் 'பெண்ணே! இன்று சிவனடியார் ஒருவரேனுங் கிடைக்கவில்லையே என் செய்வது' என்றார். அம்மையார் 'இங்கு ஓர் சிவனடியார் வந்தார்' என்றனர். இந்நற் செய்தியைக் கேட்ட தொண்டர் 'அடியேனுய்ந்தேன் எங்குற்றார் உரையாய்' என்று வினவினார். அவர் கேட்கும் விரைந்த நிலையில் அம்மையாரும் ஈடுபட்டு 'அவர் ஆத்தி மரத்தடியில் இருப்பதாகச் சொன்னார்' என்று கூறின், 'அவசரக்காரனுக்குப் புத்திமட்டு' என்ற முதுமொழிப்படி அவர் ஓடி ஒன்றிரண்டு ஆத்தி மரங்களைப் பார்த்துவிட்டு மறித்தும் வந்து 'எந்த ஆத்திமரம்' என்று வினவ, அம்மையார் 'கணபதீச்சுரத்திலுள்ள ஆத்திமரம்' என்று விடை யளிப்பின், அவர் அங்குச் சென்று அம்மர நிழலிற் பலர் தங்கியிருப்பின், தம் மனைவியார் கூறிய சிவனடியார் யார்? என ஐயுறவேண்டி வருமல்லவா! இவ்வளவையும் அம்மையார் உட்கொண்டு 'எங்குற்றார்' என்று கேட்ட தமது நாயகற்கு '**வடிச்சேர் சூலகபாலத்தார்; வடதேசத்தே மென்றார்; துடிசேர் கரத்துப் பைரவர்; கடிசேர் ஆத்தியின் நிழற்கீழிருந்தார் கணபதீச் சுரத்து**' என்றார். இத்துணை கூறியதும் வியப்பல்ல; தொண்டர் அவ்வடியாரை அம்மையார் கூறிய இடத்திற் சென்று அழைத்து வரப் போம்போது, "நாம் வீட்டிலில்லாதபோது நம் வீடுதேடி வந்த அடியாரை வீட்டிலேயே இருக்கச் சொல்லாததற்குக் காரணம் என்ன? ஒருக்கால் நாமித்தனை பேருக்குத் தாம் அமுது செய்விப்பது என்னும் வரையறை யிருப்

எல். பழநியப்பா'ஸ் பற்பொடி தந்த ரோகங்களை நிவர்த்திக்கிறது

பின், 'அத்துணைப் பேரை அடியார்களைத் தேடி அழைத்துவரச் சென்ற நம் கணவன் அழைத்து வந்துவிட்டால் என் செய்வது?' என்று கருது வதற்கும் நம்மிடம் அந்தவரையறை இல்லையே'' எனக் கருதுவாரன்றே! அதற்கும் இடந்தரா மல் 'யாம் சொல்ல இங்குமிராதே போய்க்கடி சேர் ஆத்தியின் நிழற் கீழ் இருந்தார் கணபதீச் சுரத்து' என்று கூறிய அம்மையார் சொற்செல் வத்தைக் காணின் அஃதெத்துணை இன்பத்தை விளைக்கின்றது பாருங்கள்.

இனி, அச்செய்யுளின் முழுவடிவமும் வரு மாறு:

''அடியேனுய்ந்தேன் எங்குற்றார் உரையாய் என்ன
அவர் மொழிவார்
வடிசேர்சூல கபாலத்தார் வடதே சத்தோம்
என்றார் வண்
துடிசேர் கரத்துப் பைரவர் யாம்சொல்ல இங்கும்
இராதேபோய்க்
கடிசேர் ஆத்தியின் நிழற் கீழிருந்தார் கணபதீச்
சுரத்து''

இனி, நம் தெய்வப் புலவரும் தமது திருக்குற ளில் 'சொல்வன்மை' என ஓர் அதிகாரம் வகுத் தருளினர். அது சிறப்புப்பற்றி 'அமைச்சு' என்னும் அதிகாரத்தின் பின் வைக்கப்படினும் பொதுவில் எல்லாருக்கும் வேண்டுவதொன்றே! அவ்வதிகாரத்துள் சொல்லைச் செல்வம் என்னும் சொல்லாலே வள்ளுவர் கூறவில்லை யாயினும் ''திறனறிந்து சொல்லுக சொல்லை அறமும் பொருளும் அதனினூங்கில்'' என்ற குறளால் பொருட் செல்வத்தினும் மேலானது இச் சொற் செல்வம் என்று குறிப்பிடுகிறார். இன்னும் செல்வமுடையா னொருவனை உலகம் மதித்து அவன் வழி நிற்பதுபோலச் சொற்செல்வமுடை யான் ஏவலையும் அது மேற்கொள்ளும் என்னுங் கருத்தை,

''விரைந்துதொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்''

என்ற குறட்பாவால் விளக்குகிறார். செல்வ முடையான் உலோபியாக இருந்தால் மக்களால் மதிக்கப்படாமற் போவது போலவே கல்வி யுடையான் சொல்லு மாற்றல் பெற்றிராவிட் டால் மதிக்கப்படான் என்பதை 'இணரூழ்த்தும் நாறாமலரனையர் கற்றது உணர விரித்துரையா தார்'' என்ற திருக்குறள் செவ்விதில் விளக்கு கிறது.

இனி, 'குட்டிக்குறள்' என்று கூறப்படும் 'நீதிநெறி விளக்க'த்தில் 'சொல்வளம் மல்லல் வெறுக்கையா' என்று கூறப்படுவதால் அதன் ஆசிரியராகிய குமரகுருபர அடிகளும் சொல் லைச் செல்வமாகவே கொண்டார் என்பதும் விளக்கமாகிறது. இன்னும், அவர், செல்வ முடையானொருவன் 'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதை யறிந்து வறியர்க்கு வழங்கா விடிற் பாவியாவதுபோலச் சொற்செல்வமுடை யானும் அதனால் பிறர்க்கு நன்மை விளைக்காமற் கொன்னே கழிப்பானாயின் தீவினையாளன் ஆகி றான் என்பதை,

''சொல்வன்மை யின்றெனிற் கொன்னே
விடுத்தொழிதல்
நல்வினை கோறலின்வே றல்ல''

என்னும் வெண்பாவால் விளக்குகிறார். இது காறும் கூறியவாற்றால் பொருளுடைமை மட் டும் செல்வமன்று என்பதும், செல்வங்கள் பல என்பதும், அவை நம் இலக்கியங்களிற் காணப் படுகின்றன என்பதும், செல்வங்கள் பலவாக இலக்கியங்களுட் காணப்படுதற்குரிய காரணம் இஃது என்பதும், அவற்றுட் சொற் செல்வமும் ஒன்று என்பதும், அதன் இலக்கணம் இன்ன தென்பதும், அச் செல்வமுடையார் யார் யார் என்பதும், அஃதுடையார் எப்படி அதனைப் பயன்படுத்தவேண்டு மென்பதும், பயன்படுத்தா விடில் அவற்கு நேருவது இன்னதென்பதும், பிறவும் விளக்கப்பட்டன.

இச்சிறிய கட்டுரை, நமது அருங்கலை விநோத ரும் பெருங்கொடை வள்ளலுமாகிய ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின் அறுப தாவது ஆண்டு நிறைவு விழாவின் நினைவுக் குறி யாக எழுதப்பட்டதாதலின், இக்கட்டுரையிற் காட்டிய செல்வங்களனைத்தையும் பெற்று அவற்றாற் பெரும் பயனடைந்து வருகிற அப் பெரியார் இறைவன ருளால் நீடு வாழ்க.

---

# கல்விக்கு மூலம்

மஹா வித்வான் பாஷா கவிசேகரர்

**ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்கள்**

கல்விக்கு மூலம் கமழ்வெண் கமலத்துச்
செல்விக் குவகை செயுமூலம்—வெல்விக்குந்
தென்னாடு வாழ்மூலம் தேர்வேந்தண் ணாமலையாம்
நன்னா யகன்மூல நாள்.

Supplement to INDIRA issue dated 1-10-41




சாயங்காலம். ஏதோ ஒரு நாவலைப் படித்துக் கொண்டிருந்தேன். எதிரிலிருந்த கடிகார மணி ஐந்தடித்தது. புஸ்தகத்தை மேஜையின் மேல் கவிழ்த்துவிட்டுச் சோம்பல் முறித்த வண்ணம் கண்களை மூடினேன். மாடியிலே "ஜல் ஜல்" என்று ஜாலராக்களின் ஓசையுடன் "திடும் திடும்" என்று மிருதங்கமும் இடிபோல் முழங்கிக் கொண்டிருந்தது.

"இதேதடா ஓயாத தலை வேதனை. பெரிய கழுத்தறுப்பாக ஆய் விட்டது. பொழுது விடிந்தாலும் சரி, பொழுது போனாலும் சரி, இதே தொல்லையா?" என்று முணுமுணுத்துக் கொண்டேன்.

விஷயம் வேறொன்றுமில்லை. மாடியிலே குடியிருக்கும் மகானுபாவர் பாரதி விழாக் கொண்டாடப் போகிறாராம். குழந்தைகளுக்குச் சில பாடல்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அதற்காக ஒத்திகை நடக்கிறது. நான் சங்கீதமென்றால் 'வீசை என்ன விலை?' என்று கேட்பவனல்ல, இருந்தாலும் அளவுக்கு மீறினால்? அதிலும் சுவாரஸ்யமாய் பெங்குவின் நாவல் படிக்கும்பொழுது குறுக்கிட்டால் யாருக்குத் தான் கோபம் வராது?

ஆனால் அந்தச் சின்னஞ்சிறு குழந்தை இனிய குரலிலே கம்பீரமாகப் பாடுவது கேட்டு என் கோபம் சற்றே தணிந்தது. மெல்ல மெல்ல என் மனம் அதிலே ஈடுபடத் தொடங்கிற்று. வார்த்தைகள் உணர்ச்சி மிகுந்தவைகளாய் இசையுடன் கலந்து அமுத வெள்ளம்போல் என் செவிகளிலே வந்து வீழ்ந்தன.

இச்சகத்து ளோரெலாம் எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை! அச்சமில்லை!! அச்சமென் பதில்லையே!!!

அடாடா! என்ன குரல், என்ன லய ஞானம், என்ன இனிமை! கவிதையிலேதான் என்ன எளிமை! என்று வியந்தேன்.

* * *

"அடாடா! இதென்ன? இடியா? புயலா? பூகம்பமா? ஒன்றுமே விளங்கவில்லையே. ஒரே ஆரவாரம். ஹர ஹர மகாதேவ. பவானீ மாதாகீஜேய்! என்ற பேரொலி எட்டுத் திசைகளிலும் பரவி வானைப் பிளக்கின்றது. இந்தப் பொன் மயமமான குன்று, வலிமை மிகுந்த கோட்டை. ஓகோ இது 'சிம்ம கட்' அல்லவா?



"குகப்ரியை"

பளபளவென்று மின்னும் வாள்களை வீசிய வண்ணம் ராம லக்ஷ்மணர்கள்போல் செல்லும் இந்த வீரர்கள் யார்? இந்த மாலைவேளையிலே இவ்வளவு தைரியமாகச் சிம்மக் கோட்டையில் உலவும் இவர்கள் வேறு யாராக இருக்க முடியும்? சிவாஜியின் உயிர் எனத் தகுந்த **தானாஜி மால்ஸுரேதான்**. உடனிருப்பவன்தான் அவன் தம்பி மகாராஷ்ட்ர சாம்ராஜ்யத்தின் தூண் எனத்தகுந்த **சூர்யாஜி**.

சுதேசி பற்பொடிகளில் சிறந்தது எல். பழநியப்டா'ஸ் பற்பொடி ஒன்றே

அடாடா! இந்த அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களுக்கு எதிரே, கருமேகமா? அல்லது இருளே ஒரு உருவமாய் வந்துவிட்டதா? அல்லது கருநிறக் காலனு? என்று சந்தேகிக்கத் தக்கதாய் ஏதோ ஒரு மைவரை நகர்ந்து வருகிறதே அது என்ன? அது ஸர்தார் உதயபானுவின் பட்டத்து யானை சந்திராவலி.

ஒரே ஒரு நொடி. இவன் வாளை எப்பொழுது வீசினன்? அதன் துதிக்கை எப்பொழுது விழுந்தது? மின்னல்மட்டு மல்லவா தோன்றி மறைந்தது. தெரியாமலா ஜீஜாபாய் இந்தச் சிம்மக் கோட்டையை மீட்கும் பணிக்கு உன்னை ஏவினள்? அங்கே வயிறுபுடைக்க உண்டு, குடித்து, உறங்கியவன். சந்திராவலி வெட்டுண்டது என்ற சொல்லோடு எழுப்ப, தூங்கி விழித்தவனுய் வந்து நிற்கிறுன் சர்தார் உதயபானு.



மறு விநாடி, சந்திராவலியின் பிளிறலுக்டயே மற்றொரு பூதம் கிளம்புகிறதே. அன்று. இது பூதமன்று. சர்தார் உதயபானு. இரஜபுத்ர வீரன் உதயபானு கலியுக பீமனென்று பெயர் பெற்றவன். இருப்பு உடலோன் என்று சொல்வதுண்டு. வந்து நிற்பவன் கும்பகருணன் போலல்லவா தோன்றுகிறுன். ஆம்! தோற்றத்திலும் நிலையிலும் கும்பகருணன்தான். அன்று ரஜபுத்ரர்களுக்கு விழா.

விண்ணினை இடறும் மோலி,
விசும்பினை நிறைக்கும் பேலி
கண்ணெனும் அவை யிரண்டும்
கடல்களில் பெரிய ஆகும்.
எண்ணினும் பெரியனை
இலங்கையர் வேந்தன் பின்னேன்
மண்ணினை அளந்து நின்ற
மாலென வளர்ந்து நின்றுன்.

என்ற அடிகள் அந்தக் கும்பகர்ணனை விட உதயபானுவுக்கே பொருந்தும் என்று தோன்றுகிறது. மலையோடு மலை மோதுவதேபோல் எதிர்க்கின்றனர் இருவரும். அடாடா! என்ன விபரீதம். விழுந்தான் உதயபானு. அவனுடன் தாணுஜியு மல்லவா வீழ்ந்துவிட்டான். சிங்கந்

பற்பொடிகளில் சிறந்தது பழநியப்பா'ஸ் ஒன்றே

கோட்டையைப் பிடிக்கவந்த வீர சிங்கம் வீழ்ந்து விட்டானே சிவாஜியின் வெற்றிக் கொடியே வீழ்ந்தது போல. ஆனல் வெற்றிக் கொடி எங்கே? அந்தி வானத்தின் பொன்மயமான கிரணங்களுடன் காற்றிலே விளையாடுகிறதே. சிம்மகட் உச்சியிலே காவிக்கொடி, சிவாஜியின் வெற்றிக்கொடி பறக்கிறது.

சிங்கக் கோட்டையைப் பெற்றேன்
சிங்கத்தை, வீரசிங்கத்தை யிழந்தேன்.

என்று பிரலாபிக்கிருன் சிவாஜி.

தாணுஜியின் முகம் மலர்கிறது. அதில் புதிய ஒளி. கடைசி முறையாக அவன் வாய் எதையோ முணுமுணுக்கிறதே.

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
இச்சகத்து ளோர் எலாம் எதிர்த்துநின்ற போதினும்,
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே!

* * *

ஒரே அமைதி. ராஜசபையிலே கம்பீரமாகக் கொலுவீற் றிருக்கிருன் சக்தி சிம்மன். ஸர்தார்கள் முகத்திலே ஈயாடவில்லை. எப்பொழுதும் கலகல வென்றிருக்கும் அந்த மகாசபையில், பாட்டும், கூத்தும், வேத முழக்கமும் ஒலிக்கும் அந்த ராஜமஹலில் இன்று ஏன் இத்தகைய அமைதி. சோகம், பயம், இவ்விரண்டுமே அறியாத சக்தி சிம்மன் முகத்திலே ஏன் குழப்பம்? ஒளிமழுங்கி வாடிக் கிடப்பானேன்?

நெடுநேரம் இதே நிலை. அந்த பயங்கரமான மௌனத்தைக் கலைக்க ஒருவரும் துணியவில்லை. அரசனது நெடுமூச்சு அந்த மோனத்தைச் சற்றே கலைத்தது. சர்தார் புவனமோஹன ஸிம்மன் எழுந்து வணங்கி தழுதழுத்த குரலில் சொல்லுகிருன்.

"அரசே தாங்களறியாத அறநூலில்லை. எதிரியின் சேனபலமோ அபாரம். எதிர்த்தால் நாடு அழிவது நிச்சயம். அவனிடமிருந்து தப்ப வேண்டுமானல் குமாரி தாராபாயை அவனிடம் ஒப்புவிக்க வேண்டுமென்றல்லவா அந்தப் பதர் கேட்கிருன். அந்தப்பாவி வருமுன்பே நாட்டை இழப்பதை விடக் குமாரியை இழந்துவிடுவோம். அவளுக்காக வல்லவா படையெடுப்பு?" என்கிருன்.

மறுவிநாடி கல்கல் என்று சிலம்பு புலம்ப, வளையல்கள் குலுங்க சபை நடுவே முகமூடியைத் திறந்தவளாய் வந்து நின்று விட்டாள் தாராபாய்.

"பாபா! தாயின் சேவையில் என் உடலாவது ஈடுபடப் பாக்கியம் பெற்றதே. உங்களுக்கேன் வீண் கலக்கம்? அக்னிகுலப் பெண்கள் அக்னிதேவனையே ஆவலுடன் தழுவிக் கொள்ளவும், கற்றவர்க எல்லவா என்கிருள். அவள் சொற்களிலேதான் என்ன வீராவேசம். தந்தை பெருமூச் செறிகிருன். இராஜபுத்ரரது வாள் பெண்களின் இரத்தத்தால் நனைந்ததில்லை. யார் இவளைக் கொல்ல முன்வருவான் என்கிருன் தந்தை.

புவனமோஹன சிம்மன் மீண்டும் எழுகிருன். யார் இவளுக்கு விஷம் கொடுக்க முன் வருகிறீர்கள் என்று அறை கூவுகிருன்.

அழகே உருவெடுத்தாற்போல் ஓரிளைஞன். அவன் கண்களிலே வீர சௌந்தர்யம் சொட்டுகிறது. தோள்களிலே விஜயலக்ஷ்மி ஆனந்த நடனம் செய்கிருள். அகமும் முகமும் ஒருங்கே மலர தாராபாய் அவனை நோக்கிப் புன்முறுவலுடன் நிமிர்ந்து நிற்கிருள்.

இவளுக்கு விஷமிடுவதே முடிவு என்று இராஜதந்திரிகள் தீர்மானித்து விட்டார்கள். விஷக் கிண்ணியுடன் காதலனே எழுந்து வந்து விட்டான். காதலனல் அளிக்கப் பெறும் அமுதத்தைப் பருக ஆவலுடன் கைநீட்டும் காதலிபோல் அந்த விஷக் கிண்ணியைக் காதலனது கைகளினின்றும் வாங்கிக் குடிக்கிருள் அப் பெண்ணரசி. என்ன வீரம்! எத்தகைய தியாகம்!! கொடுப்பவன் காதலன். குடிப்பவள் காதலி. எதன் பொருட்டு, தாய்நாட்டின் மீட்சியின் பொருட்டு.அடாடா, என்ன ஆச்சரியம்! அன்று பஞ்சவர் சபையிலே துகிலுரிந்த பொழுதே போல் அக்கினிகுல வீரப்பிள்ளைகள் ஆயுதங்கள் நழுவ கண்களை மூடிக்கொள்கிருர்கள் அன்று கண்ணன் வந்தான் காக்க. இன்று அவனும் செத்துவிட்டானே? நம்மை யறியாமலே நெஞ்சம் குமுறுகிறது. கண்ணீர் பெருகி ஒடுகிறது.

"அன்று மகான் சாக்ரடீசுக்குப் பகைவர் விஷமிட்டார். பிரகலாதனுக்குத் தாயே விஷமிட்டாள். வீரப் பெண்ணே! தாரா! நானே உனக்கு நஞ்சானேன்" என்று கதறுகிருன் இளவல். எங்கிருந்தோ மெல்லிய கீதத்தின் ஓசை அந்த மண்டப முழுவதும் பரவுகிறது. மலர்ந்த முகத்துடன் அந்த இனிய தேவகீதத்திலே மனம் ஒன்றி மயங்குவதேபோல காதலனது மடியிலே கண்களை மூடுகிருள் தாராபாய். சோகமாய் ஒலித்த அந்த தெய்வ கீதம் இப்பொழுது வீரகீதமாய் ஒலிக்கிறது.

நச்சை வாயிலே கொணர்ந்து
நண்பருட்டு போதினும்
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்ப தில்லையே!

* * *

அழகிய மண்டபம். கொலுமண்டபம். இதில் அரியணையிலே கம்பீரமாக வீற்றிருக்கும் இவன்

மனிதற்கு உற்சாகம் அளிப்பது எல். பழநியப்பா'ஸ் டற்பொடி ஒன்றே

# இதையும் வாசியுங்கள்

பத்திரிகாசிரியர்களின் பாராட்டுரைகளில்..............

"மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பதைப்போல் நாவல் எல்லாம் நாவலாகாது மக்களின் அறிவு வளர்ச்சிக்கு முக்கியமான பல அரும்பெரும் விஷயங்களை எளிய நடையில் இனிய கதை முறையில் வசீகர கற்பனையில்......மக்கள் உள்ளத்தில் இலகுவில் பதிய ஆசிரியர் புகுத்தியிருக்கிறார்.........கற்பனை சிங்கார, விவகார, ரசமும்"......

—தமிழ் முரசு, சிங்கை.

"நவரசம் என்பார்களே அந்த ரசங்களில் ஒரு ரஸமும் குறையாது பொங்கி வழியும் நாவல்.....நம்மை அறியாமலே ஒரு துடிதுடிப்பு ஏற்படுகிறது."......

—நவயுவன், சென்னை.

* *

"............தீமைகளை நிர்த்தாக்ஷிண்யமாய் எடுத்துக்காட்டிக் கண்டித்து திவ்விய நீதிகளை நிலைநாட்டுவதே இப்புதுமைக் கதையின் உள்ளுறை...சினிமாப் படத் தயாரிப்பிற்கு இக்கதை மிகப் பொருத்தமானது"...

—விநோதன், சென்னை.

* *

"......படிக்க எடுத்து விட்டால் முடிக்கும்வரை கீழே வைக்க மனம் வராது......அவ்வளவு கவர்ச்சி பொருந்திய போக்கில் கதை எழுதப்பட்டிருக்கிறது..............காலப் போக்குக்கு மட்டுமன்றி அறிவு வளர்ச்சிக்கும் சாதகமா யிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் வாங்கி........ அவசியம்"......

—சந்திரோதயம், சென்னை.

* *

......"சம்பந்தித்த துப்பறியும் நாவல். படிக்கப் படிக்கப் பிரியங் கொடுக்கும் கதை. இனிய தமிழில், எளிய நடையில்......மேலுரையில் மேனாட்டு நாவல்களைப் போன்று அழகிய வர்ணச் சித்திரப் படம் பதித்துள்ளது"......



## "விஜயபால பவானி"யைப்பற்றிய பத்திரிகாசிரியர்களின் பாராட்டுரைகள்

"......இதில் உண்மை, அன்பு, உத்தமக் காதல் ...ற்பின் வெற்றி முதலியன நன்கு விளக்கிக் கூறப்படு ...ன்றன......கதையின் போக்கு உணர்ச்சி ஊட்டக் ...டியதாயும் வாசிப்போர் உள்ளத்தைக் கவரக்கூடிய ...ாயும் இருக்கிறது......"

விடுதலை, ஈரோடு.

* * *

"கதையில் பல திடுக்கிடும் காட்சிகளும்......துப்பறி...ம் சம்பவங்களும் மலிந்துள்ளன"......

—ஹிந்துஸ்தான், சென்னை.

* * *

"......கையில் எடுத்துவிட்டால் முடிக்கும் வரை ...மேவைக்க மனமின்றி இருக்கும்......உலகானுபவத் ...ற்கேற்றவாறு நன்கு விளக்கப்பட்டிருக்கிறது......'

2 பாகங்கள் விலை 3—0—0 தான்

—தாருல் இஸ்லாம், சென்னை.

* * *

"......வாசித்துப் பார்த்தோம். மிகவும் நன்ரு ...ிருக்கிறது......"

—பங்கஜம் கிளப், போடிநாய்க்கனூர்.

★

## WHAT OTHERS SAY ?

......"The hypocrisy of those vested with ...piritual authority are sought to be exposed...... ...s a story of adventure it is packed with incident ...nd is quite pacy......" (*I Part*)

—*Hindu, Madras*.

* * *

"......The novel continues to be full of ...ncident and as such interesting......" (*II Part*)

—*Hindu, Madras*.

* * *

"......The set purpose of the author is didactic ...nd he enumerates the morals and other lessons ...which the book illustrates......The romance reeks with liaisons, rapes, seductions, incests, deaths by ... and drowning and deliberate murders ..... The catastrophe is thus wrought, and the ruiner ruined. The principle of suspense is kept up to sustain the interest of the story. The story is interesting and instructive......"

—*Cochin Argus, Cochin.*

* * *

"......this interesting novel with a view to its being adapted for film purposes. The story is highly moral one teaching many important lessons to mankind......"

—*Sunday Observer, Madras.*

* * *

"......It is fully packed with thrilling incidents that the readers' interest never flags throughout. The novel inculcates good moral precepts and is fit to be placed in the hands of young people......"

—*Indian Ry Magazine, Madras.*

ETC. ETC. ETC.


775 பக்கங்கள் ! 75 அத்தியாயங்கள் !

இத்தகைய அரிய நாவலை உங்களுக்கு
அறிமுகப்படுத்துகிறோம்

**இப்போது வெற்றி விற்பனை காலம்**

**1 & 2** பாகங்கள்

**மலிவான விலை ரூ. 2—8—0 தான்**

தபால் வேறு

கிடைக்குமிடம் :—

**சாந்தா புக் டிபோ,**

1/75, முல்லா சாயபு தெரு,

ஜி. டி. சென்னை.

விலையை முன் பணமாக அனுப்பினல்
ரிஜிஸ்ட்ரேஷன் வி. பி. முதலிய
இன்றி எங்கள் செலவில்
நாவல் அனுப்பப் பெறும்.

வியாபாரிகள்
கமிஷன் விபரத்
துக்கு எழுதுக.

யார்? இந்த அரசனும் இந்த இளம் பிள்ளைகள் இருவரும் தசரதனையும் ராம லக்ஷ்மணர்களையு மன்றோ நினைவு மூட்டுகிறார்கள். இவ்வளவு பரபரப்பிற்கும் குதூகலத்திற்கும் காரணமென்ன? ஓகோ! அதோ ஒரு பெரியவர் வருகின்றாரே அதுதான்.

அவர் யார்? வசிஷ்டரா? விசுவாமித்திரரா? என்றல்லவா தோன்றுகிறது. அல்ல, அவரல்ல. இது கிடக்கட்டும், இந்த அரசன் யார்? ஆடைகளையும் அணிகலன்களையும் நோக்கச் சேரமான் தான் என்று தோன்றுகிறது. ஆம்! சேரன்தான்.

பெரியவர் யார்? எதன் பொருட்டு வந்திருக்கிறார்? ஏதோ மெல்லிய குரலிற் பேசுகிறாரே. பேச்சின் இடையிடையே இரு மைந்தரையும், கூர்ந்து கவனிக்கின்றார். ஏனோ? அடா! எவ்வளவு நேரம்தான் பேசுவார்கள். மிகவும் தணிந்த குரலில் மெய்ம்மறந்து பேசிக்கொண்டிருக்கிறார்களே.

அரசனும் துறவியும் ஈடுபட்டுப் பேசும்படி என்ன விஷயமாய் இருக்கலாம் என்கிற சந்தேகம் மந்திரிமார்களது உள்ளத்திலே எழுகிறது. இது மட்டுமா! அரசிளங் குமரன் மூத்தவனது முகம் கறுப்பானேன்? அவனுக்கென்ன வந்துவிட்டது? முகத்திலே விவரிக்க முடியாத ஏமாற்றமும் பெருமையுமல்லவா தோன்றுகிறது. ஏன்?

விஷயம் வேறொன்றுமில்லை. முனிவர் "இளையவனே சகல ராஜலக்ஷணங்களும் பொருந்தியவன். ஒரு சேரநாட்டை மட்டுமல்ல உலகத்தையே ஆளக்கூடியவன்" என்றல்லவா சொல்லிவிட்டார். இராமனைப்போல் முடி துறந்து எல்லோருமே சென்று விடுவதானால் இராமனுக்குத்தான் என்ன பெருமை?

இந்த வார்த்தைகளினால் மூத்தவன்முகங் கறுத்ததில் ஆச்சர்ய மென்ன?

ஒரே ஒருநொடி. இளையவன் எழுந்திருக்கிறான். அந்த நிலையிலேயே துறவியாகி 'இளங்கோ' அடிகளாக நம்முன்னே நிற்கிறான். அவன் விநயத்துடன் ஏந்திநிற்கும் சிலப்பதிகாரம் என்னும் பொற்சிலம்பை வாங்கித் தனது மலர்த் தாளிணைகளிலே அணிந்து கொள்ளுகிறாள் தமிழன்னை. அடாடா! என்ன அற்புதம்! தாயே இவனைப் போன்ற புதல்வனை மறுபடி பெறுவையோ என்ற சொற்கள் தாமாகவே நமது நெஞ்சினின்றும் எழுகின்றன. அந்த அரங்கத்திலே அதே தேவகானம் மீண்டும் எழுகிறது.

இச்சை கொண்ட பொருளெலா
மிழந்துவிட்ட போதினும்?

பிச்சைவாங்கி யுண்ணும் வாழ்க்கை

பெற்றுவிட்ட போதினும்

அச்சமில்லை, அச்சமில்லை,
அச்சமென்ப தில்லையே.

என்று சுழன்று சுழன்று என் செவிகளிலே ரீங்காரம் செய்தது. திடுக்கிட்டேன்.

பத்திரிகைக் கூட்டம் பழம்பாய்
வரிசையெலாம் ஒத்திருக்க

என்று பாரதியார் சொன்னதுபோல் நான் என் நாற்காலியிலேதான் உட்கார்ந் திருந்தேன். எதிரே கவிழ்த்து வைத்திருந்த ஆங்கில நாவல் என்னை ஏறிட்டுப் பார்த்துச் சிரிப்பதேபோல் காற்றிலே எழுந்து எழுந்து படுத்தது.

---



வாழ்க! வாழ்க!

(இன்னிசைவாணர் தேவாரம் திரு. டி. பச்சையப்பா)

பருவ மாணவர்ப் பயிற்றுநற் றெண்டினிற்
கொருவ னீயென உலகமு வப்புறப்
பொருவி னன்னிதி வழங்கிய புனிதநின்
கருணை பாவலர் காவியத் தார்வதோ
அருவுரு மிறைகழலை அடைதற்குக் கல்வியெனு
மொருவடிவப் புணையொன்றே யுபாயமென நனிகருதிப்
பெருவணிகர் குலத்துதித்த பெருமானே பொருள்வழங்கி
சருவகலா சாலைநிறீஇத் தந்தனைநீ ணாள்வாழ்க.
உறுபவத்தின் பிணியோட்டு மொப்பரிய
அருமருந்தென் றுலகோர் காட்டுங்
குறுமுனியி னறுந்தமிழைக் குவலயத்திற்
குழவியென வளர்க்கும் வள்ளல்
பொறுமையணி தனவணிகர் புவியரசன்
எனுமண்ணா மலையார்க் கான்ற
அறுபதினா மாண்டுவிழா அளப்பரிய
செல்வமெலா மளிக்க மாதோ.

---

டாக்டர்களால் நன்குமதிக்கப்பெற்றது கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி

Supplement to INDIRA issue dated 1-10-41

# அரசரின் ஆர்வம்

பி. என். குட்வா, ஐ. ஸி. எஸ். கலெக்டர், தென் ஆற்காடு

புராதன காலமுதல் செட்டிநாட்டு நகரத்தார் மரபினர்கள் கொடையிற் சிறந்தவர்கள் என்னும் கீர்த்தியைப் பெற்று வந்திருக்கின்றனர். பெரும்பாலும் தமிழ் நாட்டிலுள்ள எண்ணற்ற ஆலயங்கள் நகரத்தார் மரபினர்களாலேயே நிறுவப்பட்டிருக்கின்றன. அடைக்கலமென்றடைந்தோரை ஆதரித்து அன்புடன் உபசரிக்கும் குழுவினருள் சிறந்தவர்களில் தலைமை பெற்ற செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் ஷஷ்டியப்த பூர்த்தி விழா, தமிழ் நாட்டவரனைவரும் கொண்டாட வேண்டிய ஒரு விசேஷமாகும். தம் பொருளில் பெரும்பாலும் கல்வியபிவிருத்திக்கே செலவிடும் ராஜா சர் அவர்களும், அவர்களுடைய மக்களும் சீரும் சிறப்பும் பெற்று மேன்மையுடன் வாழ தமிழ் நாட்டாரனைவரும் கொண்டாட வேண்டியது மிக அவசியம்.

ராஜா சர் அவர்களும், அவர்களுடைய முன்னோர்களும் தான தர்மங்கள் முதலிய நற்காரியங்களுக்கு உரிய விடமாக சிதம்பரத்தையே தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

அவர்களுடைய முன்னோர்கள் ஆலயங்களைப் புதிப்பிக்கும் பணியே சிறந்ததெனக் கொண்டு, மண்டபங்கள் கோபுரங்கள் முதலியவைகளைச் செம்மைப்படுத்தியதுடன் மக்களுக்குப் பயனளிக்கு முறையில் அவைகளை அமைத்துள்ளனர்.

பல நூற்றாண்டுகளாக யாதொரு ஊறுமின்றி நிலைத்து நின்று மக்களுக்கு முக்தியளித்துவரும் பெருமையையுடைய சபாநாயகனின் திருவாலயம் சோழ அரசர்கள், தீர்க்க தரிசிகள், கவிகள் முதலிய பண்டைய தமிழ் நல்லார்களின் மனதைக் கவர்ந்ததுட.ன் தமிழர்களின் பெருமையைப் பிறர் அறிவதற்கேதுவான ஓர் சாஸனமாக விளங்குகிறது. பண்டைய சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் பூசல் ஏற்பட்டது போலல்லாது தற்போதுள்ளவர்கள் சச்சரவின்றி, இருவர்களுடைய வழிபடும் தெய்வங்களும் ஒன்றே என்று உணர்த்தி அதற்குச் சான்றாக ஸ்ரீகோவிந்தராஜப் பெருமான் ஆலயத்தை நிறுவிய பெருமை செட்டி. நாட்டரசரையே சாரும்.

ராஜா சாஹிப்பின் மூத்த சகோதரர் திவான் பகதூர் ராமசாமி செட்டியாரவர்கள் செய்துள்ள அநேக நன்மைகளில் ஜலவசதிகள் அதிகரிக்க குழாய்கள் நகர் முழுவதற்கும் பரவும்படி செய்து உதவியதுடன் இளைஞர்கள் கல்வியபிவிருத்திக்காக நிறுவப்பட்ட உயர்தரக் கல்லூரியும் மிக முக்கியமானவைகளாகும்.

1920-ம் ஆண்டில் ராஜா சாஹிப்பால் ஸ்தாபிக்கப்பட்ட மீனாக்ஷி கல்லூரி தற்பொழுது உன்னத நிலையையடைந்து ஒரு சர்வ கலாசாலையாகத் திகழ்கின்றது. நம் நாட்டு மக்களின் அறியாமையைப் போக்குவதுடன் மக்களுக்கு உணர்ச்சியை யுண்டுபண்ணுவதே இக்கலாசாலையின் முக்கிய நோக்கம்.

நூதனமான பொருளாராய்ச்சித் துறையிலும், கர்நாடக சங்கீதத்தை வளர்க்கும் முறையிலும் நிறுவப்பட்ட இக்கலாசாலை இளைஞர்களுக்கு நன்மையை யளிக்கின்றது.

அண்ணாமலை சர்வகலாசாலை நாளுக்குநாள் அபிவிருத்தியடைவதுடன் கலை பயிலும் மாணவர்கள் ஒற்றுமையை நிலைநாட்டவும், பொது ஜனசேவை செய்யவும் முயற்சிக்க கலாசாலை நிர்வாகிகள் பிரயத்தனப்பட்டு வருகின்றனர். ஆந்திரா மைசூர் போன்று தமிழ் நாட்டிலும் ஒரு சர்வகலாசாலை விளங்கவேண்டுமென்பதே அதன் ஸ்தாபகரின் அவா. அத்துடன் தமிழர்கள் நேம பழக்கங்களை விருத்தி செய்வதற்குத் தகுந்த முறையில் கலைகள் போதிக்கப்பட்டு வருகின்றன. இக்கலாசாலை தமிழர்கள் அடைய முயற்சி செய்யும் சிறந்த சம்பிரதாயங்களையும் தேசீயத்தையும், தடையின்றிப் பெற மாணவர்களுக்கு ஆக்கமளிக்குமென்பதே நமது நம்பிக்கை.

## வள்ளலின் சிறப்பு

ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரின் சஷ்டியப்த பூர்த்தி கொண்டாட்டத்தை முன்னிட்டு, என்னைத் தனது பத்திரிகைக்கு ஒரு செய்தி அனுப்பும்படி வேண்டியதற்காக "இந்திரா" ஆசிரியருக்கு எனது வந்தனத்தையும், அவ்வாறு செய்வதில் எனக்கு உண்டாகும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கிறேன்.

எனது நண்பர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியாரை நான் 50 வருஷமாக அறிவேன். அவர்

ஊக்கமளிப்பது பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

தனவைசிய சமூகத்தில் முதன்மையானவர். அவர் கல்வி அபிவிருத்தியிலும், வைத்திய வசதிகள் ஏற்படுத்துவதிலும், இன்னும் பொதுமக்கள், ஸ்திரீகள், இவர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய பல்வேறு துறைகளிலும், ஏராளமான பொருட் செலவு செய்திருக்கிறார். முக்கியமாக சிதம்பரத்தில் அவர் ஸ்தாபித்திருக்கும் அண்ணாமலை சர்வகலாசாலை நிரந்தர ஞாபகச் சின்னமாகும். மேலும், தனது குலத்திற்கேற்பட்ட ஆர்வத்தோடு அநேக கோவில்களுக்கு திருப்பணிகள் செய்திருக்கிறார்.

அவருடைய சஷ்டியப்த பூர்த்தியைக் கொண்டாடுவதில் எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு, அவரும், அவரது சர்வகலாசாலையும் நீடூழி வாழ கடவுள் அருள்புரியுமாறு பிரார்த்திக்கிறேன்.

---




எம். கே. தியாகராஜ பாகவதர்

தமிழ் நாட்டில் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களை அறியாதார் எவரும் இலர். நாட்டுக் கோட்டைச் செட்டியார் சமூகத்தில் நமது ராஜா சர் அவர்கள் ஓர் தலை சிறந்த செல்வர். தில்லையம்பதியில் அவர்களால் நிறுவப்பட்டுள்ள பல்கலைக் கழகம், மலைமேலிட்ட விளக்கென ராஜா சர் அவர்களின் பெருங் கொடையினையும் பேராற்றலையும் விளக்கி நிற்கின்றது. பண்டை நாள் தொட்டே நமது ராஜா சர் அவர்கள் பொது வாழ்வில் பற்பல துறைகளில் தொண்டாற்றி வந்துள்ளார்கள். தமிழ் நாட்டு மக்களுக்கும் தாய் மொழிக்கும் தமிழர் கலை வளர்ச்சிக்கும் அவர்கள் செய்த உதவிகள் அளப்பரியன. அவற்றுள்ளும் சிறப்பாகக் குறிக்கத் தக்கது அண்மையில் தமிழ்ப் பாடல்கள் வளர்ச்சி கருதி பத்தாயிரம் வெண் பொற் காசுகள் பரிந்தளித்த செய்தியாகும். இது பற்றிய சங்கீத மாநாடொன்று அண்ணாமலைநகரில் சென்ற மாதம் 14உ முதல் 17உ முடிய நான்கு தினங்கள் நடை பெற்றதை அனைவரும் அறிவர். தமிழ்ப் பாடல்களைப் புதிதாக எழுதுவோருக்கும், சங்கீதக்கச்சேரிகளில் தமிழ்ப் பாடல்களைப் பாடுவோருக்கும் மேற்படி மூல நிதியிலிருந்து வரும் வருவாய் பகிர்ந்தளிக்கப்படும். இது தமிழ் இசைக் கலை வளர்ச்சிக்குப் பெருந்துணை என்பதை இயம்பவும் வேண்டுமோ? முன்னாளில் சேர, சோழ, பாண்டியராகிய மூவேந்தர்கள் முத்தமிழைப் போற்றி வளர்த்தது போல, இந்நாளிலும் ராஜா சர் அவர்கள், அமிழ்தினும் இனிய தமிழ் மொழியைப் போற்றி வளர்த்தல் அனைவராலும் பாராட்டற்குரிய தொன்றாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தனித் தமிழ் பல் கலைக் கழகமாக ஆக்கப்படல் வேண்டுமென்று அரும்பியுள்ள எண்ணம் முற்றுப் பெறுமென்பதற்கு தமிழ் சங்கீதத்திற்கு அளித்துள்ள இவ்வுயர்வு தக்கதொரு சான்றாகும். இத்தகைய அரும் பெரும் செயல்களை ஆற்றிய பெரியார் ராஜா சர் அவர்கட்கு இவ்வாண்டு புரட்டாசித் திங்கள் 12-ம் நாளோடு அறுபதாண்டுகள் நிறைவுறுகின்றன. அன்று அவர்களின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா அணி பெற நடை பெறப் போகிறது. தமிழ் நாட்டுப் பொதுமக்கட்கும் அன்னவர் மொழி, கலைகட்கும் பல்வகையினும் உதவி வரும் பாரி வேள் அனைய நமது ராஜா சர் அவர்கள் நீடிய புகழும் நிறைந்த செல்வமும் குன்றா மகிழ்ச்சியும் என்றும் பொருந்தி நிலமிசை என்றும் நிலவி வாழ்கவென எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வந்திப்போமாக.

---

இனிமை பயப்பது கண்டனூர் பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

Supplement to INDIRA issue dated 1-10-41

# அறம் வளர்த்த நாயகி

'திருப்புகழ் தொண்டன்' கிருபானந்தவாரி

பூரணமான, நிலவு வீசிக்கொண்டிருந்தது. தென்றல் சுகமாக இன்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தது. எங்கும் இனிய பாடல்களின் ஒலியும் சங்கீத வாத்தியங்களின் ஒலியும் இனிமையை ஈந்துகொண் டிருந்தன. கோயில்களில் பள்ளியறை சேவை நடந்துகொண்டிருந்தது. மணி 10 இருக்கும். மேல் மாடியில் வெட்ட வெளியில் சாய்வு நாற்காலியில் **சந்திர வதனன்** சாய்ந்துகொண் டிருந்தான். எதிரில் மேஜைமேல் திருவாசகம், தேவாரம், திருப்புகழ் முதலிய அருள்முறை நூல்கள் இருந்தன. சந்திரவதனன் வானத்தை நோக்கிக் குளிர்ந்த கிரணத்தைப் பொழியும் தண்ணிலாவையும், நீல ஆடையில் முத்துக்களைப் பதிய வைத்தாற் போன்று அழகு செய்யும் எண்ணிறந்த நட்சத்திரங்களையும் பார்த்து, அவைகளின் இயற்கை யழகில் ஈடுபட்டுக் கொண்டிருந்தான். "என்னே இறைவனது சிருஷ்டியின் அமைப்பு? தன்னருள் வெளிக்குளே அகிலாண்ட கோடி யெல்லாம் தங்கும்படிக்கு இச்சை வைத்து உயிர்க்குயிராய் தழைத்த ஆண்டவனது அருளாலே இந்த உடுக்கள் வானில் நிற்கின்றன. அந்தரத்திலே இவைகளை நிற்க வைத்திருப்பது இறைவனது அருட் சத்தி ஒன்றே யன்றோ? அவ்விறைவனது அளவிலாற்றலை என்னென்று புகழ்வது......" என்று பலவாறு சிந்தனை செய்துகொண்டிருக்குந் தருவாயில் அவனுடைய அன்புக் களஞ்சியமாகிய **அறம் வளர்த்த நாயகி** தங்கக் கிண்ணத்தில் பால் கொண்டுவந்து கணவனிடம் தந்து நின்றாள்.

சந்திரவதனன் மனைவியை நோக்கி, "மாசில் கற்புடை மாதே! இப்பாலினும் பரிசுத்தமானது நின் மனம். பாலைக் காய்ச்சினாலும் சுவை குறையாது; அதுபோல் உன்னைத் துன்புறுத்தினாலும் நின் குணம் குறையாது. இந்தச் சந்திரனைவிட நின் முகங் குளிர்ந்திருக்கின்றது. இந்த நட்சத்திரங்களைவிட நின் பல் ஒளி செய்கின்றது. பிரிய நாயகீ! இட்டுண்ணாதவன் செல்வம் எப்படிக் குறையுமோ அப்படி நின் இடை குறுகி இருக்கின்றது. இல்லையென்னாது வழங்குபவன் செல்வம்போல நின் தனம் வளர்ந்திருக்கின்றது. இப்படி அருகில் இரு" என்றான். அறம் வளர்த்த நாயகி கணவன் இன்னுரைக்கு மகிழ்ந்து கீழமர்ந்து அவன் காலை மெல்ல வருடிக்கொண்டு,

"பிராணேசா! தாங்கள் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தீர்; அதற்கு இடையூறாக நான் வந்ததற்கு மன்னிக்கவேண்டும். பெண்கள் கணவனையே கடவுளாக நினைக்கவேண்டும்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை"

என்ற பொதுமறையின் புனித மொழிப்படி பதிபக்தியிற் சிறந்திருக்க வேண்டும். கணவனும் அத்தகைய மனைவியைத் தவிர பிற மாதரை மனத்தாலும் தீண்டாமலிருக்க வேண்டும்.

"இந்த இப்பிறவிக் கிருமாதரைச்
சிந்தையாலுந் தொடேன் என்ற செவ்வரந் தந்த"

ஸ்ரீ ராமசந்திரனது உறுதியான ஏகபத்தினி விரதத்தைப் போற்றாதார் யாவர்? அவரைப் போல் ஒவ்வொரு புருடரும் இருந்தால் உலகில் எல்லாப் பெண்களும் கற்புடையவராகவே இருப்பர். பெண்ணுலகம் தூய்மையாகவே இருக்கும். நாடு நலமுறும், பெண்கள் தத்தம் கணவனிடம் இன்புறுவர். ஆண்கள் மட்டும் வரம்பின்றி வாழலாமா? தாங்கள் மட்டும் நானிருக்கும்போதும் நான் இல்லாதபோதும் வேறு ஒரு பெண்ணிடம் உறவாடுகின்றீரே அது ஞாயமா? அது நீதியா?" என்றாள்.

**சந்திர:** பெண்மணியே! நான் இந்த நிமிஷம் வரை நின்னைப் பார்த்த கண்ணாலே வேறு ஒரு பெண்ணையும் பார்த்ததில்லையே! நீ என் மீது வீண் குறை கூறுகின்றாய். பெண்கள் எப்போதும் கணவனை நம்புவதே கிடையாது. நீ என் செய்வாய்? பெண்கள் இயல்பு கணவனைச் சந்தேகிப்பது.

"வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று."

என்ற திருக்குறள் சத்தியமே.

**அறம்:** காதல! நான் அப்படி வீணே சந்தேகிக்க மாட்டேன்; தாங்கள்தான் மறைக்கின்றீர். இது ஆண்களின் இயல்பு.

**சந்திர:** நாயகி! எந்தப் பெண்ணுடன் உறவாடினேன்? சற்று சொல்.

**அறம்:** காந்த! நாள்தோறும் அந்தப் பெண்ணுடன் உறவாடுகின்றீர். அவள் வந்துவிட்டால் நான் அருகிலிருக்கும்போது கூட

பாரினில் புகழ்பெற்றது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

அவள் வசமாகி விடுகின்றீர். இன்னும் சிறிது நேரம் கழித்தால் அவளுடன் உறவாடுவீர். நீங்களே இல்லையென்று பொய் சொன்னால் நான் என்ன சொல்வது?

**சந்திர:** மாதரசே! ஒரு மாதையும் பாராத என் மீது இவ்வாறு வீண்பழி சுமத்துகின்றனை. வேண்டாம்; சந்தேகத்தை விட்டுவிடு.

**அறம்:** நாத! நான் ஒருபோதும் ஒருவரையும் பழி கூறமாட்டேன். உண்மையைத்தான் சொல்லுகின்றேன்.

**சந்திர:** பெண்ணே! நான் எந்தப் பெண்ணை நேசிக்கின்றேன்.

**அறம்:** நாத! தாங்கள் எந்தப் பெண்ணுடனும் உறவாடினதே யில்லையோ? சற்று நிதானித்துச் சொல்லுங்கள்.

**சந்திர:** கிடையவே கிடையாது. முக்காலும் கிடையாது.

**அறம்:** பிராணேச! இன்னும் சிறிது நேரம் போனால் என் செய்வீர்?

**சந்திர:** என்? தூங்குவேன்.

**அறம்:** அந்தத் தூக்கத்திற்கு அதிதேவதை யார்?

**சந்திர:** மூதேவி.

**அறம்:** அவள் பெண்ணா? ஆணா?

**சந்திர:** பெண்தான்.

**அறம்:** அவளுடன் நாள்தோறும் உறவாடுகின்றீரா இல்லையா? நான் அருகிலிருக்கும் போதே அவளுடைய வசமாகி விடுகின்றீரே? இப்போது என்ன சொல்லுகின்றீர்?

**சந்திர:** (சற்று திகைத்தான். பதில் சொல்ல முடியவில்லை. மனைவியின் மதி நுட்பத்திற்கு மகிழ்ந்தான்) பெண்ணே! நான் தோற்று விட்டேன்.

**அறம்:** சரி, தோற்றவர்கள் வென்றவர்க்குப் பரிசு தரவேண்டாவோ?

**சந்திர:** பெண்ணே! நினக்கு என்ன பரிசு வேண்டும்? கூறு; எது வேண்டுமாயினும் தருவேன்.

**அறம்:** ஆருயிர்த்துணைவ; தங்களிடம் ஒரு பரிசு யாசிக்கின்றேன். அது மூவுலகினுஞ் சிறந்தது. எனக்கு அது விலைமதிக்க முடியாத பொருள். அதனை நீங்கள் இப்போது எனக்குத் தரவேண்டும். அதனை வேறு ஒருவருக்கும் தரக்கூடாது. அதற்கு நான் உரியவள். (Sole Agent)

**சந்திர:** காதலீ! உனக்கே தருவேன். வேறு ஒருவருக்கும் தரமாட்டேன். அது என்ன பொருள்? கேள்.

**அறம்:** காதல! அதுதான் தங்கள் திருவாயின் முத்தம். அதுதான் எனக்குப் பிரியமானது.

**சந்திர:** பெண்ணே! இதுதானா? ஒன்றல்ல நூறு வேண்டுமாயினும் பெற்றுக்கொள். (என்று அதனை அவள் விருப்பப்படி தந்தான்).

**அறம்:** பிராணகாந்த! நான் இதற்குப் பதில் தங்களுக்கு என்ன கொடுக்கப் போகின்றேன்.

**சந்திர:** மாதரசே! ஒரு பாடலைப் பாடு.

அறம் வளர்த்த நாயகி வீணையை எடுத்து எழு தந்திகளையும் சுருதி சேர்த்து சாரதா தேவி போல் இருந்து ஒரு பொருளடங்கிய பாடலை மோகன இராகத்தில் கல்லுங்கரைய இனிது பாடினாள்.

*

**இராகம்: மோகனம். தாளம்: ஆதி.**

**பல்லவி**

,, கொழுநனைத் தொழுமன! மே;; கன!
மேயுறும் அநுதினமே

**அநுபல்லவி**

,, கொழுநனைத் தொழுதெழக்!
,, கொண்டல்பெய்! யெனப் பெய்யும்
,, எழுபரிதடுத்தவள்! இயலுணர்ந்து மயல்!
தணந்து கருணை செய்யும் (கொழு)

**சிட்டா ஸ்வரம்**

,, கக த பகரி ஸரிகப கரிஸரி! கா ;;
பக! ரி கரிஸ ஸதப த
ஸரி கபதஸ் பதஸ்ரி க்ரிஸ் தபத!
ரிஸா தாப ஸ்த! ,பாக தபா க ,ரி (கொழு)

**சரணம்**

,, வேடனை எரித்தா ளொருத்தி—வடவை போன்ற
,, வெங்கனல் தணித்தா ளொருத்தி
,, தேடரும் மூவரும் வாடச்செய்தா ளொருத்தி
,, சூடென விசிறியே வீடுபெற்றா ளொருத்தி (கொழு)
,, கானத்தில் இறந்த பதியை எழுப்பியோர் பெண்

தந்த ரோகங்களை நிவர்த்திப்பது பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

,, கற்பினால் கெடுத்தாள் விதியை
,, தானந் தருமஞ் செய்து ஈனந்தனையே
கொய்து
,, த்யானமுஞ் செய்து க்ருபானந்தமுற உய்து
(கொழு)

*

சந்திர : பெண்ணே! சற்று நில். நீயும் ஆண் சம்பந்தமடைந்தனை.

அறம் : (வீணையை வைத்துவிட்டு) என்ன அப்படிச் சொல்லுகின்றீர்?

சந்திர : ஒரு ஆணை நேசித்தாய்.

அறம் : எப்போ? எங்கே? என் இப்படி பொய் சொல்லுகின்றீர்?

சந்திர : நீ இப்போது பாடியது என்ன ராகம்?

அறம் : மோகனம்.

சந்திர : அது ஆண்ராகமா? பெண்ராகமா?

அறம் : அது ஆண் ராகம்.

சந்திர : அப்போது மோகனமென்கின்ற ஆணுடன் நேசித்தாயா? இல்லையா?

அறம் : (ஒன்றும் சொல்ல முடியாமல் தலை குனிந்து வீணையை வைத்துவிட்டு) நான் பாடியது தவறுதான்.

சந்திர : அப்படி ஒன்றும் தவறு செய்தாயில்லை. பெண்ணே! நீ மோகன ராகம் பாடிக் கொள்; நானும் அந்த நித்ரா தேவியுடன் கூடிக்கொள்கின்றேன் என்று எழுந்து சயன அறைக்குள் சென்று படுத்தான்.

கணவனது சொற்சாதுரியத்தை எண்ணி இதயம் மகிழ்ந்த அறம் வளர்த்த நாயகி அவனுடைய திருவடியை வருடி கணவன் தூங்கிய பின் அவனுடைய திருவடியை மனதில் தியானித்துக்கொண்டே அவனருகில் தூங்குவாளாயினாள்.




MINSARA RASAM
A SOVEREIGN REMEDY
FOR
ALL GENERAL COMPLAINTS
USED INTERNALLY AND EXTERNALLY IN DROP DOSES WITH IMMEDIATE AND MIRACULOUS EFFECTS
CATALOGUE AND OTHER INFORMATIONS FREE ON APPLICATION
PRICE PER PHIAL Rs. 2 ONLY
MINSARA RASAM COY. LTD., SALEM

மின்சார ரசம்

ஒவ்வொரு குடும்பத்துக்கும் சிறந்த டாக்டரைப் போல் உதவக்கூடியது.

REGISTERED TRADE MARK
MINSARA RASAM

எல்லா வியாதிகளையும் ராம பாணம் போல் தவறாமல் கண்டிக்கும் ஓர் தேவாமிர்தம்.

துளி கணக்கில், உபயோகித்து மணிக் கணக்கில் குணமடையலாம். ஆயிரக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றது. கேட்டலாக் இனாம். எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 2.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம்


இன்ப மூட்டுவது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

" ஆரோக்கியமே அருந்தனம் "



தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகள் உடற்பயிற்சி செய்து திட காத்திரத்துடன் ஆரோக்கியமாக இவ்வுலகில் நீண்ட நாள் வாழ்வார்களாக.

ராம. பழனியப்ப செட்டியார்

ஆசிரியர் : 'இந்திரா'

*Supplement to INDIRA issue dated 1-10-41*



“பாட ஆரம்பிக்கலாமா?” என்று கேட்கிறார் பனையப்பட்டி

**வீணை தீர்த்தான் செட்டியார்**

தம்பூராவை மீட்டுபவர்

**திரு. ராமனாதன்**

சங்கீத வித்வான் பனையப்பட்டி வீணை தீர்த்தான் செட்டியார் தன வைசிய மரபில் உதித்தவர், அரியக்குடி, செம்மங்குடி முதலியோரிடம் சங்கீதப் பயிற்சி பெற்று பெரிய பெரிய பக்க வாத்தியங்களுடன் கச்சேரி செய்து வருகிறார். தமிழி னிடத்தில் மிகுந்த ஆர்வமுள்ளவர், இவர் எழுதிய கட்டுரை பிறிதோரிடத்தில் வெளியாகி யிருக்கின்றது.

Supplement to INDIRA issue dated 1-10-41

# தமிழில் கீர்த்தனைகள்

எஸ். பாலகிருஷ்ணன், பி. எஸ்ஸி. ஆனர்ஸ்

பத்து வருஷத்துக்கு முந்தைய அனுபவம். வானமே இடிந்து விழுந்துவிட்டது என்றாலும் லேசாக அசைந்து கொடுத்துவிட்டு மறுபடியும் தன் போக்கிலேயே போகும் எங்கள் கிராமத்திலேகூட இந்த ஒருவார காலமாக எங்கும் ஒரே பரபரப்புக் காணப்பட்டது. பெரிய பண்ணை பிள்ளைவாளின் ஒரே குழந்தைக்குக் கல்யாணம் என்றால் ஊர் எப்படி அமைதியாக இருக்கமுடியும்? வானளாவிய பந்தல்கள், கண்ணைப்பறிக்கும் கமுகு வகையால் அலங்காரங்கள், பெரிய பெரிய விருந்துகள், எத்தனையோ மேளக்கச்சேரிகள் இன்னும் என்னென்னவோ! கல்யாணம் ஐந்து நாளைக்கு. ஒவ்வொரு நாள் மாலை நேரத்திலும் சிறந்த வித்வான்களான பாகவதர்களைக் கொண்டு தக்க பக்க வாத்தியங்களோடு கச்சேரி. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தற்கால பாகவதர்கள் சிலருடைய பாட்டை முதல்முதலாகக் கேட்கும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. இந்தச் சம்பவத்தைத்தான் நான் ஒரு அனுபவம் என்று மேலே குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆம்; உண்மையிலேயே அது ஒரு அநுபவம் தான். ஓடியாடித் திரியவேண்டிய பதினைந்து வயதுப் பையனாகிய நான், புதுமையின் கவர்ச்சியினாலோ அல்லது இயற்கையிலேயே எனக்கு இருந்த சங்கீதப் பைத்தியத்தினாலோ இழுக்கப்பட்டு தினம் தினம் அங்குபோய் 3, 4 மணி நேரம் இருந்துவிட்டுக் கடைசியில் தீராத தலை நோவோடு வீடு திரும்ப வேண்டியிருந்தால் அதை அநுபவம் என்று சொல்லாமல் வேறு எவ்வாறு குறிப்பிட முடியும்? பாகவதர்கள் பாட்டில் ஒருவருடையதையாவது என்னால் ரஸிக்க முடியவில்லை. ஆனால் பந்தலில் எனக்கு முன்னால் இருந்தவர்களைப் பார்த்தால் நான் அவமானத்தால் தலை கவிழ வேண்டியிருந்தது. 'பேஷ், பேஷ்' என்று அவர்கள் தலையை யசைப்பதும், எட்டினமட்டும் கையை விரித்துத் தடால், தடால் என்று தாளம்போட்டு, பாடகரைக் குஷால்படுத்திய மாதிரியும் எல்லாமாகச் சேர்ந்து என் அறியாமையை எண்ணி என்னை வெட்கமடையச் செய்தன. "ஓகோ, நாம் ஒரு அப்பாவி. பாகவதருடைய இந்த உயர்ந்த சங்கீதத்தை நம்மால் ரஸிக்கமுடியவில்லை யல்லவா? போதுமான அளவு பயிற்சி வந்த பிறகுதான் நாம் இங்கெல்லாம் வருவதற்குத் தகுதி; இப்போது வந்தது பிசகு" என்று மனதுக்குள் முடிவுகட்டிக் கொண்டு ஒருவாறு நிம்மதி அடைந்தேன்.

இருந்தாலும் இந்த அநுபவம் என் மனதில் ஒரு பெரிய கேள்வியை எழுப்பிவிட்டு விட்டுப் போய்விட்டது. "நாம் சாதாரணமாக சங்கீதத்தை ரஸித்து விடுவதுண்டே. விசேஷ காலங்களில் மூர்த்திகள் எழுந்தருளி வரும்போது பின்னாலே பஜனையில் வரும் தேவார கோஷ்டிகளுக்குப் போய் எத்தனைமுறை பாடல்களை மெய்ம்மறந்து அநுபவித்திருக்கிறோம்! காவடி தூக்கி யாடும்போதும், இன்னும் கரகம், காளி யாட்டம் இவைகளுக்குப் போடும் கோலாட்டங்களையும், தெருவில் நடக்கும் குறவஞ்சி முதலிய நாடகப் பாட்டுகளையும் இரவு பூராவும், விழித்த கண் மூடாமல், கேட்டு அநுபவித்திருக்கிறோமே! ஊர்வலங்களிலும் மற்றும் உற்சவ காலங்களிலும் நடக்கும் நாதசுரக் கச்சேரிகளுக்குத் தான் எத்தனைமுறை போய்க்கேட்டு ஆனந்தித்திருக்கிறோம்! பார்க்கப் போனால், நாகசுரக்காரர்களும், கரகம் ஆடுபவர்களும், தேவார கோஷ்டியாரும் இந்த பாகவதர்களைப் போல நல்ல சங்கீத முறைகளில் பயின்றவர்களும் அல்லவே. அப்படியெல்லா மிருக்க, இந்த பாகவதர்கள் சங்கீதத்தை மட்டும் நமக்கு ரஸிக்க முடியாமல் போய்விடுவானேன்......?" கேள்வி ரொம்பவும் கஷ்டமான கேள்விதான். எவ்வளவோ விதமாக யோசித்துப் பார்த்தும் இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் கிடைக்காமலே இருந்து வந்தது.

இது நடந்து பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. அதன் பிறகு நான் சங்கீதக் கச்சேரிகளுக்கே போவதில்லை. அவைகளைக் கண்டாலே எனக்கு பயம். சூடுகண்ட பூனையல்லவா? மேற்படிப்புக்காக காலேஜுக்குப் போனபின்புகூட இந்த பயம் என்னைவிட்டு அகன்ற பாடில்லை. காலேஜில் சங்கீத சபா என்று ஒன்று உண்டு. மாதம் ஒருமுறை அங்கு ஒரு பெரிய கச்சேரி நடப்பது வழக்கம். எவ்வளவோ வற்புறுத்தி என் நண்பர்கள் என்னை அழைத்துங்கூட எனக்கு அங்கு போகத் துணிவு வரவில்லை. "எனக்கு சங்கீத ஞானம் கிடையாதப்பா. நீங்கள் போய்க் கேட்டு வாருங்கள். எனக்கு அங்கு வந்தால் ஒன்றுமே புரிவதில்லை" என்று சொல்லி மறுத்து வந்தேன். ஆயினும், இன்பக் கலைகளில் ஒன்றாகிய இந்த சங்கீதக் கலையை

பற்களை உறுதிப்படச் செய்வது பழநியப்பா'ஸ் பற்பொடியே

அநுபவிக்க முடியவில்லையே என்ற வருத்தம் மட்டும் என்னைவிட்டு நீங்கிய பாடில்லை.

இந்நிலையில்தான் ஒருநாள் தற்செயலாக தாகூரடிகள் கூறிய ஒரு பெரிய உண்மை ஒன்றை நான் அறிய நேர்ந்தது. கவி (சாஹித்யங்களும்தான்) என்பதெல்லாம் தாய் பாஷையிலேயே எழுதப்படவேண்டும்; அப்போதுதான் நாம் அதை அநுபவிக்க முடியும் என்பதுதான் அவர் கூறியதன் கருத்து. "தாய் பாஷையல்லாத வேறொரு பாஷையின் மூலம் ஒருவன் கவிகளை உணர முயற்சி செய்வதெல்லாம் காதலியின் அன்பைப் பெறுவதற்காக வக்கீலிடம் வக்காலத்துக் கொடுத்த கணக்குத்தான்" என்று வெகு காரமாக அவர் சொல்லியிருந்தார். வாஸ்தவம், வாஸ்தவம். மனதிலிருந்த ஒரு பெரிய சுமை நீங்கிற்று எனக்கு. பாகவதர்களின் சங்கீதத்தை நான் அநுபவியாததற்கும், தேவார கோஷ்டி, குறவஞ்சி நாடகம் முதலியவைகளை நான் அநுபவிக்க முடிந்ததற்கும் உண்மையான காரணத்தை இப்போது கண்டுபிடித்து விட்டேன். எல்லாம் பாஷைக் கோளாறுதான். பாகவதர்கள் பாடியதெல்லாம் எனக்கும்--ஏன், அவர்களுக்குமேகூட—தெரியாத தெலுங்கு பாஷையில். ஆனால், தேவார கோஷ்டி முதலியவைகளிலோ பாடல்களெல்லாம் எனது தாய் பாஷையாகிய, என்னோடு ஒட்டக்கூடிய பாஷையாகிய என் இதயத்தின் தந்திகளை மீட்டி இனியதொரு இசையை எழுப்பிப் பரவசமாக்கக் கூடிய பாஷையாகிய தமிழ் பாஷையில். இப்போது எல்லாம் தெளிவாகி விட்டதல்லவா ?

இது எனது அநுபவம். இதுபோன்ற அநுபவம் சங்கீதத்தை ரஸிக்கப் புகுந்த ஒவ்வொரு இளைஞனுக்கும் இருந்திருக்க வேண்டும் என்பதுதான் எனது அபிப்பிராயம். 'அப்படியானால், நம் நாட்டில் தற்போது பிரபலமாக இருந்து வரும் பாகவதர்கள் எல்லாம் மேலும் மேலும் தங்களுக்கும் கேட்பவர்களுக்கும் தெரியாத பாஷையிலேயே பாடிக்கொண்டிருப்பானேன்? இது விந்தையாக இல்லையா? அவர்கள்தான் பாடுகிறார்கள் என்றால் அதைப்போய்க் கேட்டு ரஸிக்க எவ்வளவோ ரூபாயைக் கொடுத்து இத்தனை பேர் போய் வருகிறார்களே: அது இதைவிட விந்தையாகவல்லவா இருக்கிறது?' என்று கேட்கலாம். கேட்கப் போகிறவர்கள் ஏன் போகிறார்கள் என்பதைச் சுலபமாகச் சொல்லி விடலாம். நம் நாட்டில் எவ்வளவோ மேல் நாட்டுப் பேசும்படங்கள் காட்டப்படுகின்றன. மேல் நாட்டார் வாழ்க்கை முறையும், அவர்களது பாஷையின் முழு லாகவங்களும் நமக்குத் தெரிந்தாலொழிய நாம் அப்படங்களை அநுபவிக்க முடியாது என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம். இருந்தாலும் ஆங்கில வாழ்க்கை முறையைக் கொஞ்சமும் அறியாத எத்தனை இளைஞர்கள் அவைகளைப் பார்த்து வந்து தாங்கள் ஏதோ அநுபவித்து விட்டதாக எண்ணி மகிழ்கிறார்கள்! இதேபோலத்தான் கச்சேரிகளுக்குப் போவதும். எல்லாம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதுதான். போகிறவர்கள் நிலை இவ்வாறாக, தங்களுக்குத் தெரியாத பாஷையிலேயே பாடிக்கொண்டிருப்பதற்கு பாகவதர்கள் கூறும் நியாயங்களோ மிகவும் வேடிக்கையாயிருக்கின்றன. தமிழ் பாஷை சங்கீதத்துக்கு ஏற்றதல்ல—ஒன்று; தமிழில் போதுமான அளவு கீர்த்தனைகள் கிடையாது—இரண்டு; ராகங்களே வெளிதேசங்களிலிருந்து கொண்டுவரப்பட்டவை. ஆகவே, அவைகள் தமிழ்ப் பாட்டோடு இயைந்து வராது—மூன்று......

சாதாரணமாக யாருமே சற்றுக் கூர்ந்து கவனித்தால் இந்த நியாயங்கள் எல்லாம் எவ்வளவு அர்த்தமற்றவை என்று விளங்கிவிடும். 'இது சங்கீதத்துக்கு ஏற்காத பாஷை' என்று உலகில் எந்த பாஷையையுமே தள்ளிவிட முடியாது. தெலுங்குமட்டும்தான் சங்கீதத்துக்கு ஏற்றதென்றால் மற்ற பாஷைகளில் பாட்டுகளே இல்லாமல் அல்லவா இருக்கவேண்டும்? ஆனால் உண்மையோ வேறுவிதமாக இருக்கிறது. எனவே தமிழ் பாஷையும், உலகில் மற்றெந்த பாஷையைப்போல சங்கீதத்துக்கு இசைந்து வரக்கூடியதுதான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பாகவதர்களில் சிலர் 'தமிழ் பாஷையில் கீர்த்தனங்கள் இல்லையே, நாங்கள் என்ன செய்வது' என்று கையை விரிக்கிறார்கள். தமிழிலா கீர்த்தனங்கள் இல்லை? கோபால கிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர், கவிகுஞ்சர பாரதியார், முத்துத் தாண்டவர், சுப்பராமையர், குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் என்று இவர்களையெல்லாம் நினைத்துப் பார்த்தால் தமிழில் மட்டும்தான் கீர்த்தனங்கள் இருக்கின்றனவோ என்றுகூட நமக்குச் சொல்லத் தோன்றுகிறது. மேலும், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் முதலிய பழைய தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள பாடல்களும், தேவார திருவாசகங்கள், ஆழ்வார் பிரபந்தங்கள் போன்ற சமய சம்பந்தமான நூல்களிலுள்ள பாடல்களும் எல்லாம் அருமையாக தாளத்தில் அல்லவா அமைந்து கிடக்கின்றன. இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் வேறு எந்த பாஷையிலாவது இவ்வளவு அதிகமான பாடல்கள் இருக்குமோ என்று சந்தேகிக்கவே தோன்றுகிறது.

சண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்போடி அநேக டாக்டர்களால் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது



## சரித்திரக் காட்சி 1

ஜான்சி நாட்டின் ராணி லட்சுமி பாய். இவள் ஜான்சிவாலி ராணி என்ற பெயரால் அழைக்கப்பட்டாள். 1857-ம் வருஷம், இவள் தனது சேனையுடன், ஆங்கிலேயர்கள்மீது போர் தொடுத்தாள். பெரிய ஆங்கிலச் சேனையுடன் இவளது சிறிய சேனை என்ன செய்ய முடியும்? என்ருலும், இவள் கடைசி வரை போராடினுள். ஒரு ஆங்கிலப் போர் வீரன் ராணியின் பின்புறம் நின்று, வாளை வீசினன். ஆனல், ராணி ஒரே வீச்சில் அவனை வெட்டி வீழ்த்தினுள். அதே சமயம் மற்ருெரு கத்தி ராணியின்மீது பாய்ந்தது. தனது நாட்டிற்காக அவள் கடைசி வரை போராடி வீர சுவர்க்கம் எய்தினுள்.



## சரித்திரக் காட்சி 2

மகாராணி சீசோதனியின் கணவன் யுத்தத்தில் தோற்று ஓடி வந்திருக்கிறான். ரஜபுத்திர நாரீமணி இதைப் பெருத்த அவமானமாகக் கருதுகிறாள். ஒன்று அவன் வெற்றி பெறவேண்டும்; அல்லது அங்கேயே மடியவேண்டும். புறமுதுகிட்டு ஓடி வரும் கணவனை வீட்டினுள் அனுமதிப்பது பெரிய பாபகரமான செயல் என்று அவள் கருதுகிறாள். அவள் வீர மங்கை. வீராவேசம் பொங்குகிறது. தன் கணவனைப் பார்த்துக் கூறுகிறாள்: "நீ புறமுதுகிட்டு ஓடி வந்தாய், நீ ஆண் பிள்ளையா? நான் வீர ரமணி. பதியினுடன் உடன் கட்டை ஏறுவதைத் தான் நான் என் தர்மமாகக் கருதுகிறேன், தோல்வியடைந்த கணவனின் முகத்தைப் பார்க்கமாட்டேன். நீ க்ஷத்திரிய குலத்துக்கு மாசு உண்டாக்கி விட்டாய். நீ போ. திரும்பிப்போ. உனக்கு இங்கே இடமில்லை."

பாகவதர்கள் கூறும் மூன்றாவது நியாயம் ரொம்ப ரொம்ப வேடிக்கையானது. கர்நாடக சங்கீதமே வேறு நாட்டிலிருந்து நம் நாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது என்பது அவர்கள் அபிப்பிராயம். அதற்கு அவர்கள் காட்டும் காரணம் ராகங்களின் பெயர்களெல்லாம் தமிழ்ப் பெயர்களாக இல்லையே என்பதுதான். ஆனால், வேறு நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது என்றால், எந்த நாட்டிலிருந்து, எப்போது, யாரால் கொண்டுவரப்பட்டது என்பதெல்லாம் தெரியவேண்டு மல்லவா? இம்மாதிரி கேள்விகளுக் கெல்லாம் அவர்களிடம் பதில் கிடையாது. எப்படி பதில் இருக்கமுடியும்? பல ஆயிர வருஷங்களுக்கு முன்னாலேயே நாகசுரத்தையும் வீணையையும் கண்டு பிடித்து அவற்றின் இனிய கானத்திலே முழுகித் திளைத்த தமிழ் நாட்டிற்கு, வேறு நாட்டினர் சங்கீதத்தைக் கொண்டு வந்தார்கள் என்பது எவ்வாறு பொருந்தும்? ஸ்வரங்களின் வகைகளையும் அசைவுகளையும் அறியாமலிருந்தால் நம் முன்னோர்கள் எவ்வாறு இந்த வாத்தியங்களை வாசித்து இன்புற்றிருக்க முடியும்? மேலும், உலகமெங்கும் அற்புதம், அற்புதம் என்று போற்றப்படுகிற பரத நாட்டியக் கலையும், நடராஜரது திருவுருவமும் தமிழ் நாட்டிற்கே உரியன என்பதில் யாருக்கும் சந்தேகம் இருப்பதற்கில்லை. (பரத நாட்டியமும் சங்கீதக் கலையும் பிரிக்க முடியாதபடி ஒன்றையொன்று பின்னிக்கொண்டு கிடக்கின்றன.) நடராஜ விக்கிரகமோ சங்கீதத்தின் சாயலை அப்படியே படம் பிடித்து வந்ததோ என்று சொல்லும்படி யிருக்கிறது. (பல நாட்களாக அநேக ராகங்களைப் பாடிப்பாடி உள்ளங் கனிந்த ஒரு கலைஞன் தன் மன வெழுச்சிகளையெல்லாம் உருவகப் படுத்தச் செய்த முயற்சியில் இந்த நடராஜ உருவத்தைச் சிருஷ்டித்திருக்க வேண்டும்.) அப்படித்தான் நமக்கு சொல்லத் தோன்றுகிறது; அவ்வளவு அழகு, அவ்வளவு இன்பம், அவ்வளவு ஆனந்தம் அதில் நிறைந்திருக்கிறது. (ஆகவே, கர்நாடக சங்கீதத்தையோ, அதன் ராகங்களையோ யாரும் சிருஷ்டித்து நமக்குக் கொண்டுவந்து கொடுத்து விட்டார்கள் என்பதெல்லாம் மிகவும் தவறாகும்.) ராகங்களை யாரும் சிருஷ்டிக்கவில்லை. மக்களின் மன உல்லாசங்களிலிருந்து இயற்கையிலேயே முளைத்தெழுந்து உருவம் பெற்றவை அவை. எனவே, எவன் ஒருவன் இந்த மனதைச் சிருஷ்டித்து அதற்குள் இவ்வளவு உணர்ச்சியையும் நிறைத்து வைத்தானோ அவன்தான் இந்த ராகங்களையும் சிருஷ்டித்தான் என்று சொல்லுதல்தான் பொருந்தும். (ராகங்கள் எல்லாம் முன்னாலேயே இருந்தவைதான். நல்ல நல்ல தமிழ்ப் பெயர்களோடு அவைகள் இருந்திருக்க வேண்டும். ஆனால் பின்னால் வந்த சீர்திருத்தக்காரர்கள், செம்பாலை, நட்டபாடை, நைவளம் என்பன போன்ற அழகிய தமிழ்ப் பெயர்களை மாற்றி தற்போதுள்ள பெயர்களை அவைகளுக்கு இட்டிருக்க வேண்டும்.) அதனால் பாதகமில்லை. பெயர் எந்த பாஷையில் இருந்தால்தான் என்ன? அதனால் ராகங்களின் இனிமை குறைந்துவிடப் போவதில்லை. உதாரணமாக தமிழர்களான நம்மில் பெரும்பாலோருடைய பெயர்கள் வேறு பாஷையில் இருக்கின்றன. அது காரணமாக நாம் தமிழர் என்பது போய்விடுமா? அல்லது நமது பெருமைக்குத்தான் குறைவு ஏற்பட்டு விடுமா?

தமிழில் கீர்த்தனங்களுக்கு அளவில்லை என்பதும் ராகபாவத்தை வெளிப்படுத்துவதிலும், 'சங்கதி'களுக்கு இயைந்து வருவதிலும் வேறு எந்த பாஷையிலுமுள்ள கீர்த்தனங்களுக்கு தமிழ்க் கீர்த்தனங்கள் சற்றும் குறைந்தவையல்ல, என்பதும் முடிவான உண்மைகள். ஆயினும், சங்கீத கலாசாலைகளிலும் மற்றப்படி தனிப்பட்ட முறையிலும் சங்கீதத்தைக் கற்பிக்கும்போது எல்லாவற்றையும் தமிழிலேயே சொல்லிக்கொடுப்பது என்பதில்(சில கஷ்டங்கள் இருக்கின்றன. முதலாவதாக, குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் லேசாகச் சொல்லிக்கொடுத்து விடக்கூடிய கீதங்களும், வர்ணங்களும் தெலுங்கில் இருப்பதுபோல, தமிழில் இல்லை.) பாவ நிறைவிலும், கனிவிலும் தமிழ்க் கீர்த்தனங்கள் அடைந்திருக்கும் உன்னத நிலையைப் பார்க்கும்போது ஒரு காலத்தில் தமிழ் சங்கீதம் கற்பிக்கும் முறையும் ஒழுங்கான முறையில் இருந்திருக்கவேண்டும் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. பின்னால் வந்தவர்கள் இதர பாஷைகளில் மோகங்கொண்டு தமிழ் சங்கீதத்தைப் புறக்கணிக்கத் தலைப்பட்டதனால்தான் இவைகள் எல்லாம் கவனிப்பாரற்று மறைந்துவிட்டன. ஆகவே இதற்குக் காரணம் தமிழ்ப் பாஷை அல்ல. இருந்தாலும் இந்தக் குறைகளை சுலபமாக நீக்கிவிடலாம். தற்காலத்தில் தமிழில் சாஹித்யம் செய்பவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்து இந்த ஒரு சிறு குறையை நீக்கி, அதோடு தற்போது தமிழில் உள்ள கீர்த்தனங்களையும் ஸ்வரப்படுத்தி வெளியிட்டு விட்டார்களே யானால், பிறகு சங்கீதக் கல்லூரிகளிலும், சங்கீதக் கச்சேரிகளிலும் எல்லாம் ஒரே தமிழ்ப் பாட்டுகளாகவே பாடுவதற்கு யாதொரு தடையும் இருப்பதற்கில்லை.

மேலும், கச்சேரிகளில் தெலுங்கு கீர்த்தனைகளையே பாடுவது என்ற வழக்கம் நம் நாட்டுக்கு வந்து சில வருஷங்கள்தான் ஆகியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. கொஞ்ச காலத்துக்கு முன்னால் தமிழ் நாட்டில் மிகவும் பிரபலமாக

வாய் நாற்றத்தைப் போக்குவதில் சிறந்தது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி

விளங்கிய வித்வான்களான மகா வைத்தினாதய்யர், கோபாலகிருஷ்ண பாரதியார் போன்றவர்கள் எப்போதும் தமிழிலேயேதான் பாடுவது வழக்கமாம். இது, அவர்களை யெல்லாம் நேரில் பார்த்து அறிந்த நமது மகாமகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள் சொல்லுவது. தமிழ்க் கீர்த்தனங்களின் விரிவையும் பெருமையையும் பற்றி ஐயரவர்களிடம் சில நிமிஷ நேரம் பேசிப்பார்த்தால் அப்போது உண்மை நன்றாகத் தெரியவரும். முதல்தரக் கச்சேரிகளில் ஸ்வர, 'சங்கதி'களோடு பாடக் கூடிய கீர்த்தனங்கள் அநேகம் இருப்பதாக அப்போது தெரிந்துகொள்ளலாம். கீர்த்தனங்கள் அல்லாமல் பதங்கள் வேறு எவ்வளவோ இருக்கின்றன : திருவொற்றியூர் தியாகராசன்—அடாணா; எத்தைக் கண்டு நீ இச்சைகொண்டாய் மகளே—கல்யாணி; எத்தனை சொன்னாலும்—சாவேரி; தெருவில் வாரானோ—கமாசு; கையில் பணம் இல்லாமல்—சஹானா என்று சொல்லிக்கொண்டே போகலாம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு இரத்னம். பாடப்பாட மெருகு ஏறும்; கேட்கக் கேட்க உள்ளம் கனியும்; நாமும்தான் கொஞ்சம் பாடுவோமே என்ற ஆசைகூட உண்டாகும். இதெல்லாம் எதனால்—பாட்டு தமிழ்ப் பாட்டு ; பாஷை தமிழ்ப் பாஷை. நமக்குத் தெரியாத தெலுங்கு பாஷையா யிருந்தால் நமது உள்ளம் வெறும் கருங்கல்லாய்த் தான் நின்றுபோகும்.

சங்கீதம் ஒரு இன்பக்கலை. அதை நமது மூதாதையர் எவ்வளவோ விதமாக வாழ்க்கையோடு சேர்த்து அநுபவித்து வந்திருக்கிறார்கள் (பஜனைக் கூட்டங்களாகவும் தேவார கோஷ்டிகளாகவும், காவடி, கரக ஆட்டங்களாகவும் சேர்ந்து ஆடிப் பாடி மகிழ்ந்தார்கள். பல அரிய சமய உண்மைகளை யெல்லாம் பாட்டிலே அமைத்து அவைகளை பரதநாட்டியத்தோடு சேர்த்து கோவில்களில் பார்த்து அனுபவித்தார்கள். சரஸ்வதி யென்றும் நாரதர் என்றும் இரண்டு கலைத் தெய்வங்களைக் கற்பனை செய்து அவர்களின் கையில் வீணையை ஏற்றிவைத்து வணங்கிக் களித்தார்கள். வாழ்க்கையே இசை மயம் அவர்களுக்கு. அவர்கள் ஏடுகளில் எழுதி வைத்ததெல்லாங் கூடச் செய்யுள் ரூபத்தில்தான். எனவே, அவர்கள் வாழ்க்கையும் இந்த இன்ப இசையால் நிறைந்திருந்தது. ஆனால் நாமோ இதெல்லாவற்றையும் கைவிட்டு விட்டோம். மற்றெல்லா வகைகளிலும் வேறு நாட்டினரைக் 'காப்பி' அடித்ததுபோல இதிலும் செய்து உண்மையான இதய அநுபவத்தையே இழந்துவிட்டோம். இழந்த இந்த இன்பத்தை மீண்டும் நம் நாட்டில் நிலவச்செய்து மக்களின் வாழ்க்கையை இன்பத்தால் நிரப்புவது மிகவும் அவசியம். சங்கீதக் கலையில் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருக்கும் நமது சங்கீத வித்வான்களால்தான் இது முடியும். அவர்கள் மட்டும் முயற்சி செய்வார்களே யானால் கூடிய சீக்கிரத்திலேயே சங்கீதக் கச்சேரிகளில் நமக்கு ஏற்படும் தலைவலி அநுபவம் எல்லாம் நீங்கி உண்மையான இதய அநுபவம்பெற்று மெய்ம்மறந்து ரஸிக்கத் தொடங்கி விடுவோம். அதனால் அவர்களுக்கு எவ்வளவோ பலனுண்டு ; கூடவே, தமிழ்ப் பாஷையும் எவ்வளவோ விருத்தியடையும்.

ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். மண்ணிலே புதைந்து கிடந்திருக்கிறமையால் பூச்சி முதலியவைகளால் அரிக்கப்பட்டு உருக்குலைந்துதான் இருக்கும் பழைய பொம்மை. அதை அப்படியே யாரும் ரஸித்து வாங்கமாட்டார்கள். ஆனால் பொம்மையை எடுத்துக் கொஞ்சம் வர்ணங்கள் பூசி, ஆடையை அப்படியும் இப்படியுமாக இழுத்து சரி பண்ணி விட்டு, ஆபரணம் முதலிய அலங்கார வகைகளைத் தற்காலத்துக் கேற்றவாறு மாற்றி கடைக்கு அனுப்பிவிட்டால் அவ்வளவுதான் ; எல்லோரும் ஒரே அடியாக அதைக் கண்டு மோகித்துப் போவார்கள். தமிழ்க் கீர்த்தனங்கள் பழைய பொம்மைகள். வேண்டியதெல்லாம் நல்ல வழிகளில் சொற்ப முயற்சிதான்.


## பணத்திற்குப் பந்தோபஸ்து

### நல்ல வரும்படி

பணத்தை இந்தக் காலத்தில் எப்படி பந்தோபஸ்தாக வைத்துக் கொள்வதென்று பலரும் கவலையடைய வேண்டியதில்லை. காவேரி பாசனத்தில் (திருச்சி ஜில்லாவில்) சிறந்த நஞ்சை நிலங்கள் நல்ல வரும்படி யுள்ளதாக சகாய விலைக்கு வில்லங்க மில்லாமல் வாங்கிக் கொடுக்கப் பெறும். மேலும் தக்க வாடகை வரும்படியான கட்டிடங்களும் சல்லிசான விலைக்கு வாங்கித் தரப்பெறும். வேண்டிய விபரங்களை கடித மூலமாகவும் நேரிலும் தெரிந்து கொள்ளலாம்.

**சி. சொ. சொக்கலிங்கம் செட்டியார்,**
லேவாதேவி கடை,
நகை அண்டு ரெத்ன வியாபாரம்,
தரகு அண்டு கமிஷன் ஏஜண்ட்,
ஒத்தைத் தெரு,
திருவானைக் காவல்.

பிராஞ்சு :

**நந்திகோவில் தெரு,**
தெப்பக் குளம் போஸ்ட்,
திருச்சி.


பற்பொடிகளைத் தேர்ந்தெடுக்கும்போது எல். பழனியப்பா'ஸ் பற்பொடியை ஞாபகத்தில் வையுங்கள்




தில்லையம்பதியில் எல்லையில்லா ஆனந்தமளிக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆகஸ்டுமீ 14-ந் தேதி முதல் 17 தேதி வரை நடந்த தமிழ் சங்கீத மகாநாட்டிற்குச் சென்று அங்கு நடந்த வாதப்பிரதிவாதங்களில் கலந்து கொண்டு முழுத் தமிழ்க் கச்சேரி செய்யும் பாக்கியம் கிடைத்தது தமிழ் அபிமான மிக்க தமிழ் மகனை எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

செட்டி நாட்டரசர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் இலங்கை, பர்மா, மலேயா, லண்டன் முதலிய பல தேசங்கட்கும் விஜயம் செய்தவர்கள். அங்குள்ள சங்கீதத்தையும் அவர்கள் நன்கு ரஸித்திருப்பார்கள். ஆனாலும் அவர்கள் மனதில்

> "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
> இனிதாவதெங்கும் காணோம்"
>
> (பாரதியார்)

எனத் தோன்றியிருத்தல் வேண்டும்.

நமக்கும்தான் சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் வளர்ந்து சிதைகிறது. ஆனால் நம்மைப் போல் அல்ல அவர்கள்.

> "தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம்
> பரவும் வகை செய்தல் வேண்டும்"
>
> (பாரதியார்)

என்பதற்காக ரூபாய் 10,000 நன்கொடை அளித்துள்ளார்கள். இதிலிருந்து

> "வாய்ச் சொல்லில் வீரரல்ல......கிளியே
> செய்கையில் வீரரடி"

என்று பாடத் தோன்றுகிறது.

பிறபாஷை பாடல்களை நன்கு தெரிந்து பாடுவதைவிட அவரவர்கள் சொந்த பாஷையில்தான் பாவத்துடன் கலந்த இசைப்பாடல் பலரும் ரசிக்கத்தக்க முறையில் வெளிவருமெனப் பேரறிஞர் டி. கே. சிதம்பரநாத முதலியார் சொல்வதை நான் என் அனுபவ வாயிலாகக் கண்டேன். ராஜா அவர்கள் இந்த விஷயத்தை நன்கு உணர்ந்துதான் நன்கொடை அளித்துள்ளார்கள் என்பதை நினைக்கும்பொழுது பேராச்சரியம் ஏற்படுகிறது.

இதற்குப் பாடகர்களும் ரசிகர்களும் முன்வர வேண்டும். ரசிகர்களில் இரண்டு விதம். விறுவிறுப்பான ஸ்ரீ தியாகய்யர் அவர்களின் உருப்படியையே கேட்டுப் பழக்கமான காதுகளுக்கு கமகத்துடன் சௌக்க காலத்தில் பாடும் தமிழ் உருப்படிகளையே நீண்டநேரம் ரசிப்பதென்பது கொஞ்சம் சிரமம்தான். என்னய்யா இது விளக்கெண்ணெ வியாபாரமாக யிருக்கிறது. பெரிய பக்கவாத்தியத்திற்கு இதில் என்ன வேலை யிருக்கிறது? இதற்கு இவ்வளவு பணம் கொடுத்தா பக்க வாத்தியம் போடவேண்டும்? என்று சண்டைக்கு ஆரம்பித்து விடுகிறார்கள்.

மற்றொரு சாரார் நான்குமணி நேரம் நடக்கும் கச்சேரி முழுதும் தமிழ்ப் பாட்டுக்களைத் தான் பாடவேண்டும்? நீர் தமிழரா தெலுங்கரா என்கிறார்கள்.

பற்களுக்கு நீடித்த ஆயுளைத் தருவது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி

இரண்டு கக்ஷியிலும் கொஞ்சம் உண்மையிருப்பதாகத் தோன்றுகிறதல்லவா? நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட இப்போது ரசிக கோஷ்டியின் ஞானம் மிகவும் உயர்ந்திருக்கிறதென்பதற்கு இதைவிட வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா? ஆதலால் பாடகர்கள் வார்த்தைகள் நன்கு புரியும்படியாயும் அர்த்த புஷ்டியும் பாவமும் நிறைந்ததாயும் உள்ள விறுவிறுப்பான தமிழ் கீர்த்தனங்களும் சௌக்ககால பதங்களும் மத்திமகால தில்லாணக்களும் சமய சந்தர்ப்பத்திற்கேற்றாற் போல ஸ்ரீதியாகய்யர்போன்ற மகான்களின் சௌக்க மத்திம கீர்த்தனங்களும் (தெலுங்கு) பாடலாம். ஆனல் தமிழுக்குத்தான் முதன்மை ஸ்தானம் அளிக்கவேண்டும்.

சச்சேரி செய்பவர்களுக்கு ஒரு படி மேலாக கேட்பவர்கள், கச்சேரி நன்ருகஅமையவேண்டுமென்று நினைப்பது சகஜம். நாம் அவர்களை எவ்விதத்தில் சந்தோஷிப்பதென்பதில் நோக்கமாகயிருந்து சமய சந்தர்ப்பத்தை யொட்டிப் பாடினல் கண்டிப்பாய் அவர்கள் உண்மை அன்பிற்குப் பாத்திரமாகி விடுகிறேமென்பது என் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். அத்துடன் சாகித்திய கர்த்தாக்களுக்கும் ஒரு வார்த்தை தெரிவிக்கலாமென்று நினைக்கிறேன். தமிழில் உள்ள பல கீர்த்தனங்கள் ஒரு முழு ஆவர்த்தமும் மூச்சுவிடாமல் பாடிக்கொண்டு போவதற்கு சாகித்தியம் அமைத்திருக்கிருர்கள். ஆதலால் மேலும் மேலும் சங்கதிகள் போடுவதற்கோ நிரவல் செய்வதற்கோ முடியவில்லை. இனிவரும் சாகித்தியங்கள் ஸ்ரீ தியாகய்யாது போல் கூடியவரை குறைவான வார்த்தைகளுடன் எளிய நடையில் அர்த்தபாவத்துடன் சௌக்க மத்திம கீர்த்தனங்கள் இயற்றினல் தமிழில் கச்சேரிக்கு களைகட்டக்கூடிய கீர்த்தனங்கள் இல்லை என்ற சொல் இல்லையென்ருகிவிடும்.

தமிழ்ப் பயிரை பொன் மாரி பொழிந்து வளர்த்துவரும் ராஜா, ஸர் அண்ணமலைச் செட்டியார் அவர்களின் அன்பிற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் இருக்கிறது. இதைவிட இன்னும் மேலாக யிருக்குமென்பதற்கு அண்ணமலை நகர் சங்கீத மகா நாடே சாட்சி. இனி தமிழுக்கும் தமிழ்ப் பாட்டிற்கும் யோகம்தான்.

"செந்தமிழ் நாடென்னும்போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே"


## கதைக்கோவை

**40 பிரபல எழுத்தாளர்கள் எழுதிய**

**சிறந்த தமிழ்ச் சிறு கதைகள்**

முதல் தொகுதி

§ 504 - பக்கங்கள்

கிளேஸ் பதிப்பு ரூ. 3 பெதர்வெயிட் ரூ. 3 8

தபால், வி பி. செலவு வேறு

கதைக்கோவை-2-ஆம் தொகுதி
விரைவில் வெளிவரும்

**அல்லயன்ஸ் கம்பெனி,**

**மயிலாப்பூர், சென்னை.**

## விளம்பரம்

சேலைகள் தாவணிகள்

எங்களிடம் கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்ட 80, 100. நெம்பர் நூலில் சாயம் கேரண்டியாகவும் தற்கால நாகரீகத்திற்கேற்ற ஜரிகை & பட்டுக் கரைகளில் பல விதமான பேட்டன்களில் தயார் செய்யப்பட்ட 6,7,8,9 கெஜத்தில் சேலைகள், தாவணிகள் கைவசமிருக்கிறது., தசரா தீபாவளி பண்டிகை சமீபமாயிருக்கிறபடியால் வேண்டியதற்கு ஆர்டர் செய்தால் சரசமாய் அனுப்பி வைக்கிறோம்.

**சி. லிங்கி செட்டியார்**

**ஜவுளி வியாபாரம்,**

**கோயமுத்தூர்.**

கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே பற்களுக்கு புத்துயிர் அளிக்கிறது

Supplement to INDIRA issue dated 1-10-41

# "மாதவர் நோன்பும் மடவார் கற்பும்"

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை

தண்டமிழ் ஆசான், நன்னூற் புலவன் என இளங்கோவடிகளாற் பாராட்டப் பெற்ற கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரென்னும் புலவர் பெருமான், தாம் இயற்றிய மணிமேகலையென்னும் பெருங் காப்பியத்தில் "மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றால்" எனக் கூறியுள்ளார். செங்கோல் வேந்தனுடைய சிறந்த காவல் இல்லையெனின், தவத்தாற் பெரியராய முனிவரருடைய விரத வொழுக்கங்களும், கணவரின் மேம்பட்ட கடவுளரில்லையெனக் கருதும் மகளிர் கற்பொழுக்கமும் செவ்விதின் நடைபெறா வென்பது அவ்வடிகளின் கருத்து. காவலன் காவலில்லையெனின் நல்லன பலவும் நில்லாவெனினும், இல்லறந் துறவறமென்னும் இருபேரறங்களும் இனிது நடைபெறுதற்குக் கற்புந் தவமுமாகிய இவ்விரண்டுமே இன்றியமையாச் சிறப்பினவாய் வேண்டப்படுதலின் ஈண்டு இவற்றையே விதந்து கூறினாரெனல் பொருந்தும். நாட்டிற்கு நலம் பயப்பனவாகிய இவ்விரண்டும் அரசவேலியாகிய துணைபெற்று நேர்மையின் நிகழாதொழியுமேல், அந்நாடு பருவ மழை பொய்த்து பசியும் பிணியும் பகையும் பெருகி அல்லற்பட்டழியு மென்பதாம். இதுபற்றியே இவ்வாசிரியர் பிறிதோரிடத்தும் "செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ, கொங்கவிழ் குழலார் கற்புக்குறைபட்டோ" இந்நாடு வற்கடத்தால் வறுமையுற்று வருந்தியது என இம்மூன்றையும் அவ்வருத்தத்திற்குக் காரணமாக ஒருங்கே எடுத்தாண்டிருத்தல் காணலாம். இதனால், அறநெறி பிறழாது ஆட்சி புரியும் அரசர், தவத்திற் சிறந்த தக்கார், கற்புக்கடம் பூண்ட மகளிர் என்னும் இவர் மூவர் பொருட்டே திங்கள் மும்மாரி பெய்து நாடு செழிக்குமென்பது பெறப்படும். "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையுந், தவமிலாரில்வழியில்லை தவமும், அரசிய லில்வழியில்லை யரசனும், இல்வாழ்வா ரில்வழியில்" என்பதும் இக்கருத்தைத் தழுவி யெழுந்ததாகும். நிற்க. தவமுங் கற்புந்தழைத்து நிலைபெறு நாடே நன்னாடென்பதும், கொடுங்கோல் மன்னன் நாட்டில் இவை நிலைபெறுதற் கிடனில்லை யென்பதும், இவற்றிற்கு ஊறு விளைப்பாரை யொறுத்தலும் ஊறுபாடின்றாகவும் இவ்விரண்டின் வழீஇ யொழுகுவாரைக் கடிதலும் அரசர்க்கு அறமாமென்பதும், மேற்கூறிய சாத்தனார் கருத்தோடு பிறர் மாறுபடுத லுண்டென்பதும், பிறவும் இக்கட்டுரையில் ஆராய்ந்தெழுதப்படும்:

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் செல்வருஞ் சேர்வது நாடு" என்னுந் திருக்குறளுரையில், "தக்கார்—அறவோர்; அறவோராவார், துறந்தோர் அந்தணர் முதலாயினார். "நற்றவஞ் செய்வார்க் கிடந்தவஞ் செய்வார்க்கு மஃதிடம்" என்றார் பிறரும். இதனால் "அழிவின்மை பெறப்பட்டது" எனப் பரிமேலழகர் எழுதியிருப்பதும், "கற்பினின்றன கால மாரியே" என்றதனால், கோசல நாட்டின்கண் மகளிர் கற்பின்கட் பருவமழை நிலைபெற்றன எனக் கம்பர் கூறியிருப்பதும் ஈண்டு நோக்கத் தக்கன. இதனால், முறையுளிக் கோலோச்சு மன்னவனாட்டில், நற்றவஞ்செய்வோராய அற-வோரும் தவஞ்செய்வோராய மகளிரும் (தவம்-ஈண்டு இல்லறம்.) கலங்கா நிலையுடையராய்க் கவலையின்றித் தங் கருமஞ் செய்வாரென்பதும், அந்நாடே நன்னாடாய் அழிவின்றி நிலைபெறுமென்பதும் பெறப்பட்டன.

இராகவன், தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத் தீவினை யென்ன நீத்துச் சீதை இலக்குவனென்னும் இருவரொடுங் காட்டிற் புக்க காலை, ஆங்குள்ள தவத்தினர் அனைவரும் அவ்விராகவன் பக்கலணுகி, இரக்கமின்மையும் அறத்தினீக்கமு மெய்திய அரக்கரால் அலைக்கப் பட்டு, ஓதல் ஓதுவித்தல் வேட்டல் அருந்தவஞ் செய்தல் முதலியவற்றை யிழந்து தவிக்கின்றேம். எம் இடுக்கண் நீக்கிக் காத்தருளல் வேண்டுமென முறையிட்டனர். இதனை, "இரக்கமென் றொருபொருள் இலாத நெஞ்சினர் அரக்கரென் றுளர்சிலர் அறத்தி னீங்கினார், நெருக்கவும் யாம்படர் நெறிய லாநெறி,

டாக்டர்களாலும் பொதுமக்களாலும் புகழப்படுவது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

துரக்கவும் அருந்தவத் துறையுள் நீங்கினேம்" "மாதவத் தொழுகலெம் மறைகள் யாவையும், ஓதலெம் ஓதுவார்க் குதவ லாற்றலெம், மூவெரி வளர்க்கிலெம் முறையி னீங்கினேம், ஆதலி னந்தண ரேயு மாகிலேம்" என்னும் பாடல்களால் அறியலாம். இவ்வாறே ஆள்பவர் கலக்குறுத்த நாட்டில் மகளிர் கற்பும் நிலைபெறாதென்பதை "ஆள்பவர் கலக்குற மயங்கிய நன்னாட்டுக், காருக மடந்தை கணவனுங் கைவிட, ஈன்ற குழவியொடு தான்வேறாகி, மான்றோர் திசைபோய் வரையாள் வாழ்வுழி" (அரசர் கொடுங்கோல் செலுத்துதலால் யாவருந் தத்தம் நிலைதடுமாறிய நல்ல நாட்டில் இல்லறவொழுக்கினளாகிய ஒரு மாது கணவனாற் கைவிடப்பட்டு வேற்றுநாடு சென்று கற்பிழந்து வரைவின்றி வாழ்ந்தனள்) என மணிமேகலையுள்ளும், "அருந்திறல் அரசர் முறைசெயி னல்லது, பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது" எனச் சிலப்பதிகாரத்துள்ளும், "பூண்முலைமகளிர் பொற்பிற் கற்பழிந் தறங்கண்மாறி, ஆணையிவ்வுலகு கேடாம் அரசுகோல் கோடின்" எனச் சிந்தாமணியினுங் கூறப்பட்டிருத்தலான் அறியலாம். இதனால், கொடுங்கோல் மன்னன் வாழுநாட்டில் தவமுங் கற்புந் தழைத்தோங்குதற்கு இடனில்லையென்பது புலனாம்.

அவ்விரு பேரறங்களையுங் குறிக்கொண்டு காத்தல் கொற்றவன் கடனாதலின், அவற்றிற்கு ஊறு விளைப்போர் யாவராயினும் அவரையொறுத்தலும் அறமாமென்பதை, மேற்கூறிய முனிவரர் வேண்டுகோட் கிணங்கி, "சூரறுத் தவனுஞ் சுடர்நேமியும், ஊரறுத்த வொருவனு மோம்பினும், ஆரறத்தினோடன்றி நின்றாரவர், வேரறுப்பன் வெருவன்மின்நீர்" என இராகவன் வீரவுரை கூறி அரக்கரைத் தொலைத்து அந்தணரைக் காத்த செய்தியானும், முன்னர்த் தாடகை முதலானவர்களை யழித்துக் கௌசிகருடைய தவவேள்வியை முற்றுவித்தமையானும், காவிரியில் நீராடித் தனித்துப் போந்த மருதியென்னுங் கற்பிற் சிறந்த பார்ப்பனமாதினைக்கண்டு காதலித்துச் சில சொற்கூறினான் காகந்தன் என்பதுணர்ந்த ககந்தமன்னன், அவனைத் தன் மகனென்றுங் கருதாது வாளால் தடிந்து மாசுபோக்கினானென மணிமேகலை நூலுட் கூறப்படும் வரலாற்றுப் பகுதியானுமுணரலாம்.

இங்ஙனம், அரசர் முறை செய்து காப்பாற்றவும், உள்ளத்துறுதியின்றி வழீஇ யொழுகினாரைக் கண்ணோடாதுயிர் கோடலும் அறநெறிப் பாற்படுவதாகும். தம்மைப் பிறர் நம்புமாறு தவ வேடத்தின் மறைந்து நின்று அவ்வேடத்திற் கேலாத கூடா வொழுக்கத்தை மேற்கொள்ளும் போலித் துறவிகளையும், தம்மைத் தங்கணவர் நம்புமாறு பொய் யொழுக்கத்தின் மறைந்து நின்று பிறரை வயப்படுத்தொழுகும் அலவற் பெண்டிரையும், அறைபோகமைச்சர் முதலானோரையும் பாசத்தாற் பிணித்துப் புடைத்துண்ணும் பூதம் ஒன்று புகார் நகரத்துச் சதுக்கத்தில் நின்று தன் றொழிலியற்றிய தென்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுவதாம். அதன்கண்ணும், தீத்தொழிலாளர் பலருள்ளும் "தவமறைந்தொழுகுந் தன்மையிலாளர், அவமறைந்தொழுகும் அலவற் பெண்டிர்" என இவ்விருவருமே முதற் கண் ஒறுக்கப் படுதற்குரியராகக் கூறியிருத்தல் காணலாம்.

இனி, அரசரது செங்கோன்மையே தவமுங் கற்பும் நிலை பெறுதற்குக் காரணமா மெனப் பண்டைத் தமிழாசிரியர் பலருங் கூறியிருப்பதுணர்ந்து வைத்தும், அதற்கு மாறாக "அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய், நின்றது மன்னவன் கோல்" என்னுந் திருக்குறளுரையில் மாதவர் நோன்பும் மடவார் கற்புங் காவலன் காவலன்றித் தங்காவலான் ஆதலின் ஈண்டு அற மென்றது அவையொழிந்தவற்றை எனப் பரிமேலழகர் எழுதியிருப்பது ஆராய்தற்குரியதாம். தவமுங் கற்பும் நிலை பெறுதற்கு மாதவரும் மடவாருங் காரணராவ ரன்றிச் செங்கோன்மை காரணமாகாதென்பது அவர்கருத்து. புலித்தோல் போர்த்த பசுப் போன்று பிறர் ஐயுறாமைப் பொருட்டும் அஞ்சுதற் பொருட்டும் தவ வேடத்தில் மறைந்து நின்று அயலாரை வஞ்சித்துப் படிற்றொழுக்கத்தை மேற்கொள்வாருமுளர். அக் கூடா வொழுக்கம் பிறரறிய வெளிப் பட்டாலன்றி அவரை அரசனால் ஒறுத்தல் இயலாது. நினைத்தலும் செய்தலோ டொக்குமாதலின் தீயவை சிந்தித்தலுந் தவத்திற்கு இழுக்காய் முடியும். இத் தீயொழுக்கம் எதிர்காலத்தில் என் செய்தேம் என் செய்தேமென்று கழிவிரக்கங் கொள்ளுமாறு பல துன்பங்களையுந் தருமென்பதைத் தாமே யுணர்ந்து உள்ளத்தைத் தம் வயப்படுத்து ஒழுகினாலன்றி உண்மைத் தவம் நிலைபெறாது. ஆகலான் மாதவர் நோன்பு அரசன் காவலானன்றித் தங்காவலானாகு மென்றார். இவ்வாறே, நெஞ்சம் பிறர் கண்ணோடிய வழிச் சிறை காக்குங் காவலும் இறை காக்குங் காவலும் சிறிதும் பயன்படாவாம். அன்றியும், அயலானொருவனைத் தழுவுதலுந் தழுவ நினைத்தலுஞ் செய்யாதிருப்பினும், அவ்வயலான் கண்டு காதலிக்கு மாறொழுகுதலும் கற்புடைமையின் வழுவியதாமென்பது "மண்டிணி ஞாலத்து மழைவளந் தரூஉம், பெண்டிராயிற் பிறர் நெஞ்சு புகாஅர்" என்பதனால் வலியுறுத்தப் பட்டது. சொற்செயல்களால் வெளிப்பட்டா

வெற்றிக்கொடி நாட்டியது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

லல்லது இங்ஙனம் நினைப்பளவானுங் கெடும் இயல்பினதாய கற்பொழுக்கத்தை அரசன் அறிந்து காக்குமாறு அரிது. ஆதலின் மடவார் கற்பும் அவராலே காக்கப்பட வேண்டுவ தாயிற்று. இவை குறித்தே சாத்தனார் கூறிய இரண்டடிகளையெடுத்துக் கொண்டே பரிமே லழகர் அதனை மறுத்துரைத்தனர்.

உண்மைத் தவமுங் கற்பும் உடையாரிருவரும், ஒன்னார்த் தெறலும் உவந்தாரையாக்கலுமாகிய ஆற்றல் மிக்குடையா ராதலின், அவர் அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அக்கூற்றுக்கள் அவ்வப் பயன்களைப் பயந்தே விடுமென்பது, இந்திரன் நகுடன் முதலானோர் வரலாறுகளா னும், கண்ணகி வாசுகி அநசூயா நளாயனி முதலானோருடைய அருஞ்செயல்களானும் அறி யப்படும். ஆயினும், வன்கண்ண ராய மடவோர் சிலர் வலித்து புகுந்து அவ்வி ரண்டற்குங் கேடு சூழுங்கால், அரசரே முன்னின்று அம்மட வோரை யொறுத்தொழித்து இவ்விருவரையும் நன்னெறிக்கண் நிறுத்துதல் வேண்டுமாகலா னும், இக்கடமையை அரசர் மேற்கொள்ளாது விடுவராயின் அவ்விரண்டும் நன்கு நடைபெறா வென்பது மேலே காட்டிய வரலாறுகளால் அறியப்படுதலானும், நாட்டு மக்கள் அனைவர்க் கும் எவ்வாற்றானுந் துன்பம் உண்டாகாவாறு காத்தல் அரசர்க்குப் பொதுவிதியாயினும், இல் லறந்துறவற மென்னும் இரண்டறங்களுக்கும் அடிப்படையான கற்புந்தவமு முடையார் இரு திறத்தாரையும் சிறப்பு முறையிற் பேணுதல் இன்றியமையாதாகலானும் 'காவலன் காவல் இன்றெனின் இன்று' என்பாராயினர். ஆத லால் சாத்தனார் முதலான சான்றோர் கருத்துக் களும் உறுதி பயப்பனவேயா மென்பது துணி யப்படும். அரசராலாயினுமாக, அவ்விருவராலா யினுமாக, வேறு எவராலாயினும் ஆகும். ஒரு நாட்டில் தவமுங் கற்புந் தலைசிறந்து நிற்க வேண்டுமென்பது யாவரானும் மறுக்கப்படாத தொன்றாகும்.


தந்தி : "WELFARE" Madura.
போன் : '181' மதுரை.

**மதுரை சௌத் இந்தியா**
**கார்பொரேஷன் லிமிடெட்**
**324/325 கீழமாசி, வீதி, மதுரை**

**எங்களிடம்**

கட்டிடத்திற்கு வேண்டிய இரும்பு, சிமிந்தி, பெயிண்ட் முதலிய சகல சாமான்களும்

**எலக்டிரிக்**

சாமான்களில் அநேக ரம்மியமான ரகங்களும் சகாயமாகக் கிடைக்கும்.

**ஒரு முறை எங்கள் ஷோ ரூமிற்கு விஜயம் செய்யுங்கள்.**

மேலும் பலசரக்கு மளிகை அண்ட் கமிஷன் வியாபாரம் ஒன்று விஷு வருஷம் ஆவணி மாசம் 15 உயில் ஆரம்பித்து இருக்கின்ற செய்தியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். உங்களுக்கு வேண்டிய பலசரக்கு மற்றும் சாமான்களுக்கும் எங்களுக்கே ஆர்டர் செய்யுங்கள்.



**கூடத்திற்கழகு**

சுத்தமான கணிதம் — சுந்தரமான தோற்றம்




**குமாரவிகடன்**
**காலண்டர்களே !**

எங்கும் விலை அணா 8

மானேஜர், குமரன் காலண்டர் தொழிற்சாலை, காஞ்சீபுரம்.



LPL & CO. TRADE MARK KONDANOOR

மனதிற்கு உற்சாகம் அளிப்பது கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே
கண்டனூர் இராமநாதபுரம் ஜில்லா.




வள்ளல் எவர்? வரையாது கொடுக்குந் தன்மையுடையோர் 'வள்ளல்' எனப்படுவார். தமிழ் நாட்டில் பண்டு வள்ளல் பலர் தோன்றினர். அவர் தம் வள்ளன்மைக்கு ஒப்பும் உயர்வும் உண்டுகொல்! இல்லை, இல்லை. இன்றைய தமிழ்நாட்டில் வள்ளல் ஒருவர் வாழ்ந்து வருகின்றார்? அவ்வள்ளல் யார்? அவரே ராசா சர் அண்ணாமலைச் செட்டியார். அவர் வள்ளண்மை யாது? கல்வியாஞ் செல்விக்குப் பொருளை வரையாது வாரி வாரிக் கொடுக்கின்றார். தாவிப்படர கொழு கொம்பின்றி வாடிவதங்கிய 'தமிழ்க் கொடிக்கு' தழைத்துவளர கொழுகொம்பு தந்துள்ளார். அத்தவச் செல்வரைத் ·தமிழ் வளர்க்குந் தந்தையைத் "தமிழ் வள்ளல்" என்று கூறாது வேறு என் கூறி அழைப்பது?

செட்டிநாடு ஓர் பெரிய செல்வக்கடல். அக்கடலிடைத் தோன்றிய "வான் மணி" ராசா சர் அண்ணாமலைச் செட்டியார் ஆவர். என்னை? மணி ஒளிதரும். ஒளியால் இருளகலும். இவ்வான் மணி வழங்கும் ஒளிக்கோ வரம்பில்லை. இதன் அறிவு ஒளியால், அன்பு விளக்கால் நாட்டிலுள்ள அறியாமை, ஏழ்மை இன்னபிற பேரிருள் கூட்டங்கள் ஓடுகின்றன. அவ்விருளகற்றும் எந்தலை என் சொல்லி வாழ்த்துவது?

செட்டியார் இயற்கைச் செல்வர். இயற்கையாளரிடம் தோன்றும் எல்லாத் தன்மைகளும் செட்டியாரிடம் இருக்கின்றன. என்னை? செட்டியார் காட்சிக்கு எளியர்; ஏழைகளைக் கண்டு இரங்கும் நீர்மையர்; முகமலர்ந்து இனியமொழி பகர்வர்; விருந்தாற்றும் பெருந்திறன் கொண்டவர்; தன்னை நாடி வந்தோர்க்கு வேண்டுவன செய்து அவரை மகிழ்விப்பர். வந்தவர் பெரியவரென எண்ணார்; சிறியவரென ஒதுக்கார்; அன்பர்க்கு பெரியரும் சிறியரும் உளரோ! எல்லோரும் ஒன்றே.

நாட்டில் செல்வர் பலருளர். அவருள் செல்வத்தின் பயனைத் தெரிந்து வாழ்பவர் சிலரே. செல்வத்தின் பயன் யாது? "செல்வத்தின் பயனே துய்த்தல் உடையம் எனினே தப்புனபலவே" என்பது அறிஞர் செம்மொழி. செல்வர்கள் கிளைஞர்களைத் தாங்குதல் வேண்டும். கிளைஞர் எவர்? உற்றாரும் உடன் பிறந்தாரும் கிளைஞரல்லர். ஊரிலுள்ள உலகிலுள்ள அனைவருமே கிளைஞராவர். "யாதும் ஊரே யாவருங்கேளீர்" என்று கொள்வது தமிழர் பண்பு. செல்வம் தன்னறிவிலன்றிப் பலருக்கும் பயன்படு முறையில் வாழ்தல் வேண்டும். அவ்வாறு பயன்படுத்துபவரே உண்மைச் செல்வர்.

**வள்ளல்**

**ராஜா சர்**

**அண்ணாமலைச்**

**செட்டியாரவர்கள்**

**வாழ்க வாழ்க**

"ஊருணி நீர்நிறைந் தற்றால் உலகவாம்
பேரறி வாளன் திரு"

மனதிற்கு உற்சாகம், பற்களுக்கு உறுதி இவைகளை அளிப்பதில் நிகரற்றது பழனியப்பா'ஸ் பற்பொடி

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் செப்பு கிருர்.

நமது செட்டிநாட்டு அரசரின் செல்வம், நாட்டு மக்கட்குப் பலவழியிலும் பயன் தருகின்றது. என்னே? அவர் தம் அறக்கூழ்ச் சாலேயில் (சத்திரம்) ஆயிரக் கணக்கான ஏழைகள் அன்ருடம் உணவு கொள்கின்றனர். பல்கலேக் கழகத்திலும் பிற பள்ளிக்கூடங்களிலும் படிக்கும் மாணவர் பலர் உதவிச் சம்பளத்தோடு இலவச உணவும் பெறுகின்றனர்.

பொதுமக்கள் நலத்திற்கெனத் தோன்றும், கழகங்கள், மருத்துவக் கூடங்கள், படிப்பு மன்றங்கள், கோயில்கள், மற்றும் பல நிலேயங்களெல்லாம், சர் அண்ணுமலேச் செட்டியாரின் ஆயிரக்கணக்கான பொருளே நன்கொடையாகப் பெற்று பெருந் தொண்டாற்றி வருகின்றன. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்று மணிமேகலே மொழிகின்றது. சர் செட்டியார் அளிக்கும் உண்டியும், அதனல் உயிர் பெறும் மக்களும் அளவில் அடங்குவரோ?

ராசா சர் அண்ணுமலேச் செட்டியார் செட்டிநாட்டின் அரசர்; தமிழ் நாட்டின் முடிசூடா மன்னர்; அவரது வெண் கொற்றக் குடை அன்பு; செங்கோல் அறம். அவர் தம் அன்பால் தமிழ் நாட்டைத் தன்னடிப் படுத்துகிருர். அறத்தால் உலகெங்கணும் செங்கோல் செலுத்துகிருர். புகழ் அவரை மண்டுகிறது.

ராசா சர் செட்டியாரை ஓர் 'அறக்குன்று' என்று கூறலாம். அக்குன்றிடை அன்பு வெள்ளமும் அருட்பெருக்கும் தோன்றித் தோன்றிப் பொங்கி வழிந்து பன்முகங்கொண்டு பாய்ந்தோடி வருகின்றன. அத்தேக்கம் கோயில் திருப்பணியாக மிளிர்கின்றது; ஆறுகாலப் பூசையாக நடைபெறுகின்றது; அறக்கூழ்ச் சாலேயாக விளங்குகின்றது; கல்விக் கழகங்களாகப் பொலிகின்றது. அவ்வருவியில் படிந்தும் வெள்ளத்தில் மூழ்கியும், தேக்கத்தில் திளேத்தும் இன்புறுவோர் எண்ணிலர்.

அறங்களிற் சிறந்தன ஏழைக்கு எழுத்து அறிவித்தல். அஃது அன்ன சத்திரம் ஆயிரங் கட்டுதலேவிட கோடிப் புண்ணியத்தைக் கொடுக்கும். அவ்வறத்தைத் திறம்படச் செய்தார். தேடித் தேடிப் பார்ப்பினும் செட்டியாரைத் தவிர்த்து வேறு எவரும் எம்மறிவுக்குத் தோன்றிலர்.

தமிழ் மொழி பண்டு அரசர் பலரால் போற்றப்பட்டது. தமிழ் வளம் பெற்று வளர, தமிழரும் மகிழ்ந்து வாழ்ந்தனர். இடைக் காலத்தே தமிழரசர் சிலராக, தமிழைக் கண்ணெடுத்துக் காண்பாரில்லே. கருத்தூன்றி வளர்ப்பாரில்லே. தமிழின் வளர்ச்சி குன்றியது. தமிழர் நலமிழந்தனர்.

இன்ருே தமிழ் நாட்டில் ஓர்வகைப் புத்துணர்ச்சி தோன்றிப் பரவுகிறது. அவ்வுணர்ச்சி தமிழின் வளத்தையும் தமிழர் நலத்தையுங் குறிக்கொண்டது. அதற்குத் துணேயாக நின்ருரும் நிற்பாரும் பலர். அவருள் சிறந்தார், அறம் வளர்க்கும் கண்ணுளர், ராசா சர் அண்ணுமலேச் செட்டியார் ஆவர். என்னே?

தில்லேயில் முதன் முதலில் செட்டியாருதவியால் ஓர் தமிழ்க் கல்லூரி தோன்றியது. இன்று அஃது அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தோடு இணேக்கப்பட்டு இருக்கின்றது. அக்கழகம் தமிழ்ப்பணி ஆற்றி வருகின்றது. அக்கழகத்தினின்றும் இளேஞர் பலர் தமிழறிவுப் பெற்று வருகின்றனர். இத்தொண்டைத் தமிழுலகம் என்றும் மறவாது. தமிழாக்கப் பலகையிலே செட்டியாரின் புகழ் பொன்னெழுத்தால் பொறிக்கப்படல் வேண்டும்.

இயல் இசை நாடகம் என முப்பிரிவு கொண்டது தமிழ் மொழி. தமிழிசை பரவ சர் செட்டியார் பத்தாயிரம் வெண் பொற் காசு தந்துள்ளார். அவர் தம் தமிழன்பை அளந்து காண அளவுகோல் உண்டோ?

தமிழன்பிற் தலேசிறந்த, ராசா சர் அண்ணுமலேச் செட்டியாருக்கு அறுபதாம் ஆண்டு வந்துறுகின்றது அவர் தம் அறுபதாம் ஆண்டு விழாவினே யொட்டித் தமிழர்கள் அவர்கட்குக் காட்டும் நன்றி யாது? 'சர் செட்டியார் நீடூழி வாழ்க! வாழ்க!' என நெஞ்சார நினேத்து வாயார வாழ்த்துவதன்றி வேறு என் செய்ய வல்லர்! தமிழர்களே! விழாவினே ஊர்தோறும் கொண்டாடுக! தமிழ் வள்ளலே வாழ்த்துக! போற்றுக!

'தமிழ் வள்ளல்' திருமுன்னருக்கு ஓர் விண்ணப்பம். தமிழர் தம் தவத்தால் வந்த எந்தால்! அண்ணுமலேப் பல்கலேக் கழகத்திலே இன்னும் பல மாணவர் தமிழ் பயில உதவிபுரிய வேண்டுகின்ருேம். பல்கலேக் கழகம் தமிழுக்கே முதன்மை வழங்கவேண்டும். செந்தமிழ் நாட்டின் எல்லேயில், சிறந்த தமிழ் வள்ளலின் துணேயால் நடைபெறும் பல்கலேக் கழகம் தமிழுக்கு முதன்மை வழங்காவிடின், வேறு எங்கு, எவர் தமிழுக்கு முதன்மை வழங்குவர்?

பல்கலேக் கழகத்து நிகழ்ச்சிகளிலே இன்றியமையாத சில தவிர்த்து பிறவெல்லாம் தமிழிலேயே நிகழவேண்டும்.

பாரதநாடு புகழ்வது கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றையே!

நமது வள்ளலை, ஆவன செய்தருள வேண்டுகின்றோம். தமது அறுபதாம்ஆண்டு விழாவில் நமது தமிழ் வள்ளல் நாட்டிற்கு வழங்கும் நற்செய்தி யாது? "பல்கலைக் கழகத்தில் தமிழுக்கே முதன்மை வழங்க வேண்டும்" என்ற நறுஞ் செய்தியைத் தமிழ் மக்கள் செவிகுளிர சிந்தை மகிழ வழங்கியருள் வாராக!

வாழ்க தமிழ் வள்ளல்! வளர்க அவர் தம் அறங்கள். ஓங்குக அவர் தம் புகழ்! உயர்க அவர் தம் வாழ்நாள்! உலகம் வள்ளலைப் போற்றுக! தமிழகம் வள்ளலால் உலப்பிலா மகிழ்ச்சி உறுவதாக!




இனிய செந்தமிழ் நாட்டைப் பலர் முற்காலத்தில் பல்வகையானும் அலங்கரித்தார்கள். அங்ஙனம் அலங்கரிப்பவர் வரவரக் குறைவாராயினர். ஒரு நாடு அலங்கரிக்கப்பட வேண்டுமானால் அந்நாட்டில் கடவுளிருக்கும் கவின்கொள் கோயில்களிருத்தல் வேண்டும். மடங்களிருத்தல் வேண்டும். பாடசாலைக ளிருத்தல் வேண்டும். மருத்துவச் சாலை இருத்தல் வேண்டும். சரீரவன்மையை வளர்க்கும் இடங்களிருத்தல் வேண்டும். உயர்குடிப் பிறப்பினர் இருத்தல் வேண்டும். அறிஞர்க ளிருத்தல் வேண்டும். புலவர்க ளிருத்தல் வேண்டும். உதார குணத்தர்க ளிருத்தல் வேண்டும். தன்னின் பல்வகையினும் குறைந்தாரையும் உயர்த்தும் கருத்துடைய ரிருத்தல் வேண்டும். அரசர்கள் உவந்து கொண்டாடற்குரிய தகுதியர் இருத்தல் வேண்டும். அறக் கருத்தினர் அடைந்திருத்தல் வேண்டும். நல்வழியிற் பொருளீட்டுபவர் இருத்தல் வேண்டும். நல்வழியில் இன்பந் துய்ப்பார் இருத்தல் வேண்டும். இகத்துக்கே அன்றிப் பரத்துக்கும் வழிபடும் பண்பின ரிருத்தல் வேண்டும். வீட்டினை அவாவுவோரிருத்தல் வேண்டும். இன்னோர் பலரிருத்தல் வேண்டும். நல்ல அரசர்களிருத்தல் வேண்டும்.

ஆலயங்களில் பற்று, மடங்களில் அன்பு. பாடசாலைகளை அமைத்து நிர்வகித்தல், மருத்துவச் சாலையால் மக்கட்கு நலம் வருவித்தல், சரீர வன்மையைப் பெருக்கி மக்களை நாட்டைக் காக்கும் நிலையினராக்குதல், செயற்கை இயற்கை ஆம் இருவகை அறிவையு முடையவர்களாயிருத்தல், புலவர்களை யாதரித்தல், உபசரித்தல், கல்வி முதலியவற்றில் குறைந்திருப்பாரை உயர்த்தல், அரசர் மேம்படுத்தும் ஆற்றலமைதல், அறத்திற் கண்ணாயிருத்தல், நல்வழியிற் பொருளீட்டுதலை நாடல், இவ்வுலக நல்லின்ப நாட்டம், மேலுலக இன்பத்திற் கருத்து, வீடடையும் முயற்சி ஆம் இவைகளுள் ஒவ்வொன்று உடையவர்களாகித் தாங்கள் புகழும் புண்ணியமும் பெற்று நாட்டை அலங்கரிப்பார்கள் உண்டு. மேற்கூறிய நலமெல்லாம் அமைந்தவர்களாகி நாட்டை அலங்கரித்தார் எனும் சரிதையுடையார் மிகமிகச் சிலர். இச் சிலரும் இறந்த காலத்தாரே. நிகழ்காலத்தில் ஆலயங்களில் பற்று என்பது முதலாக உள்ள எல்லா நலனும் எய்தினரொருவரைக் கண்டிருக்கின்றோம். அவராவார் ராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களே. இவர்களிப்போது அறுபது ஆண்டின் நிறைவினை எய்துகின்றார்கள். மேலும் பலப்பல ஆண்டு வாழ்ந்து, தாம் மேற்கொண்ட நலங்களை வளர்த்துப், புகழ், புண்ணியம் ஞானம் அதிகரிக்கப் பெற்று, மக்கள் எல்லாரும் வாழக் கண்டு மகிழ்ந்திருக்க அசுரர்த் தடிந்து அமரர்க் காத்த அண்ணலார் அடிக் கமலங்களைச் சிந்திக்கின்றோம்.

ஞானியார் மடாலயம், திருப்பாதிரிப்புலியூர்.

பழநியப்பா'ஸ் பற்பொடி, கண்டனூர், இராமநாதபுரம் ஜில்லா

Supplement to INDIRA issue dated 1-10-41



# நிலவின் அருமை

மு. வரதராசனார் பி.ஓ.எல்

விஞ்ஞானம் சிறந்த கலை. அதனை உலகம் பல வகையில் பயன்படுத்தி வருகிறது. போக்கு வரவு சாதனங்களில் புதுமை பல காண உதவியது விஞ்ஞானமே. இசையும் நாடகமும் பலர்க்கும் பயன்படுமாறு செய்த வானொலி (ரேடியோ)யும், பேசும்படமும் (சினிமா) விஞ்ஞானத்தின் விளைவுகளே. செய்திகள் விரைவில் நாடெங்கும் உலகெங்கும் பரவவும், நூல்கள் பல்லாயிரமாய்ப் பெருகவும் துணை செய்தது விஞ்ஞானமே. இவைபோன்ற நன்மைகள் பற்பல செய்து உதவிய விஞ்ஞானமே இன்று உலகத்தைக் கலக்கி அழித்துவரும் பெரும் போருக்குக் காரணமாக உள்ளது. வேலும் வாளும் கொண்டு எவரேனும் இருசாரார் போர்செய்து மடிவாரானால், பலகோடிமக்கள் வாழும் இப் பெரிய உலகம் இவ்வளவு கலங்க வேண்டுவதில்லை. துப்பாக்கியும் பீரங்கியும் கொண்டு எங்காவது போர் நிகழினும், பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்களும் வைத்திய நிலையத்தில் உள்ள நோயாளிகளும் நடுங்கி மாளும் கொடிய நிலை நேர்தல் இல்லையே! விஞ்ஞானம் தோற்றுவித்த விமான வெடிகுண்டும் கொடிய நச்சுப் புகையுமே இரு நூறு கோடி மக்களை இரவும் பகலும் நடுங்கச் செய்கின்றன.

மக்கள் உயிரைப் போக்குவதில் இவ்வளவு விரைந்து தொண்டாற்றிய விஞ்ஞானம், மக்கள் உயிரைக் காப்பதில் அவ்வளவு உதவி ஆற்றுகின்றதா என எண்ணிப் பார்த்தல் வேண்டும். பெரிய பெரிய வைத்திய நிலையங்களுக்குச் சென்று சுற்றி சுற்றிப் பார்த்தால் விஞ்ஞானத்தின் உதவியை உணர்தல் கூடும். மருந்துகளைச் செய்யும் புதிய முறைகள், அவற்றை உடலில் புகுத்தும் அரிய முறைகள், அறுத்துச் செய்யும் சிகிச்சைகளில் வியப்பான முன்னேற்றம், அறுவையின் பொருட்டு அமைந்துள்ள புதிய கருவிகளின் அருமை, மின்வலியின் துணைகொண்டு நோய்வலியைத் தீர்க்கும் சிறப்பு முதலியன பலவற்றில் விஞ்ஞானம் செய்த பெரிய செயல்களைக் காண்கிறோம். இம் முறைகளும் கருவிகளும் பிறவும் விஞ்ஞானத்தின் முற்போக்கை நினைவூட்டுகின்றன. ஆயினும், பயன் என்ன? உலகில் நோய் குறைந்ததா? நோயாளிகள் குறைந்தனரா? மக்கள் உரம் மிகுந்ததா? ஆயுள் நீட்டித்ததா? இவ் வினாக்களுக்கு விடை 'இல்லை', 'இல்லை' என வரும். ஆனால், ஆய்ந்து கூறினால், நோய் பெருகிற்று, நோயாளிகள் பெருகினர், மக்கள் உரம் குன்றிற்று, ஆயுள் குறைந்தது என்றுதான் கூறல்வேண்டும். விஞ்ஞானம் உடலுரத்தின் பொருட்டுச் செய்ய வேண்டுவ தொன்றே முதல் கடமை. பல்லாயிர உயிர்களை நாள்தோறும் கொல்லும் போர்க் கருவிகளைத் தோற்றுவிப்பதில் விஞ்ஞானம் முன்னேறிய அவ்வளவுக்கு உயிர்களின் ஆக்கத்திற்குரிய நல்ல துறையில் வளர்ச்சி பெறாதது உலகத்தின் தலைவிதி போலும்!

விஞ்ஞானம் உடலுரத்தைக் காத்தலையே முதற் கடமையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அங்ஙனம் கொள்ளாமை தவறு. ஈராயிரம் ஆண்டுகட்குமுன் தமிழ்நாட்டு விஞ்ஞானம் அக்கடமையை ஆற்றியது. போர்க் கருவிகள், போக்குவரவு சாதனங்கள், பேசும்படம், வானொலி முதலியவற்றைவிட, உடல்நலம் பெரிது எனத் தமிழ்நாடு அன்றே உணர்ந்தது போலும்! அக்காலத்தே சித்த வைத்தியமுறை பரவிப் பெருகி யிருந்தது. மரங்களின் பட்டை முதலியவற்றி லிருந்து நல்ல மருந்துகளைச் செய்து பயன்படுத்தினர். அம்முறை எளிய தொன்றே ஆயினும் பயன் தருவதில் மிகமிக வல்லது. (தற்காலத்து வைத்திய முறைகள் அரியன ஆயினும் அவ்வளவு பயன் தருகின்றனவா என்பது ஐயமே.) அவ்விஞ்ஞானம் அக்காலத்தில் அந்த ஆக்கவேலைக்கே உதவியது. அழிவு

பாரதநாடு புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்போடி ஒன்றையே!

வேலைக்கு உதவவில்லை. ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொடுக்கின்றது இக்கால விஞ்ஞானம். ஒருயிரையும் ஓரறிவுள்ள உயிரையும் கொல்ல இடந்தரவில்லை அக்கால விஞ்ஞானம். மருந்துகளைத் தந்து உதவும் மரம் ஓரறிவுயிர் அன்றோ? அம்மரத்திற்கு ஊறு உண்டாகாத வகையிலேயே அதன் பட்டை முதலியவற்றைக் கொள்ளல் வேண்டுமாம். அது அவ் விஞ்ஞானத்தின் அடிப்படை.

“ மரஞ்சா மருந்துங் கொள்ளார் ”

என்பது ஒரு பழம்பாட்டின் ஓரடி.

விஞ்ஞானத்தைவிட மிக விழுமியது மெய்யுணர்வு. விஞ்ஞானம் உலகவாழ்வைச் சிறப்பிப்பது. மெய்யுணர்வு உயிர்க்கு வீடு நல்குவது. உயிர்க்கு நலம் தரும் மெய்யுணர்வு தவத்தால் பெறலாம். ஆனால், அத்தவம் செய்வார் உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பை மறத்தல் ஆகாது. உடல் இல்லையானால் உயிர்வாழ்வு இல்லை. உடல் சுவர்; உயிர் சித்திரம். சுவர் வைத்துக்கொண்டே சித்திரம் எழுதல் வேண்டும். உடலைப் போற்றியே உயிரோம்பும் தவம் செய்தல் வேண்டும்.

“ உடம்பார் அழியில் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார் ”

என்றார் திருமூலர்.

இவ்வுண்மையினை அறியாமல் உடலை ஒறுத்தலே தவம் எனக் கருதும் போலிக் கொள்கை உடையவரும் உளரல்லரோ? அவரை எவ்வாறு திருத்துவது? உடலின் குருதியோட்டம், தசை வன்மை, நரம்புத்தூய்மை முதலியவற்றின் நிலைகளுக்கு ஏற்றவாறு உயிர்ப்பண்பு மாறுதலை இக்காலத்து உடலியல் நூலார் நிறுவிக் காட்டியுள்ளனர். காலில் சிறுமுள் தைத்து நோகச்செய்யுமாயின், தலையிலுள்ள மூளை தன் வேலையைச் செய்யப் பின்வாங்குகிறது. வயிற்றில் உள்ள சிறுநோய் மன அமைதியை அறவே குலைக்கின்றது. ‘பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்’ என்பது முதுமொழி யன்றோ? உடல் உரம் குன்றக் குன்ற, உயிர் வாடுகின்றது. நல்லுடல் உடையவரே உடலை மறந்து உயிர்நாட்டம் கொள்ளுதல் கூடும் என்பது பெரிய உண்மை. இளமையில் உடலைப் பற்றிய எண்ணம் எழுதல் அரிது. முதுமையில் எந்நேரமும் உடலைப் பற்றியும் வயிறு முதலான உறுப்புக்களைப் பற்றியும் எண்ணங்கள் எழுகின்றன அல்லவோ? காரணம் என்ன? உடல் உரம் குன்றலே யாகும். எனவே, உடல் உரம் குன்றுமாறு தவம் செய்தல் அறியாமை. அதனைத் தற்கொலை எனவே கூறலாம். அத்தகைய தற்கொலை ஒருகாலும் தவம் ஆகாது. இஃது உயிரியல் உண்மை. இதனை,

“ உரஞ்சாச் செய்யார் உயர்தவம் ”

என்னும் அப்பாட்டின் மற்றோரடி விளக்குகின்றது.

விஞ்ஞானம் என்னும் அறிவியலும் மேற்குறித்த உயிரியலும் பயன்பட வேண்டுமானால் அரசியல் அமைவு வேண்டும். நல்லரசு இல்லையானால் எவருக்கும் நல்வாழ்வு இல்லை. ஆதலின் மேற்கூறிய விஞ்ஞானத்திற்கும் உயிரியலுக்கும் துணைபுரிவது அரசியலே. அரசியலின் தலைவன் அரசன். அரசன் குடிகள் வாழ்விற்கே ஏற்பட்டவன்; அரசனுக்காகக் குடிகள் ஏற்படவில்லை. எனவே, குடிகளின் நன்மை கருதியே அரசன் வாழ்தல் வேண்டும். குடிமக்கள் வளம் குன்றாதவாறு காத்தலே காவலன் கடமை. செல்வரிடத்து மிகுதியாகவும் ஏழை மக்களிடத்து ஏற்றவாறாகவும் வரிப்பணம் (பொன்) கொள்ளுதல் வேண்டும். உழவர் போன்ற ஏழை மக்களிடம் மிகுதியாகக் கொள்ள முயன்றால் குடிமக்களின் பொருள்வளம் குன்றும். நாட்டிற்கு இன்றியமையாத உழவு முதலான தொழில்களைச் செய்யும் குடிகளிடம் (ஆறிலொன்று முதலான) அளவறிந்து வரிகொள்ளுதல் வேண்டும். அளவுக்குமீறி அவர்களிடம் பொருள் கொள்ளத் தொடங்கினால், உண்மையாக உழைப்போரை வஞ்சித்த குற்றம் சாரும். அக்குற்றம் ஒருபுறம் கிடக்க, குடிவளம் குறையும். பொருள்வளம் இல்லாத குடிகள் வாழும் நாடு ஒரு பாலைவனம் போன்றதாகும். பாலைவனத்தை ஆளவிரும்பும் ஒருவன் அரசன் ஆவானா? தன்நாட்டுக் குடிவளத்தைக் கெடுத்த அரசன் அரசியல் அறிவே இல்லாத பேதை எனலாம். இந்த அறிவே அரசியலுக்கு அடிப்படையாக வேண்டுவது. இதனை அறியாமல் அரசியல் நடைபெறுவதற்காக எத்தனை சட்டசபைகள் கூடினும் பயன் என்ன? எத்தனை அமைச்சர்கள் குழுமிச் சூழினும் ஆவது என்ன? குடிவளமே அரசியல் ஆக்கம். குடிவளம் கெடுமாறு இறைகொள்ளுவது பொன்முட்டையிடும் வாத்து ஒன்றைக் கொன்று ஏமாற்றம் அடைந்து வருந்திய மூடன் கதைக்கு ஒப்பாகும். இதனை

“ வளங்கெடப், பொன்னும் கொள்ளார் மன்னோர் ”

என்ற மற்றோரடி தெரிவிக்கிறது.

விஞ்ஞானத்தின் அடிப்படை உயிரோம்புதல் என்றும், சமயத்தின் அடிப்படை உடலோம்புதல் என்றும், அரசியலின் அடிப்படை குடியோம்புதல் என்றும் மூன்று அரிய உண்மைகளைக் கண்டோம். விஞ்ஞானத்தையும் சமயத்தையும் அரசியலையும் இவ்வாறு தொடர்புபடுத்தி நினைத்தாள் ஒரு தலைவி.

மனதிற்கு உற்சாகம் அளிப்பது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

அத்தலைவி தன் காதலுடன் அன்பு வாழ்க்கை நடத்தி வந்தவள். இல்லறவாழ்க்கை இனிது நடாத்தப் பொருள் வேண்டும். முன்னோர் தேடி வைத்த பொருளைச் செலவு செய்து வாழ்வது ஆண்மைக்கு இழிவு (அக்கால முறைப்படி என்க). ஆதலால் விருந்தோம்பல் முதலான அறம் நடத்த விரும்பின தலைவன், பொருள் தேட எண்ணினன். எண்ணம் முற்றிச் செயல் ஆயிற்று. வேங்கடமலை கடந்து வடநாடு சென்று முயன்று பொருள் தேடிக் கொண்டுவர வேண்டும் என்று துணிந்து நல்ல வேனிற் காலத்தில் வீட்டை விட்டுப் புறப்பட்டான். தலைவி நாளுக்கு நாள் பிரிவாற்றுமல் வருந்தி மெலியத் தொடங்கினள். அவள் நிலையை அறிந்த தோழி உலகியலை எடுத்துச் சொல்லி, அவன் வரும் வரைக்கும் ஆற்றி யிருக்குமாறு அவளை வற்புறுத்தினள். அவளுடைய வற்புறுத்தலுக்கு இசைந்தாள் தலைவி. ஆனாலும் தன்னுள் எழும் எண்ணங்களை வெளியிட்டு ஆறுதல்பெற முயன்றாள்.

"பொருள் தேடிவரும் பொருட்டு இந்த வெயிற் காலத்தில் நீண்ட வழிகளைக் கடந்து சென்றார் காதலர். இதனை நினைக்கும்போது என் உள்ளம் வருந்த, என் உடல் மெலிய, என் உயிரும் தேய்கின்றதே! பொருள் தேடிவந்த பின் அவர் விருந்தோம்பும் வாழ்க்கை நடத்த விரும்புகிறார். பொருள்தேடி அவர் மீண்டுவரும் வரை நான் உயிருடன் இருத்தல் கூடுமோ? என் உயிர் முடிந்தால், அவர்க்கு இல்வாழ்க்கை ஏது? விருந்தோம்புதல் ஏது? இதனை உணராமல்—என் உயிர்வாழ்வை முதலில் போற்றுமல் பொருள் தேடப் போனாரே! அவர் வாழ்வு அன்றோ நம் உயிர்? அடிப்படை அறியாமல் என்ன முயற்சி செய்தும் பயன் என்ன? அவர் அறியாதவர் அல்லர்; விஞ்ஞானம் வல்லவர்; சமய அறிவு நிரம்பியவர்; அரசியல் தெரிந்தவர். அத்தகைய அறிவெல்லாம் அவருக்கு உண்மையை நினைவூட்ட வில்லையே! **உயிரோம்புதல் இல்லை என்றால் விஞ்ஞானம் பயன் தருமா? உடல் உரம் குன்றினால் சமய ஒழுக்கம் பயன்படுமா? குடிவளம் கெட்டால் அரசு நிலைக்குமா?** இவற்றை அறிந்த அவர், என் உயிர் தேய்ந்து ஒழிந்தபின் விருந்தோம்புதல் இயலாது என்பதை எவ்வாறு அறியாது போயினார்? ஆ! எல்லாம் அறிந்த ஆடவர் துணைவியர் உள்ளம்அறிய வில்லையே! ஆடவர் மனம் யாதோ?" என்றாள். அச்செய்யுள் முழுதும் வருமாறு:—

"மரஞ்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார் உயர்தவம் வளம்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர் நன்னுதல்
நாம் தம் உண்மையின் உளமே அதனால்
தாம்செய் பொருள் அளவு அறியார் தாம்கசிந்து
என்றூழ் நிலுப்ப நீளிடை ஒழியச்
சென்றோர் மன்றநம் காதலர் என்றும்
இன்ன நிலைமைத்து என்ப
என்னோரும் அறிப இவ் வுலகத் தானே."

(நற்றிணை : 226)

பிரிவின்கண் வருந்தும் தலைவிக்குத் தோன்றிய **நினைவின் அருமையை** என்னென்பது! அரிய நினைவு! வெறுஞ் சொற்பொருள் ஒன்றும் காணோம். பொருள் நுட்பம் பொதிந்த கருத்துக்கள்; உள்ளத்தே எழுந்த ஆழ்ந்த உணர்வின் பயனான நினைவுகள்; வருந்தும் நிலையிலும் தலைவியின் அறிவு எவ்வளவு தெளிவுற விளங்கியது!

இப்பாட்டு சங்க காலத்துப் பாட்டு. அக்காலத்தில் பிரிவின்கண் உடல் மெலிந்ததாகப் பாடுவது உண்டு. பிற்காலத்துப் புலவர், பிரிவால் அறிவும் திரிந்து மயங்கியதாகப் பாடுவர். காமம் தோன்றுதற்கு இடமில்லாத அந்தப் பிரிவாற்று நிலையில் புலவர் சிலர் காமனை இடையிடையே கொணர்ந்து நிறுத்துவர். வெங்காமன் கணையாலும், தண்மதியின் நிலவாலும், நறுந்தென்றலின் வரவாலும், பிறவற்றாலும் தலைவி வருந்துவதாக மீண்டும் மீண்டும் வழவழ என்று பாடிப் பாடிப் பாட்டில் சொற்களை நிரப்பிவிடுவர். ஆனால், தமிழகம் உரிமை மணம் கமழப் பெற்ற நன்னாளில் வாழ்ந்த இப்புலவர்— உரிமை வாழ்வு வாழ்ந்த இப்புலவர் பாடிய பாட்டில் செயற்கை முறைகளும் கட்டுப்பாடுகளும் இல்லை. இயல்பான, அழகான, அறிவான பாட்டினைப் பாடி தலைவியின் நினைவின் அருமையை விளக்குகிறார்.

கணியன் பூங்குன்றனார் இதனைப் பாடியவர்; மெல்லியலார் என்று வழங்கும் பெண்மக்கள் அறிவின் வடிவாய் நின்று நினைவில் வலியராய் இருத்தல் வேண்டும் என்ற சிறந்த நோக்கம் உடையவர்; பெண்பாலார்க்கு விஞ்ஞானம், சமயம், அரசியல் என்பவற்றில் போதிய அறிவு வேண்டும் என்னும் கொள்கை உடையவர். அவர் இல்வாழ்க்கையை நன்றாக அளந்து பார்த்தவர்; பெண்மனங் கொண்டு அந்த வாழ்க்கையை அளந்தவர்; ஆதலால் தாம் ஆடவராயிருந்தும் பெண்மனம் உடையவராய் ஆடவரைக் குறைகூறுகிறார். குறை உண்மையே. ஷேக்ஸ்பியர் என்னும் ஆங்கிலப் பெரும் புலவரும் அதனைக் கூறுகிறார். எவ்வளவுதான் ஆண்மக்கள் உரமுடையவராய்த் தோன்றி உறுதிமொழிகளைக் கூறினாலும், உண்மையில் உறுதி தளரும் இயல்புடையவர்களே; பெண்பாலாரின் அமைதியான உள்ளத்தில் நிறைந்துள்ள அன்பே மிக்க திண்மை வாய்ந்தது என்கிறார் அப்புலவர். இவ்வாறாக, ஒருபால் விஞ்ஞானம் சமயம் அரசியல் என்பவற்றின் அறிவும், மற்றொருபால் ஆடவர் மனத்தை அளந்தறிந்த நுட்பமும் தோன்றத் தலைவி நினைக்கும் நினைவின் அருமையே அருமை!

ஏழைகட்கும் தனவந்தர்கட்கும் ஏற்றது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி




தமிழ் நாட்டில் இன்று மொழி உணர்ச்சியும் இலக்கிய உணர்ச்சியும் வெகு வேகமாகப் பரவி வருகின்றது. ஆனால், பூரண மறு மலர்ச்சிக்கு இன்றியமையாத கலையுணர்ச்சி மட்டும் இன்னும் நம்மிடையே பரவவில்லை. பாரதநாட்டின் ஏனைய பகுதிகளில், இலக்கிய மறுமலர்ச்சியுடன் கலைத் திகழ்ச்சியும் காணப்படுகின்றது. இன்று, இந்திய இலக்கிய மறு மலர்ச்சியின் முன்னணியில் நிற்கும் வங்க நாட்டில், ஓவியம், சிற்பம், நாட்டியம், இசை, கிராமக்கூத்து, பாட்டு முதலிய பல்கலைகள் மிளிர்ந்து வருவது கண்கூடு. இன்று இந்திய ஓவியம் இந்நாட்டில் மட்டுமன்றி உலகிலும் தனிச் சிறப்புடன் விளங்குகின்றது. ஆனால், இந்த இந்திய ஓவியம் பெரும்பாலும் வங்க ஓவியமே. இந்திய மறு மலர்ச்சியின் இரண்டாம் பருவத்தில் எழுந்த வங்கக் கலைஞர்களின் பெரு முயற்சியினாலேயே இவ் ஓவியம் சிறப்புற்றோங்கி, நாடெங்கும் பரவி வருகின்றது. இன்று கூர்ச்சரம், மகாராஷ்டிரம், ராஜபுதனம், ஆந்திரம், கேரளம் முதலிய பகுதிகளில் நவீன கலைஞர்கள் தோன்றி நமது புராதனக் கலைகளுக்குப் புத்துயிரளித்தும், அவற்றை அடிப்படையாகக்கொண்டு புதுமாதிரியான கலைகளைத் தோற்றுவித்தும் வருகின்றனர். இந்த கலைத் திருவிழாவில் தமிழ் நாடும் தமிழ் மக்களும் எங்கே உள்ளனர்? அந்தோ! பரிதாபம்!

பண்டைத் தமிழர் ஓவியக் கலையில் சிறப்புற்றிருந்தனர் என்பது சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களினின்று தெரிகிறது. புராதனத் தமிழ்ச் சிற்பிகளின் விழுமிய நோக்கங்களையும் கைத்திறனையும் நமது கோயில்களிலும், கோயிற் சிற்பங்களிலும், இறைவன் திரு வடிவங்களிலும் இன்றும் காண்கிறோம். இன்னும் அதிகமாக வேண்டுவது யாது உளது? என நாம் வாளாவிருக்கின்றோம். சிலகாலமாக, இசையிலும் நாட்டியத்திலும் ஓரளவு புத்துணர்ச்சி ஏற்பட்டிருப்பினும், ஓவியம், சிற்பம் போன்ற நுண் கலைகளில் நாம் இன்னும் கவனம் செலுத்தாமலே இருந்து வருகிறோம். தமிழ் மக்களிடையே கலையுணர்ச்சி போதிய அளவு பரவாமலிருந்து வருவதே இந்நிலைக்குக் காரணமாகும்.

இதர மாகாணங்களைப் போன்று தமிழ் நாடும் விழித்தெழுந்து கலை யாக்கம் பெறவேண்டுமாயின், முதன் முதலாக, நம்மிடையே கலையுணர்ச்சி தீவிரமாகப் பரவவேண்டும். தமிழ் மக்கள் நமது பழைய சிற்பங்கள், ஓவியங்களின் மரபையும் லட்சியங்களையும் தத்துவங்களையும் நன்கறிந்து, அவற்றையே அடிப்படையாகக் கொண்டு, காலப்போக்குக்கும் நமது தற்கால வாழ்க்கைக்கும் ஏற்ப, நவீன இந்தியச் சிற்பத்தையும் ஓவியத்தையும் வகுத்துக்கொள்ளவேண்டும். கலையுணர்ச்சி நம்மிடையே பரவுவதற்கு, பண்டைக் கலைகளின் வரலாறுகள், தத்துவங்கள் முதலியவற்றை நன்கு ஆராய்ந்து, அவற்றைச் சொற்பொழிவுகள், சினிமா, ரேடியோ மூலமாகவும், தமிழில் கலை நூல்கள் வாயிலாகவும் பரப்பவேண்டும். மக்களிடையே பொதுவாகக் கலைச்சுவை ஏற்படவேண்டும். இரண்டாவதாக, ஆங்காங்குள்ள சிற்பிகளையும் ஸ்தபதிகளையும் ஓவியர்களையும் சங்கமாகச் சேர்த்தும், அவர்களது வேலைப்பாடுகளைக் காட்சிச் சாலைகளில் வைத்தும், அவர்களுக்குப் பொதுக்கூட்டங்களில் பட்டங்களும் சம்மானங்களும் வழங்கியும், கலைஞர்களை ஊக்குவதுடன் பொது

ஜெகமெங்கும் புகழ் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

# ஸ்ரீ இராமன் வில்லைத் தூக்குகிறான்



ஸ்ரீ இராமன் வில்லைத் தூக்கும் பாவம் பிடிக்கிறார்கள்

**ஸ்ரீமதிகள் பட்டு ராமதிலகம்**

இந்தியாவின் புராதன கலையான பரத நாட்டியத்தின்
அபிவிருத்திக்கு உழைக்கும் இவர்களை ஆசிர்வதிக்கிறோம்.

கண்ணன் வெண்ணெய் உண்ணும் காட்சி



ஸ்ரீமதி பட்டு ஸ்ரீமதி ராமதிலகம்

கிருஷ்ணன் வெண்ணெய் உண்ணும் கட்டம் அபிநயம் பிடிக்கப்படுகிறது.

மக்களின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும். இன்று வங்காளத்தில் பல நுண் கலைக் கழகங்கள் இருக்கின்றன. அவை ஆண்டுதோறும் சித்திரசாலைக் காட்சிகளை ஏற்படுத்தி அவற்றின் மூலமாகப் புதிய கலைஞர்களையும் புதுமாதிரியான ஓவியங்களையும் விளம்பரப்படுத்தி வருகின்றன. அதைப்போலவே தமிழ் நாட்டிலும் கலைக் கழகங்களும் கலைக் காட்சிகளும் ஏற்பட வேண்டுவது இன்றியமையாததாகும்.

நம்மிடையே கலையுணர்ச்சியைத் தூண்டுவதற்கு, நமது பழங் கலைகளின் சிறப்பியல்புகளை மக்களிடையே பிரசாரம் செய்வது இன்றியமையாததாகையால், அவற்றை ஒரு சிறிது ஈண்டு ஆராய்வோம்.

இந்தியக் கலையானது, கலை என்னும் பொதுச் சொல், சிற்பம், ஓவியம், நாட்டியம் போன்ற நுண் கலைகளையே குறிக்கும். இந்திய மக்களின் வாழ்க்கை, உயர் சிந்தனை, தத்துவம், சமயம், சம்பிரதாயம், ஆசாரம், ஒழுக்கம், உன்னத லட்சியம் முதலிய விழுமிய பண்புகளின் ஓர் முக்கியமான அம்சமாகும். அது வாழ்க்கைக்கு இன்பமும் அழகும் சுவையும் தரும் முக்கியமான சாதனங்களில் ஒன்று. அது இன்பமும் அழகும் தருவதாயினும், அவையே அதன் இறுதியான குறிகள் அல்ல. உண்மையே அதன் உயர் குறி. அழகும் இன்பமும் உண்மையின் அம்சங்களாகவும், அதை வெளிப்படுத்து வனவாகவும் இருக்கிறவரையிலேயே அவைகளுக்கு மதிப்பு உண்டு. அவைகளுக்குத் தனி மதிப்பு கிடையாது.



உண்மையே கலையின் குறி எனில், நாம் இயற்கையிலும் புற உலகிலும் காண்பதையெல்லாம் உள்ளது உள்ளபடியாகவே உருப்படுத்தவேண்டும் என்பதல்ல. புற உலகும் இயற்கையும் உண்மையின் புற அம்சங்களேயாயினும், உண்மையின் சாராம்சம் எல்லாமே அல்ல. அவ்வுண்மையின் சாராம்சம், இயற்கை உலகு என்னும் திரைகளுக்கு அப்பால் மறைந்துகொண்டிருக்கிறது. அதற்கு எல்லையோ வரம்போ கிடையாது. அது சநாதனமானது; அழிவற்றது. அதை, எல்லைப்பட்ட அறிவுடைய மாந்தர் கண்டறிவது அரிதிலும் அரிது. உள் விழியும் உள் உணர்வும் உள்ள கலைஞர்களே அதைக் கண்டு உள்ளத்தில் உணர்ந்து, தாங்கள் காண்பதையும் உணர்வதையும் புறத்தில் எல்லைக்குட்பட்ட ஓர் உருவில் அமைப்பர். ஆழ்ந்த தத்துவமும் உட்பொருளுமுள்ள அவ்வுருவம் காண்போருக்கு உருவத்திற்குப் பின்னுள்ள தத்துவப் பொருளை விளக்கும். இவ்வண்ணம் தங்களுடைய உள்ளத்தில் காண்பதையும் உணர்வதையும், பிறரும் கண்டு உணரச் செய்வதில் தான் கலைஞனின் கலைத்திறன் உளது. இயற்கையில் புறக் கண்களால் காண்பதை போட்டோ படம் போன்று அப்படியே வரைபவன் கலைஞனாகான்.

பண்டைக் கால இந்தியக் கலைஞர்கள் இக் கலைத் திறனை ஒருவித யோகப் பயிற்சியின் மூலமாகவே பெற்றிருந்தனர். அந்த யோகப் பயிற்சிக்குரிய வழிகளையும், கலையின் பொதுக் குறிகளையும், முனிவர்கள் சிற்ப நூல்கள், தரும நூல்கள் மூலமாக நன்கு விளக்கினர். அந் நூல்கள் வகுத்த வழியிலேதான் இந்தியக் கலைகள் இதுகாறும் வளர்ந்து வந்திருக்கின்றன. இந்தியக் கலைஞர்கள் தங்களது அறிவு, சிந்தனை, கற்பனை, உணர்ச்சி, அகக் காட்சி ஆகியவற்றைக் கொண்டே சிருட்டித்தனராயினும், இக்காலக் கலைஞர்களைப்போலத் தங்களது சுயேச்சையின் போக்குப்படியே முற்றிலும் செல்ல விடப்படவில்லை. தொடக்கத்திலிருந்து, இனத்தில் வழி வழியாக வளர்ந்த சம்பிரதாயங்கள், ஐதிகங்கள், லட்சியங்களும், சமூகத் தேவைகளும் நோக்குகளும், சமயக் கொள்கைகளும், சாத்திரங்களும், பெரியோர்களின் கருத்துக்களும் அப்போக்கை ஒரு வரம்பிற்குள் கொண்டு வந்தன. இந்த நிலையில் எழுந்த இந்தியக் கலையானது, இந்திய நாகரிகம், பண்புகள் ஆகியவற்றைப் பரிபூரணமாகப் பிரதிபலிப்பதில் அதிசயம் ஒன்றுமில்லை.

இந்தியக் கலைஞர்கள் உண்மையைக் கண்டு அதை வெளிப்படுத்துவதையே நோக்கமாகக்

டாக்டர்கள் சிபார்சு செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

கொண்டிருந்தனர் எனக் கூறினேம். உண்மைக்கெல்லாம் பேருண்மையாய் விளங்குவது கடவுளின் உண்மையேயன்றோ? இக் கடவுளுண்மையை வெளிப்படுத்துவதொன்றே இந்தியக் கலையின் பிரதான குறியாக இருந்தது. வரம்பற்ற, நிபந்தனையற்றதோர் உண்மையை வரம்பும் நிபந்தனையுமுடைய ஓர் உருவில் காட்டுவது எங்ஙனம்? அது முடியாத காரியமாகும். ஆகவே, அகண்ட சச்சிதானந்தப் பரம்பொருளின் சில குணங்சங்களைக் கடவுளர்களின் வடிவில் அமைத்துக் காட்டவே கலைஞர்கள் கருதினர். இதன் காரணமாகவே, இந்தியக் கலை பெரும்பாலும் சமயத் தொடர்புடையதாக இருக்கின்றது. நமது புராதனக் கலைகள் யாவும் அநேகமாக இந்து, புத்த சமயங்களினின்றே தங்கள் ஆவேசத்தைப் பெற்று, அவற்றின் பேராதரவின்கீழேயே செழித்து வளரலாயின. கலையானது சமய அபிவிருத்திக்கும் ஆன்ம அபிவிருத்திக்கும் உரியதோர் உயர் சாதனமாயிற்று. இதுவும் இந்தியக் கலையின் சிறப்பியல்புகளில் ஒன்று.

இந்தியக் கலையின் சிறப்பியல்புகளில் சிலவற்றையே இங்குக் கூறினேம். இன்னும் பலவுள. கலையின் அபிவிருத்திக்கெனவே உதித்த 'இந்திரா' அவற்றையெல்லாம் தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தி, கலையுணர்ச்சியையும் கலை யாக்கத்தையும் உண்டாக்குவது அதன் சிறந்த கடமைகளுள் ஒன்றாகும். நமது புராதன தமிழ் மூவேந்தர்கள் கலைகளின் போஷகர்களாகவும் பெருங்கொடையாளர்களாகவும் விளங்கினர். அவர்களது மரபில் உதித்தவரும், தமது பெருங்கொடைகளால் வேந்தரின் பதவியைப் பெற்றவரும், தமிழ் மொழி, இலக்கியம், இசை ஆகியவற்றில் பேர் ஊக்கம் காட்டி வருகிறவருமான உயர் திருவாளர் ராச சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவை இவ்விசேஷ மலரின் மூலமாகக் கொண்டாட முன் வந்துள்ள "இந்திரா" இவ்வழியில் தன் பணியை ஏற்றுக்கொண்டிருப்பதற்கோர் அறிகுறியாகும். 'இந்திரா' இப்பணியில் மேன்மேலும் ஈடுபட வேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

---


முதல் காரியம்

- ஊரைவிட்டு பட்டணம் புறப்படும்போது பற்பல யோசனைகள். எத்தனையோ கேள்வியும் பதிலும். எவ்வளவோ அலுவல்கள். அந்த சமயத்தில் பட்டணத்தில் ரொம்ப அத்தியாவசியமாய் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் மறந்தே விடுகிறது.

அது என்ன?

- அசலூர் போகிறவருக்கு அவசியம் வேண்டியது தகுந்த ஸ்நான வசதியுடன் தங்குவதற்கு ஆரோக்யமான இடமும் நல்ல ஆகாரமும்.

எங்கே?

- வாஸ்தவம். இந்த முக்கிய விஷயத்தை முன்னடியே ஆலோசியாமற் போனாலும் பாதகமில்லை. அக்குறையை நீக்குவதற்கு நாங்கள் இருக்கிறோம்.

மஜூரா லாட்ஜ்
(Proprietor: T. S. VASUDEVA RAO)
போர்டிங் அண்டு லாட்ஜிங்
ஜி. டி. :: மதராஸ்

ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் எதிர்கால பலன்களையும் நீங்கள் நினைத்த காரியம் சித்தி பெறுமா பெறாதா முதலிய எல்லா விஷயங்களையும் ஆருட சக்கிரத்தின் மூலமாய் தெரிந்து கொள்ளலாம். தபாலில் பெற விரும்புவோர் 0-5-3 ஸ்டாம்பு அனுப்பவும்,

V. K. ரமணி
சிதம்பரம்

# மூளை முனையில்



எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர்

அன்னை பாரதியின் அரும்புதல்வன், அசகாய சூரன், ஆண்மைக்குரியோன், இணையிலா வீரன், எழில் நலம் வாய்ந்தோன், பிருதிவிராஜன் என்பான் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலே படுகளத்தில் சாய்ந்தான் பரம வஞ்சனை காரணமாக. உடனே, இந்திரப்பிரஸ்த நகரில்—தற்சமயம் டில்லி என வழங்கும் புரியில்—சுயவரசும் சாய்ந்தது; அன்னிய இஸ்லாமிய அரசு முளைத்தது. அடிமையரசர் முதல் ஔரங்கசீப் ஈறாக, முகம்மதிய மன்னவர் பலரும் ஆங்கிருந்து அட்டகாசஞ் செய்தனர்.

பிருதிவிராஜன் மாய்ந்த பின்னர், ராஜபுத்திரரிலே ஹிமவான் மைந்தன் ஹெமு, மேதினிராய், சங்கரசிம்மன், பிரதாப சிம்மன், ராஜசிம்மன் முதலிய வீரவேந்தர் ஒருவர்பின் ஒருவராகக் கிளம்பி, அவ்வன்னிய வரசுடன் மல்லுக்கு நின்று, மண்டமர் புரிந்தனர். எனினும் அன்னியவரசை அலங்கோலங் காண, சின்னாபின்னஞ் செய்ய, அவர்களால் ஆகவில்லை. தேச மக்கள் திகைப்புக்கொண்டு தேம்பிநின்ற காலத்திலே, பாரதபூமியின் மானத்தைக் காக்க, இந்து மக்களின் எடுப்பை நிலைநாட்ட, மார்தட்டுந் தனியரசொன்று காணத் தரணியில் உதித்தவன் சிவாஜி சத்திரபதி.

அவ்வீர சிவாஜி ஒரு சிறிய ஜாகீர்தாரின் புதல்வன்; தந்தையின் ஆதரவின்றி வளர்ந்தவன்; தன்னந்தனியனாக நின்றவன்; தோளிரண்டுமே துணையெனக் கொண்டவன்; வாள்முனையில் வெகு வரிசை காட்டியவன்; மூளைமுனையில் முழு வெற்றி கண்டவன்; பெருமலையைச் சிற்றுளி தகர்த்தெறிவதேபோல், வல்லரசான மொகலாய ஸாம்ராஜ்யத்தைச் சிதைத் தெறிந்தவன்; அத்துடன், ஈடிலா மகாராஷ்டிரப் பேரரசுக்கும் அடிகோலியவன். பம்பாய் மாகாணத்திலுள்ள பூனா, சூபா, பாரா, மகால் முதலிய நான்கு ஜில்லாக்களே சிவாஜிக்குக் கிடைத்த பூர்வீக சொத்து.

சிவாஜி சின்னவனா யிருக்கையில் தக்காணத்திலே, விஜயபுரி, கோவலகுண்டம், ஆமதுநகரம் முதலிய முகம்மதியச் சிற்றரசுகள் மொய்ம்புடன் விளங்கி நின்றன; வட இந்தியாவிலோ மொகலாய வல்லரசு மூர்க்கமுடன் அகங்கரித்து நின்றது. தக்காண அரசுகளிடம் மகாராஷ்டிர மக்களிற் பலரும் கைகட்டிச் சேவகம் புரிந்து நின்றனர்; மொகலாய வல்லரசினிடமோ, ராஜபுத்திர வேந்தரும் வீரரும் இச்சகம் பேசிக் கைத்தலமேந்தி, ஏவினவேலை செய்து நின்றனர். புராதனமான தேசம், தேச நாகரிகம், தேச தர்மம், பிறப்புரிமையான சுதந்திரம் முதலியனவெல்லாம் தலைதூக்க வழியின்றித் தத்தளித்து நின்றன. அவ்விழிநிலைகண்டு, ஷாஜியின் புதல்வன் சிவாஜியின் உள்ளம் துடித்தது; உயிர் குமுறியது.

அன்னையின் கண்ணீர் துடையாவிடின், அவனியில் வாழ்ந்தென்ன பயன்? தேசமானத்தைப் பாதுகாக்காவிடின், தேகமெடுத்தென்ன பயன்? சுதந்திரப் பயிர் வளர்க்காவிடின், சோற்றுக்குக் கேடாய்ச் சுழலுவதில் என்ன பயன்? என்று பலவாறாக அவ்வீர மைந்தன் சிந்தித்தான்; பின்பு வீறுகொண்டெழுந்தான்; தோள்தட்டி ஆர்த்தான்; மலை நாட்டினரான மாவலரைத் திரட்டினான்; தக்காண வரசுகளை வாட்டி, வீரக் கொடி நாட்டினான்; பின்பு மொகலாய வல்லரசின்மீதும் பாய்ந்தான். பிடரிமயிரைச் சிலிர்த்துப் பேரிடி முழக்கஞ் செய்து, காட்டுச் சிங்கம் கிளம்புவதேபோல், மொகலாயப் படை வெள்ளம் புரண்டெழுந்தது.

போரின் நடுவே பதினாறடி வேங்கை பின் வாங்கும். முதுகு காட்டி யோடவன்று. மற்று, முன்னையிலும் மும்மடங்கு மொய்ம்புடன் முன்னே தாவிப் பகையை மாய்க்கவேயாம்!

டாக்டர்களால் அங்கீகரிக்கப்பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே



அங்ஙனமே வீர சிவாஜியும் அப்படை வெள்ளங் கண்டு, ஒவ்வொரு கோட்டையாகக் கைவிட்டுப் பின்வாங்கினான். ஔரங்கசீபின் மாமன், மொகலாயப் படை வெள்ளத்தின் தலைவன், ஷீஸ்டா கான் என்னும் சீமான் அதுகண்டு ஆனந் தங்கொண்டு, பூனா நகரையும் கைப்பற்றி, அங்கே சிவாஜி வளர்ந்து வாழ்ந்த வியன் மாளிகையி லேயே தங்கலாயினன். ஒன்று, சிவாஜியைக் கொன்று, அல்லது அவனை வென்று, டில்லிக்குத் திரும்பலாமெனவே மொகலாய வீரர் அனைவரும் மனப்பால் குடிக்கலாயினர்.

வாழ்ந்த மாளிகை இழந்தாய், வாழ்வையும் இழப்பாய், உயிரை ஒரு பொருட்டாக மதிப் பின், உடனே வந்து சரண்புகலாம்; இன் றேல், உனது வாழ்வையும் உயிரையும் நிர் மூலங்கண்ட பின்னரே, டில்லி திரும்புவேன் என்று ஷீஸ்டாகான் ஓலை விடுத்தான்; மலைக் கோட்டையிலும் குகையிலும் பதுங்கிக்கிடத் தலோ மாவீரனுக்கு அழகு என்று இளக் காரமாகவும் பேசினான். மாற்றானது ஓலை கண்ட அம்மைந்தன் நல்லது என்று தலை யசைத்தான்; வாள்முனையில் பேசுவோ மென்றான்; மூளை முனையில் முயலுவோம் என்றான். வாய்த் தவிடும் போய், அடுப்பு நெருப்பும் அவிந்தது போலாயிற்றே யென்று மகாராஷ்டிரரிலே சிலர் மனமறுகினர். வீர சிவாஜி இம்மியும் மனந் தளரவில்லை. வீர நெஞ்சுக்குத் தளர்வேது?

ஷீஸ்டாகான் தங்கி நின்ற பூனாநகரம் பாசறையாகவே விளங்கியது. அவன் தங்கியிருந்த மாளிகையைச் சுற்றிலும் பதினா யிரம் இஸ்லாமிய வீரர் உருவின கத்தியும் கையுமாக இரவு பகல் காத்து நின்றனர். நக ருக்கு வரும் முக்கியமான பாதையிலே ராஜ புத்திர வேந்தன்—மகா ராஜா யசோவந் தன் — முப்பதாயிரம் வீரருடன் காவலாக நின்றான். நகரை யடுத்த ஏனைய மூன்று திக்குகளிலும் முப்பதாயிரம் முப்பதாயிரம் மொகலாய வீரர் முறுக்காக நின்றனர். அன் றளவும் மொகலாயச் சேனையில் சேவகம் புரிந்து நின்ற மகாராஷ்டிர வீரர் அனைவரும் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். யாவராயி னும் சரி, நகரின் உள்ளே வரவோ, நகரி னின்று வெளியே செல்லவோ வேண்டின், ஷீஸ்டாகானது அனுமதிச் சீட்டுவேண்டும். பொறுக்கான தளகர்த்தர் தவிர, வேறு யாரும் ஷீஸ்டாகானை நேரில் கண்டு பேசக் கூடாதெனவும் ஆணையுண்டு.

அத்தகைய அருங்காவலுடன் நிற்கும் ஷீஸ் டாகானை ஒரு சிலரையே துணையாகக்கொண்டு, தாக்கி வெருட்டி யோட்டுவதென வீரசிவாஜி சபதம் பூண்டனன். இது ஆகும் காரியமா என்று அனைவரும் ஐயப்பாடுகொண்டனர்.

ஜெகமெங்கும் புகழ் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

உயிர்த்தோழரான நேதாஜி, ஈஸாஜி, தாதாஜி சிம்ஹஜி, தேஷ்பாண்டே முதலிய பத்தொன்பதின்மருடன் புறப்பட்டான் அச்சிவாஜி. இடையிலே ஓர் உடைவாள், ஒட்டுச் சல்லடத்தினூடே ஓர் ஈட்டி, கைவிரல்களிலே புலிநக ஆயுதம். இவையே சிவாஜி தாங்கிச் சென்ற ஆயுதங்கள்.

ஒரு நாள் மாலையிலே பூனாவை நோக்கினான் அத்திரமைந்தன். நகரின் கிழக்கேயுள்ள குன்றுகளில் மரங்கள் அதிகம். அம்மரங்களின் கிளைகளில் தீவட்டிகள் கட்டப்பட்டன. குன்றுகளில் மேயும் காட்டெருமைகளின் கொம்புகளிலும் அங்ஙனமே தீவட்டிகள். நள்ளிரவில் குழலோசை கேட்டதும் அத்தீவட்டிகளைக் கொளுத்த வேண்டும்; உடனே கொம்பு தம்பட்டை அடித்து, அம்மாடுகளை ஓட்டிக்கொண்டு, ஓட்டமும் நடையுமாக மாவலர் போக வேண்டும். அவ்விதமெல்லாம் ஆயத்தஞ் செய்த பின்னர், இரவு நாழிகை இரண்டினுக்குத் தோழருடன் பூனா நகரின் கோட்டை வாயிலைக் குறுகினான் சிவாஜி.

சிவாஜியுள்பட இருபதின்மரிடமும் மணவினைக்குரிய வரிசைப் பொருள்கள் நிரம்பியிருந்தன. கோட்டைக் காவலனிடம் இருபதின்மரும் அனுமதிச் சீட்டை நீட்டினர். சீட்டுக்களை எல்லாம் ஊடுருவி நோக்கினான் காவலரின் தலைவன்; கையில் பந்தமேந்தி, அந்த இருபதின்மரின் முகத்தையும் ஏறிட்டுப் பார்த்தான்; நல்லது உள்ளே செல்லலாம் என்றான்.

இரவு நாழிகை பத்திருக்கும் கலியாண ஊர்வலம் நகரின் ராஜவீதிகளைச் சுற்றிவந்தது. இருபதின்மரும் வரிசைப் பொருள்களுடன் ஊர்வலத்தில் கலந்துகொண்டு, மாளிகையின் காவலமைப்பை நன்கு கவனித்துக்கொண்டனர். நாழிகை பதினைந்துக்கு ஊர்வலம் முடிந்தது. பேயுமுறங்கும் நடுநிசி வேளை. இருபதின்மரும் கரிய உடை தாங்கி, மாளிகையை நோக்கினர். வாயில்புறத்திலே காவலர் உறக்கமும் விழிப்புமாக நிற்கின்றனர். பின்புறத்திலோ, புதிய காவலாளர் பதின்மர் வந்து காவலை ஏற்றுக் கொண்டனர்.

மாளிகையினூடே செல்லுதல் எங்ஙனம்? மடைப்பள்ளியின் பின்புறம் இருபதடி உயரத்தில் சாளரமொன்றுண்டு. இதனைக் கல்லும் மண்ணுங்கொண்டு, அடைத்திருந்தனர். பழகிய தலமாதலின், அச்சாளரமே மார்க்கமெனக் கொண்டான் சிவாஜி. உடனே தோழரில் சிலர் ஒருவர்மீதிரொருவராக நின்று, சிவாஜியைத் தூக்கிவிட்டனர். லாகவமாக அச்சாளரத்தைப் பெயர்த்தான் அச்சத்திரபதி; உடனே, முதலில் தானே அறையினுள் குதித்தான். ஒன்பதின்மர் அவனைத் தொடர்ந்து மெய்காவலாகச் சென்றனர்.

படுக்கையறை சேர்ந்ததும், ஷீஸ்டாகானது மகன் அயர்ந்து உறங்குவதைக் காணவே, சிவாஜியின் தோழர் அம்மகனை மஞ்சத்துடன் நார்கொண்டு இறுகப் பிணைத்தனர். இதற்குள் மகனது மனைவி விழித்தெழுந்து உயிர்ப்பிச்சை கேட்டனள் சமிக்ஞையில். சரியென்று சிரமசைத்துச் சிவாஜி பதில் கொடுத்துவிட்டு, ஷீஸ்டாகானது அறைக்குள் புகுந்தான். இதற்குள் தாதியொருத்தி விழித் தெழுந்து, விரைந்து சென்று, ஷீஸ்டாகானைத் தட்டி எழுப்பினள். "உத்திரவின்றி உள்ளே நுழைந்து, உறக்கத்தைக் கெடுப்பது யார்?" என்று அவன் கூறிவிட்டு, நித்திரையில் ஆழ்ந்தனன்.

உறங்கிக் கிடப்பவனை வாளுக்கு இரையாக்க வீரசிவாஜி விரும்பவில்லை. என் செய்வதென நினைக்குமளவில், சந்தடி கேட்டெழுந்தான் ஷீஸ்டாகான். உடைவாளுடன் எதிரே சிவாஜி நிற்பதைக் கண்டதும் அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை; அந்தப்புரத்தில் புகுந்து பதுங்கிக் கொள்ள விரைந்தான். உடனே சிவாஜியின் உடைவாள் உயர எழுந்தது. சிவாஜியின் இடது கையோ கானைப் பிடித்துக் கீழே வீழ்த்தியது. அவ்வளவில், அவன் மார்மீது சிவாஜி அமர்ந்து, ஈட்டியை உருவிக்குடலைக் கிழிக்க முயன்றான்.

ஷீஸ்டாகானது மனையாள் அங்கு வந்து கைகூப்பி, "வீர! எனக்கு மாங்கல்யப் பிச்சைதர வேண்டும்" என்றனள். இதற்குள் மாளிகை வாயிலின் முன்புறமிருந்து இரண்டொரு வீரர் அரவங்கேட்டுப் பதைத்தோடி வந்தனர். நேதாஜியின் உடைவாள் அவ்வீரரின் சிரத்தைத் தரையில் தள்ளிவிட்டது. சந்தடி அதிகரித்தல் கண்டும், மாங்கல்யப் பிச்சை வேண்டியது நோக்கியும், சடுதியில் வெளியே செல்ல நினைத்தெழுந்தான் சிவாஜி.

உடனே ஷீஸ்டாகான் ஓட்டம்பிடித்தான் அயலேயிருந்த ஓர் அறைக்கு. ஓடுகையில் கானது கைவிரல்களை மட்டும் இலக்காகக் கொண்டது சிவாஜியின் உடைவாள். இதற்குள் அம்மாளிகையெங்கும் கூக்குரல் பரவலாயிற்று. ஒரே குழப்பமும் தோன்றிவிட்டது. சிவாஜியையும் ஒன்பதின்மரையும் வேடங்கண்டு முகம் மதியரெனவே பலரும் மதிக்கலாயினர். ஏனைய பதின்மரோ மாளிகையின் பின்புறக் காவலிலிருந்து பேதுற்றவர்களைப்போல் இங்குமங்கும் ஓடியலையலாயினர்.

பல சொல்லி என்ன? அக்குழப்பத்தினிடையே சிவாஜியும் அவன் தோழர் பத்தொன்

எல். பழநியப்பா போட்டோ மார்க் பற்பொடியை உபயோகியுங்கள்

பதின்மரும் பரிமீதேறி, மதில்வாயிலைக் குறுகி, ஓடும் பகையைத் துரத்துவார்போல் நடித்தனர்.

நகரின்புறத்தே சிவாஜி சத்திரபதியின் வரவு நோக்கிக் காத்துநின்ற இருநூறு மாவலவீரரும் வேந்தனுடன் கூடிக்கொண்டனர். அச்சமயம் குழலூதல் கிளம்பவே, மலைநடுவே மரக்கிளைகளிலிருந்த தீவட்டிகள் எரியலாயின; மாடுகளின் கொம்புகளிலிருந்த தீவட்டிகளும் பற்றியெறிந்தன. அவ்வெருமைகளை மாவலர் துரத்திச் சென்றனர். சிவாஜியைத் தொடர்ந்து வந்த மொகலாய வீரரோ தொலைவில் பெருவெளிச்சங் கண்டு, மயங்கிக் கிழக்கு நோக்கிக் கடுகி நடந்தனர். நெடுந்தூரம் மொகலாய வீரர் சென்ற பின்பு, பொழுதும் புலர, சிவாஜியின் தந்திரம் புலனாயிற்று. இதற்கிடையில் சிவாஜியோ வேறு திசை வழியே விரைந்துவிட்டான்.

புலியடித்தது பாதி, கிலியடித்தது பாதி என்னும் மூதுரைக்கு இலக்கான ஷீஸ்டாகான் வெருட்சியும் வெட்கமுங்கொண்டு விழிக்கலானான். பொழுதுபுலரும் சமயம் மகாராஜா யசோவந்தன் வந்து, ஷீஸ்டாகானை யணுகிக்குசலம் விசாரித்தான். ஷீஸ்டாகான் அதுகேட்டு, "ராஜபுத்ர வேந்தே! எனக்கு விபத்து நேருகையில் நீவிர் எங்கிருந்தீர்? யாது செய்தீர்?" என்று வினவினான். நகரைச் சுற்றிக் காவல் பார்த்து நின்றேன் என்றான் யசோவந்தன்.

பின்னர் ஷீஸ்டாகானுக்கு அங்கிருக்க மனமில்லை. உடனே அம்மொகலாயன் தன் உயிருக்கஞ்சி டில்லி போய்ச்சேர்ந்தான். படைவெள்ளமும் பின் தொடர்ந்தது. உற்றது முற்றும் கேட்ட ஔரங்கசீபோ பல்லைக்கடித்துக் கொண்டு பொருமினான்.

---


## இந்திரா

### இனிய தமிழ் மாதப் பதிப்பு

நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டீர்களா?



## எதிர்காலத்தை - - - - அறிந்துகொள்ளலாம்

உங்கள் எதிர்கால வாழ்க்கையின் பலாபலன்களை அறிந்துகொள்ள இனி சிரமப்பட வேண்டியதில்லை.

**எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லப்படும்**

| | | |
|---|---|---|
| முதல் மூன்று கேள்விகளுக்கு | ரூ. | 1—0—0 |
| மேற்கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் | ரூ. | 0—4—0 |

ஜாதகம் பார்த்துப் பலன் சொல்ல ரூபாய் மூன்று. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூபாய் மூன்று. முழு விவரத்துடன் ஒரு வருஷத்திற்கு சித்திர பலன் எழுத ரூ. 10. தோஷ நிவர்த்திக்கு ரக்ஷை செய்து தரப்படும்.

மற்றவை நேரில் அல்லது கடிதமூலம்

ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம், பிறந்த வருஷம் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: வி. பி. பி யில் அனுப்பப்படமாட்டாது. முன் பணம் அனுப்பவேண்டும்.

**ஸ்ரீராஜராஜேஸ்வரி சோதிட நிலையம்**
நேமத்தான்பட்டி, இராமநாதபுரம் ஜில்லா

எல்லோராலும் புகழப்படுவது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

Supplement to INDIRA issue dated 1-10-41




## ஆசாரிய தந்திரம்

தமிழ்ப் பெருங் கவி, முது பெரும் புலவர், ராவ்ஸாஹிப்
**வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. சி.**

முகுந்தபுரி யென்ற ஒரு நகரத்திலே கிருட்டினபிள்ளை யென்ற ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவர் இராம பிள்ளை. இளையவர் இலக்குமண பிள்ளை. இராம பிள்ளை, வியாபாரி: தூரமான பல இடங்களுக்குப் போய்ப் பொருள் சம்பாதித்துக் குடும்பச் சொத்தை விருத்தி பண்ணுபவரா யிருந்தார். இலக்குமண பிள்ளை, விவசாயி: குடும்பத்துக்குரிய நிலங்களைப் பயிரிட்டு வந்தார். மூத்தவர், மிகுந்த உலக அறிவுடைய விவேகி. இளையவர், சூது கவடு யாதும் அறியாத சுபாவி.

இராம பிள்ளை வியாபார காரியமாகத் தூர தேசத்துக்குப் போயிருந்த போது, மிகுந்த வயோதிகரா யிருந்த கிருட்டினபிள்ளை, காலமானார். இலக்குமண பிள்ளை, தகப்பனார் இறந்ததற்காக இயல்பாக துயரப்பட்டபோது, விசேடம் தமயனாரில்லாத சமயத்தில் நேர்ந்துவிட்டதே யென்று அதிகமாக வருந்தினார். அவருடைய உறவினரும் நண்பரும், ஆறுதல் கூறி ஒருவாறு சாந்தமடையச் செய்தார்கள். அபரக் கிரியைகளை அவ்வூரிலுள்ள ஸ்ரீலஸ்ரீ திம்மராச ஆசாரிய சுவாமிகளின் சீடர்கள் நடப்பித்தார்கள்.

அந்தச் சீடர்கள் இலக்குமண பிள்ளையிடம் 'உம்முடைய தகப்பனார் உம்மையும் உம் தமயனாரையும் இரண்டு கண்கள் போலப் பேணி வளர்த்துக் கல்வி கற்பித்துச் செல்வ நிலையிலிருந்து வாழும்படி வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அவருக்கு வைகுண்டத்தில் குடியிருப்பதற்கு ஒரு வீடு அமர்த்திக் கொடுக்க வேண்டும். இதுதான், நீர் அவருக்குச் செய்ய வேண்டிய முடிவும் முக்கியமுமான காரியம்' என்று சொன்னார்கள். அவர், 'என் தகப்பனார் சௌகரியமா யிருப்பதற்குத் தக்க வீடு அமர்த்திக் கொடுங்கள். அதற்கு இப்போது என்னிடம் ரொக்க மில்லை. எங்கள் வீட்டிலுள்ள வெள்ளிப் பாத்திரங்கள் தங்க நகைகளை அடகு வைத்து ஆயிரம் ரூபாய் வாங்கித் தருகிறேன். இது, எங்கள் தரத்துக்கு மிகவும் அதிகமானது. ஆயினும், எங்கள் தகப்பனாருடைய சௌக்கியத்துக்காக, இந்தக் கடனால் எங்கள் குடும்பம் மிகவும் கட்டப்படுமானாலும், இந்தத் தொகையைச் சந்தோஷமாகத் தருவதற்குத் தயாரா யிருக்கிறேன்' என்றார்.

சீடர்கள், 'நீர் நல்லவர்; உம்முடைய ஜென்மத்தில் இதற்கு மேலாகச் செய்யக்கூடிய புண்ணிய மில்லை. நீர் பணத்தைச் சீக்கிரமாகத் தயார் செய்யும். நாங்கள் ஆசாரிய சுவாமிகளிடம் போய், உமக்காகச் சிபாரிசு செய்து, மன்றாடி, நீர் கொடுக்கும் தொகைக்குப் பல மடங்கு அதிகம் பெறுமான ஒரு வீட்டைக் கிரயஞ் செய்யச் செய்து, கிரயச் சீட்டுக்கு நகல் (Copy) வாங்கி உம்மிடம் கொண்டுவந்து காட்டுவோம். பணத்தைத் தயாராக வைத்திருந்தால், அதை வாங்கிச் சுவாமிகளிடம் சேர்த்து அசல் (Original) கிரயச் சீட்டை உம்மிடம் கொண்டுவந்து கொடுப்போம். அதை உம்முடைய தகப்பனார் தலைக் கீழ் வைத்துத் தகனம் செய்ய வேண்டும். அந்தச் சீட்டுடன் வைகுண்டத்துக்குப் போய், அங்கே இருக்கிற நம் ஆசாரிய சுவாமிகளின் காரிய கர்த்தா (Agent) விடம் காட்டினால், அவர் சீட்டிற் குறித்த வீட்டை உம்முடைய தகப்பனார் வசம் ஏற்பித்து விடுவார். உம்முடைய தாய் காலமாகும் போது, வேறு கிரயங் கொடுத்து வீடு வாங்க வேண்டிய தில்லை. அந்த அம்மாள் உம் தகப்பனார் வீட்டில் அவரோடு சுகமாக

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

வாழலாம்' என்று சொல்லிவிட்டுச் சுவாமிகளிடம் போனார்கள்.

போனவர்கள், தாங்கள் பேசி முடிவு செய்திருப்பதைச் சுவாமிகளிடம் தெரிவித்தார்கள். அவர் எழுதிக் கொடுத்தது வருமாறு:—

## நகல்

முகுந்தபுரியி லிருக்கும் திம்மராச ஆசாரிய **சுவாமிகளேம்** மேற்படி ஊர் இராமபிள்ளை குமாரர் கிருட்டின பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த வீட்டுக் கிரயச் சீட்டு விவரமாவது:— இதன் தபசிலில் குறித்த வீட்டைத் தமக்குக் கிரயஞ் செய்து கொடுத்து நாம் வாங்கிக் கொண்டது ரூ. 1000. இந்த ரூபாய் ஆயிரத்துக்கும் அந்த வீட்டைத் தாம் சருவ சுதந்தர பாத்தியமாய் என்றென்றும் ஆண் டனுபவித்துக் கொள்வீராகவும்.

## தபசில்

பரமபதமாகிய வைகுண்டத்திலே, சுவாமி சன்னிதித் தெருவிலே, தென்சிறகிலே, எட்டாம் எண்ணுடைய வீடு. தபசில் விவரம் சரி.

(ஒப்பம்) **திம்மராச ஆசாரிய சுவாமிகள்.**

பேசியபடி நகல் காட்டப்பட்டது. பணம் கொடுக்கப்பட்டது. சீட்டு தலைக்கீழ் வைக்கப்பட்டுப் பிரேத சமத்காரம் செய்யப்பெற்றது.

தம்பி கடிதத்தினால் தகப்பனார் இறந்தது தெரிந்து, இராம பிள்ளை, முகுந்த புரிக்குத் திரும்பி வந்து, வீட்டு வாசலை அண்டும் போது, 'ஐயா! ஐயா!! ஐயா!!! என்று அலறிக் கொண்டு வீட்டுக்குள்ளே போனார். தாயையும் தம்பியையும் கட்டி அழுதார்.

பின்பு, தம்பியும் தாமும் தனித்திருந்த போது, இராமபிள்ளை, தகப்பனாருடைய சாவு சம்பந்தமாக என்ன செலவானதென்பதை விசாரித்து, வைகுண்ட மனைக் கிரயத்துக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்ட விவரம் தெரியலானார். தெரிந்த வுடனே, மிகவும் மனம் வருந்தி, இவ்வளவு பெருந்தொகையை அப்பாவியான தம்பியை ஏமாற்றி அபகரித்துக் கொண்டார்களே! என்றெண்ணி, இனிச் செய்யத் தக்கது யாதென்று ஆழ்ந்து ஆலோசித்து முடிவு செய்து, இரண்டு முனைகளிலும் நடுவிலும் இரும்புப் பூண் பிடித்த பெரிய தடிக் கம்பையெடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போய், ஆசாரிய சுவாமிகளைக் கண்டு, தடியைக் கீழே போட்டு, நெடுஞ்சாண் கிடையாகத் தடி விழுந்தது போல விழுந்து சாட்டாங்க நமக்காரம் செய்து, 'ஐயோ! ஐயோ!! என்ன அநியாயம்!!!' என்று, அலறிக் கதறி விம்மி விசித்து அழுதார். சுவாமிகள், துக்க விசாரணையும் சமாதானமும் செய்யத் தொடங்கி, உம்முடைய தகப்பனார், நம்முடைய ஆப்தரான அடியாருளொருவராயிருந்தார். மிகவும் நல்லவர். தம் பிள்ளைகளிருவரையும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து வைத்துவிட்டு, முதிர்ந்த பழம் உதிர்ந்திடல் போலக், கிழ வயசே காரணமாக, அனாயாச மரணம் அடைந்தார். இப்படிப்பட்ட மரணத்தை மங்கள காரியமாகக் கொண்டாட வேண்டும். அவர் இன்னும் எவ்வளவு காலமிருந்தாலும், அவரை இழப்பதற்கு மனம் வராது தான். ஆனாலும், என்ன செய்யலாம். நீர் வருத்தமடைய வேண்டாம்: உம்முடைய தம்பி புத்திசாலி. அவர் உங்கள் தகப்பனாருக்கு. உங்கள் குடும்பச் செல்வ நிலைக்கு மேலாகப் பெரும்பணம் கொடுத்து வைகுண்டத்தில் ஒரு சிறந்த வீடு வாங்கியிருக்கிறார். அது, அவர் கொடுத்த தொகைக்குப் பல மடங்கு அதிகமாகப் பெறுமானமுள்ளது. உம் குடும்பத்தார் மீது நமக்குள்ள பேரபிமானத்தினால், அந்த வீட்டை அவ்வளவு குறைந்த கிரயத் தொகை வாங்கிக்கொண்டு சந்தோசமாகக் கொடுத்தோம். இப்போது, அந்த வீட்டில் உம்முடைய தகப்பனார் சௌக்கியமாக வாழ்ந்து வருகிறார். நீர் வருந்த வேண்டாம் என்று சொன்னார்.



வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

அவர் சொன்னதைக் கேட்டவுடனே, இராமபிள்ளை, மிகவும் அதிகமாக அழுது 'அந்த அநியாயத்தைச் சொல்லத்தான் வந்தேன். அந்த வீட்டில் சுவாமிகளிடம் முந்திக் கிரயச் சீட்டுப் பெற்ற ஒருவர் முன்னமே குடியிருந்து வருகிறாராம். எங்கள் தகப்பனார், ஒதுங்கத் திண்ணையும் கிடையாமல், தேவரீர் கொடுத்த சீட்டை வைத்துக் கொண்டு தெருவில் நின்று திண்டாடுகின்றாராம்' என்று கூறிப் பக்கத்திலே கிடந்த தடியைப் பார்ப்பதும் சுவாமிகளைப் பார்ப்பதுமாகப் பல தடவை மாறி மாறி முறைத்துப்

வெற்றிக் கொடி நாட்டியது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

பார்த்துவிட்டுப், 'பழைய புதிய கிரயக்காரர்களுக் கிடையே ஏற்பட்டிருக்கிற வழக்கைத் தீர்ப்பதற்காகச் சுவாமிகளை வைகுண்டத்துக்கு அனுப்ப வந்திருக்கிறேன். அனுப்பி விட்டுத்தான் போவேன்' என்று சொல்லிச், சாட்டாங்க நமக்காரத்தைவிட் டெழுந்து, தடியையெடுத்து இரண்டு கைகளாலும் இறுகச் சேர்த்துப் பிடித்துத் தலைக்கு மேலே உயர்த்தி, ஓங்கிய வண்ணமாய் (இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிடுவதான) திரிவிதாங்க நமக்காரம் செய்பவர் போல நின்றார்.

சுவாமிகள் தடியையும் தம்மையும் இராம பிள்ளை மாறி மாறிப் பார்த்த போதே மனங் கலங்கிக் குடல் குழம்பி யிருந்தவர், தடியை ஓங்கிக் கொண்டு நிற்கும் நிலையைக் கண்ட மாத்திரத்திலே, திடுக்கிட்டுத் தமக்கு அந்திய காலம் வந்துவிட்ட தென்று அஞ்சி, நெஞ்சு படபட வென்று துடிக்க வேர்த்து விதிர் விதிர்த்து, எதிரி லிருந்த பெட்டியைக் கை நடுக்கத்தோடு திறந்து, ஒரு பண முடிப்பை யெடுத்து முன்னே வைத்து, 'இதுதான் உம்முடைய தம்பி கொடுத்தது. எடுத்துக் கொள்ளும். என்னை விட்டுவிடும். உமக்குக் கோடி புண்ணியம்' என்று குழறி எழுந்து 'தலை பிழைத்தது சாமி செயல்' என்றெண்ணித் திரும்பிப் பாராமல் கால்கள் பின்னித் தள்ளாட ஓடி ஒடுக்கத்துக்குள்ளே நுழைந்து ஒளிந்து கொண்டார்.

---

# செட்டிநாட்டு ராணி அவர்களின் சிறப்பு

சா. மு. வி. சிவகாமி ஆச்சி

செட்டி நாட்டு ராஜா அவர்களான தனவணிகப் பெரியாருக்கும் அவர்களது வாழ்க்கைத் துணைவியார் ராணி அவர்களுக்கும் இவ்வருடம் புரட்டாசித் திங்கள் பனிரெண்டாம் நாளன்று சஷ்டியப்த பூர்த்தி எனும் அறுபது ஆண்டு நிறைவு மணம் மங்களகரமாக நடைபெறப் போகின்ற தென்ற செய்தி செட்டிநாட்டிற்கே ஒரு பெரும் சீரும் சிறப்புமாக இருக்கிற தென்பதை யாவரும் அறிவர்.



சா. மு. வி. சிவகாமி ஆச்சி

ராணி அவர்கள் என் போன்ற சகோதரிகள் எல்லோரிடத்திலும் மிகுந்த பிரியத்துடனும் குதூகுலத்துடனும் பழகும் நற்குணமுடையவர்கள். அவர்களின் மாளிகைக்குச்சென்றுவிட்டால் சென்றவர்களுக்கு நன்கு உபசரணை செய்து, சென்றுள்ள வேலையைக் கேட்டு அதனை ராஜா அவர்களிடத்தில் சொல்லி முடிக்க வேண்டியதிருந்தால் அவர்களே சொல்லி முடித்து வீட்டுக்கனுப்பும் விசால நோக்கமுடைய புண்யவதி.

இம்மாதிரி நம் சமூகத்தில் இரு ஒப்பற்ற சிகரங்கள் போன்று தயாள குணமுடைய ராணி அவர்களும், தர்ம சிந்தனை நிறைந்துள்ள ராஜா அவர்களும் உதித்து பெரிய பெரிய நற்காரியங்களைச் செய்து வருவது நம் சமூகத்திற்கு மட்டுமல்ல, நம் நாட்டிற்கே இணையற்ற கியாதியாகும்.

நமது ராணி அவர்கள் நீண்ட நாள் நமது ராஜா அவர்களுடன் இருந்து எல்லா இன்பங்களையும் குறைவற அனுபவிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

---

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

Supplement to INDIRA issue dated 1-10-41

# பெண் கல்வி

சுப. விசாலாட்சி

“கல்வி சிறந்த தமிழ் நாடு
புகழ் கம்பன் பிறந்த தமிழ் நாடு
வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு”

என்ற பாடலால் கவி சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் தமிழ் நாட்டின் சிறப்பை நன்றாக விளக்கிக் கூறுகிறார். கல்வி சிறந்த தமிழ் நாட்டில், புகழ் கம்பன் பிறந்த தமிழ் நாட்டில், நம் மக்களின் கல்வி நிலைமை பரிதாபகரமாய் இருக்கிறது. ஆண்கள் நூற்றுக்கு ஆறு பேர் வீதம் சராசரி எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால், பெண்கள் ஆயிரத்திற்கு ஆறு பெயர்கள் கூட சராசரி எழுதப் படிக்கத் தெரியாத நிலைமையில்தான் இருந்து வருகிறார்கள். பிற நாடுகளில் ஆண்களும் பெண்களும் நூற்றுக்கு நூறுபேர்கள் உயர்தரக் கல்வி பெற்றிருக்கிறார்கள். எல்லாத் துறைகளிலும் ஆண்களுடன் பெண்கள் சமமாகப் போட்டி போடுகிறார்கள்.



சுப. விசாலாட்சி

ஆனால், நமது நாட்டிலோ? பெண் கல்வியின்றி, பகுத்தறிவு வளர்ச்சியின்றி, மனவலிமையின்றி அடிமையாய் அல்லற்படுவதைப் பார்க்கின்றோம். வருடம் தவறாமல் சரசுவதி பூசை செய்ய மறப்பதில்லை. சரசுவதிக்குப் பக்தியுடன் பூசை செய்யும் நம் நாட்டில் பெண்கள் கல்வியில் பிற்போக்கடைந்திருக்கிறோம். பெண் குழந்தைகளைப் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைப்பதில்லை. தங்கள் பெண் குழந்தைகள் ஆர்வத்துடன் கல்வி கற்க விரும்பும்பொழுது “பெண்கள் அதிகம் படிக்கக்கூடாது” “பருவமடைந்தால் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் செல்லலாகாது” என்று படிப்புக்குத் தடை செய்கின்றார்கள்.

பெண்களின் கல்வி அறிவைத் தடை செய்பவர்களைப் பார்த்து, “மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார்” என்று பாரதியார் கடிந்து பாடுகின்றார். கண்ணகி, மணிமேகலை, ஔவை மூதாதையர் முதலியோர் பிறந்த தமிழகத்தில் பெண்கள் கல்வி கற்காமல் தற்குறிகளாய் இருப்பது பெருத்த அவமானமாகும். பெண்கள் கல்வி அறிவு பெற்றால் குடும்ப நிர்வாகத்தைத் திறம்பட நடத்த முடியும். பிள்ளைகளை சுகாதாரத்துடன் வளர்க்க முடியும். பயம், மூட நம்பிக்கை, சடங்குகள், வீண் செலவு ஆகியவைகளை அகற்ற முடியும். பெண் கல்வி நிறைந்த நாட்டில் மக்கள் சமூகம் முன்னேற்றம், சுதந்திரம், சுய மரியாதை, வீரம், விடுதலை யாவும் பெற்று மகிழ்வுடன் வாழ முடியும் என்று கூறுதல் மிகையாகாது.

நாம் நாடு முழுவதும், கோயில் கட்டுதல், கும்பாபிஷேகம் செய்வித்தல், வேத பாடசாலைகள், தண்ணீர்ப்பந்தல் வைத்தல் ஆகிய தர்மங்களைச் செய்வதில் தலைசிறந்து விளங்கினோம்; விளங்குகின்றோம். ஆயினும், எல்லா தர்மங்களிலும் மிகவும் சிறந்தது மக்கட்கு எழுத்தறிவித்தல்; அதிலும் சிறந்தது பெண்கட்கு கல்வி அறிவு நல்குதல். நம் நாடு முழுதும் பெண்கள் கல்வி பெற பள்ளிக்கூடங்கள் அமைத்தல் வேண்டும். பெண் குழந்தைகளை நன்றாகப் படிக்க வைத்து கல்வி அறிவு வளர்ச்சி பெறும்படி செய்ய வேண்டும். அரசாங்கத்தாரும் பெண் கல்வி விஷயத்தில் அதிகம் கவலை செலுத்த வேண்டும். உலகப்போக்கையும், கால நிலையையும் நன்கு அறிந்து நமது சமூகப் பிரமுகர் ராஜா சர் மு. அ. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழகத்திற்கே தலைசிறந்து விளங்கும்படி பெரும் பொருட்செலவில் “அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை” அண்ணாமலை நகரில் சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். பள்ளத்தூர், சண்முகநாதபுரம், விராமதி, அமராவதிப்

பற்களுக்கு நீடித்த ஆயுளைத் தருவது எல். பழநியப்பா’ஸ் பற்பொடி

புதூர், கொப்பனபட்டி சென்னை முதலிய இடங்களிலும் நம்மவர்கள் ஹைஸ்கூல்களும், குரு குலமும் வைத்து சிறப்பாக நடத்தி வருகிறார்கள். மக்களின் கல்விவளர்ச்சிக்காகப் பெரும்பொருள் செலவு செய்து வரும் நம் நகரத்தார் சமூகப் பெண்மணிகளும் தங்கள் பெண் குழந்தைகளை அவசியம் படிக்க வைக்கவேண்டும். வசதியுடையவர்கள் உயர் தரக் கல்வி வரை படிக்க வைக்கவேண்டும் என்பது எனது பேரவா. தர்ம சிந்தனையும் பணமுமுடையவர்கள் பெண்கள் படிப்பிற்காகக் கல்வி நிலயங்களும், கல்லூரிகளும் நிறுவி பெண் கல்வி பெருக உதவி புரியும்படி வேண்டுகின்றேன். பல்கலைக் கழகம் நிறுவிய பெருந்தகை ராஜா சர் மு.அ. அண்ணாமலைச்செட்டியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலராக வெளியிடும் "இந்திரா" மலரில் என்னையும் இடம் பெறச் செய்த "இந்திரா" ஆசிரியர் அவர்கட்கு எனது நன்றி உரியதாகுக!

★ ★

## ராஜா ஸர் அண்ணாமலை மன்னர் 60-ம் ஆண்டு நிறைவு விழா

## (28-9-41)


மோசூர் கந்தசாமி முதலியார்

பச்சையப்டன் கல்லூரி மோசூர்

கந்தசாமி முதலியார்

B. A.., M. R. A. S.

இயற்றியவை

★ ★

வெண்பா

பண்பாளும் அண்ணா மலைமன்னன் பாரதனில்
கண்ணென்னும் கல்விக் கலைக்கழகம்—நண்ணியதால்
மூவுலகும் போற்ற முடிமன்னர் பாராட்ட
நாவுடையார் வீறெளிரிந் நாள்.

அகவற்பா

மலர்தலை உலகில் மக்கட் பிறப்பில்
பொன்போற் புதல்வராய்ப் பிறத்தலே பெரிது.
பழுதிலா உடம்பு பாரினிற் பெரிது.
பண்புடைப் பிறவி பயனுள பிறவி.
கல்விசேர் மாட்சி கண்கொளாக் காட்சி.
பொருள்சேர் நிலையே பொருட்படுத்து முறையாம்.
பொருளால் எளியரைப் போற்றிப் பலதுறைக்
கவிஞரைக் கவினுறக் காணுதல் சீரிது.
கல்லூரி நிறுவிக் கலையறி நுட்பமும்
அறிவின் விளக்கமும் ஆன்றநற் செய்கையும்
செந்நின்ற அகமும் நாநலச் செழுமையும்
மெய்ந்நிலை வழாத மேன்மைசால் உறுதியும்
மன்னுயிர் ஆக்கம் கூர்ந்துணர் வகையும்
உலகவாம் நன்மையும் உற்றுழி உதவலும்
மாணவர் பலப்பல திறத்தால் மதித்தும்
உவப்புறும் கொள்கையால் உளத்தே அமைத்தும்
ஆருயிர் ஓம்பும் அரும்பெரும் வாழ்க்கை
இனிதுற நடாத்த இயலும் வண்ணம்
செயற்கரிய செய்தலே செகமெலாம் புகழ்தரும்.
பிறவா யாக்கைப் பெரியோன் திருவடி
மறவாப் பான்மையால் மகிழ்கூர் நெஞ்சொடு
பதிபுண் ணியம்பற் பலவாய்ப் புரிதல்
இருமையும் பயக்கும் என்பதும் முறையே.
இவையெலாம் நிறுவிய இளவள ஞாயிறு
எண்தகு மேலோன் எங்கள்தம் கண்மணி
செந்நாப் புலவர்க்குச் செவிலித் தாயெனச்
சீரியர் வியக்கும் சிறப்புடைத் தோன்றல்
தமிழர்தம் பண்டைநாட் பெருமை தழைத்திட
இராப்பகல் உழைத்திடும் இராசமா ணிக்கமாம்
முத்தையா எனப்பெறும் வள்ளல் முழுமுத்தைப்
பெருமகன் ஆகத் தந்தநற் பேற்றோன்
அரிஅயன் காணா அருளொளிப் பேராம்
அண்ணா மலையெனும் அருமையார் மன்னன்
வண்புகழ் புவியினில் நிலைத்து வளர்தரத்
தமிழ மேலோர் சால்பினில் தெளிந்த
சிவத்தின் திருவருள் சிறக்கஈண் டினிதே.

Supplement to INDIRA issue dated 1-10-41



# கீதாஞ்சலி

வி.ஆர். எம். செட்டியார் பி.ஏ

கீதாஞ்சலியில் தாகூர், இறைவன் திருமலரடியில் வாடாத, வற்றாத இறுதி இன்ப வெள்ளத்தை, ஒவ்வொரு உண்மை பக்தனும், உண்மை ஞானியும், உண்மைத் தியாகியும் பெறலாம் என்பதைக் கவிதை நிறைந்த சிந்தனைச் சித்திரங்களாகத் தீட்டியிருக்கிறார். இதய வீணை, இதய ஒலியை நன்கு ஒலி பரப்புகிறது. உண்மை உயர்ந்து கீத கோபுரமாக ஜ்வலிக்கிறது; உலகம் ஒளிக்கடலாகப் பிரதி பலிக்கிறது; காதல் பக்தியாக மலர்கிறது; குழந்தை முடிவற்ற உண்மையை முன்னணியில் வைக்கிறது; கவிதைக் கடல் சாந்தியடைந்து சுதந்திர கீதம் பாடுகிறது; விந்தைச் சிறகு பெற்ற சொற்கள் ஒரு சந்நதக் கவியின் உள்ளத் தோன்றலாக மிளிர்கின்றன; ஆனந்தமாய் ரீங்கார மிடுகின்றன; ஏழையின் கண்ணீர் கடவுளைக் கண்டு மின்னி மின்னிக் கரைந்தோடுகிறது.

'கீதாஞ்சலி' ஒரு அமர காவியம். மூல வங்காளியில் இது ஒரு கீதக் கடல்; ஆங்கில மொழி பெயர்ப்பில் கருத்தளவிலே மூலம் முறியவில்லை. ஆங்கிலத்திலும் தாகூர் அதி நுட்பமாகவே மொழி பெயர்த்திருக்கிறார். இவருடைய மொழி பெயர்ப்பிலே, ஆங்கில பாஷை புது அருட் பொலிவு பெற்று மின்னிப் பொலிகிறது. கருத்தின் பொலிவை ஒட்டி, சொற்கள் புதுமை மின்ன ஓடி விளையாடுகின்றன; கவியின் சந்நிதியில், ஆங்கில பாஷை ஒரு வாசனை நிறைந்த ஊதுவத்தியாக மாறி மணம் வீசுகிறது.

அடியில் சில பாசுரங்களை தமிழ் மொழி பெயர்ப்பில் அறிய முயற்சிப்போம்: நான் ஆங்கிலத்திலிருந்தே மொழி பெயர்த் திருக்கிறேன். கீதாஞ்சலியில் 103 பாசுரங்களே உள்ளன.

### பாட்டு 1

இறைவ! என்னை முடிவற்ற நிலையில் சிருஷ்டித்திருக்கின்றாய். அதுவே நினது இச்சை. எனது மண்பாண்டத்தை அடிக்கடி காலி செய்து புத்துயிர் நிறைக்கின்றாய்.

இந்த உடல் ஒரு நாணற்குழல், இதை மலையிலும் சமவெளியிலும் தூக்கிச்சென்று அதனுள் முடிவற்ற நாதகீதங்களை ஊதி உலகம் வியக்கச் செய்கின்றாய்.

நினது கைகளின் அமரத்வ ஸ்பரிசத்தால், எனது சிறு இதயம் இன்பத்தின் எல்லை தாண்டி சொற்பொழி வாற்றுகிறது.

நினது அருட் கொடைகள் எனது சின்னஞ் சிறு கைகளில் கொள்ளக்கூடிய அளவே கிடைக்கின்றன. யுகங்கள் ஓடி மறைகின்றன, இன்னும் நீ கொட்டிக் கொண்டிருக்கிறாய், இன்னும் நிறைக்க இடமிருக்கிறது.

### பாட்டு 16

இந்த உலகின் விழாவிற்கு எனக்கு அழைப்பு வந்தது. இதில் என் வாழ்வு புனிதமானது. எனது கண்கள் பார்த்தன; எனது காதுகள் கேட்டன. இந்த விருந்தில் எனது இசைக் கருவியில் விளையாடுவதே எனது வேலை. என்னால் கூடியதைச் செய்துவிட்டேன்.

இப்போது மௌன நிஷ்டையில் நினது முகத்தை நான் பார்க்கும் அருட்காலம் வந்துவிட்டதா?

### பாட்டு 21

எனது தோணியைச் செலுத்த வேண்டும். மங்கலான மணிகள் கடற்கரையில் தோன்றி மறைகின்றன,—ஐயோ, எனக்கா!

வசந்தம் புஷ்பித்து விடை பெற்றுக் கொண்டது. பயனற்ற புஷ்பச்சருகுகளின் சுமையுடன் நான் தயங்கி அலைகின்றேன்.

அலைகள் கர்ஜிக்கின்றன, கரையின் இருண்ட ஓரத்தில் பழுத்த இலைகள் ஆடி உதிர்கின்றன.

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

என்ன வெறுமை! மறு கரையினின்று மிதந்து வரும் இன்னோசைகள் காற்றிற் கலந்து உனக்கு உணர்ச்சி ஊட்டவில்லையா?

## பாட்டு 23

எனது நண்பா, உனது இன்ப யாத்திரையில் இந்தப் புயல் இருளில் நீ வெளியே வந்து விட்டாயா? நம்பிக்கை யிழந்தவன் போல், ஆகாசம் ஊளையிடுகின்றது.

இன்றிரவு நான் தூங்கவில்லை. அடிக்கடி நான் கதவைத் திறந்து வெளியிருளைப் பார்க்கிறேன். என்முன் ஒன்றும் புலப்படவில்லை. உனதுபாதை எங்கு கிடக்கிறதென்று நான் அதிசயிக்கின்றேன். எந்த மையிருள் அருவியின் மங்கிய கரையின் வழியாய், சினக்கும் காட்டின் எந்தத் தூர முனையின் வழியாய், இருளின் வலையுண்ட ஆழத்தின் எத்திசையில், நீ என்னை நோக்கி வருகின்றாய், எனது நண்பா!

## பாட்டு 41

எனது காதலனே! யாவர்க்கும் பின்னால் ஏன் இருண்ட நிழல்களில் ஒளிந்து கொண்டிருக்கிறாய். அவர்கள் உன்னையும் தள்ளிக்கொண்டு, உன்னை ஒன்றுமில்லை யென்று கருதிக்கொண்டு இருண்ட பாதையில் போகிறார்கள்.

உனது பூஜைக்கு அர்ப்பணிக்க பல பொருள்களை வைத்துக்கொண்டு, பல மணிகளைத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்; வீதியில் செல்லுபவர்கள் அருகே வந்து என்னுடைய புஷ்பங்களை எடுத்துக் கொண்டு செல்லுகிறார்கள், எனது கூடையும் அநேகமாய்க் காலி.

காலை முடிந்து பகல் வந்தது. அந்தி வேளையில் எனது கண்கள் தூக்கத்தில் மயங்கிக் கிடக்கின்றன. வீடு திரும்புகிறவர்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். நான் வெட்க மடைகிறேன். முகமூடியை இழுத்துத் திரையிட்டுக் கொண்டிருக்கும் ஒரு பிச்சைப் பெண்போல் நான் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். எனக்கு என்ன வேண்டுமென்று அவர்கள் கேட்கும் போது, நான் கண்களைக் கீழே திருப்பிக்கொண்டு பதில் கூற மறுக்கின்றேன்.........

...........................................................

புல்லின்மேல் உட்கார்ந்து கொண்டு, ஆகாசத்தை உற்று நோக்கிக் கொண்டு, உனது வரவின் திடீர் ஜோதியைப் பற்றிக் கனவு காண்கின்றேன்—எல்லா வெளிச்சங்களும் மின்னுகின்றன. உனது ரதத்தில் தங்கக் கொடிகள் பறக்கின்றன, வீதியின் பக்கம் உள்ளவர்கள் உன்னைப் பார்த்து அதிசயப் படுகிறார்கள்......

.................................

## பாட்டு 45

அவருடைய அமைதியான காலடிகளைக் கேட்டிருக்கின்றாயா?

அவர் வருகிறார், வருகிறார், வருகிறார். ஒவ்வொரு நிமிஷமும், ஒவ்வொரு யுகமும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு இரவும், அவர் வருகிறார், வருகிறார், வருகிறார், எப்போதும் வருகிறார்.

...........................................................

## பாட்டு 100

ரூபக் கடலில் மூழ்கி, ரூபமற்ற பரிபூரண முத்தை அடையவே நம்புகிறேன்.

எனது காற்றில் நைந்த படகைக் கொண்டு இனிமேல் பல துறைமுகங்களுக்குப் போக நினைக்கவில்லை. அலைகளில் அலைபடும் நாட்கள் போய் விட்டன.

அமரத்வ நிலையை அடையவே அவாவுகிறேன்.

நாதமற்ற கம்பிகளின் ஓசைவெள்ளம் நிறையும் அளப்பரிய மண்டபத்தில், எனது வாழ்வின் யாழை எடுத்து மீட்டுகின்றேன்.

கீத அலைகள் முடியப்பாடி, கடைசியாக அதனுடைய இறுதிச் சிதர் முடியும்போது எனது மௌன யாழை உனது மௌனத் திருவடிகளில் வைக்கிறேன்.

## பாட்டு 103

எனது தெய்வமே, ஒரே பிரார்த்தனையில் எனது புலன்கள் விரிந்து உனது திருவடியில் உள்ள இந்த உலகத்தைத் தொட அருள் புரிவாயாக!

ஒரே பிரார்த்தனையில், முத்துமழை சுமந்து நிற்கும் கவிந்த ஜூலை மேகம்போல், எனது மனம் உனது கதவண்டை கவிந்து கிடக்கும்படி அருள் புரிவாய்!

எனது பாசுரங்கள் பல ராகங்களையும் ஓர்மையுடன் திரட்டி ஒரே வெள்ளமாக மௌன அமைதிக் கடலில், ஒரே பிரார்த்தனையாகக் கூடிக் கலக்கும்படி அருள்புரிவாய்!

மலைமேலுள்ள கூடுகளைத் தேடி, பகலும் இரவும் பறந்தே செல்லும் வீட்டுக் கவலையுற்ற கொக்குக் கூட்டம்போல், ஒரே பிரார்த்தனையில் எனது வாழ்க்கையே தனது அழியாத ஜோதி இல்லம் தேடி யாத்திரை செய்ய அருள் புரிவாயாக!

கண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்பொடியை உபயோகியுங்கள்

# ஓர் அரிய தருணம்

செட்டிநாட்டு தனவைசியர்களால் நன்கு மதிக்கப்பட்டு கீர்த்தி பெற்றுவரும் எங்கள் ஸ்டுடியோவை மேலும் அன்பர்களுக்கு சேவை செய்து கீர்த்தி பெற டூரிங் ஸ்டுடியோ ஒன்று நியமித்திருக்கிறோம்.

தற்சமயம் மாநகர் கானாடுகாத்தானில் மூன்று மாதங்கள் தங்குவோமாதலால் கனவான்கள் மதிப்புயர்ந்த ஆர்டர்களைக் கொடுத்து ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

## R. தாஸன் ஸ்டுடியோ (டூரிங்)

**V. V. R. N. A. R. கட்டிடம்**

**புதுக்கோட்டை ரஸ்தா :: கானாடுகாத்தான்**

நேரம்: பகல் 1 மணி முதல் இரவு 8 மணி வரையில்

*தலைமை ஆபீஸ்:*

**சென்னை**

*கிளை ஆபீஸ்கள்:*

**காரைக்குடி — மதுரை — கோயம்புத்தூர்**




பல வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சிறு விஷயம். நான் அப்போது முதல் பாரத்திலிருந்து இரண்டாவது பாரத்துக்கு 'பிரமோஷன்' ஆகி வந்திருக்கிறேன். அந்தக் காலத்திலே, பாடசாலைகளில் சம்ஸ்கிருதம் சொல்லிக்கொடுப்பது இரண்டாவது பாரம் முதல்தான். சம்ஸ்கிருத வகுப்பிலே மாணவர்கள் குறைவாகத்தான் இருப்பார்கள். புது வகுப்பிலே எனக்குச் சம்ஸ்கிருத பாடம் தொடங்குகிற முதல் தினம், சம்ஸ்கிருத பண்டிதர் வகுப்புக்கு வந்தார். மற்றப் பையன்களும் நானும் வகுப்பில் இருந்தோம், உபாத்தியாயர் சம்ஸ்கிருதத்தின் பெருமையைப் பற்றி ஒரு சிறு பிரசங்கம் செய்தார். அது தேவ பாஷை; தேவலோகத்திலே யுள்ள தேவர்களும் முனிசிரேஷ்டர்களும் பேசுகிற பாஷை; விநாயகரும் சுப்பிரமணியரும் தங்கள் பெற்றோருடன் கொஞ்சுகிற பாஷை; சரசுவதி தன் வீணையை மீட்டிக்கொண்டு பாடுகிற பாஷை; தும்புருவும் நாரதரும் பரமேசுவரன் சந்நிதியிலே கீதமிசைக்கின்ற பாஷை; இப்படியாகப் போய்க் கொண்டிருந்தது பிரசங்கம். மாணவர்களிலே பல பேருக்கு இது மிகவும் சங்கடமாயிருந்தது. "இதேதடா வம்பு, நமக்கு இந்தத் தெய்வ பாஷை வேண்டவே வேண்டாம். பேசாமல், மனிதர்களாகிய நாம், தமிழ் வகுப்புக்கே போய் விடலாமே" என்று அவர்கள் எண்ணினார்கள். ஆனால், எனக்கும் என்னைப்போன்ற சில மாணவர்களுக்கும் ரொம்ப சந்தோஷம். தெய்வ பஷையைப் படிக்கக் கிடைத்த நமது பாக்கியமே பாக்கியம் என்று எண்ணினோம். சம்ஸ்கிருதம் படித்தால், அப்புறம் இந்த உலகத்தில் வேலையே இல்லை, நேரே சொர்க்க லோகத்துக்குப் போய் விடலாம் என்ற நிச்சயம் பிறந்து விட்டது. பிறந்துவிட்ட போதிலும், ஒரு சிறு சந்தேகம் மட்டும் இருந்தது. அதாவது, தேவலோகத்திலே, தேவர்கள், இந்திரன், பிரமன் முதலியோர் சம்ஸ்கிருத பாஷையில்தான் பேசுகிறார்கள் என்பதற்கு ஆதாரமுண்டா என்பதுதான். எங்கள் சந்தேகத்தை எதிர்பார்த்தே, பண்டிதர் அதற்கு வேண்டிய சமாதானம் சொல்லத் தொடங்கினார்.

"கைக்குழந்தை யெல்லாம் எப்படிடா கத்துகிறது?" என்று ஒரு கேள்வி கேட்டார். உடனே ஒரு பையன் எழுந்து, "குவா, குவா என்று கத்துகிறது, சார்" என்று பதில் சொன்னான். "பேஷ்" என்று சொல்லி, பண்டிதர் விளக்க ஆரம்பித்தார். நம்மை யெல்லாம் படைத்து, நம் உயிர்க்குயிராயிருந்து காப்பாற்றுகிற கடவுள் ஒருவன் உண்டு. இந்தக் கடவுள்தான், தாயின் வயிற்றிலிருக்கிற சிசுவையும் காப்பாற்றுகிறான். சிசு தாயின் வயிற்றிலிருக்கிறவரையில், அந்தக் கடவுள், அதற்கு வேண்டிய ஆகாரமளித்து, அதனோடுகூடவே யிருந்து, அதைச் சௌகரியமாக வைத்திருக்கிறான். இப்படிச் சௌகரியமாக இருந்த சிசு, தாயின் கர்ப்பத்தைவிட்டு உலகத்தில் வந்து பிறந்தவுடன், எல்லாம் புதிதாக இருக்கிறது. அதைக் காத்துவந்த கடவுளைக் காணவில்லை. இதனால், பிறந்தவுடனே குழந்தை 'குவா', 'குவா' என்று கத்துகிறது. வடமொழியிலே 'க்வா' என்றால் எங்கே என்று பொருள். பிறந்த குழந்தை 'எங்கே', 'எங்கே' என்று கேட்கிறது. அதாவது, "என்னை இது வரையில் பாதுகாத்துவந்த கடவுளே! இப்போது

பழனியப்பா'ஸ் பற்பொடியே பற்களை கெட்டிப் படுத்தும்

நீ எங்கே போய்விட்டாய்?'' என்று பழைய ஞாபகத்தோடு சம்ஸ்கிருதத்தில் பேசுகிறது. 'க்வா' என்ற சப்தத்திற்கு சம்ஸ்கிருதத்தில் இந்தப் பொருள் இருப்பதனால், கடவுளுக்குரிய தேவபாஷை சம்ஸ்கிருதமே யாகும் என்பதைப் பண்டிதர் இவ்வாறு ஐயந் திரிபற நிரூபித்து விட்டார். கேட்ட மாணவர்களாகிய எங்களுக்கும் சந்தேக மெல்லாம் நீங்கிவிட்டது. தேவபாஷையைக் கற்றுக் கொள்ளுகிறோம் என்ற ஒரு கர்வத்தினால், பின்னால் மற்றப் பையன்களோடு எத்தனையோ வாய்ச் சண்டைகளும் கைச்சண்டைகளும் போட்டிருக்கிறோம்.



2

இந்தக் கதையை நான் சொல்லவந்தது, சம்ஸ்கிருத பாஷைக்கு உயர்வு உண்டென்று சொல்வதற்காகவோ அல்லது அதற்கு உயர்வு இல்லை என்று சொல்வதற்காகவோ அல்ல. நம் மக்களுக்கு, அற்ப விஷயங்களிலும் கூடப் பெரிய உண்மைகளை ஏற்றிச் சொல்வதிலும், அவற்றிலே அந்த உண்மைகளைக் காண்பதிலும் அதிகப் பிரேமையிருக்கிறதென்பதைக் காட்டவே மேற்சொன்ன சம்பவத்தை இங்கே நான் விரித்துக்கூறினேன். ஒரு சிசு, ஏதோ பசி காரணமாகவோ அல்லது வலி காரணமாகவோ, கத்தினாலும், அதற்கு எத்தனையோ தத்துவார்த்தங்கள் கற்பிக்கிறோம். இந்த முறையிலே பார்த்தால், எத்தனையோ விதங்களில் இப்படிப்பட்ட ஒரு சுபாவம் நமக்கிருப்பதைக் கவனிக்கலாம்.

தெருவிலே இருவர் வாய்ச்சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள். ஒருவன் மற்றவனைப் பார்த்துச் சொல்லுகிறான்: ''உன்னைத் தெரியும், போடா, பார்த்துக் கொள்ளுகிறேன்''

பற்களை உறுதி செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

னுக்குத்தான் தெரியுமா இந்த விஷயங்கள்? தெரியாது. நாமும் இந்தக் கேள்விகளைக் கேட்போம், ஆனால் பொருள் தெரியாது. இதிலொன்றும் குற்றமில்லை. மாணிக்கவாசக சுவாமிகளுக்குமே இந்த விஷயங்க ளொன்றும் தெரியவில்லையாம். அவர் சொல்லுகிறார்:

‘நானார்? என் உள்ளம் ஆர்?
ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார்?”

“என்னை எனக்குத் தெரியாது; தெரிந்தவர் யார்?” என்று அவரே கேட்கும்போது, நமக்கு இவை தெரியாததிலே ஒன்றும் தவறில்லை.

சாதாரணமாக, ஒரு மனிதன் நம்மைக் கொஞ்சம் மதிக்காமல், அசட்டை செய்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனுடைய கருவத்தையும் இறுமாப்பையும் பற்றி அது முதல் சதா பேசி வருகிறோம். அவனுக்கு ஏற்பட்டிருப்பதாக



என்கிறான். கேட்டவன் சிறிது புத்திசாலி. நின்று, நிதானமாகப் பதில் சொல்லுகிறான்: “நீ சொல்கிறது சரிதானப்பா, என்னை உனக்குத் தெரியுமென்று சொல்லுகிறாய். அதிருக்கட்டும். முதலிலே, உன்னை உனக்குத் தெரியுமா? அதைச் சொல்லு” என்கிறான். அவன் சிறிது திகைக்கிறான். இவனோ, மேலும் கேள்விகளைச் சரமாரியாக விட்டான்: “முன்னே நீ எங்கே இருந்தாய்? இப்போது எங்கே வந்தாய்? ஏன் வந்தாய்? இனி எங்கே போகிறாய்?” என்று அடுக்கினான். சண்டை போட்டவன், “அப்பா, உன் கேள்வியும் வேண்டாம், உன் சண்டையும் வேண்டாம்” என்றுகூறி, ஓடியே விட்டான்.

நாமும் சற்று நின்று இதைக் கவனிக்கலாம். கேட்டவன் இந்தக் கேள்விகளைக் கேட்டுவிட்டானே தவிர, அவ

எல்லோரும் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

நாம் கருதுகிற இந்த இறுமாப்புக்கு ஒரு புதுப் பெயரும் கொடுக்கத் தலைப்படுகிறோம். மமதை என்றும், அகங்காரம் என்றும் கூசாமல்சொல்லுகிறோம். கருவம், தற்பெருமை என்ற அர்த்தத்தில் இந்த வார்த்தைகளை எடுத்து வீசுகிறோம். ஆழ்ந்து பார்த்தால் இவற்றில் அரிய பொருள் அடங்கியிருப்பது தெரியும். அகங்காரம் என்பது **நான்** என்ற முனைப்பு; ஆணவம் என்று சொல்லப்படும். மமதை என்பது **என்னுடையது** என்ற பற்றுதல். பாசம் அல்லது மாயை என்று இதைச் சொல்லலாம். இவை, உயிர்களை ஆதிதொட்டு இடைவிடாது பீடிக்கின்ற மலங்களாகும். இவற்றைவிட்டு நீங்கின மனிதன் கடவுள் தன்மையை அடைந்து விடுகிறான். அகங்காரம், மமதை என்று நாம் சொல்லுகிற சாதாரணச் சொற்களிலே இவ்வளவு ஆழமான பொருள் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட உயர்ந்த தத்துவார்த்தம் பொருந்திய கருத்துக்களை விளக்கும் எத்தனையோ உதாரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். இவை நிற்க, செய்யுள் வழக்கிலிருந்து இரண்டொரு உதாரணங்களை இனிப் பார்ப்போம்.

தற்செயலாக, எதிர்பாராத முறையில், ஆண் பெண் இருவர் ஒரு தனித்த இடத்தில் சந்திக்கிறார்கள். இருவரும் இளவயதினர், மணமாகாதவர்கள். சந்திக்கிற இடமோ, மலைச்சாரல்; இயற்கை வசதிகளெல்லாம் நிரம்பி, மனத்துக்கு உற்சாகத்தைத் தரும் சோலை. ஒருவர்மேலொருவர் காதல்கொண்டு, மணம்புரிந்து கொள்ளுகிறார்கள். மணமெல்லாம் நிறைவேறி, சந்தோஷத்துடனே வாழ்ந்து கொண்டிருக்கிற தலைவி, ஒருநாள், பழைய நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்க்கிறாள். ஒரு பெரிய அதிசயம் அவளுக்கு உண்டாகிறது. தன் நாயகனும் தானும் எவ்வாறு ஒருவரை யொருவர் விரும்ப நேர்ந்தார்கள் என்பதற்கு அவளால் காரணம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவளுடைய தாய்க்கும் அவனுடைய தாய்க்கும் ஏதேனும் உறவு இருந்ததா? இல்லை. இருவருடைய தந்தையரும் ஒருவரை யொருவர் முன்னமே அறிவார்களா? மாட்டார்கள். இந்தக் காதலர் இருவருமாவது முன்பின் கண்டிருக்கிறார்களா? அதுவும் கிடையாது. பின் எவ்வாறு இவர்களுடைய மனம் ஒன்றாகப் பிணிக்கப்பட்டது? இந்தக் கேள்விக்குப் பதில், ஒத்த அன்புடைமைதான் என்று அவள் முடிவுகட்டுகிறாள். இந்தப் பழைய நினைவுகளைத் தன் காதலன் முன்னிலையில் ஞாபகப்படுத்தி மகிழ்கிறாள் இந்தத் தலைவி:

"யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யாமும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் * போல,
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே!"

இது, இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தோன்றிய சங்கநூல்களில் ஒன்றாகிய குறுந்தொகையிலிருந்து எடுத்த தனிப்பாட்டு. காதலர்களுக் கிடையிலுண்டான அன்புக்குக் காரணம் சொல்ல முடியாது; அந்த அன்பு ஏதோ தெய்வச்செயலாகத் தோன்றிய அன்பு என்றே சொல்ல வேண்டும் என்பதை இந்தப் பாட்டு குறிப்பிடுகிறது. இனி, மற்றொருவகை அன்பைப் பார்க்கலாம்.

தாயானவள் குழந்தையைப் பத்துமாதம் தன் வயிற்றில் சுமந்து வளர்க்கிறாள். வயிற்றிலுள்ள அச்சிசுவின் நன்மையை உத்தேசித்து இவள் எவ்வளவோ கவலையுடன் தன் தேகத்தைப் பாதுகாக்கவேண்டி யிருக்கிறது. குழந்தை வயிற்றிலிருக்கிற வரையில்தான் இந்தக் கவலை என்பதில்லை; குழந்தை பிறந்த பின்னும், தாய்ப்பால் குடித்துக்கொண் டிருக்கிறவரையில், தாய் இதே கவலையோடு இருக்கவேண்டி யிருக்கிறது. குழந்தைக்குச் சிறிது ஏதாவது அசௌகரியம் என்றால், அதன் பொருட்டுத் தாய் மருந்து சாப்பிடுகிறாள். குழந்தைக்கு ஒருவேளை ஏதாவது கெடுதல் வந்துவிடுமோ என்று பயந்து, தாய், மாம்பழம் சாப்பிடமாட்டாள், பலாப்பழம் சாப்பிடமாட்டாள். இப்படிப் பெற்று வளர்க்கிற இந்தக் குழந்தைக்கும் இவளுக்கும் என்ன சம்பந்தம்? எல்லா சம்பந்தமும் உண்டு. குழந்தையின் உடலிலே தாயின் தத்துவமும் தந்தையின் தத்துவமும் நிறைந்திருக்கின்றன. அதன் சதை, இரத்தம், எலும்பு, நரம்பு முதலிய எல்லாம் அவளுடைய தேகத்திலிருந்து வந்தன. பலநாள் வரையில் அது வளர்வதற்குக் காரணமா யிருப்பதும், தாயினுடைய பால்தான். இவ்வளவு சம்பந்தம் தாய்க்கும் குழந்தைக்கும் இருக்கவே செய்கிறது. ஆனால், இவ்வளவும் உடலைப் பற்றிய சம்பந்தந்தான். அந்தச் சிறிய குழந்தையின் உடலுக்குள்ளே யிருக்கிற உயிருக்கும் அந்தத் தாய்க்கும் ஏதேனும் சம்பந்தமுண்டா? அதைப் பற்றி அந்தத் தாய்க்குத்தான் தெரியுமா அல்லது குழந்தைக்குத்தான் தெரியுமா? தெரியாது. இந்தக் குழந்தை யார், ஏன் இந்தத் தாயினிடம் வந்து பிறந்தது என்பனபோன்ற விஷயங்கள் தெரியவே தெரியாது. தாயார் தன் குழந்தையைத்

* செம்புலப் பெயல்நீர்-தண்ணீரின்றி வறண்டு கிடக்கும் நிலத்தில் பெய்த மழைநீர் நிலத்துக்குள்ளேயே சுவறி இரண்டறக்கலந்து விடுவதுபோல, நம்முடைய இதயமும், ஒருவருக்காக ஒருவர் ஏங்கி நின்றமையாலே, ஒன்றுக்குள் ஒன்று அடங்கிவிட்டது என்பது கருத்து.

பற் பூச்சிகளை ஸம்ஹரிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

தொட்டிலிற் கிடத்தி, அதை அன்போடு தாலாட்டி உறங்க வைக்கும்போது பாடுகிற தாலாட்டுப் பாடல்களில் முதல் வார்த்தையே இந்தக் கருத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தாய் என்ன பாடுகிறாள்:

"ஆர் ஆரோ ஆர் இவரோ—என்
கண் ஆரோ ஆர் இவரோ!"

என்று பாடுகிறாள். ஆராரோ என்று சொல்லும்போது, "நீ யார்? நான் யார்? நம்முடைய உயிர்களுக்குள் என்ன சம்பந்தம்?" என்ற கருத்து வெளியாகிறது. ஆரிவரோ என்று பாடும்போது, "என் குழந்தை, என் கண், என்று நான் சொல்லி மகிழ்கிற நீ யார்?" என்ற கருத்து வெளிப்படுகிறது.

சாதாரணமாக, எல்லோரும் தாலாட்டுப் பாட்டுக்களைக் கேட்டிருக்கிறோம், கேட்டும் வருகிறோம். அவற்றைப் பற்றி நாம் அறிந்திருப்பது என்னவென்றால், குழந்தைகளை உறங்கவைக்க இந்தப் பாட்டுக்கள் உதவும் என்பதுதான். இதற்குமேலே ஏதாவது தெரியுமென்றால், அது, தாலாட்டுப் பாடும்போது, நமக்குக்கூட, கேட்பதற்கு நன்றாயிருக்கும் என்பதாகும். நாமறிந்ததெல்லாம் இவ்வளவே. இவற்றுக்கெல்லாம் மேலாக, வாழ்க்கையிலேயே ஒருவராலும் தக்க சமாதானம் சொல்ல முடியாத ஒருபெரிய கேள்வியும் இந்தத் தாலாட்டுப் பாட்டுக்களிலே அமைந்திருக்கிறது. அதுவே இந்த "ஆராரோ" என்ற கேள்வி. நாம் பேசும் சாமானியச் சொற்களிலும் விஷயங்களிலும் விசேஷ கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன என்று மேலே குறிப்பிட்டேன். இந்த உண்மையைத் தாலாட்டுப் பாடல்கள் தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன.

குழந்தையும் தாயும் யார் யாரோ என்பதை இங்குப் பார்த்தோம். தாய் தன் குழந்தையை ஆராரோ என்றதனால், அதனிடத்துள்ள பாசம் குறைந்துவிடுகிறதா? அது தானில்லை. யார் யாராயிருந்தபோதிலும், தாயானவள் தன் குழந்தையை ஆராரோ என்று தாலாட்டும்போது, ஒவ்வொரு தடவையும் தாலாட்டுவதனால் உண்டாகும் ஆனந்தம் அதிகரித்துக் கொண்டேதான் போகிறது.

என் பேச்சைக் கேள்!

97 வருஷ அனுபவமும் 40 நாள் சாப்பிட்டு
"பலன் பெறுவிடில் பணம் வாபீஸ்" செய்ய உத்திரவாதம் பெற்றதுமான

**காந்தூர் லேகியம்**



பித்தவெட்டை, சோகை, மஞ்சட்காமாலை, பாண்டு, வீக்கம், இரத்தக் குறைவு, கைகால் அசதி, உள்ளங்கை, கால் எரிச்சல், பசியின்மை, தாது பலக்குறைவு, இளமையில் முதுமை போல் தோன்றும் அகால மூப்பு, பிரசவத்திற்குப் பின் ஏற்படும் பலக்குறைவு, கண் ஒளி மங்கல், கண் மாசி பூத்தல் முதலிய வியாதிகளைப் போக்க சாப்பிடுங்கள்.

(20 நாள்) ரூ. 2—8—0 (40 நாள்) ரூ. 4—8—0

தயாரிப்பவர்கள்:

**காந்தூர் லேகியம் டிபோ**

பம்பாய் மதராஸ் கல்கத்தா

ஸோல் ஏஜெண்டு:—இந்தியா, பர்மா, சிலோன், & மலேயா

நயினார்சன் அண்டு கம்பெனி, மதராஸ்

குறிப்பு:—உங்கள் சமீபத்திலுள்ள எங்கள் ஸ்டாக்கிஸ்டுகளிடம் கிடைக்காவிடில் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுமிடம்.

Sole Agents: நயினார்சன் அண்டு கம்பெனி,
198, அங்கப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. மதராஸ்.

மலேயாவில் கிடைக்குமிடம்:—
நவீன கதா வாசக புத்தகசாலை, 40 A சோலியா ஸ்ட்ரீட், பினங்கு.
கொலீஷியம் நியூஸ் ஏஜென்ஸி, 78, பத்து ரோட், கோலாலம்பூர்.
பர்மா, சிலோன், இவ்விடங்களுக்கு ஊக்கமுள்ள ஏஜெண்டுகள் தேவை




### பாத்திரர்

1. சத்ரபதி—சிவாஜி
2. சாம்பாஜி—முதல் மனைவி மைந்தன்
3. ராஜாராம்—மூன்றும் மனைவி பிள்ளை
4. ரகுநாத்—அமைச்சர்
5. துக்காராம்—பாகவதர்
6. ஸமர்த்த குரு—ராமதாஸ்
7. சிஷ்யர், ஜனங்கள், வீரர்

### கதை

சத்ரபதி சிவாஜி சதாராவில் தர்பார் நடத்துகிறார். அமைச்சரும், சேனாபதிகளும் அரசியலைப்பற்றிப் பேசுகிறார்கள். அப்போது ராஜாராம் ஓடிவந்து சாம்பாஜியின் நிலைமையைச் சொல்லுகிறான். சிவாஜி சபையைக் கலைத்துவிட்டு உள்ளே செல்கிறார். சாம்பாஜி கஞ்சாப் போட்டுக் காலிப் பாட்டுப் பாடிக்கொண்டு ராஜாராமை மிரட்டி அகங்கரிக்கிறான். சிவாஜிக்குக் கோபம் வருகிறது. தகப்பனையும் பிள்ளை எதிர்க்கிறான். சிவாஜி வாளை உருவியதும் ஓட்டமெடுக்கிறான்.

குடும்பக் கவலையால் நொந்த சிவாஜி துக்காராமிடம் சங்கீர்த்தனம் கேட்கிறார். அச்சமயம், தெருவில் ராமதாஸ் பிச்சை யெடுக்கிறார். "குருவே அரசு உம்மது. பிச்சை யெடுப்பானேன்?" என்று சிவாஜி சீட்டனுப்புகிறான். "நான் அரசனானால், இதோ நீ பிச்சை யெடு வா......நான் ஆளுகிறேன்" என்று ராமதாஸ் பதில் சொல்லி யனுப்புகிறார். உடனே சிவாஜி எளிய ஆடை பூண்டு, அரசைத் துறந்து, குருவைச் சரண் புகுந்து, அவரது கப்பறையை ஏந்திப் பிச்சை யெடுக்கிறான். ஜனங்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

ஆற்றங்கரையில் ராமதாஸ் சீடர்களுக்கு சிவாஜி பெருமையைச் சொல்லுகிறார். அச்சமயம் சிவாஜி பிக்ஷையை வைத்து வணங்குகிறான். குரு அவனை ஆசீர்வதித்து அரசாள அனுப்புகிறார். முதலில் சிவாஜி மறுக்கிறான். பிறகு ராமதாஸரின் காஷாயக் கொடியை நாட்டி அறங் காக்கிறான். எல்லாரும் சிவாஜியை வாழ்த்துகிறார்கள். ராமதாஸருக்கு குரு பூஜை நடப்பதுடன் காட்சி முடிகிறது.

### முதற் காட்சி

[சிவாஜி, ரகுநாத் முதலியோர்]

எல்லாரும்

பவானி கீதம் பாடுதல்

இராகம்—பியாத தாளம்—ஆதி

["ராம ணாத ஹோ சதா" என்ற மெட்டு.]

பல்லவி

பக்த ரக்ஷணி தாயே...சக்தி பவானி! (பக்தி)

அனுபல்லவி

சக்தி பவானி...துக்க நிவாரிணி (பக்த)

சரணம்

தீரர் வணங்கிடும்...வீர மஹாகாளி...
தேசமெல்லாம் செழிக்கத்
திருவருளாய்—தெய்வத்
திறமருளாய்—தர்ம
ஜய மருளாய்—அம்பா (பக்த)

[எல்லாரும் அமர்தல்]

பூரண மனத் திருப்தியளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

சிவாஜி

ஓம் ஜய பவானி! ஜய சத்குரு!

தரும வீரர்காள், கர்நாடகப் போரில் ஜயக் கொடி நாட்டினேம். நமது சாம்ராஜ்யம் இனித் தடையில்லாமல் ஓங்கும். கைதிகளைக் கௌரவமாக விடுவியுங்கள். போர்ப் பொருளைச் சமமாகக் கொடுத்தோம். வீரர்களுக்குத் திருப்திதானே?

ரகுநாத்

நமஸ்தே மஹராஜ். கைதிகளை மரியாதையுடன் விடுவித்தோம். பலர் தங்கள் குடிகளானர். வீரருக்கெல்லாம் பரம திருப்தி.

சிவாஜி

ரகுநாத், ராமசேனை நமது கட்டளையைச் சரியாகக் காக்கிறதா? அரசில் அமைதி நிலவுகிறதா? சத்ரு பயம் தலை காட்டுகிறதா?

ரகுநாத்

மஹராஜ், தாங்கள் தர்ம ரக்ஷகர். தங்கள் சேனை ராம சேனை. தங்கள் போர் அறப்போர். தங்கள் அரசு தரும ராஜ்யம். தங்கள் வாள் அதர்மக் களையைப் பிடுங்கித் தருமப் பயிரையே வளர்க்கிறது. ராம சேனையின் அம்பு சாதுக்கள்மேல் பட்டதில்லை. எல்லாரும் சுகம் எங்கும் மகிழ்வு.



சிவாஜி

சந்தோஷம். இருந்தாலும் நமது சேனை விழிப்புடன் இருக்க வேண்டும். தர்ம விரோதிகளைத் தகர்க்கவும், சாதுக்களைக் காக்கவுமே பவானிதேவி நம்மைப் படைத்தாள். அறவோர் உறவோர்; அல்லோர் பகைவர். வீரர்காள், பெண்களின் கற்பைக் காக்கவும், பசுக்களைக் காக்கவும், அறத்தைப் போற்றவும் நாம் உயிரைக் கொடுப்போம். அறத்திற்கே அரியணை, அருளுக்கே பொருள்; பொதுநலத்திற்கே உயிர்—இது நமது கொள்கையாகுக.



ரகுநாத்

மஹராஜ், தர்மம்] தங்களாலேயே நிலைநிற்கிறது. தங்கள் பராக்கிரமத்தால் நாட்டில் அமைதி நிலவுகிறது......

சிவாஜி

நாட்டில் அமைதி; ஆனல் வீட்டில்...? மனத்தில்? அமைதி வரவில்லையே......வீரர்காள், மனம் சாந்தமாகக் குரு மந்திரத்தை ஜபிப்போம்......ரகுபதி ராகவ ராஜா ராம்....

எல்லாருடனும்

ரகுபதி ராகவ ராஜா ராம்
பதித பாவன சீதாராம்...

வருதல் ராஜா ராம்

அப்பா, அப்பா, அண்ணா ரகளை பண்ணுகிறன், வாருங்கள்....

சிவாஜி

இதோ குடும்பத்தொல்லை கூவுகிறது. நாளைக் கூடுவோம். வீரர்காள் பவானி கிருபையால் உங்களுக்கு பலம் வளர்க! ஜய பவானி....

[செல்கிறன்]

இரண்டாம் காட்சி

[சாம்பாஜி கஞ்சா அடித்துப் பாடி யாடுகிறன். ராஜாராம் கண்டிக்கிறன்.]

எல். பழநியப்பா'ஸ் பற்பொடி தந்த ரோகங்களை நிவர்த்திக்கிறது

சாம்பாஜி

போடா அம்பிப்பயலே......உதைப்பேன்.

இராகம்—காகரப்ரியா தாளம்—ஆதி

[" இன்பம்பெருகுதென்று
சொல் சொல்,
சொல் கிளியே " என்ற மெட்டு.]

சித்தம் குளிரவொரு முத்தம் கொடுக்கவுடன்
ஜிலு ஜிலு ஜிலு வென்று வா, வா, வா,
கண்ணே
கத்தும் குயிலைப் போலே, காட்டுக் கிளியைப்
போலே,
கட்டின்றி வாழலாம் வா வா வா...மயிலே.

ராஜாராம்

அண்ணு, அப்பா ராமநாமம் பாடுகிருர். இதென்ன காலிப் பாட்டு......அண்ணு தங்கள் நடத்தை தந்தையைப் புண்படுத்துகிறது.

சாம்பாஜி

அண்ணு என்ருல் உதைப்பேன்; நம்மை "மஹராஜ்" என்று கூப்பிடு. அம்பிப் பயலே, நாம் ராஜா. சத்ரபதி சாம்பாஜி பஹதூர். பேசினல் தெரியுமா?

ராஜாராம்

நீ ராஜாவானல், அப்பா பெயரைக் கெடுப்பாய், குடிப்பாய், கற்பழிப்பாய், அறங் கெடுப்பாய்!

சாம்பாஜி

ஹும்! நீ ராஜாவானல்? அப்பனைப் போலே சாமியார்களைக் கட்டி யழுவாயோ?

ராஜாராம்

நான் ராஜாவானல், பொய், சூது, குடி, விபசாரம், திருட்டு, நாத்திகம் இவற்றை ஒழிப்பேன். அன்பையும்அறத்தையும் வளர்ப்பேன். துஷ்டரை அடக்குவேன். சாது ஜனங்களைக் காப்பேன். தந்தையின் புகழைப் போற்றுவேன்.

[சிவாஜி வேகமாக வந்து.]

கண்மணீ ராஜா, நீயே பிள்ளை. உனக்கே அரசு.

சாம்பாஜி

நான் மூத்த பிள்ளை. நமக்கே அரசு...பார்த்துப் பேசும்.

சிவாஜி

பார்த்தேன், கேட்டேன், அறிந்தேன். துஷ்டப்பதரே, நீ எனக்கா பிறக்க வேண்டும்? எனது குலத்திற்குப் புல்லுருவியாக முளைத்தாய். நான் எத்தனையோ போர் செய்தேன். எந்தப் பெண்ணும் என் அரசில் கற்பழியச் சகியேன். போரில் கைதியான இஸ்லாமியப் பெண்களையும், பெற்ற தாய்போல் பாவித்துக் கணவரிடம் சேர்த்தேன். எனக்குப் பிறந்த, நீ கற்பழிக்கிருய். கஞ்சா குடிக்கிருய்; தத்தாறிப்பாட்டுப் பாடித் திரிகிருய்...அகம்பாவம் பிடித்தலைகிருய்; முன்னே நிற்காதே; போ வெளியே....

சாம்பாஜி

வயதானவர்கள் போகட்டும்.........தெய்வப் பித்தர் சாமியார்களுடன் வாழட்டும். நாம் இஷ்டப்படி இருப்போம். சுகிப்போம், நடப்போம், களிப்போம். நம்மை யார் கேட்பது ...?

ஜிலு ஜிலு ஜிலு வென்று வா வா
சித்தம் குளிர முத்தம் தா தா

சிவாஜி

என்ன ராங்கி, என்ன அகம்பாவம்......நான் இரத்தம் சிந்திக் காத்த அறத்தை அழிக்க வந்தானே பாபி. தாயில்லாப் பிள்ளையென்று செல்லங் கொடுத்தது பிசகு. அட, இந்தச் சிறுவன் எவ்வளவு புத்திசாலியா யிருக்கிறுன் பார். அவனைப் பார்த்தாவது நடடா...

சாம்பாஜி

நாம் ராஜா...இந்த விசுக்கான் சேவகன்...... அவனே நம்மைப் பார்த்து நடக்கவேண்டும்.

சிவாஜி

நான் இருக்கும்போதா இப்படிப் பேசுவது? மனிதனைவன் தருமத்தைக் காக்கவேண்டும், அதர்மத்தை நீக்க வேண்டும். பெண்களைத் தாயாக வணங்க வேண்டும். பக்தி பரோபகாரம்—இரண்டே வாழ்வின் நோக்கம்...

சாம்பாஜி

குஷியாயிருப்பதே எனது நோக்கம்...தருமமாம், கற்பாம், துறவாம்......எல்லாம் வேஷம்.

ராஜாராம்

என்ன அண்ணு அப்பாவை எதிர்க்கிருய்? நல்லதுதானே சொல்லுகிருர்.

சாம்பாஜி

அட பயலே, கோள்சொல்லிப் பயலே...... குறுக்கே வராதே......உதைப்பேன்....

[அடிக்கப் போகிருன்]

சிவாஜி

துஷ்டா, நில் அப்படி. ஆயிரக்கணக்கான அதர்மப் பதர்களை அறுத்தெறிந்த இந்த வாளால் ......உன்னையும்......

[ஓங்குதல்]

டாக்டர்கள் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

ராஜாராம்

வேண்டாம் அப்பா......அண்ணு ஓடிப்போ... ஓடு ஓடு.

சாம்பாஜி

ஜிலு ஜிலு ஜிலுவென்று வா வா......

[பாடிக்கொண்டே ஓடுகிருன்]

சிவாஜி

ஆ, கோர சம்சாரம். கவலே, கவலே. போர்



வீரம் மனத்தை வெல்ல முடியவில்லேயே...... வீட்டுக் கவலே, நாட்டுக் கவலேயில்லாமல், ஒரு நொடியாவது சாது சங்கத்தில் இருக்க மாட்டேனு.

[வருதல், துக்காராம் பாகவதர்]

துக்காராம் பாகவதர் வரவேண்டும்...நினேத்தேன். எனது கவலே கரைய ஒரு கீர்த்தனம் பாடுங்கள்.

துக்காராம்

சித்தம் மஹராஜ்.

இராகம்—பியாகடை தாளம்—சாப்பு

பல்லவி

சுகமெது சொல் மனமே—நித்திய மான
சுகமெது சொல் மனமே...

அனுபல்லவி

சகம்சுகம் என்கின்ற சஞ்சல மாயையோ
தாரக மாகிய ஸ்ரீ ராம சேவையோ (சுகம்)

ராஜாராம் [ஓடிவந்து]

அப்பா, ராமதாஸ் சுவாமிகள் தெருவில் பிக்ஷை யெடுத்து வருகிருர்.

சிவாஜி

ஆ குருநாதா, அரசு உமதே. பிச்சை யெடுப்பானேன்? எனது வெற்றி தங்கள் பிச்சையே...ராஜாராம் இந்தக் கடிதத்தை ரகுநாத் மூலம் குருமஹராஜருக்கு உடனே அனுப்பு. சுவாமிகளேக் கையோடு அழைத்துவரச் சொல்லு.

ராஜாராம்

இதோ; நானும் சுவாமிகளே நமஸ்கரிக்கச் செல்கிறேன்.

[போதல்]

சிவாஜி

நினேத்ததும் குருதேவர் வந்தார். துக்காராம் சரணம் பாடி முடியும். ஆறுதலா யிருக்கிறது ...தியாகமே சுகம்......

துக்காராம்

கனதனச் சோம்பலால் மனதமைதிசேருமோ?
கழுதைக்குப் பொதியேந்திக் கால்வலி
தீருமோ?
எனதுன தெனப் போர் செய் குணதொந்த
விகாரமோ
என்றும் நிலேயான ராம சாக்ஷாத்காரமோ
(சுக)

பற்போடிகளில் சிறந்தது பழநியப்பா'ஸ் பற்போடி ஒன்றே

வருதல் ரகுநாத்

"அரசு என்னதானல் உடனே வந்து கப்பறையை வாங்கிப் பிக்ஷை யெடுக்கட்டுமே" என்று குருதேவர் அருளினர்....

சிவாஜி

அஹோ பாக்யம்!! இதோ புறப்படுகிறேன். ஒழிக பந்தம்!

ரகுநாத்

அரசே, குருதேவர் சோதனைக்காகச் சொல்லியிருக்கிருர். தாங்கள் ஒடேந்தினல் பகைவர் பழிப்பர். தாங்கள் அரசை நீத்தால் காவலில்லாத் தோட்டம்போல நாடு கொள்ளைபோகும்.

சிவாஜி

அரசினும் அறம் பெரிது. அதனினும் குருமொழி பெரிது.... தடை செய்யாதீர்கள். குருதேவர் இனி அரசர், அவரைப் போற்றிப் பணியுங்கள். அவர் திருவடியே எனது திருமுடி. அவர் பாதசேவையே எனது வாழ்க்கை...
சத்குரோ பாஹி.

[செல்கிருன்]

மூன்ருங் காட்சி

[சமர்த்தகுரு ராமதாஸர் சிஷ்யர்களுடன் பஜனை செய்து பிக்ஷையெடுத்து வருதல்]

ராமதாஸர், சீடர்

["சுந்தரதே த்யானே" என்ற அபங்கம்போல் பாடுக]

ஸ்ரீ ஜய ராம தாரக மந்த்ரம்
ஜபியுங்கள் எல்லாரும், பலவினை தீரவே (ஸ்ரீ)
அன்பரைக் காத்திடும்; அரக்கரை அழித்திடும்;
துன்பத்தைத் தீர்த்திடும்; சுகத்தைக் கொடுத்திடும் (ஸ்ரீ)
சஞ்சலப் பேய்களைச் சவுக்கடி யடித்திடும்.
அஞ்சலி யளித்திடும் அச்சம் ஒழித்திடும் (ஸ்ரீ)

[சிவாஜி ஆவேசமாக வந்து அடிபணிந்து]

குருமஹராஜ் குரு ஜய பரப்ரம்மசத் குரு
குரு மஹராஜ் குரு ஜய பரப்ரம்மசத் குரு...

ராமதாஸ்

பக்த சிவாஜி, எழுந்திரு. நீடு வாழ்! அறத்தைப் போற்று! உலகைக் காப்பாற்று...

சிவாஜி

குருதேவ...என்னை நான் காப்பாற்ற முடியவில்லையே. உலகை எப்படிக் காப்பது? எனது ஆத்ம தருமத்தைக் காக்காமல் தேச தருமத்தை எப்படிக் காப்பேன்? அகமடங்காமல் ஜகமடங்காதே. உலகைப் பார்த்துச் சலித்தேன். குருநாதா. இனி இறைவனைக் காண வேண்டும். உலகச் சுழலில் சிக்கித் தவித்தேன். மகுடத்தின் சுமையால் நலிந்தேன். முன் இரண்டு முறை துறவு பூண எழுந்தேன், தமது ஆணை தடுத்தது. குருநாதா, இன்று என்னை விடுவித்தீர்...தேவரீர் அரசாளுக. தமது பாதசேவையே எனக்குப் போதும்.

ராமதாஸ்

அப்படியானல் இந்தா கப்பறை......எடு பிச்சை... நாம் இருக்குமிடம் தேடிக்கொண்டு வா. பிறகு மற்றதை யோசிப்போம்.

சிவாஜி

இந்தக் கமண்டலம் பிரம்ம கபாலம்போல் என்னிடம் எப்போதும் இருக்கட்டும். குருதேவா, இதோ பிக்ஷைக்குச் செல்கிறேன்.

ராமதாஸர்

அன்ப, சென்று விரைவாக வா. பக்தர்காள், நாம் அரசாளச் செல்வோம். அரசர் பிச்சை எடுத்து வருவார்.

எல்லாரும்

ரகுபதி ராகவ ராஜாராம்
பதித பாவன சீதாராம்.

[செல்லல்]

நான்காம் காட்சி

[சிவாஜி பிச்சை யெடுத்து வருகிருன். ஜனங்கள் பயபக்தியுடன் பிக்ஷைபோட்டு வணங்குதல்]

ஜனங்கள்

1. என்ன அதிசயம்...என்ன துறவு. நேற்று அரசாண்ட சிவாஜி இன்று ஆண்டியானரே...

2. அரசை ஆண்டிக்குக் கொடுத்தாரே...... வாள்வீரன் காத்த நாட்டை யோகதண்டமா காக்கப் போகிறது? சாமியார் பாட்டுக்கு தியானத்தில் உட்காருவார். நாடு கொள்ளை போகும் ...அதுவும் ராமன் இச்சை யென்பார்.

3. அவர் அப்படி ஏமாளித் துறவியல்லர். அவர் சிவாஜியை ஆக்கிய தீரர். ராமதாஸ போதத்தைப் பார்த்தால் இப்படிப் பேசமாட்டீர்.

4. இதெல்லாம் ராமதாஸ் திருவிளையாடல் அவர் ஒருக்காலும் சிம்மாஸனத்தில் உட்காரமாட்டார். நமது மகாராஜாவையும் ஆண்டியாக்கமாட்டார்...பாரும் முடிவில்.

மனிதற்கு உற்சாகம் அளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

5. எப்படியோ அரசர் பிச்சைக்கு வருகிறார். லட்டு லாடு ஜிலேபி யெல்லாம் கப்பறை நிரம்பப் போடுவோம்.

6. அதெல்லாம் வாங்கமாட்டார் சிவாஜி சாமி யார். வைராக்கியம் முற்றிப்போனது. பிடி சாதம் போதும் என்பார்... இதோ வருகிறார்.

[வருதல் சிவாஜி]

[சுந்தரதே த்யான என்ற அபங்க மெட்டுப் போல் பாடுக]

சமர்த்த குரு ராம தாஸரின் தாஸன்...
சத்ரபதி சிவாஜி சத்ஜன நேசன்...

ஜனங்கள்

மஹாராஜ், கண்ணீரை அடக்க முடியவில்லையே. எங்கள் உடல் பொருள் ஆவி யெல்லாம் தாங்கள் கொடுத்த பிச்சைதாம். இந்த உலகையே தங்கள் கப்பறையில் தூக்கி வைத்தாலும் தங்கள் உதவிக்கு ஈடாகாது.

சிவாஜி

புகழாதீர். நான் குருதாஸன். அவர் பெருமையால் ஏதோ நடந்தது. இனி அவரையே அரசனாகப் பணியுங்கள்.

அரசினைத் துறந்தேன்; ஐயம் புகுந்தேன்;
சிரசினில் குருபாத சேவையை அணிந்தேன்
(சமர்த்த)
கத்தி பிடித்த கையால், கப்பறை பிடித்தேன்
சித்தத்தில் ஸ்ரீராம பக்தியை வைத்தேன்...
(சமர்த்த)
போகபோக் கியங்களைப் பொய்யென நீத்தேன்;
யோக சாம்ராஜ்யத்தின் உண்மையை மதித்தேன் (சமர்த்த)
[செல்லல்]

ஜனங்கள்

என்ன அற்புதமான துறவு.........சத்ரபதி ஸ்வாமி சிவாஜி மஹாராஜ்கி ஜேய்! [செல்லல்]

ஐந்தாம் காட்சி

[ராமதாஸ் கோஷ்டியுடன் பஜனை செய்து ஆற்றோரம் சிவாஜியை எதிர்பார்க்கிறார்]

இராகம்—காபி தாளம்—ஏகத்ரிசிர

"ஜோர்ஜோரே ஜோலமைன" என்ற மெட்டு

பல்லவி

ஓம் ராம ராம வென்றே
உள்ளம் ஒன்றி ஓதுவோம்!

அனுபல்லவி

தாமஸ இருள் விலக
ஸத்ய ஜோதி
சித்தி பொலிய (ஓம்)

சரணம்

கள்ளமற்ற காத லர்க்குக்
கருணைவாள் அமுதமாம்
உள்ளம் இன்பவெள்ள மாகும்.
உரைக்க வுரைக்கப்
பிறக்கும் ஞானம்
ஓம் ராம, ராம வென்றென்
உள்ளம் ஒன்றி ஓதுவாம்

வருதல் சிவாஜி

குரு ப்ரஹ்மா, குரு விஷ்ணு,
குருதேவோ மஹேஸ்வர!
குருசாக்ஷாத் பரப்ரஹ்ம
தஸ்மைஸ்ரீ குருவேநம:
[பிக்ஷையை வைத்து வணங்குகிறான்]

ராமதாஸ்

அன்பா, சிவாஜி, புனிதனை! உனது கையால் எடுத்த பிக்ஷை தேவாமிருதமாகும்.

சிவாஜி

குருநாதா, இந்த இன்பத்தைத் தினம் அருள வேண்டும். தாங்கள் அரியணை யிருங்கள். எனக்கு ஜபமாலை போதும்.

ராமதாஸ்

தீரனே உன்னைப்போன்றவர் ஜபமாலை பிடிக்கும் காலம் அல்ல. இது வாளேந்தி அறத்தைக் காக்கும் காலம். எனது ஜபத்தால் வந்த சக்தியை உனக்குக் கொடுத்தேன். நீ இந்த யுக வீரன். அப்பனே, சிவாஜி, செல், அறத்தையும், அரசையும் காப்பாற்று. நாட்டில் வீரக்கனலைப் பெருக்கு.

சிவாஜி

குருநாதா இறக்கிய சுமையை ஏற்றிவைக்கலாமா? ராம சுகத்தைக் கண்ட மனம், காம சுகத்தை விரும்புமா? யோக சாம்ராஜ்யத்தைக் கண்ட பின் போக சாம்ராஜ்யம் இனிக்குமா? கட்டி மாம்பழம் உண்டவனுக்கு எட்டிக்காய் பிடிக்குமா? குடும்பம் பிடிக்கவில்லை; என் மகனே எனக்கு அடங்கவில்லை.........சஞ்சலம் சஞ்சலம்! குருநாதா, அரசு வாளால் வந்தது, வாளால் போகும். இந்த உடலே நாளை வீழும். அதற்குமுன் உடலெடுத்த பயனை நான் அடைய வேண்டுமே, யோகசித்தி பெறவேண்டுமே.

சுதேசி பற்பொடிகளில் சிறந்தது கண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

ராமதாஸ்

சிவாஜி, நீயே யோகி, நீ போகி, நீயே கீதையின் வீரன். பலனில் பற்றில்லாமல் ஆண்டவன் பணியைச் செய்வதே கீதாசாரம். ஆண்டவன் இந்த நாட்டையும் அறத்தையும் காக்கும் பணியை உனக்கீந்தான். செல். வீரனே வேதாந்தச் சோர்வு உனக்கேன்? ஜனங்கள் அஞ்சி நடுங்கி துக்க சாகரத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். ராமனும் பவானியும் உன் துணையாவார். செல் வீரா, அச்சந்தீர், அறஞ் செய், இருளை விலக்கு, துயரை நீக்கு, அதர்மத்தை அழி. தர்மத்தைப் போற்று......நாடு முழுதும் உன்னை நம்பி யிருக்கிறது. கவலைப்படாதே. அன்பா சாம்பாஜியை நாம் திருத்துவோம்...... காட்டுத் தவம் நமக்கு.........நாட்டுத் தவம் உனக்கு.

[காலை கழிந்தது]

சிவாஜி

குருமஹராஜ், தாங்கள் அரியணை வீற்றிருங்கள். தங்கள் பாதசேவகனுக இட்ட கட்டளை செய்கிறேன்.

ராமதாஸ்

அன்பா, உனக்கு அது இடம். எமக்கு இது இடம். நான் எப்போதும் உன் பக்கத்தில் இருப்பதாக நினை. அரசாள், போ.

சிவாஜி

தங்களையே அரசனுக மதிப்பேன்.........நான் தாஸன். அதற்கு ஒரு அடையாளம் வேண்டும்.

ராமதாஸ்

அன்பா, நமது காஷாயக் கொடியை நாட்டு. அதன் கீழ் ஆண்டுவா. நாடெங்கும் ராம பக்தியைப் பரப்பு. ராமதாஸனை ஹனுமான்போல் உனது வீரரை ஆக்கு. அதுவே எனது வேண்டுகோள்.

சிவாஜி

அப்படியே செய்கிறேன். குருதேவ தங்களுக்குப் பாதபூஜை செய்து தங்கள் கையால் செங்கோல் பெற வேண்டுகிறேன். எழுந்தருளுக.

ராமதாஸ்

அப்படியே ஆகட்டும்.

[பக்தர்கள் முன் கீர்த்தனத்தைப் பாடல்]

[எல்லாரும் செல்லல்]

ஆறுங் காட்சி

[தர்பார் மண்டபம். ஜனங்கள் சந்தோஷமாக சிவாஜியை வரவேற்கின்றனர்.]

ஜனங்கள்

சிவாஜி சத்ரபதி நீடூழி வாழ்க!

சிவாஜி

மஹாஜனங்காள், இன்றுமுதல் குருநாதரின் காஷாயக்கொடிக் கீழ் நாம் வாழ்வோம். அவரே அரசர் நாம் அவர் குடிகள். குருதேவா, எனது கவலையைத் தீர்த்தீர். எனது முரட்டு மகனைத் திருத்தினீர்; வழிகாட்டினீர். துணை வந்தீர். கீதா தர்மத்தை விளக்கினீர். தங்கள் சேவகனுகை இந்த அரியணையிலிருந்து ஜன சேவை செய்வேன்...மஹாஜனங்காள், எம்மை யாட்கொண்ட பரமகுருவை வணங்கி ஹாரதி யெடுப்போம்.

எல்லாரும்

[நாதவிந்துகலாதி நமோநம மெட்டு]

பூர ணானந்த வாரீ நமோ நம
  போத சத்குரு நாதா நமோ நம.
பாரெ லாம்புகழ் பாதா நமோ நம— அரு
                ளாளா...
தீர ஞானப்ரகாசா நமோ நம
  திவ்ய ஜீவன நேசா நமோ நம.
ராம நாமப்ரபோதா நமோ நம—பரசூரா...
நித்ய மங்களப்ரசன்ன நமோ நம
  நிர்வி கல்பசுக போகா நமோ நம.
சக்தி குண்டலி சமேதா நமோ நம—தவ
                ராஜா...
பக்தசங்க பரி பாலா நமோ நம
  பரம ஹம்ஸகுரு நாதா நமோ நம.
பாஹி பாஹி பரமாத்மா நமோ நம—பக
                வானே...

ஓம் ஜய பவானி மாதாகீ ஜேய்
சத்குரு ராமதாஸ் மஹராஜ்கீ ஜேய்
தர்ம வீரதீர சத்ரபதி சிவாஜி மஹராஜ்கீ ஜேய்!

நாடகம் முடிந்தது.

"இந்திரா" இனிமையான மாதப் பதிப்பு
நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டீர்களா?

Supplement to INDIRA issue dated 1-10-41




லால்குடி ஜி. சதாசிவம்

காதலாவது கத்தரிக்காயாவது என்று சொன்னவர்களில் நானும் ஒருவன்தான். நான் நூற்றுக்கணக்கான காதல் கதைகளைப் படித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் எனக்கு, 'காதலென்பதெல்லாம் கதையளவில்தான். வாழ்க்கையில் காதல் என்பது கிடையாதென்றே' தோன்றும். ஆனால் நமது வாழ்க்கையில் காதல் உண்டு என்பதை நிரூபிக்க நான் யாருடனும் இப்போது வாதாடத் தயாராயிருக்கிறேன். என்னை இப்படித் திடீரென்று காதலில் நம்பிக்கை வைக்கும்படி செய்தது என் நண்பன் சாம்பசிவமே; இல்லை அவனுக்கு ஏற்பட்ட சம்பவமே.

அன்று ஒரு நாள் நான் எல்லா பத்திரிகைகளும் சிறந்த படமெனப் புகழ்ந்த ஒரு படத்தைப் பார்க்கப் போயிருந்தேன். நான் வெகு நாட்களாகப் பிரிந்திருந்த என் நண்பன் சாம்பசிவத்தை அன்று கொட்டகையில் சந்தித்தது எனக்கு அளவிலாத மகிழ்ச்சியளித்தது. படம் ஆரம்பிக்கப் போவதற்கு அறிகுறியாக மணியடிக்கப்படவே நாங்கள் கொட்டகைக்குள் நுழைந்துவிட்டோம். உலகத்தில் எட்டாவது அதிசயமோவென சந்தேகிக்கும்படி எல்லா பத்திரிகைகளும் ஒரே மாதிரி அபிப்பிராயம் கொடுத்ததுபோல படம் முதல்தரமாயிருந்தபடியால் எங்கள் கவனம் முழுவதும் படத்திலேயேயிருந்தது.

படம் முடிந்து நானும் நண்பனும் வீட்டுக்குக் கிளம்பினோம். நான் என் நண்பனை என் வீட்டுக்கு வரும்படி அழைக்கவே இருவரும் என் வீட்டுக்குக் கிளம்பினோம். நாங்கள் அன்று பார்த்த படத்தின் கதை வருமாறு:—

ஒரு வாலிபனை இரு பெண்கள் காதலிக்கின்றனர். அவர்களில் ஒருவள் விதவை. அந்த வாலிபன் விதவையைத்தான் காதலிக்கிறான். இது தெரிந்த மற்றவள் தனது உண்மைக் காதலின் அடையாளமாகத் தனது காதலனின் சுகத்திற்காகத் தன்னைத் தியாகம் செய்து கொள்கிறாள்.

நாங்கள் சிறிது தூரம் மௌனமாகவே வந்தோம். திடீரென்று சாம்பசிவம்,

"படம் எப்படி? உன் அபிப்பிராயம் என்ன?" என்று என் மௌனத்தைக் கலைத்தான்.

கண்ணருவிப் படங்களைப் பார்த்துச் சலித்துப் போயிருந்த எனக்கு அன்று முதல்தரமான படத்தைப் பார்த்ததில் ஏற்பட்ட சந்தோஷத்தை வெளியிட்டேன்.

"ஆனால் சாம்பசிவம், படமென்னவோ, நடிப்பு பாட்டு, விஷயங்களில் முதல் தரமே. ஆனால் கதை நடக்கக்கூடியதல்ல. காதலென்பதெல்லாம் கதையளவில்தானென்று நிச்சயமாகத் தோன்றுகிறது. அப்படியேயிருந்தாலும் இந்த உலகத்தில் ஒருவருடைய சுகத்துக்காக மற்றவர் உயிரையே தியாகம் செய்வதென்பது கிடையாது. இதுபோல சம்பவம் நமது வாழ்க்கையில் என்றுமே நடந்தது கிடையாது. நடக்கப்போவது மில்லை.'

நான் இப்படிக் கூறினது அவனது மனதைத் துன்புறுத்தியிருக்கவேண்டும். அவனது கண்கள் அதை வெளியிட்டன. அவன் பேச முடியாதபடி துக்கம் அவன் நெஞ்சை அடைத்தது. "நண்பா நீ நினைப்பது தவறு. நமது வாழ்க்கையில் காதலென்பது கட்டாயம் இருக்கிறது. நாம் படத்தில் பார்த்ததைப் போன்ற ஒரு சம்பவம் எனக்குத் தெரிந்தே ஒன்று நடந்திருக்கிறது.

இன்ப மூட்டுவது எல். பழநியப்பா'ஸ் பற்டோடி ஒன்றே

நாம் பார்த்த படத்திலாவது தனக்கு சிநேகிதியான ஒருவளுக்காக மற்றவள் தன் உயிரைத் தியாகம் செய்கிறாள். ஆனால் நான் கூறும் சம்பவத்தில் தனக்கு முன்பின் தெரியாத ஒரு பெண்ணுக்காக மற்றவள் தியாகம் செய்தாள்.

“மிஸ்டர். சாம்பசிவம், நீ சொன்னால் அதை நான் நம்புகிறேன். நீ குறிப்பிட்ட அப்படிப்பட்ட சம்பவத்தைப்பற்றி நான் அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.”

“நான் உனக்குக் கட்டாயம் அந்தச் சம்பவத்தைப்பற்றிக் கூறுகிறேன். ஆனால் இப்போது சொல்ல முடியாமைக்கு வருந்துகிறேன். நான் இப்படியே என் வீட்டுக்குப் போகிறேன். நாளைக் காலை கட்டாயம் என் வீட்டுக்கு வா” என்று கூறிவிட்டு எதிர்த்தாற்போல வந்த மைலாப்பூர் டிராமில் ஏறிவிட்டான்.

என் நண்பனது மைலாப்பூர் விலாஸம் எழுதிய சீட்டு என் கையில் கிடந்தது. அவன் மனதை ஏதோ துன்புறுத்தி விட்டோமே என்று என்னை நொந்துகொண்டேன்.



ஜி. சதாசிவம்

## II

மறுநாள் நான் மைலாப்பூரிலுள்ள என் நண்பன் சாம்பசிவத்தின் வீட்டை யடைந்தேன். சாம்பசிவம் என்னை ஆவலோடு எதிர்பார்த்து வாசலிலேயே காத்துக்கொண் டிருந்தான். அவன் வீட்டின் ஹாலை யடைந்ததும் எனது கண்களில் முதன் முதல் தென்பட்டது ஒரு படம்தான். அது ஒரு பெண்மணியினுடைய போட்டோ. சுற்றி பூக்களால் அலங்கரிக்கப்பட்டு ஒரு அழகிய ‘ஸ்டாண்டின்’ மீது அது வைக்கப்பட்டிருந்தது. அப்படத்திலுள்ள மங்கை யாரென்று கேட்க என் நாத் துடித்தது. அதை யறிந்துகொண்டவன்போல சாம்பசிவமே பேச ஆரம்பித்தான்.

“நீ இங்கே முதன் முதலில் பார்த்தது அந்தப் போட்டோதானே? அது யாரென்று அறிய நீ ஆசைப்படுவது இயற்கையே. அப்படத்திலுள்ள மங்கைதான் என் **பேசுந் தெய்வம்**”

என் நண்பன் இப்படிக் கூறியது, அவனுக்கு புத்திமாராட்டமோ வென்று சந்தேக முண்டாக்கிற்று. ஒரு யுவதியின் போட்டோவைப் பார்த்து ஒரு வாலிபன் தெய்வமென்று புகழ்ந்தால் புத்திமாராட்டமோ வென்று சந்தேகப் படாமலென்ன செய்கிறது?

“எல்லோரையும் போலவே நீயும் என்னைப் பைத்திய மென்றே யெண்ணக்கூடும். ஆனால் என் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவத்தைத் தெரிந்துகொண்டால் உன் தவறை நீ உணரக் கூடும்.”

“அதென்னப்பா அப்படிப்பட்ட சம்பவம்?”

“நேற்று நாம் பார்த்ததுபோன்ற சம்பவம் வாழ்க்கையில் நடைபெற்றிருப்பதாகச் சொன்னேனல்லவா? அந்த சம்பவம் எனது வாழ்க்கையில்தான் நடைபெற்றது.”

சாம்பசிவம் அப்படிச் சொன்னதும் என்னைத் திடுக்கிடச் செய்தது. அவன் போட்டோவைப் பார்த்து பேசுந் தெய்வமென்று சொன்னதில் ஏதோ உண்மையிருக்க வேண்டுமென்று எனக்கு நிச்சயப்பட்டது. எனக்கு அந்த சம்பவத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றிருந்த ஆவல் அதிகரித்தது.

“நண்பா! உனக்கு என் வாழ்க்கையில் நேரிட்ட சம்பவத்தைப்பற்றி அறிந்துகொள்ள ஆவலிருப்பது இயற்கையே. உனது ஆசையைப் பூர்த்தி செய்கிறேன்.” என்று கூறித் தனது வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவத்தை வெளியிட்டான்:

மூன்றாம் வருஷந்தான் நான் பி. ஏ. பரீட்சையில் தேறினேன். அந்த சமயம் என் பெற்றோர்கள் மிகவும் கஷ்ட திசையிலிருந்தார்கள். தங்களால் முடிந்த வரையில் கஷ்டப்பட்டு என்னை பி. ஏ. படிக்க வைத்து விட்டு எனக்கு ஒரு வேலைகிடைத்து, நான் சம்பாதிப்பதை ஆவலோடு எதிர் பார்த்திருந்தார்கள். நானும் வேலைக்காகப் படாத கஷ்டமெல்லாம் பட்டேன். ஏறாத ஆபீஸ் கிடையாது. நுழையாத ஆபீஸர் வீடு கிடையாது. அலைச்சல்தான் மிச்சம். அந்த சமயத்தில்தான் முல்லைக்குடியிலிருக்கும் என் பாட்டியிட மிருந்து கடிதம் வந்தது. தனக்குக் கடைசிகாலம் கிட்டிவிட்டதாகவும், என்னைப் பார்க்க ஆசையாயிருப்பதாயும் எழுதியிருந்தாள். நானும் பாட்டியைப் பார்க்கக் கிளம்பினேன்.

கண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்பொடி அநேக டாக்டர்களால் நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது

முல்லக்குடியில்தான் என் வாழ்க்கையில் முக்கிய சம்பவம் நடந்தது. காலை 5-30 மணி வண்டிக்கு முல்லக்குடி போய்ச் சேர்ந்தேன். நான் வீட்டுக்குள் போகும்போது எதேச்சையாக என் பார்வை எதிர்த்த வீட்டில் விழுந்தது. அப்போதுதான் என் பேசும் தெய்வத்தை முதன் முதலில் கண்டேன். அவள் கோலம் போட்டுக்கொண்டிருந்த காக்ஷி இதோ இன்னும் என் கண்முன் நிற்கிறது. பாட்டிக்குப் பேரனைக் கண்டதில் சந்தோஷம். ஆனால் பேரனுக்கோ பாட்டியைக் கண்டதைவிடத் தனது உள்ளத்தைக் கவர்ந்துவிட்ட மங்கையைக் கண்டதில் மகிழ்ச்சி.

நான் முல்லக்குடி எல்லையை மிதித்தது, அதுதான் முதல் முறை; அதுவே கடைசி முறை. எனக்கு அவ்வூரில் யாரையுமே தெரியாது. என் பாட்டி வீடு அந்த ஊரிலேயே சிறிதானாலும் பிரசித்தம். அப்பளம் அலமேலுப் பாட்டி ஊரில் பிரசித்தமா யிருப்பதில் ஆச்சரியமென்ன. அது மட்டுமில்லை. அந்த முல்லக்குடி சுற்று வட்டாரத்திலேயே என் பாட்டிதான், வைத்தியன், 'நர்ஸ்' எல்லாம். எங்கள் வீட்டுக்கு எதிர் வீடு 'மச்சு' வீடு. அது ஊரார் கொடுத்த காரணப் பெயர். நான் அன்று மத்தியானமே அடுத்த வீட்டு அம்பிப் பயலை சிநேகம் பிடித்துக்கொண்டேன். அவனும் 'பட்டணத்து மாமா' என்று என்னிடம் ஒட்டுதலா யிருந்தான். அவன் என்னிடம் ஒட்டுதலா யிருந்ததற்குக் காரணம் நான் முழுசாக அவனுக்குக் காலணா கொடுத்ததே. அவனிடமிருந்து, முல்லக்குடி சமாசாரங்களை முக்கியமாக 'மச்சு' வீட்டு சமாசாரங்களைத் தெரிந்துகொண்டேன். முல்லக்குடி கிராமத்திலேயே 'மச்சு வீட்டு' ராமச்சந்திர அய்யர் தான் பெரிய பணக்காரர். அவருக்கு அந்த ஓரே பெண்—ஜானகி—தான். அவளுக்குப் பெரிய பெரிய இடங்களிலிருந் தெல்லாம் ஜாதகங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு விஷயங்களையும் தெரிந்துகொண்ட பிறகுதான், இந்த 'குச்சுவீட்டு' சாம்பசிவம், அந்த 'மச்சு வீட்டு' ஜானகியை அடைய ஆசைப்படுவது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போலாகுமென்று தீர்மானித்தேன்.

அன்று வெள்ளிக்கிழமை யாகையால் அம்பிப் பயலுடன் கோவிலுக்குப் புறப்பட்டேன். முல்லக்குடி கிராமம் சிறிதே ஒழிய அங்குள்ள சப்தரிஷீஸ்வரர் ஆலயம் மிகப்பெரிதே. எல்லா ஸ்வாமிகளையும் தரிசித்து விட்டு—அம்பாள்—பெருந் துருவின் சந்நிதிக்கு வந்தேன். அம்பிப் பயல் என்னை அங்கே விட்டுவிட்டு எங்கேயோ ஓடி விட்டான். நான் கண்களை மூடி ஆழ்ந்த பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தேன். "மாணிக்க வீணாம்" என்ற ஸ்லோகத்தை ரொம்ப உருக்கமாகச் சொல்வதைக் கேட்டு என் கண்களைத் திறந்தேன். நண்பா! தெய்வ சந்நிதியில் அந்த ஸ்லோகத்தை உருக்கமாகப் பாடின மச்சுவீட்டு ஜானகியின் கண்கள் என் கண்களுடன் பேசிக்கொண்டன. எங்கள் தெய்வீகக் காதல் தெய்வ சந்நிதானத்தில் ஏற்பட்டது. ஸ்லோகம் முடிந்ததும், என் அமைதியான மனத்தை 'காதல்' என்ற கல்லை யெறிந்து கலக்கிய ஜானகி, "அம்பா, தாயே உன் கிருபை என்மீது யிருக்குமா? என் மனதிலுள்ள எண்ணம் ஈடேறுமா?" என்று வாய்விட்டுக் கூறியது என்னை மயிர் சிலிர்க்கச் செய்தது. அந்தப் பிரார்த்தனையும் முடிந்த பிறகு அவள் என்னைப் பார்த்த பார்வை! அதில்தான் எவ்வளவு அர்த்தம். இதற்குள் அம்மன் சன்னிதானத்தில் வேறு சிலர் வரவே தன்கூட வரும் சிறு பெண்ணிடம் ஜானகி, "நான் நித்தியம் கோவிலுக்கு வருவேனே" என்று என் காது கேட்கும்படி சொல்லிக்கொண்டே போனாள். அவள் தினம் கோவிலுக்கு வருவது அந்தச் சிறு பெண்ணுக்கா தெரியாது. எனக்காக அல்லவா அந்த வார்த்தை. அவள் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது போலவே நானும் அவளது உள்ளத்தைக் கவர்ந்துவிட்டேன் என்பது தெரியவில்லையா?

## III

மறுநாள்முதல் பிரதிதினமும் ஜானகி கையில் எண்ணெய்க் கிண்ணத்துடன் கோவிலுக்குக் கிளம்பினவுடன் என்னை யறியாமல் ஒரு சக்தி தூண்ட நானும் கிளம்பிவிடுவேன். முதலில் சில தினங்கள் எங்கள் கண்கள் மட்டுமே பேசிக்கொண்டன. சில தினங்களுக்குப் பின் எங்களது உள்ளங்களில் சங்கோஜம் என்ற சங்கிலியில் கட்டப்பட்டுக் கிடந்த காதலை வெளியிட்டுக் கொண்டோம். நாங்கள் முதல் தடவை ஒருவருடன் ஒருவர் பேசியது இன்று நடந்ததுபோலிருக்கிறது. நான் மகா ஏழை யென்றும் அவள் என்னை அடைய ஆசைப்படுவது மூடத்தனமென்றும் வற்புறுத்திக் கூறினேன். ஆனால் அதன் பலன், தனக்கு வேண்டியது என்னுடைய பரிசுத்தமான காதலென்றும், மணந்தால் என்னை மணப்பதென்றும் இல்லாவிடில் உயிரை விட்டு விடுவதாகவும் அம்மன் சன்னதியில் என் கையில் அடித்து சத்தியம் செய்துவிட்டாள். நண்பா! அவள் என் இரு கரங்களையும் தன் கரங்களில் கோர்த்துக்கொண்டு என்னை அன்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள். நான் அவளுக்கு எங்கள் காதலிலுள்ள இடைஞ்சல்களை எடுத்துச் சொல்லி நாம் கணவனும் மனைவியுமாவது இந்த ஜன்மத்திலில்லை என்றேன். அதே சமயம் ஆம் என்பதுபோல எங்கோ மணி அடித்தது. பலர்

பற்களை உறுதி பெறச் செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

சந்நிதிக்குள் நுழைந்தனர். நாங்கள் இருந்த நிலையையும் பார்த்துவிட்டார்கள். உடனே ஜானகி என்னிடமிருந்து விலகி அம்பாளை ஒரு முறை பார்த்துவிட்டு என்னையும் ஒரு முறை பார்த்தாள். நண்பா அந்தப் பார்வையின் அர்த்தம் எனக்குத் தெரியாமல் போய்விட்டதே. நான் ஊருக்கு வந்தவன்று கோவிலுக்குப் போய் வந்தது முதல் ஊர்க்காரர்களுக்கு என் மீதும் ஜானகிமீதும் சந்தேகம். அன்று நாங்கள் கையும் களவுமாகப் பிடிபட்டோம். என்னைப் பலர் முறைத்துப் பார்த்தனர். அந்தப் பார்வை என்னை எரித்து விடுவதுபோலயிருந்தது. வேறு சிலர் "டே! உன்னை அலமேலுப் பாட்டியின் பேரன் என்றதற்காக இம்முறை மன்னித்து விட்டோம்" என்று எச்சரித்து அனுப்பினார்கள்.

மறுநாள் நான் கோவிலுக்குப் போயிருந்தேன். கோவிலே எனக்கு சூன்யமாயிருந்தது. ஊராரது 'ரிப்போர்ட்' ஒன்றுக்குப் பத்தாக ராமச்சந்திரய்யருக்குக் கிடைத்துவிட்டது. அதன் விளைவு ஜானகி கோவிலுக்குப் போவதில் தடை உத்திரவு போடப்பட்டது. இது ஜானகி எனக்கு அம்பிப் பயலிடம் சொல்லி யனுப்பியதிலிருந்து தெரியவந்தது.



## IV

ஜானகி வெள்ளிக்கிழமைகளில் மட்டுமே கோவிலுக்கு வரலானாள். அதுவும் அவள் தாயார் அவளுக்குக் காவல். ராமச்சந்திர அய்யரும் ஜானகிக்கு ஒருபெரிய வரனை நிச்சயம் செய்துவிட்டார். முன்னெல்லாம் ஜானகி தன் வீட்டு வாசல் ரூமிலேயே சதா உட்கார்ந்திருப்பாள். நான் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருப்பேன். சதா ஒருவரை யொருவர் பார்த்தபடியே உட்கார்ந்திருப்போம். அதில்தான் எங்களுக்கு என்ன ஆனந்தம். அதிலும் இடைஞ்சல் வந்துவிட்டது. இப்போதெல்லாம் ஜானகி வாசல் உள்ளே வரவே அநுமதிக்கப்படுவதில்லை. நாங்கள் இருவரும் பேச முடியாமலும், பார்க்க முடியாமலும் போய்விடவே எங்களிருவருக்கும் அம்பிப்பயல் மூலம் கடிதப் போக்குவரத்து ஆரம்பமாயிற்று.

ஒருநாள் ஏதாவது புஸ்தகமிருந்தால் வாங்கி வரும்படி ஜானகி சொன்னதாக அம்பிப்பயல் கேட்டான். நான் என்னிடமிருந்த ஒரு நாவலைக் கொடுத்து அனுப்பினேன். அதில்தான் நான் பெரிய தவறு செய்துவிட்டேன். எனக்கு அத்தை ஒருவள் இருக்கிறாள். அவளுக்கு ஸ்ரீமதிதான் செல்வம். ஸ்ரீமதி செயற்கை அழகில்லாவிட்டாலும் இயற்கை யழகில் பிரகாசித்தாள். அத்தைக்கு ஸ்ரீமதியை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று ஆசை. ஸ்ரீமதிக்கோ சிறு வயதிலிருந்தே என்னிடம் உயிர். நானும் ஜானகியைப் பார்க்கும் வரை ஸ்ரீமதியையே எனது வாழ்க்கைத் துணைவியாக நிச்சயித்திருந்தேன். ஆனால் ஜானகியை அன்று பார்த்த பிறகு, மணந்தால் ஜானகியை மணப்பது முடியாவிட்டால் இந்த ஜன்மத்தை பிரம்மச்சாரியாகக் கழித்து விடுவதாக நிச்சயம் செய்து விட்டேன்.

நான் புஸ்தகத்தை அனுப்பிய அன்று பிற்பகல்ஜானகியிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. [சாம்பசிவம் ஸில்க் உறை போடப்பட்ட ஸூட் கேஸைத் திறந்து அதிலிருந்த பல கடிதங்களிலிருந்து ஒன்றை என்னிடம் கொடுத்து அதை வாசிக்கச் சொன்னான். கடிதம் வருமாறு.]

எனது ஆருயிர் காதலருக்கு,

நமஸ்காரம். இத்துடன் தங்களை மனமாரக் காதலிக்கும் மங்கை ஸ்ரீமதியின் கடிதத்தை அனுப்பி யிருக்கிறேன். தாங்கள் அனுப்பிய நாவலில் அது இருந்தது. நான் அக்கடிதத்தை வாசித்தேன். மன்னிக்கவும். கடிதத்தை வாசித்த பிறகே நான் எத்தகைய பாவி என்பதைத் தெரிந்துகொண்டேன். நான் தங்களுக்கு எழுதுவது இதுவே கடைசிக் கடிதம். நான் வேறு ஒருவனுக்கு மனைவியாக நிச்சயிக்கப்பட்டு விட்டேன். ஆகையினால் இப்படி எழுதுகிறேன் என்று எண்ணக்கூடாது. உங்கள்மீது என்னைப் போலவே தன் உயிரையே வைத்திருக்கும் ஸ்ரீமதிக்குப் போட்டியாக நான் வரமாட்டேன். அவள் மனம் எப்படித் துடிக்குமென்பது உங்கள்மீது காதல்கொண்டு தவிக்கும் எனக்கல்லவா

தந்த ரோகங்களை நிவர்த்திப்பது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

தெரியும். எப்படியும் உங்களுக்கு அவள் கிடைக்கக்கூடிய பழம். நான் உங்களை அடையக் கொடுத்துவைக்காத துரதிருஷ்ட சாலி. இந்தப் பாவியை அடியோடு மறந்துவிட்டு ஸ்ரீமதியின் மனதைக் கலங்கடிக்காமல் அவளது ஆசையை நிறைவேற்றுங்கள். தெய்வமென்று ஒன்றிருப்பது உண்மையானால் நாம் அடுத்த பிறவியில் மனமொத்த கணவனும் மனைவியுமாவது நிச்சயம்.

மனமுடைந்த காதலி,
ஜானகி.

ஜானகி படித்துவிட்ட அப்படிப்பட்ட ஸ்ரீமதியின் கடிதம் என்ன வென்றுதானே யோஜிக்கிறாய். இதோ அக்கடிதம். வாசிக்கிறேன், கேள்.

அத்தானுக்கு ஸ்ரீமதி அநேக கோடி நமஸ்காரம். தாங்கள் இத்தனை வருஷமாக என் அன்பை வாங்கி ஹிருதயத்தில் வைத்திருந்து இப்போது காற்றோடு விடுவது ஞாயமா? அம்மாவுக்கு எனக்கு வேறு வரன் தேடும்படியும் தங்களால் என்னை மணக்கமுடியாது என்றும் எழுதிவிட்டீர்களாமே. தங்கள் மனம் திடீரென்று மாறும்படி என்ன தவறு செய்துவிட்டேன். ஸ்ரீமதி உயிரோடிருக்க வேண்டுமானால் உங்கள் மனதை மாற்றிக்கொண்டு என்னை ஏற்றுக்கொள்வதாக எழுதுங்கள். உங்களை மணக்காமல் வேறு யாரையும் மணப்பதைவிட சாவையே மணப்பதை விரும்புகிறேன்.

இங்ஙனம்,
அடியாள் ஸ்ரீமதி.

நான் ஜானகிக்கு என் மனத்தில் அவள்மீது வைத்த காதல் மாறவே மாறாது என்றும் இந்த ஜன்மத்தை பிரம்மச்சாரியாகவே கழிக்கப் போவதாகவும் முன்பு சொன்னதையே ஸ்திரப்படுத்தி எழுதினேன்.

## V

என்னுடைய காதல் சம்பவத்தில் சோகமான கட்டம் இனித்தான் ஆரம்பிக்கப் போகிறது. ஜானகிக்கும், பக்கத்தூர் மிராசுதார் குமாரன் ஸ்ரீனிவாஸனுக்கும் கல்யாணம் என்ற பத்திரிகை என் வீட்டுக்குக்கூட ஒன்று வந்துவிட்டது. கல்யாணப் பத்திரிகையைப் பார்த்த எனக்கு ஒரு சமயம் ஸ்ரீனிவாஸன் என்ற இடத்தில் சாம்பசிவ மென்று இருக்கக்கூடாதா வென்று தோன்றினாலும், 'சீ! இதென்ன பைத்தியக்காரத்தனம். பிறரது மனைவியைப்பற்றி நாம் நினைப்பது தவறல்லவா' என்று என்னையே கடிந்துகொள்வேன்.

அன்று வெள்ளிக்கிழமை. ஞாயிற்றுக்கிழமை காலை ஜானகிக்குக் கல்யாணம். நான் அன்றே சென்னைக்குப் புறப்பட நிச்சயித்துவிட்டேன். நான் ஆசைப்பட்ட பொருளை மற்றொருவன் அடைவதை எப்படி நான் பார்த்துக் கொண்டிருப்பேன். நான் இவ்வாறு யோஜித்துக் கொண்டிருந்தபோது அம்பிப்பயல் ஓடிவந்தான். "பட்டணத்து மாமா, 'மச்சுவீட்டு' ஜானகி கோவில் குளத்திலே விழுந்து செத்துப் போயிட்டா. ஒரேகூட்டமாயிருக்கு. நேத்திக்கி ராத்திரி ஜானகி எங்கிட்ட இந்த புஸ்தகத்தைக் கொடுத்து உங்ககிட்ட காலம்பர கொடுக்கச் சொன்னா." என்று அவசரஅவசரமாகக் கூறிக்கொண்டே நான் ஜானகிக்குக் கொடுத்திருந்த நாவலை என்னிடம்கொடுத்துவிட்டு கோவிலைப் பார்க்க ஓடிவிட்டான். அம்பிப்பயல் கூறிய வார்த்தைகள் என் ஹிருதயத்தை அப்படியே துளைத்துவிட்டன. நான் ஒன்றுந் தோன்றாமல் திகைப்படைந்து நிற்கையில் என் கையிலிருந்த நாவல் நழுவிக் கீழே விழ புஸ்தகத்திலிருந்து இந்தக் கடிதம் கீழே விழுந்தது. கடிதத்தை வாசிக்கிறேன், கேள்.

என் ஆருயிர் காதலருக்கு,

நமஸ்காரம். நான் இக்கடிதத்தை புஸ்தகத்தில் வைத்து அம்பிப் பயலிடம் உங்களிடம் காலையில் கொடுக்கும்படி இரவே கொடுக்கிறேன். நீங்கள் இக்கடிதத்தைப் படிக்கும்போது எனது உடல் நமது பரிசுத்தமான காதல் உதயமான கோவில் குளத்தில் மிதக்கும். உங்களது சுந்திர வதனத்தைப் பார்க்காதிருப்பது எனக்கு இருண்ட உலகில் இருப்பதாகத் தோன்றுகிறது. எப்படியாவது மனதைத் தேற்றிக்கொள்ளலா மென்றால் முடியவில்லை. எனது வாழ்வை தூய்மைப் படுத்துவது தங்கள் சக்தியே. உங்கள் பரிசுத்தமான காதலினால் என் உள்ளத்தைப் பூரணமாகச் செய்தீர். எனக்கு வாழ்க்கையில் வழி காட்டும் ஜோதி உங்கள் அன்பே. வேறு யாரை மணந்தாலும் என் வாழ்க்கை சூன்யமானதாகிவிடும். என்னை மணப்பவருக்கும் என்னால் சுகம் ஏற்படாது. அதற்கு இடங்கொடுக்க நான் விரும்பவில்லை. நான் தற்கொலை செய்துகொள்ள முதற் காரணம் இது.

இரண்டாவது காரணம் நான் ஒருவள் உயிருடனிருந்து என்னைப்போல் தங்கள் பால் காதல் கொண்டு தவிக்கும்

பாரினில் புகழ்பெற்றது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

ஸ்ரீமதியைத் தாங்கள் அடையமுடியாமல் முட்டுக்கட்டையா யிருக்க நான் விரும்பவில்லை.

என் ஆருயிரே! என்மீது நீங்கள் காதல் வைத்திருப்பது உண்மையானால், எனது ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால் என் கடைசி வேண்டுகோளை மறுக்காதீர். **என் கடைசி வேண்டுகோள் நீர் என்னை மறந்துவிட்டு ஸ்ரீமதியை மணக்க வேண்டும்.** என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வீரென்ற நம்பிக்கையுடன் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
'ஜானகி'

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் நான் கோவில் குளத்துக்கு ஓடினேன். என்ன பயன்; ஜானகியைக் கரையில் தூக்கிப்போட்டிருந்தார்கள். ஊரில் எல்லோரும் ஜானகி குளத்தில் வழுக்கி விழுந்துவிட்டதாகவே முடிவுகட்டினார்கள். என் ஒருவனுக்கும் பகவானுக்குமே தெரியும் உண்மை விஷயம்.

சாம்பசிவம் இந்த சோகமான சம்பவத்தை முடித்ததும் என் கண்கள் பேசும் தெய்வமாகிய அந்த போட்டோவைப் பார்த்தன. வாஸ்தவத்தில் அது பேசுவது போலத்தான் இருந்தது. கல்நெஞ்சன் என்ற பெயர் வாங்கிய நானும் நண்பன் சாம்பசிவத்துடன் கண்ணீர் உகுத்தேன்.

## VI

சில நிமிஷங்களுக்கு இருவரும் மௌனமாகவே இருந்தோம்.

"மிஸ்டர் சாம்பசிவம் ரொம்பவும், துக்ககரமான சம்பவமே. பிறகு என்ன நடந்தது?"

நான் யோஜித்தபடியே அன்றே முல்லக்குடியைவிட்டுப் புறப்பட்டுவிட்டேன். என் உயிரைத் துடிக்கச் செய்துவிட்டு என்னைவிட்டுப் பிரிந்துவிட்ட எனது காதலி அன்புடன் அளித்த ஞாபகச் சின்னம்—அவளது போட்டோ— இன்றும் என்னுடன் இருக்கிறது. அன்றே என் காதலியின் உத்திரவை மேற்கொண்டேன். எனது அத்தைக்கும், ஸ்ரீமதிக்கும் எனது மனமாற்றத்தைத் தெரிவித்தேன். எனக்கு ஒரு வேலையானதும் ஸ்ரீமதியைக் கல்யாணம் பண்ணிக்கொள்வதாக உறுதிமொழி கூறினேன். அதே போல போன வருஷந்தான் நான் ஸ்ரீமதியை மணந்துகொண்டேன். இப்பொழுது சொல். அந்த போட்டோ என் பேசும் தெய்வமாயில்லையா?

"நீ கூறுவது வாஸ்தவமே. உனக்கு எங்கே வேலை, அதெல்லாம் ஒன்றுமே சொல்லவில்லையே?"

"அது பெரிய வேடிக்கை. முல்லக்குடி ராமச்சந்திர அய்யர்—ஜானகியின் தகப்பனார்—தன் பெண் துர்மரணமாய்ப்போன பிறகு தனது நிலங்களை விற்றுவிட்டு சென்னைக்கு வந்தவர் ஒரு சினிமாக் கம்பெனியை ஆரம்பித்தார். தனது பெண்ணின் ஞாபகார்த்தமாக ஒரு படம் தயாரிக்க எண்ணி பத்திரிகைகளில் "கதை தேவை" என்று போட்டிருந்தார். நான் எனது வாழ்க்கை சம்பவத்தையே, சில மாறுதல்களுடன், ஒரு கதையாக எழுதி அனுப்பினேன். அவர் எனது கதையை ஐயாயிரம் ரூபாய்க்கு வாங்கிக்கொண்டதோடு, என்னைப் படத்தின் டைரெக்டராகவும், கம்பெனியின் மானேஜராகவும் நியமித்தார். நீயும் நானும் நேற்றுப் பார்த்தோமே அந்தப் படந்தான் நான் எழுதிய கதை."

என் நண்பன் இப்படிச் சொன்னதும்தான், எனக்கு முதல் நாள் படத்தின் ஆரம்பத்தில் "ஜானகியின் ஞாபகார்த்தமாக" என்ற வார்த்தைகளும், 'கதை, டைரெக்ஷன், எஸ். சிவம்" என்றவைகளும் படத்தின் ஆரம்பத்தில் காட்டப்பட்டது ஞாபகத்திற்கு வந்தன.

---

நீங்கள் கேட்கும் அளவு

**பெட்ரோல்**

**உங்களுக்குக் கிடைப்பதில்லை**

ஆனால் அது யுத்தத்தில் ஜெயம்பெற வேறொரு இடத்திற்கு அவசியமாயிருக்கிறது.

இதில் மிச்சமாகும் பணத்தை கவர்னர் யுத்த நிதிக்கு கொடுப்பதன்மூலம் நீங்கள் இன்னும் அதிகம் உதவலாம்.

# ஸி. ஒய். சிந்தாமணி, டி. கே. சி.

ஆர். திருஞான சம்பந்தம்

மேலே கொடுத்திருக்கும் பெயர்கள் ரொம்ப ரொம்ப பிரசித்தமானவை. ஆகையால் நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. சினிமாவைப்பற்றிக் கொஞ்சம் சொல்ல உத்தேசம். "சரி சினிமாவுக்கும் மேலே குறிப்பிட்ட பெயர்களுக்கும் என்ன சம்பந்தம்?" என்று நீங்கள் திகைக்காதீர்கள். எல்லாவற்றையும் விளக்கி விடுகிறேன்.

"நான் ஏன் சினிமாவுக்குப் போகிறேன்?" என்ற கேள்வியை நானே கேட்டுக் கொண்டேன். இதற்கு என்னிடமிருந்தே பதில் கிடைத்தது. வேண்டுமென்றே அதைக் கடைசியில் சொல்லலாமென்று வைத்திருக்கிறேன். அதற்குமுன் ஸி. ஒய். சிந்தாமணியைக் கேட்டுப் பார்க்கலாம். அவர் சினிமாப் பார்ப்பதை ஒரு தினசரி வேலையாக வைத்துக் கொண்டிருந்தார் அல்லவா?

ஸ்ரீ சிந்தாமணி இப்போது உயிருடன் இல்லை. அந்தக் கேள்விக்கும் நானேதான் பதில் சொல்ல வேண்டி யிருக்கிறது. அதை முதலிலேயே சொல்லி விடுகிறேன். கடைசிவரை உங்களைக் காக்க வைக்கவில்லை.

ஒரு சமயம் ஸ்ரீ சிந்தாமணி, "நீங்கள் கிரேட்டா கார்போவைப்போல் கண்ணீர் வடிக்கிறீர்களே?" என்று வேடிக்கையாக ஒரு சட்டசபை அங்கத்தினரைப் பார்த்துச் சொல்லியதாக ஞாபகம். சட்டசபை என்று இல்லை. வேறு எந்த இடத்திலும், நண்பர்களை சினிமா நடிக - நடிகைகளின் பெயரை வைத்து அழைப்பாராம். ஆகையால், "**நண்பர்களை வேடிக்கை செய்வதற்காகச் சினிமாவுக்குப் போய்க் கொண்டிருந்தார்**" என்று ஸ்ரீ சிந்தாமணியைப் பொறுத்தவரை ஊகிக்கலாம்.

அடுத்தபடியாக டி. கே. சிதம்பரநாத முதலியாரிடம் வருவோம்.

"நீங்கள் எதற்காகச் சினிமாவுக்குப் போகிறீர்கள்?" என்று டி. கே. சி. யிடம் கேட்டேன்.

"நான் ஏன் சினிமாவுக்குப் போகிறேன்?" என்று டி. கே. சி. என்னிடம் கேட்டார்.

"இல்லை. நீங்கள் சினிமாவுக்குப் போவதாயிருந்தால், எதற்காகப் போவீர்கள்?" என்றேன்.

"நான்தான் சினிமாவுக்குப் போகிறதில்லையே? இது உனக்குத் தெரியாதா?" என்றார்.

"சரி, நீங்கள் சினிமாவே பார்த்ததில்லையா?" என்று கேட்டேன்.

டி. கே. சி. சிரித்துக் கொண்டு "பார்த்திருக்கிறேன்" என்று கூறினார்.

"அப்படியானால், அப்போது எதற்காகச் சினிமாவுக்குப் போனீர்கள்?" என்று கேட்டேன்.

டி. கே. சி. சொல்லத் தொடங்கினார்: "**சாதாரணமாக, சினிமா, டிராமா முதலான காரியங்களுக்கு நான் கம்பனை அனுபவிப்பதற்குத்தான் போவது வழக்கம்.** இப்போது கம்பனிலிருந்து ஒரு கட்டத்தை ஞாபகப்படுத்திக் கொள்வோம். ராமன் காட்டுக்குப் போகப்போகிறான் என்பதைக் கேட்டு கோசலை தவிக்கும் நிலை; கையோடு கையை நெரிக்கிறாள். அந்த நிலையில் ராமன் தன் வயிற்றுக் குள்ளேயே கிடப்பது போன்ற உணர்ச்சி வந்துவிடுகிறது. உடனே அந்த வயிற்றைப் பிசைகிறாள். நிலை கொள்ளவில்லை. துக்கம் பொங்கிக் கொண்டு வருகிறது. அத்துயரை அப்படியே **விழுங்கிக்** கொள்கிறாள்.

"அடக்க முடியாத துக்கத்தை விழுங்கியும் சமாளிக்க முயல்வது உண்டு. இதை நான் அனுபவத்திலே கண்டிருக்கிறேன். பேசும் படங்களெல்லாம் வருவதற்கு ரொம்ப வருஷங்களுக்குமுன், நான் ஒரு மௌனப் படம் பார்க்கப் போயிருந்தேன். ஒரு காதலி, குடிகாரனை தன் காதலனை எண்ணிக் கஷ்டப்படும் கட்டம். அந்தப் பெண் தன் துக்கத்தை அப்படியே **விழுங்கிக்** கொள்வதை நான் பார்த்தேன். அனுபவத்தில்தான் இம்மாதிரி உண்மைகளைக் காணமுடியும். சரி, கம்பர் சித்தரித்திருக்கும் அந்த நாடகத்தைப் பார்ப்போம்.

இனிமை பயப்பது கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

கையைக் கையில்
நெரிக்கும்; தன் காதலன்
வைகும் ஆவிலே
அன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத் தளி
ராற்பிசை யும் புகை
வெய்து யிர்க்கும்
விழுங்கும் புழுங்கு மால்.

இந்தப் பாடலை டி. கே. சி. அவர்கள் பாடும்போதே என் இதயத்தில் பதிந்துவிட்டது. எனக்கு ரொம்பவும் திருப்தி ஏற்பட்டது.

கடைசியாக, நான் சினிமாவுக்கு ஏன் போகிறேன் என்பதையும் சொல்லிவிடுகிறேன்.

என்னுடைய நண்பர்களில் சிலர் சினிமாப் பித்தர்கள். சினிமாப் பக்தர்கள் என்று தான் சொல்லவேண்டும். அவர்கள் என்னவோ சினிமாவைப் பார்த்துத் தொலைத்து விட்டுப் போகட்டும். ஆனால், என்னிடம் வந்து, வானளாவப் புகழ்ந்து படங்களின் சிறப்பை எனக்குப் போதிக்க முற்பட்டு விடுவார்கள். "அதில் ஒன்றுமில்லை. அதுகள் 'கன்னா பின்னா' என்று உளறுவதை, புகழ்கிறீர்களே" என்று நண்பர்களின் மண்டையில் அடித்த மாதிரி எடுத்துச் சொல்வதற்கு நான் சினிமா பார்த்திருக்க வேண்டாமோ? இப்படி ஆரம்பித்த பழக்கம் ஒரு வழக்கமாக என்னைப்பற்றிக்கொண்டது!

---

கண்கவர் வனப்புள்ள
**படக் காலண்டர்கள்**

உள்ளத்தை உருக்கும் பலவித சுவாமிகள் ●
இந்தியாவின் தேசீயத் தலைவர்கள் ●
அழகுவாய்ந்த சினிமா நட்சத்திரங்கள் ●
மனதை அள்ளும் இயற்கை வனப்புகள் ●

● இன்னும் பலவித எங்கள் 'குமரன்' படக்
● காலண்டர் மூலம் விளம்பரம் செய்து உங்
● கள் வியாபாரத்தைப் பெருக்குங்கள்.

சிறந்த வேலைப்பாடு

உயர்ந்த மதிப்பு

சிறிய அளவுள்ள படங்களின் மாதிரி புத்தகம் வேண்டுவோர் 4-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

குமரன் காலண்டர் தொழிற்சாலை
தந்தி: "குமரன்" :: காஞ்சீபுரம்.

ஏஜண்டுகள் தேவை

# எஸ். வி. ஆர்.
# பாபுலர் சைகிள்கள்

●

நீண்ட கால உழைப்புக்கும், சிக்கனத்துக்கும், சுக சவாரிக்கும், நல்ல ஓட்டத்திற்கும், பார்வைக்கும், எப்பொழுதும், விலை குறையாத மதிப்புக்கும், ஒப்புயர்வற்றது.

எல்லா பிரபல வியாபாரிகளிடமும் கிடைக்கும்

●

எஸ். வி. ஆர். சைகிள் மார்ட்,

| தலைமை ஆபீஸ் | செண்ட்ரல் ஆபீஸ் |
| --- | --- |
| காரைக்குடி | 2-22, பிராட்வே மதராஸ் |

பிராஞ்சுகள்:
52, தெற்கு ராஜா வீதி, தூத்துக்குடி.
கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

டாக்டர்களால் நன்குமதிக்கப் பெற்றது கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி



செட்டிநாட்டு ராணி
ஸ்ரீமதி சீதை ஆச்சி
லண்டனில் எடுத்த படம்




‘ இந்திரா ’ காரியாலயம்

# அண்ணாமலை சர்வ கலாசாலை

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின் பெயரைக்கொண்டே அண்ணாமலை சர்வ கலாசாலை பனிரெண்டாண்டுகட்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்குப் பொது ஜனத் தொண்டிலுள்ள ஆர்வத்தை இக் கலாசாலை எடுத்துக் காட்டுகிறது. தென்னாட்டிலுள்ள மற்ற சர்வ கலாசாலைகளைப் போன்ற கொள்கைகளே இந்த சர்வ கலாசாலையில் காணப்படுகின்றன. ஆனால் இது சில விதங்களில் அவைகளினின்று வித்தியாசப்படுகின்றது. தனிப்பட்ட மனிதரால் ஸ்தாபித்து நிர்வகிக்கப்படும் சர்வ கலாசாலை இஃது ஒன்றேதான். அத்தகைய நற்செய்கையைச் செய்துவரும் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்கு இணை இந்த இராஜதானியிலேயே இல்லை யெனலாம்.



INTERIOR VIEW OF THE SRINIVASA SASTRI HALL
பட்டமளிப்பு விழா மண்டபத்தின் உள் தோற்றம்

இவர்கள் சிதம்பரத்தில், தாம் நடத்தி வந்த தமிழ், சம்ஸ்கிருத கல்லூரிகளைத் துரைத்தனத்தாரிடம் அளித்ததுமன்றி, சர்வ கலாசாலையை ஸ்தாபிக்க 25 லட்ச ரூபாய் நன்கொடை யளித்துள்ளார்கள்.

இதை அங்கீகரித்துக்கொண்டு துரைத்தனத்தார் சர்வ கலாசாலை நிதிக்கு இருபத்தேழு லட்சமும், கட்டிடங்களுக்கு எழரை லட்சமும் கொடுத்து, வருடத்திற்கு ஒன்றரை லட்ச ரூபாய் நிர்வாகத்திற்கு அளிப்பதாக வாக்களித்துள்ளார்கள்.

இதற்கு சென்னை சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டு, 1928-ம் வருஷம் சட்டமாக அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

சரித்திரத்திலும், கலையிலும் கியாதி பெற்ற சிதம்பரத்தில் இந்தச் சர்வ கலாசாலை நிறுவப்பட்டிருக்கின்றது. இந்த நகரம், சென்னையிலிருந்து 150 மைல் தூரமிருப்பினும் போக்கு வரத்து சௌகரியங்களுக்கு இருப்புப் பாதை போடப்பட்டிருக்கின்றது. கலாசாலைக்குச் சொந்தமான 550 ஏக்கர் நிலத்தில் மாணவர்களுக்கு



GUEST HOUSE AND STAFF CLUB
விருந்தாளிகள் தங்குமிடம



HOSTEL (ஹாஸ்டல்)

விளையாட்டு மைதானங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. சிதோஷ்ணஸ்திதி ஆரோக்கியமுள்ளதாக இருக்கின்றது.

இந்த சர்வ கலாசாலைக்கு சான்ஸலராக கவர்னரும், புரோ சான்ஸலராக ஸ்தாபகரும், வைஸ் சான்ஸ்லராக உத்தியோக முறையில் நிர்வாகப் பொறுப்புள்ளவரும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். உப அத்யக்ஷகருக்கு சம்பளம் வேண்டுமானாலும் அளிக்க சட்டம் இடமளித்திருக்கிறது. மூன்று வருடத்திற்கொருமுறை ஸ்தாபகர் யாரைத் தேர்ந்தெடுக்கிறாரோ, அவரே சர்வ கலாசாலையின் உப அத்யக்ஷகராக வேலை பார்க்க வருவார். தற்பொழுது உப யுள்ள திவான்பகதூர் எஸ். இ. இரங்கநாதனவர்கள் 1929—35 வரை உப அத்யக்ஷகராக இருந்த காலையிலும், 1935—40 வரை மஹாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் உப அத்யக்ஷகராயிருந்த காலையிலும் எடுத்த இடைவிடா முயற்சியால் இத்தகைய அரிய பெரிய கட்டிடங்கள் நிறுவப்பட்டன.

ஆயிரம் மாணவர்கள் பல கிளைகளிலும் கல்வி பயின்று வருகின்றார்கள். இண்டர்மீடியட் வகுப்பிலிருந்து, பி.எச்.டி., எம்.லிட். & எம்.எஸ்.ஸி. டிகிரி வரையிலுள்ள மாணவர்கள் அனைவர்களுக்கும் கல்வி கற்கத் தகுந்த வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.



·WOMEN STUDENTS' HOSTEL
மாணவிகள் விடுதி

அத்யக்ஷகராக விளங்குபவர் சர் கூர்மா வேங்கடரெட்டி நாயுடு கே.ஸி.ஐ.இ, டி.லிட்., எம்.எல்.ஸி. யாவர்.

சர்வ கலாசாலையின் நிர்வாக சபைகள் செனட், அக்காடமிக் கவுன்ஸில், போர்ட் ஆப் ஸ்டடீஸ், சின்டிகேட், பொருளாதாரக் கமிட்டி முதலியவைகளாகும்.

சென்ற பத்து வருடங்களாக அண்ணாமலை நகரில் பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, அழகாக விளங்குகின்றது.

இதில், முப்பது லட்சத்திற்குமேல் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. தற்பொழுது, இந்திய சமஸ்தான ஆலோசகரின் பிரதம காரியதரிசியா

தமிழிலும் ஹானர்ஸ் வரை போதிக்கும் கல்லூரி தமிழ் நாட்டிலேயே இது ஒன்றுதான். கர்நாடக சங்கீத வளர்ச்சிக்கு வேண்டிய சௌகரியங்களை இயற்றி அளித்து மக்களுக்குப் பயனளிப்பதும் இந்தக் கல்லூரி ஒன்றுதான்.

57,000 புத்தகங்கள் கொண்ட பெரிய புத்தகசாலை யொன்று சர்வ கலாசாலையில் உள்ளது. புத்தகங்கள் வாங்குவதற்கென்று செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 25,000 ஆகும். மணிக்கூண்டுடன் கட்டப்பெற்ற அழகான கட்டிடமொன்றில்தான் புத்தகசாலை அமைக்கப் பெற்றிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்ற நாட்களிலும் காலை 7 மணி முதல் மாலை எழு மணி வரை புத்தகசாலை திறந்திருப்பதுடன்



ORIENTAL COLLEGE (தமிழ்ப் பயிற்சிக் கழகம்)



LIBRARY AND ADMINISTRATIVE BUILDING
வாசகசாலையும் நிர்வாகஸ்தர்கள் இருக்குமிடமும்

மாணவர்கள் இஷ்டம்போல் பீரோக்களினின்று புத்தகங்களை எடுத்துக்கொள்ள உரிமையுண்டு.

ஆராய்ச்சித் துறையிலுள்ள மாணவர்களுக்கும், ஹானர்ஸ் மாணவர்களுக்கும், தனித்தனி புத்தகாலயங்கள் இருக்கின்றன.

பௌதீக, ரஸாயன, தாவர சாஸ்திர சாலைகள் ஹானர்ஸ் மாணவர்களுக்கும், ஆராய்ச்சித் துறையிலுள்ள மாணவர்களுக்கும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன.

மாணவர்கள், இலக்கியத் துறையிலுள்ளவர்கள் முதலியோர் வாசஸ்தலத்தைப்பற்றிக் கூற

அருகில் மாணவர்களுடைய விடுதி அமைந்திருப்பதால், மாணவர்கள், ஆசிரியர்களிடம் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கவும், கேட்பதற்கும், சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் இடமுண்டு. மாணவர்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ள வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை. தங்களுடைய அருகாமையிலேயே ஆசிரியர்கள் இருப்பதால், சந்தேகங்கள் தோன்றின் அவைகளை மாணவர்கள் சுலபமாக நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

மாணவிகளுக்கென்றே தனி விடுதி பெண்



LADIES CLUB

லேடீஸ் கிளப்

வேண்டியது மிக அவசியமாகும். மாணவர்களும், ஆசிரியர்களும் ஒரே சம இடத்தில் இருந்து வருவதால் மாணவர்கள் ஆசிரியர்களுடன் நெருங்கிப் பழகி வர இடமுண்டு. கலாசாலையில் உள்ள ஒவ்வொன்றும், மாணவனின் முயற்சியை அதிகப்படுத்துவதற்கும், நல்ல நடத்தையை அப்யசிப்பதற்கும் தக்கனவாக உள்ளன. மாணவர்களின் விடுதி ஒரு வார்டனுடைய தலைமையிலும், ஐந்து உதவி வார்டன்களுடனும் நிர்வகிக்கப்படுகிறது. ஹாஸ்டலை நிர்வகிக்க மாணவர்களுக்கும் பங்கு உண்டு. மாணவர்களுடைய பிரதிநிதி கவுன்ஸில், வார்டனுக்கு உதவிபுரிந்து வருகிறது. கலாசாலைகட்கு

வார்டனால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சங்கீதக் கல்வி பயில மாணவிகள் அதிகமாகச் சென்ற சில வருடங்களாகச் சேர்ந்து வருகின்றார்கள். இன்னும் சில மாணவிகள் சங்கீதத்திலேயே உயர்ந்த கலைகளை அப்யசித்து வருகின்றனர்.

15,000 ரூபாய் செலவில் பெரிய பொதுக் கட்டிடமொன்று கட்டப்பெற்றிருக்கிறது.

இத்துடன் சர்வ கலாசாலையில் நாடக சங்கங்களும், படகுச் சங்கங்களும், ஒற்றுமைக் கழகங்களும் உள்ளன.

தென் இந்தியாவிலேயே மிகப் பெரிய விளையாட்டு மைதானத்தை இச் சர்வ கலாசாலை



HOSPITAL (வைத்தியசாலை)



SPORTS PAVILION
விளையாட்டாளர் விடுதி

பெற்றிருப்பதுடன் பல்வேறு விளையாட்டுக்களுக்கும் தகுந்த இடமளித்திருக்கின்றது.

தேகப்பயிற்சிக்கு இந்த சர்வ கலாசாலை முக்கிய இடமளித்திருப்பதுடனன்றி, சர்வ கலாசாலை பரீக்ஷைக்குச் செல்லும் மாணவன் தேகப்பயிற்சி நற்சாக்ஷிப் பத்திரமின்றி அனுமதிக்கப்படுவதில்லை. மாணவர்களுடைய தேக ஆரோக்கியத்திற்கு முக்கிய கவனம்செலுத்தப்படுகிறது. மாதமொரு முறை மாணவர்களைப் பரீக்ஷை செய்து வர மெடிகல் ஆபீஸர் நியமிக்கப்பட்டிருக்கிறார். நன்கு நவீன சாதனங்கள் அமையப் பெற்ற வைத்தியசாலை யொன்று சர்வ கலாசாலைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

களுக்கு உதவியாக உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன.

தமிழ்க்கலையை அபிவிருத்தி செய்ய, தலைமைத் தமிழாசிரியரின் கீழ் ஒரு தமிழ் ஆராய்ச்சிக் கழகமொன்று நிறுவப்பட்டிருக்கின்றது. அதற்காக, பௌதிக சாஸ்திர புத்தகங்களும், ரஸாயன சாஸ்திர புத்தகங்களும் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

முறையே ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய்கள் சன்மானம் பெற தேர்ந்தெடுக்கப்பட்ட பௌதிக சாஸ்திர எழுத்துப் பிரதிகளும், சங்கீத எழுத்துப் பிரதிகளும் கூடிய சீக்கிரம் வெளி



SRI PASUPATHEESVARA TEMPLE

ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயம்

சர்வ கலாசாலை நிறுவப்பட்டது முதல் ஆராய்ச்சித்துறைக்கும், கல்வி யபிவிருத்திக்கும் ஊக்கமளித்து வருகிறது. இத்துடனன்றி, ஆராய்ச்சித்துறையில் வருடத்திற்கு மூன்று பத்திரிகைகள் வெளியிடப்படுகின்றன. போதனை முறைக்கு மாத்திரமன்றி ஆராய்ச்சித்துறையில் முன்னேற்றமடையவும் சர்வ கலாசாலை உதவி புரிந்து வருகின்றது. இந்தப் பதிப்புகளுக்கு மாணவர்களும், உபாத்தியாயர்களும் கட்டுரைகள் வழங்கி வருகின்றனர்.

சில நிபந்தனைகளின்பேரில் ஆராய்ச்சி முறை

வரும். இண்டர்மீடியட் வகுப்புப் பையன்களுக்குத் தேச சரித்திரம், பொருளாதாரம், கணிதம், தாவரம் முதலிய சாஸ்திரங்கள் போதிக்கப்பட தகுந்த முறையில் புத்தகங்கள் வெளியிட ஒவ்வொரு தொகுதியின் தலைவருக்கும் வேண்டுகோள் விடப்பட்டிருக்கின்றது.

*1941* ௵ இறுதியில் இவைகளனைத்தும் வெளியிடப் பெறும்.

அண்ணாமலை நகருக்குப் புதிதாக விஜயம் செய்யும் ஒவ்வொருவரும், இவைகளைக் கண்டு ஆச்

சரியமடைவார்களென்பதி லையமில்லை. வாரத்தில் ஒவ்வொரு நாளும், மாலை நேரங்களில் திறந்த வெளியிலும் விளையாட்டு மைதானங்களிலும் இளைஞர்கள் கிரிக்கட், ஹாக்கி, டென்னிஸ் இன்னும் இந்நாட்டிற்கேற்ற விளையாட்டுக்கள் விளையாடிக்கொண்டிருப்பதைக் காணலாம். அல்லது அவர்கள் புத்தகாலயங்களில் அமர்ந்து சப்தமின்றி மாதப் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். அல்லது சமூக சீர்திருத்தம் செய்ய உதவியான காரியங்களை யாவது, சாரண இயக்கத்தையாவது நடத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒருக்கால்

இந்திய சாம்ராஜ்ஜியத்திலேயே திருவாங்கூர் சர்வ கலாசாலையைத் தவிர்த்து, அண்ணமலை சர்வ கலாசாலையே சிறியதாகும். ஆரம்பத்தி லிருந்து இந்த சர்வ கலாசாலை இளைஞர்களுக்கும், பெண்களுக்கும், இந்தியக் கலைகளைப் போதிப்பதில் முதன்மை பெற்றிருக்கிறது. நம் தமிழ் நாட்டில் வதியும் இத்தகைய ஒரு சர்வ கலாசாலையை நிறுவிய செட்டிநாட்டரசரவர் களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

நாம் அனைவரும் தனித்தனி சர்வ கலாசாலைகளை ஸ்தாபிக்க வியலாதிருப்பினும் ஒவ்வொரு



MUSIC COLLEGE
**சங்கீதக் கல்லூரி**

கர்நாடக சங்கீதத்தை ஆலாபனம் செய்து கொண்டோ, அன்றி, ஒலிபரப்புங் கருவியி னின்று எழும் கானத்தை அனுபவித்துக் கொண்டோ அன்றி, வாரப் பதிப்பையோ, தினசரியையோ படித்துக் கொண்டிருப்பதையோ காணலாம்.

இன்னும் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி ஹாலில் இலக்கியத் துறைவர்கள், புரொபெஸர்கள், இன்னும் நகரமக்கள் முதலியோர் அமைதியுடன் அமர்ந்து அனுபவித்துக்கொண்டிருக்கும் இனிய சொற்பொழிவையும் கண்டு களிக்கலாம்.

வரும், தங்களாலியன்றளவு அண்ணமலை சர்வ கலாசாலையைப் போன்ற ஒரு கல்வி ஸ்தாபனத்தை முன்னணியில் கொண்டுவர முயற்சிக்கலாம்.

**அத்யக்ஷகர்கள்**

*1929.*

ரைட் ஹானரபிள் வைக்கவுண்ட் கோஷன்
ஆப் ஹாசர்ஸ்ட்,
ஜி.ஸி.எஸ்.ஐ.ஜி.,ஸி.ஐ.இ.,ஸி.பி.இ.

**ஜுலை முதல் ஆகஸ்டு வரை.**

ஹானரபிள் ஸர் முகம்மது ஊஸ்மான்,
கே.ஸி.ஐ.இ., **B.A.**,
ஹிஸ் எக்ஸலன்ஸி லார்டு எர்ஸ்கின்,
ஜி.ஸி.எஸ்.ஐ.

**1936 ஜுன்.**

ஹானரபிள் சர் கே. வி. ரெட்டி,
நைட், **B.A.B.L.**,
ஹிஸ் எக்ஸலன்ஸி லார்ட் எர்ஸ்கின்,
ஜி.ஸி.எஸ்.ஐ.

**1939.**

தி. ஆனரபிள் ஸர் ஆர்தர் ஆஸ்வால்ட்,
ஜேம்ஸ் ஹோப், ஜி.ஸி.ஐ.இ., எம்.ஸி.

**புரோசான்ஸலர்**

1929.

செட்டிநாடு டாக்டர் ராஜா சர்
சா ராம. மு. அண்ணுமலை செட்டியார்,
எல்.எல்,டி.

**உப அத்யக்ஷகர்கள்**

**1929.**

தி ரைட் ஹானரபிள்
வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், பி.ஸி.,
ஸி.எச்.,எல்.எல்.டி.
திவான் பகதூர் எஸ். இ. இரங்கநாதன்,
எம்.ஏ.,ஐ.இ.எஸ்.

**1931, மே—ஆகஸ்டு.**

கே. எம். சடை B.A.,
M. A. (Bomb.) B.A. (Cantab) Officiating.
திவான் பகதூர் எஸ். இ. இரங்கநாதன்,
எம்.ஏ., ஐ.இ.எஸ்.

**1935, மே--ஜுன்.**

டாக்டர் எஸ். என். சக்கிரவர்த்தி,
M. Sc. D. Phil. (Oxon.) Officiating.
ரைட் ஹானரபிள்
வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்,
பி.ஸி.,ஸி.எச்., எல்.எல்.டி.

**1936 டிஸம்பர் முதல், 37 பிப்ரவரி வரை.**

ஸ்ரீ டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார்,
ஸி.ஐ.இ.,பி.ஏ.பி.எல்., Officiating.

**1939 மார்ச், ஏப்ரல்.**

டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு,
எம்.ஏ., பி.எச்.டி., பீ.காம்., பார் அட்லா.
தி. ரைட் ஹானரபிள்
வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்.
பி.ஸி.ஸி.எச். எல்.எல்.டி.

**1940.**

ராய் பகதூர் டாக்டர் ஸர்
கூர்மா வேங்கட ரெட்டி நாயுடு காரு,
கே.ஸி.ஐ.இ., டி.லிட்., எம்.எல்.ஸி.

**1931. பட்ட மளிப்புப் பிரசங்கம் செய்தவர்கள்.**

திவான் பகதூர் எஸ். இ. இரங்கநாதன்,
எம்.ஏ., ஐ.இ.எஸ்.

*1932.*

ஆர். லிட்டில் ஹெயில்ஸ் அவர்கள்,
எம்.ஏ., ஸி.ஐ.இ.

*1933.*

திவான்பகதூர் சர் டி. தேசிகாச்சாரி.

*1934.*

திவான்பகதூர் ஆர். வி. கிருஷ்ண அய்யர்,
B.A.B.L.

*1935.*

ஸர் மிர்ஸா இஸ்மெயில், **Kt.**

*1936.*

ஸர் பிரோஸ், ஸி. சேத்ந.

*1937.*

தி ரைட் ஹானரபிள்
வி. எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார்,
பி.ஸி.ஸி.ஹெச்., **LL.D.**

*1938.*

ஸ்ரீ கே. நடராஜன் **B.A.**

*1939.*

**H. C.** பாப் வொர்த் அவர்கள்,
எம்.ஏ.,ஐ.இ.எஸ்.

*1940.*

தி ஹானரபிள் சர் லயோன்ஸ் லீச். நைட்.


| பக்கம் 775<br>பாகம் 2 | Special Victory Sales<br>A Bulky<br>Challenge Novel | 75 அத்தியா<br>யங்கள் பல<br>வர்ணப்படம் |
|---|---|---|

# விஜய பால பவானி

அல்லது

## மகமாயியின் பழிக்குப் பழி

[ஒறையூர் N. மாதவன் எழுதிய பெரிய தமிழ் நாவல்]

பல நீதிகள், உயரிய கற்பனை, இனிய எளிய நடை, கற்பு, காதல், அரச பக்தி, போர்த்திறமை, ஸ்திரீ சாகஸம், பாதாள வெடி குண்டு, துப்பு வாசிப்போர், திரை, திகைக்க, திடுக்கிடும் காட்சி... நிறைந்து, தமிழுலகில் தனக்கு இன்றளவில் இணையேதுமில்லை எனப் புகழப்பட்ட—பத்திரிகைகள் பலவின் ஆசிர் பெற்ற—இதை தமிழர் எல்லோரும் வாசிக்கவேண்டிய தவசியம்.

மலிவு விலை 2 பாகங்கள் ரூ. 2-8-0 (தபால் வேறு)

விலாசம் :

விலையை மணியார்டர் செய்தால் வி.பி. அதிக சிலவின்றி மறு தபாலில் அனுப்பப்பெறும்.

சாந்தா புக் டிபோ
1/75 முல்லா சாயபு தெரு
ஜி. டி. சென்னை


பாரதநாடு புகழ்வது கண்டனூர் எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றையே!

Supplement to INDIRA issue dated 1-10-41

# செட்டி நாட்டரசர் தம் சிறப்பியல்பு

வித்துவான் விசு. திருநாவுக்கரசு செட்டியார்

படையால் அரசரானோர் பலர். கொடையால் அரசரானோர் சிலர். அச்சிலருள்ளும் தலையாயவர்கள், நமது ராஜா சர் அவர்கள். உலகம் பல பெரியோரைப் பாராட்டுகிறது. அப்பெரியோர்களை மூன்று வகையாகப் பிரித்து விடலாம். நாட்டுப்பணி புரிந்தோர், மொழிப் பணி செய்தோர், சமூகப் பணி ஆற்றினோர். பலரிடத்துக் காணும் இம்மூன்று பண்புகளையும், நாம் ஒருசேர ஒருவரிடத்துக் காண வேண்டுமானால், அவர்கள், நமது ராஜா சர் அவர்களாகத்தானிருக்க முடியும். இவர்களை எண்ணும்போது, இவர்களது புகழ் ஒளி நிலவும் தில்லைப்பதியும் நினைவுக்கு வருவது இயற்கையே. பொன்வேய்ந்த தந்தையினும், புனல்பெய்த தமையனினும், மதிபெய்த நின் கொடையால் வளர்ந்தது சிற்றம்பலம் என்ற தமிழ்ப் பேரறிஞர் தம் சொற்களில் எவ்வளவு ஆழ்ந்த பொருள் நலமிருக்கிறது, என்பதனை எண்ணிப் பாருங்கள்.



வித்வான் விசு. திருநாவுக்கரசு

திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர், திரு. சந்திரசேகரன், "இந்தியாவின் நப்பீல்டு, ராஜா சர்" என்று கூறினார். இது மிக மிக உண்மை. தனித்த ஒருவர் பெயரால், பொருளால், ஒரு பல்கலைக் கழகம் இதுகாறும் இந்தியாவிலேயே தோற்றம் பெற்றதில்லை. என்? உலகத்திலேயே ஒரு இடத்தில்தானிருக்கிறது. அமெரிக்காவில், சிகாகோ என்னும் நகரில் இராக்பெல்லர் பல்கலைக்கழகம் (Rockefeller University) என்பதொன்றே இதனோடு ஒத்தது எனப் பெருமிதத்துடன் கூறலாம். கோயில் காணும் மரபில் இவர்கள் கலைக்கோயில் கண்டனர். அரசியற் பேறு பெறுச் சமூகத்தில் அரசியலின் எல்லைப் புகழையும் எய்தினர். ஒரே வரியிற் சொல்ல வேண்டுமானால், ராஜா சர் சமூகத்திற் பிறந்தவன் எனப் பெருமை கொள்ள ஏதுவாக விருக்கின்றனர். யாருடனும் எளிமையிற் பழகும் இவர்களது இயல்பு எம்மனோரால் ஒருபோதும் மறக்க முடியாது. இன்முகம் காட்டி, நன்மொழி கூறி அன்புடன் பேசும் இவர்கள் தோழமையை என்னென்பது? மறப்பெனும் பகைவன் இவர்களை அறியான். வியக்கத்தக்க நினைவாற்றல் இவர்களிடத்தே காணப்படுதல் போல் பிறரிடத்துக் காணுதலரிது.

மக்களைத் தன் வயப்படுத்தும் கொடியவன் சோம்பல், என ஒரு மேல்நாட் டறிஞர் சொன்னார். அவன் இவர்கள் இருந்த திசையு மறியான் என நாம் துணிந்து கூறலாம்.

செல்வர்களுக்குள்ள, சோம்பல், மறதி, முதலிய குணங்கள் இவர்களை அறியா.

இவர்களது எறனைய தோற்றத்தில் ஏதோ ஒரு ஆற்றல் (சக்தி) அமைந்திருக்கிறதென்றே எண்ணுகிறோம். எண்ணத்தைத் திண்ணிதாக்க எத்தனையோ உதாரணங்களைத் தரவியலும்.

> "எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வம் தகைத்து"

என்ற பொன்மொழிக்கு, இவர்களையன்றிப் பிறிதொருவரை எடுத்துக்காட்ட வியலாது. தில்லையம்பதியில் அள்ளி அளித்த எல்லையில் பொருளால் தமிழ்நாட்டின் பெருமையை உலகறியச் செய்தனர். இவர்கள் மரபே வழிவழிச் சிறந்தது; திவான் பகதூர் இராமசாமிச் செட்டியார், திவான் பகதூர் பெத்தாச்சி வள்ளல், சர் முத்தையா செட்டியார் முதலியோர் இத்தொல்குடிப் பிறந்தவர்களே. அவர்களெல்லாம் மாகாண அளவிற் புகழுற, இவர்கள் மாநிலமெங்கணும் புகழுற்றனர்.

இவர்களை யொப்பவே; இவர்கள் முதல் மகனார் திரு. சர் குமாரராஜா முத்தையா செட்டியாரவர்கள் மேனிலை ஆக்கமும், மேம்பாடுமுற்று வருகின்றனர். அரசியற்றுறையில் இளவரசும், வாணிபத்துறையில் திரு. இராமசாமிச் செட்டி

பழநியப்பா'ஸ் பற்பொடி, கண்டனூர், இராமாதபுரம் ஜில்லா

யாரவர்களும், சமூகத்துறையில் திரு. சிதம்பரம் செட்டியாரவர்களும் ஆற்றல் கைவரப் பெற்ற நன்மக்களாய் விளங்குவது நமக்கு வரம்பிகந்த இன்பம் தருவதொன்ருயிருக்கிறது.

அறுபதாண்டு நிறை அண்ணுமலை வள்ளலாரை நிகர்ப்பார் எவர்? இல்லை என்பது யாமறிந்த உண்மை. உலகத்தில் ஒரே ஒரு நபர்பீல்டு. ஒரே ஒரு பாரி, ஒரே ஒரு அண்ணுமலை வள்ளலார்தான் தோன்ற முடியும். தோன்றுவார்கள். ஏன்? எல்லோரும் இவர்களானல், அது அமர நாடாகவன்ரே ஆகிவிடும்! கல்விச் செல்வம், மக்கட் செல்வம், பொருட் செல்வம் என்னும் செல்வச் சிகரத்தில் வாழும் இவர்கள் குடும்பம், வழிவழிச் சிறப்பதாக! இன்னும் எல்லா வளமும் பெற்று இவர்கள் தெண்ணீர்க் காவிரி மணலினும் பலவாய் வாழியர் என மன மொழி மெய்களால் வாழ்த்தி இறைவன்பால் ஏத்துகின்றேன்.

---

எஸ். எஸ். பாரதியார்

மன்னத குடிப்பிறந்து மன்னுத மாக்கள் பலர்,  
தன்னன் குடிப்பிறந்தார் தாரணியில் மன்னவர்கள்  
என்ன உயர்த்திய சால்பேணி, அறிவாணி,  
மன்னுபுக ழண்ணுமலை மன்னன் வாழியவே.

அறனுற் பெரும் பொருளை ஆக்கி அழியாத  
திறனுர் தமிழின்பம் தேக்கும் திருவுடையான்,  
வறனுர் பசிநோயும் மடிமடனு மடிவிக்கும்  
அறிவார்பல் கலைக்கழக மாளியவன் வாழியவே.

எய்யாத பொன்மழை பெய் எழிலி, இவன் எவரும்  
செய்யா வரியபல செய்பெரிய செம்மல், வளர்  
மெய்யார் நிதிக்கிழவன் வேளாண்மை ஒப்புரவான்  
ஐயா றிரட்டிய வெள்ளணி விழவில் வாழியவே.


# அறிவிப்பு

## அற்புத குணம் நிறைந்தது. அபூர்வ சக்தி வாய்ந்தது

## க்ஷயகுலாந்தக பஞ்ச ரத்ன

பல வருடங்களாய் க்ஷயகாசமென்னும் கொடிய இருமல் வியாதியினல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்போருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

க்ஷயகாசம் ஏற்பட்டு எத்தனை வருடங்களாயிருந்தபோதிலும் சரி 10 தினங்களில் இவ்வரிய மருந்து ஆச்சரியமான குணத்தை யளிக்க வல்லது. ஈளை, இருமல், ரத்தகாசம், கஷ்டசுவாசம், கபக்கட்டு, அதனல் மார்புவலி, வாந்தி, சுவாசக் குழாய், நுரை ஈரல் கோளாறுகள், அவ்விடத்திலேற்பட்ட விரணங்கள், க்ஷை நோய்க்கிருமிகள், எல்லாவற்றையும், ஒருங்கே அகற்றி, சுவாசாசயத்திற்கும் ஹிருதயத்திற்கும் சிறந்த பலத்தை இம் மருந்து கொடுக்கவல்லது.

க்ஷயகாச வியாதிகளில் எத்தகைய மருந்துகளாலும் சிகிச்சைகளாலும் குணத்துக்கு வராமல் தினந்தோறும் மாலை நேரங்களிலும் சிலருக்கு உற்ற நேரங்களிலும் உண்டாகும் (டெம்பரேச்சர்) சுரத்தையும் அசாத்திய குணமென்பர். இவ்வித அசாத்திய நிலைமையிலும் 15 அல்லது 20 தினப் பிரயோகத்தில் சுரத்தைப் படிப்படியாய் அறவே அகற்றி வாந்தி இரவில் நித்திரை பங்கம் க்ஷை வியாதியினல் வயிறு குடல் புண் பட்டு உண்டாகும் வயிற்றுப்போக்கு சீதபேதி முதலிய கெட்ட குணங்களையும் பூர்ண குணமடையச் செய்வதில் இதைவிடச் சிரேஷ்டமானதும் இணையற்றதும் உத்தரவாதமுள்ளதுமான மருந்து கிடைப்பதரிது. இம்மருந்தில் பெரும்பாகம் தங்கம் சேர்த்திருப்பதால் மருந்தை சாப்பிட ஆரம்பித்ததுமுதல் நல்ல பசி தீபனமும் ரத்த விர்த்தியுமுண்டாவதையும் 10 தினங்களில் நிதர்சனமாய் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

மேற்கண்டபடி கஷ்ட சாத்தியமான வியாதிகளை பூர்ணமாய் குணப்படுத்தியிருப்பதற்கு எங்களிடம் ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்களிருக்கின்றன. அதிலும் நற்சாக்ஷிப் பத்திரங்கள்தான் அதிகம்.

**20 நாள் மருந்தின் விலை ரூ. 15—0—0**

**டாக்டர் என். வி. பொன்னுசுவாமி நாயுடு, எல். ஐ. எம்.**

ரிஜிஸ்டர்டு மெடிகல் பிராக்டிஷனர், ஆத்தங்குடி போஸ்ட், செட்டிநாடு S.I.Ry.

Supplement to INDIRA issue dated 1-10 41



# அருந் திருப்பணிகள்

பரிதிமால் தில்லை

திருப்பணி என்பது பெரும்பாலும் தற்போது ஆலயம் கட்டுதலையும், புதுப்பித்தலையுமே குறிப்பிடுகின்றது. மக்களின் முத்திவழிக்குச் சாதனமாகிய ஆலய வழிபாட்டைச் சிறந்த மார்க்கமாகப் பெரியோர்கள் கொண்டார்களாகலின், திருப்பணி என்னும் திரு=உயரிய, பணி=வேலை, ஆலயம் கட்டுவதும் புதுப்பித்தலுமே என உயர்வாகச் சிறப்பித்தனர். ஆலயத்துள் நின்று அன்பர்க்கருளும் கடவுள் தன்மையை, முற்றும் கற்றுணர்ந்தாரன்றி, ஏனையோர் எளிதிலறிவது இயலாததாம். கடவுள் — எல்லாவற்றையும் கடந்து நிற்பவர், என்பது பொருளாம். அறியாமையாகிய அனைத்தையுங் கடந்து அறிவு மயமாய்த் திகழுங் கடவுள் தன்மையை, அறிவு நிரம்பிய அறநூல்களின் மூலம்தான் அறிந்தின்புற ஏதுவாகும். ஆகவே, ஆலயத் திருப்பணிக்கு அடிப்படையாக விளங்கும் திருப்பணி, மக்கட்கு அறிவு விளக்கம் அளிக்கவல்ல **கல்வி நிலயங்கள்** நிறுவுவதே யாம்.

இதையே நமது கவிச் சக்கரவர்த்தியாம் **ஸ்ரீ. சுப்பிரமணிய பாரதி**யாரும், “இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல், இனிய நீர்த்தண் சுனைகளியற்றல், அன்னசத்திர மாயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி யொளிர நிறுத்தல். அன்ன யாவினும் புண்ணியங்கோடி- ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்” என்று திறம்படக் கூறினர். பாரதியாருடைய கருத்தைக் கொண்டு நோக்கின், மேற்சொல்லிய, ஒவ்வொரு செயலும் அறச்செயலே யாயினும், மக்கட்கு எழுத்தறிவிப்பதாகிய செயலே சிறந்த திருப்பணியாம் என்பதும், அதுவே மேம்பட்டதென்பதும் நன்கு புலனாகின்றது.

“**தில்லைக்காடு**” என்று புராணங்களில் மிகக் கொடூரமானதாக வருணனை செய்யப்பட்ட காட்டின் புதர் மரஞ் செடி கொடிகளை யழித்துப் பெரிய நாடாக்கி, மாடமாளிகை கூடகோபுரங்களமைந்த **அண்ணாமலை நகர்** ஆக்கி, ஆங்கு இன்னறுங் கனிச்சோலைகள் செய்தும், இனிய நீர்த் தண்சுனைகளியற்றியும் சிறப்பித்தார். ஏற்கெனவே, தில்லை வெளியாம் சிதம்பரத்தில் அன்னசத்திரம் அமைத்து ஆருயிர் மருந்தாம் அன்னத்தை அரும் பசியுற்றோர் அனைவர்க்குமிட்டு, அவர்கள் உள்ளம் குளிர்ந்து உடல் பூரித்து, அவர்கள் செய்யும் வாழ்த்துப் பேரொலியையே இன்பமாகக் கொண்டார்! அம்பல வெளியிலே ஆனந்தத் தாண்டவமாடும் நடராஜப் பெருமானுக்கு அழகிய திருப்பணியை முன்னோர் வழிவழியாய்த் தாமும் தொடர்ந்து நடத்தி, தில்லைக் கோவிந்தராஜப் பெருமாளுக்கும் எல்லையற்ற இன்பத்தை யுண்டாக்கினார்! இத்தருமங்களெல்லாம் அதனதன் தகுதிக்கேற்ப, புண்ணியத்தையும் புகழையும் கொடுத்தது என்றாலும், பாரதியாரின் புனித வாக்கின்படி மேற்கண்ட எல்லா அறத்தினும் புண்ணியங்கோடி பெற்றதும், புகழ்மிகக் கொண்டதும், உலகிலேயே குன்றின்மேலிட்ட தீபம்போலப் பேரொளி வீசித் திகழ்வதுமான சிறந்த தருமமாம் **அண்ணாமலை சர்வகலாசாலை** நிறுவிய சிறந்த பணியைச் செய்தார்! அவர் யார்?—யாரென்பது நேயர்களுக்கு இதுவரை தெரியாமலிருப்பதற்கில்லை; ஆம்! அவர்தாம் **நமது செட்டிநாட்டரசர், டாக்டர் ராஜா சர் சா. ராம. மு. அ. அண்ணாமலை செட்டியார்**, Kt.LL.D., அவர்களாவர்.

நமது செட்டிநாட்டு ராஜா அவர்களைப் பொதுவாக உலகம் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறதென்றாலும், சிறப்பாகத் தமிழ் மக்கள், தமிழ்த் தாயின் தவப் புதல்வராக, தமிழ் உலகையே உய்விக்கவந்த ஓர் அவதார வள்ளலாகக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளனர். கோடி கோடியாய்ப் பொருள் குவித்துக் குபேரர்களாக இவ்வுலகத்தில் பலர் வாழ்ந்துகொண்டிருப்பினும், நமது ராஜா அவர்கட்குக் கிட்டிய பேரும் புகழும் வேறு எவர்க்குங் கிட்டிலது. காரணம், மேற்கூறிய அறிவு நிறைந்த அறச்

ஏழைகட்கும் தனவந்தர்கட்கும் ஏற்றது எல். பழனியப்பா’ஸ் பற்பொடி

செயல்களே யாம். இன்னும் அவர், சமயம் வாய்க்கும்போ தெல்லாம், கல்விச் செல்வத்தின் பொருட்டுக் கார்மேகம் போன்று கனக மழை பொழிகின்றார். சமீப காலத்திற்கூட, **தமிழ் சங்கீதக் கலையை** முன்னேற்றுவதற்காகப் பதினாயிரம் ரூபாய் கொண்ட நிதிக் குவியலைத் தமிழ் நாட்டார்க்கு நன்கொடையாக அண்ணாமலை சர்வகலாசாலை மூலம் அளித்திருப்பதை நாமெல்லோரும் நன்கறிவோம். தவிரவும், சிதம்பரத்தில் தேவார பாடசாலை யென்ன; ஆங்குக் கோயிலில் ஏற்படுத்தி யிருக்கும் தருமக் கட்டளைக ளென்ன; தமிழ்நாட்டில் பற்பல விடங்களிலும் செய்திருக்கும் தடாகங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், சாலைகள், சோலைகள், ஆலயத் திருப்பணிகள், உபயங்கள், கட்டளைகள் முதலியவைக ளென்ன, இவைகள், நாம் அளவிட்டுக்கூற வியலாத நிலையில் பல்கிப் பெருகிப் பரந்து கிடக்கின்றன. தமிழ்நாட்டில் நடைபெறும் உயரிய பொதுவேலைகள் பலவற்றுக்கும் சிறந்த நன்கொடைகள் பல வரையாது வழங்கிவரும் வள்ளலும் இவரே.

இவரது அரும்பெரும் சேவைகளை நன்கறிந்த அரசாங்கத்தாரும் பல உயரிய பட்டங்கள் வழங்கி, நமது ராஜா அவர்களைக் கௌரவித்திருக்கிறார்க ளென்பதை உலகமே அறியும்.

நமது ராஜா அவர்களிடம், இயற்கையாகவே அரசர்க்குரியஅரசியல் முறை, குணம், கொடை, உற்றார்க் குதவுந் திண்மை, மாற்றார்க்கும் நன்மை செயுந்தன்மை, கற்றாரைப் போற்றும் வண்மை முதலிய அரும்பெருங் குணங்கள் சிறந்து விளங்குவதைப் பலரும் கொண்டாடிப் புகழ்கின்றனர். இவர்களது அறிவுத் திறமையையும், சிறந்த ஞாபகசக்திப் பெருமையையும் பலர் கண்டு அதிசயித் திருக்கின்றனர். ஒரு முறை ஒருவரைச் சந்திப்பின், பல்லாண்டுகள் கழிந்த பின்னும் இவர் அதை மறக்கார். ஓயா உழைப்பிலும், சலியா முயற்சியிலும் சிறந்து விளங்குபவர். மருந்துக்கும் இவரிடம் சோம்பல் காண்பதரிது. தமது தினசரி வாழ்க்கையை ஒரு வரைதுறையான நியதிக்குட்படுத்திக் காலந் தவறாது நடத்தி வருபவர். நாகரிகமிகுந்த மேல்நாட்டவரும் இவரது காலந்தவறாக் காரியங்களைக் கண்டு களிகூறுவர். நமது ராஜா சர் அவர்களிடம் உள்ள, எல்லாவற்றிலும் மேலான பெரிய உயர்ந்த குணமாவது, எந்த இடத்தில் தாம் பழக நேருகின்றதோ அந்த இடத்தின் தன்மைக் கேற்றவாறு தாமும் அவர்களது நிலையிலிருந்து பழகும் அரிய பழக்கமாகும்.

மேற்கண்ட குணங்கள் யாவும் நிறைந்து, பல அருந்திருப் பணிகளை நிறைவேற்றிய தமிழ்ச் செல்வரான **ராஜா சர் அண்ணாமலை செட்டியார்** அவர்களைப் பெற்ற நாட்டுக்கோட்டைத் தனவணிக சமூகம் பெருமிதங் கொள்ள உரிமை கொண்டுளது எனக் கூசாமற் கூறலாம். இத்தகைய பெரியாரான இவர்களது **அறுபதாம் ஆண்டுவிழாக்** கொண்டாட்டம் நாளது **விஷு வருடம் புரட்டாசி மாதம் 12-ந் தேதி** யன்று **செட்டிநாட்டில்** நடைபெறுவதை மட்டிலா மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். இவ் விழாவைத் தமிழ்மக்கள் யாவரும் தங்கள் சொந்த விழாவாகக் கொண்டாடுவதோடு, தமிழ் வள்ளலாகிய ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் திருவும் உருவும் அருளும் பெருகி, இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து, தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும், தமிழ் மக்கட்கும், சமூகத்துக்கும் சிறந்த சேவைகள் செய்யவும், மேலும் பல திருப்பணிகளைப் புரியவும் ஆண்டவன் அருள் பாலிக்கப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

சுபம்.

**பழ வர்க்கங்களுக்கு**

**நகரத்தார்களின் நன்மதிப்புக்குரியது**

மதுரை கீழ ஆவணி மூலவீதி 7-ம் நெ. கட்டிடத்தில் 3-9-41உ புதன்கிழமை புதிதாக ஆரம்பிக்கப் பெற்றுள்ள

**"மதுரை பழ ஸ்டோரில்"**

அசல் சாத்துக்குடி, ஆப்பிள், ஆரஞ்சி, மாம்பழம், மாதுளை, அஞ்சி, செவ்வாழை, நெய்வாழை, நமரை, மலைவாழை, திராட்சை, பலா, பப்ளிமாஸ், முதலிய பழவர்க்கங்களும்,

முட்டைக்கோஸ், காலிபிளவர், பட்டாணி, பீன்ஸ், காரட், பீட்ரூட், நூக்கல், முள்ளங்கி சவ்சவ், முதலிய காய்கறிகளும்,

கருணை, உருளை, முதலிய கிழங்குகளும் சகாயமான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.

கலியாணம், புதுமை, சாந்தி முதலிய விசேஷங்களுக்கு ஆர்டர்களுக்குக் குறித்த காலத்தில் சரக்குகள் சப்ளை செய்யப்படும்.

**THE MADURA FRUITS STORE.**

மனதிற்கு உற்சாகம் அளிப்பது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

# என்று திருந்தும்?

*நீலாவதி ராமசுப்பிரமணியம்*

"நல்ல தோர் வீணை செய்தே அதை நலங் கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" என்றார் பாரதியார். ஆம்! நல்லதோர் வீணைகள் - நலம் மிகுந்த வீணைகள் - அழகமைந்த வீணைகள் புழுதியி லெறியப்பட்டதாகவே போய்விட்டன. மற்றப் பகுதிகளில் மற்ற சமூகங்களில் காணப்படும் அடிமைத்தனமும் நிர்ப்பந்தமும் செட்டி நாட்டுப் பெண்களுக்குக் கிடையவே கிடையாது. எல்லா உரிமைகளும் தாராளமாகவே வழங்கப் பட்டுள்ளன. (ஒன்றிரண்டு நீங்கலாக.) மற்ற சமூகப் பெண்கள் படும் அல்லல்களில் நூற்றில் ஒரு பங்கு கூட இங்கு இல்லை. இதை வேடிக்கையாகவோ அல்லது வலிந்தோ சொல்ல வில்லை. எனது அநுபவத்தையே கூறுகிறேன். ஒரு வேளாளர் குடும்பத்தில் பிறந்த பெண் நல்ல செல்வமாக வளர்க்கப்பட்டு சிறந்த கல்வியும் கொடுக்கப்பட்டு சிறப்பாகக் கல்யாணமும் நடந்தது. ஏதோ சீர்வரிசை தகராறு வந்து சம்மந்திகளுக்குள் மனத் தாங்கல் முற்றி பெண்ணைப் பிறந்த வீட்டிற்கு அனுப்புவ தில்லை யென்று முடிவு கட்டிவிட்டார்கள். மூன்று வருஷங்கள் முடிந்தும் பெண் பிறந்த வீட்டை எட்டிப் பார்க்க முடியவில்லை. அதுமட்டுமல்ல. வசைமொழி தாங்காது. நாள்முழுவதும் பட்டினி கிடந்தாலும் ஏனென்று கேட்பார் எவருமில்லை. சுயேச்சையாக அடுத்த வீட்டிற்குக் கூடப் போகமுடியாது. இந்நிலையில் அப்பெண்ணின் வாழ்க்கை எப்படியிருக்குமென்பதை ஒவ்வொருவரும் ஊகித்துக் கொள்ள வேண்டியது தான். இதுபோல் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இந்தக் கொடுமைகள் இங்கு இல்லாமல் இருப்பது ரொம்பவும் மகிழ வேண்டிய விஷயம். சுயேச்சையும் பொருள் வசதியும் மிகுந்திருந்தும் **வாழ்க்கையில் உயர்வு காண்பதாகத் தெரியவில்லை.** பெண்கள் மனது வைத்தால் செட்டி நாடு சீர்படுவதற்கு ரொம்ப நாள் ஆகாது. பல ஆண்டுகளாக சீர்திருத்தம் பேசிப் பேசிச் சலித்த பாட்டைத் தவிர காரியங்கள் நடைபெற்றதாகத் தெரியவில்லை. சாரதா சட்டத்தை சபித்துக் கொண்டே நாள் எண்ணுவதில்தான் இருக்கிறார்கள். பாலிய விவாகத் தடை ஒழிப்பு அந்த அழகில் தான் நடைபெறுகிறது.

வாழ்க்கையிலுள்ள சில விஷயங்களைக் கவனிப்போம். எல்லா சவுகரியங்களும் நிறைந்திருந்தும் வாழ்க்கை வனப்புடையதா யிருக்கவில்லை வாழ்க்கையில் பெரும் பங்கு சண்டைகளிலும் குறைகளிலுமே கழிகின்றன. எங்கும் குறை சொல்லத்தயங்குவ தில்லை. இதெல்லாம் சாமான் விஷயத்தில் தான் வருகிறது. பொதுவாக இங்கே ஒருவர்சாமானைப் பார்த்து மற்றவர்கள் வாழ்கின்ற நிலையி லிருக்கின்றார்களா? இல்லை. அவரவர் சாமானே ஏழேழு தலைமுறைக்கும் காணும். இன்னும் கையில் பணமும் இருக்கிறது.; வேண்டும் போது வேண்டியது வாங்க! இந்நிலையில் ஏன் இத் தொல்லைகள்? மற்ற சமூகங்களிலும் இக் கொடுக்கல் வாங்கல் வியாபாரம் இல்லாமலில்லை. ஆனால் வாழ்க்கையே இதற்காகத் தான் என்ற நிலைமையில் அவர்கள் நடந்து கொள்ள முற்பட வில்லை. ஒரு காலத்தில் இவ் வேற்பாடுகள் பல காரணங்களைக் கொண்டு வைத்திருக்கலாம். முன் நாளில் கடைகள் போக்கு வரத்து சாதனங்கள் அவ்வளவாக இல்லை. அதை முன்னிட்டு ஒருவர்க் கொருவர் உதவி புரியும் முறையிலே இவைகள் வந்திருக்கலாம். ஆனால் இக்காலத்திலோ எடுத்த இடமெல்லாம் கடைகள். நினைத்த நேரத்தில் வாங்கியும் விடலாம். இன்றும் அதையேபிடித்துக்கொண்டு இருப்பது உதவி செய்வதற்குப் பதிலாக உபத்திரவம் பெருகுவதற்குத் தான் வழியாயிருக்கிறது. இந்தச் சாமான் முறையே அடியோடு நிறுத்தப் படவேண்டும்.

ஆனால், இதை முதலில் அமுலுக்குக் கொண்டு வருவது யார்? வேறு யார் வருவார்கள்? பெரிய இடத்தி லிருந்துதான் முதலில் வரவேண்டும். ஏழை இரண்டு ரூபாய் துணி வாங்குவது பெரிய காரியமல்ல; பணமுள்ளவர்கள் அதைச் செய்தால் அது எவ்வளவு பேர் பெற்றுவிடும்! இல்லாதவர் செய்கை என்றைக்கும் ஒரே தன்மையதுதான். இந்தக் கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தி லுள்ள லாப நஷ்ட மெல்லாம், தொந்திரவுக ளெல்லாம் பெண்மக்களையே சேர்ந்தது. இதனால் வரும் தொல்லைகளுக்கு எல்லையே யில்லை. "பிள்ளைக் காரன் பிள்ளைக் கழுதால் வீரகுடியான் காசுக் கழுதான்" என்று ஒரு பழமொழி உண்டு. அச் சமாசாரம் இதில் ரொம்பச் சரியா யிருக்கும். இதிலிருந்து விளைவதுதான் குறை மயமான வாழ்க்கை.

பாரதாடு புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்போடி ஒன்றையே!

வாழையடி வாழையாக இது பெண்மக்களிடையே வளர்ந்து வருகிறது.

ஒரு பெண்குழந்தை பிறந்ததிலிருந்து தாயார் சாமான் சேர்க்கும் வேலையில் ஈடுபட்டு விடுகிறாள். ஏன்? அவர்கள் வீட்டில் அப்படிச் செய்திருந்தார்கள், இவர்கள் வீட்டில் இப்படிச் செய்திருந்தார்கள்; நாம்மட்டும் என்ன சொத்தையா? நாமும் அது போல், அல்லது அதற்கு மேல் வைக்காவிட்டால் நாலு பேர் குறை சொல்வார்கள். ஆகக் குறைக்குப் பயந்து குறையே செய்வது. தாய் செய்தாள். மகள் செய்கிறாள். பெண் செய்யப் பாடுபடுகிறாள். பார்த்திருந்தோர் கேட்டறிந்தோர் பின்னும் செய்ய முந்துகிறார்கள். பணம் எங்கிருந்தோ, யாரோ, எப்படியோ கொண்டு வருகிறார்கள். இதனால் வாழ்க்கையில் ஏதேனும் சுகம் அல்லது சிறப்பு இருந்தால் இவ்வளவு தூரம் வருத்தப்படவேண்டியதில்லை. வீண் பெருமையும், வெட்டிச் சண்டையும் பெருகும் போது அதையேன் கைவிடக்கூடாது? என்று தான் யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன். இந்த வேண்டாத ஆசைகளையெல்லாம் இனி பெண் குழந்தைகளுக்கு ஊட்டவே கூடாது. பெண் குழந்தைகளை நல்ல முறையிலே கல்வி கற்பிக்கச் செய்து இவ்வாகாத காரியங்களைச் செய்வதினின்று அப்புறப் படுத்திவிட வேண்டும். இன்று சிலர் சொல்கிறார்கள்: சாமான் வைப்பது ரொம்பக் குறைந்துவிட்டது என்று. குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தினாலா குறைந்தது? ஏதோ காரணம் குறைந்தது. இன்னும் இந்த யுத்த காலத்தில் சாமான் கிடைப்பதே திண்டாட்டம். அதனால் குறையத் தானே செய்யும்? சிலர் சாமான் கொஞ்சம் வைத்துப் பணமும் கொடுக்கிறார்கள். இது, "ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்ற கதை தான். சில நாள் சென்றால், இதுவும், பெருமாள் பெத்த பெருமாள் ஆனது மாதிரி சாமானும் கொடுத்துப் பணமும் கொடுப்பதென்பது வழக்கமாகிவிடும். இது என்ன: பெரிய தலை போகிற காரியம். இதனால் சமூகத்திற்கு அவ்வளவொன்றும் நஷ்டமில்லை, என்று சிலர் கூறலாம். அதை நான் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. பெண்களிடம் பழகினால் இவைகள் எவ்வளவு கொடுமை நிறைந்தவையென்பது நன்கு தெரியும். இன்றும் வீட்டிற்கு வந்த மருமகள் சாமான் கொண்டு வந்தது சரியில்லையென்று இந்த மாமியார்கள் படுத்தும் பாடு இருக்கிறதே! அதை எழுதினால் ஒரு புராணமாகவே ஆகிவிடும். தன் வீட்டில் எத்தனை அறைகளில் சாமான்கள் அடைத்து வைத்திருந்தாலும், அதோடு இதுவும் வந்து அடைந்துவிட வேண்டும். ஒன்றும் குறையக் கூடாது. அளவில், அழகில் ஊசி முனையும்


சந்திரா ஆர்ட்

&

போட்டோ ஸ்டுடியோ

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை

தற்கால நவநாகரிகத்திற்கு ஒப்ப எங்கள் கலர் என்லார்ஜ்மெண்ட், ஆயில் பெயிண்ட், சிறந்த முறையில் போட்டோக்களும், சினிமா திரைகள், சினிமா சிலேட்கள், எனமல் போர்டுகள் முதலிய வேலைகளும், பழைய போட்டோ படங்களிலிருந்து ஆச்சரியப்படும்படியான என்லார்ஜ் செய்யக் கூடும்.

உருவ சிலை கலர்களும் செய்யக்கூடும்.

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

G. R. சந்திரன்.
புரொப்ரைட்டர்.

விவேகாநந்தா பிரஸ்

தளவாய் தெரு : மதுரை

நாகரிகமான

- ★ அச்சு வேலைகள்
- ★ லைன் போட்டோ பிளாக்குகள்
- ★ ரப்பர் ஸ்டாம்புகள்

முதலியன சகாயமாக செய்து குறிப்பிட்ட நேரத்தில் கொடுக்கப்படும்

1942-ம் வருட
விவேகாநந்தா ஆபீஸ்
காலண்டர் & டைரிகளையே
வாங்குங்கள்

மாறிவிடக் கூடாது. ஆக, பெண் மக்கள் வாழ்க்கை சாமான்களுக்கே அர்ப்பணமாக்கப் பட்டது.

**பெண்களென்றால் சாமான். சாமானென்றால் பெண்கள்.** அவர்களுக்கதுவே லட்சியம். ஒருவர்க்கொருவர் கசக்கிப் பிழிந்து காட்சி யமைக்க வேண்டியது. இத்தொண்டில் பல பெண்கள் நன்கு தேறி யிருப்பார்கள். அந்தோ! இத் தேர்ச்சியால் அவர்கள் சமூகத்திற்கோ, நாட்டிற்கோ ஏதாவது நன்மை யுண்டா? தீமையைத் தவிர!

"மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்,
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்,"

என்ற வீர பாரதியின் வசனம் மெய்யாகி சமூகம் மேனிலை யடையப் பெண் மக்கள் முன் வருவார்களா? என்னுடைய கவலை யெல்லாம், சென்றது செல்ல இன்றாவது நல்வழியில் நாட்டம் கொள்ளப்படாதா? என்பதுதான். சகோதரிகளே! உங்கள் சுயேச்சை, உங்கள் உரிமை, உங்கள் பொருள் வசதி யெல்லாம் விழலுக் கிறைத்த நீராகிறதே! வேதனைக் குறைவிடமாகிறதே! நல்வழியில் உபயோகித்தால், நாமும், நாடும், நம் குலமும் எவ்வளவு நன்னிலை யடைவோம்? இதை என்று நீங்கள் உணரப் போகின்றீர்கள்! இந்த நாள் சென்றாலும் வரும் சந்ததிகளாவது உலகம் போற்ற வாழ வகை செய்யுங்கள். உங்கள் பெண் குழந்தைகளைக் கல்விச் சாலைக்கு அனுப்பி கற்கச் செய்யுங்கள். அருகிலுள்ள கல்லூரியைப் பெண்களின் லட்சிய நிலையமாகப் பிரகாசிக்கச் செய்யுங்கள். வாழ்க்கையில் நாமே வலியத் தேடும் இவ்வம்புச் செயல்களை உங்களோடு நிறுத்தி விடுங்கள். எதிர் காலப் பெண்கள் இவைகளிற் சிக்கி அல்லற் பட அநுமதிக்காதீர்கள். பழைய உலகம் சற்று எரிந்து விழுந்தால் பாதகமில்லை. அவர்களை உங்கள் பரிதாபப் பார்வையால் மடக்கி விடுங்கள். எந்த விஷயத்திற்கும், எந்த நல்ல வேலைக்கும் முதலில் கொஞ்சம் ஆட்டமும் பாட்டமும் இருக்கத்தான் செய்யும். அதைக் கண்டு மலைத்தால் அப்புறம் மீள்வதற்கு வழியே யிருக்காது. ஆரம்பத்தில் பெண்கள் மிதியடி போட ஊர் அல்லோல கல்லோலப் பட்டது யாருக்குத் தெரியாது? இப்போது நூற்றுக்கு நூறு பேர் போடவில்லை யென்றாலும், ஆட்சேபிக்க அவ்வளவு தைரியம் இல்லை. கல்லூரியில் பெண்களை விட இன்னும் வருத்தமாகத்தா னிருக்கிறது. ஆனாலும், பழைய நிலைமை இல்லை யென்பது அதன் இன்றைய வளர்ச்சியி லிருந்தே தெரிகிற தல்லவா? இவ்வளர்ச்சியும் போதாது. மனமும் போதாது. செட்டி நாட்டில் எத்தனையோ, ஆலயங்கள், சத்திரங்கள், ஸ்தாபனங்கள் இருக்கின்றன. பெண்களுக்கு இம் மாதிரி ஒரு புனித இடம் இதுவரை இல்லை. இக்குறை இப்பொழுது சிறிது சிறிதாகத்தீர ஆரம்பமாகி யிருக்கிறது. ஒரு குடும்பத்தின் நல்வழிக்குப் பெண்ணே பிரதானம். அதை அறியாமல், பெண்ணைக் கழிவுப் பொருளாக எண்ணி ஒதுக்குவதென்பது பைத்தியக் காரத் தனமாகும். சிறு வயதி லிருந்தே, அன்பு, நல்லொழுக்கம், நற்கல்வி, கடமை இவைகளை ஊட்டினால், பெண், வாழ்க்கையில் முக்கிய ஸ்தானத்தையே வகிப்பாள். அதன்றி, "முன்னோடும் வாய்க்கால் பின்னோடும்." என்ற தன்மையில், ஆசை, ஆடம்பரம், வீண் பெருமை, படிப்பின்மை, ஆகியவை மலிந்தால், வாழ்க்கை வரண்ட நிலமாகவே யிருக்கும். பெண்ணுயர, வாழ்க்கை வளமடைய, இல்லறம் இனிது நடக்க, பெண் மக்கள் உத்தம வழிகளை சித்த மேற் கொள்வார்களாக!

Visit! Visit!! Visit!!!
When You Visit Pudukotah Don't Fail

★ ★
D.K.A. AZEEZE TAILORS
GENTS & LADIES
TAILORS
Nice Work Low Charge. Prompt Delivery
East Main Street
PUDUKKOTTAI.

பற்பொடிகளில் சிறந்தது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே




நண்ணியம் படைத்த புண்ணிய பூமியாகிய — இப் பரத கண்டத்தின் தென்னாடாகிய இந் நன்னாடே "தமிழ்நா"டெனப்படுவதும், இதில் வாழ்ந்த நம் முன்னோர்களே "தமிழர்" எனப் படுவோரும் ஆவர். இச்சிறந்த தமிழ் நாடு, பண்டைக் காலத்தில் எவ்வெவ்வகையால் சிறப் புற்றிருந்தது என ஆராய்வோம். இத் தமிழ் நாடு, சேர சோழ பாண்டியர்கள் அரசாட்சிக் குட்பட்டிருந்ததுபற்றி, அப் பெயர் கொண்ட மூன்று நாடுகளாகப் பிரிக்கப்பட் டிருந்தது. இம்மூன்று நாடுகளையும் அவ்வவ் வரசர் வழித் தோன்றிய அரசர் பலரும் ஆண்டார்கள். அன்னோர் நம் நல்லிசைப் புலவர் மக்களை நன்கு மதித்து, அவர் சொற் கடவாது ஒழுகி வந்தார்கள். புலவர் பெரு மக்களும் அரசர்களிடத்து நன்றி யறிவுடையவர்களாகி வேண்டுவன வாய உறுதி மொழிகளைக் கூறி வந்தார்கள். அக்காலத்து அரசர் பலரும் நன்கு புலமை பெற்றிருந்ததே புலவர்களை யாதரித்தற்கும், அவர் சொல் அருமை அறிந்து நடத்தற்கும் சிறந்த காரணமாயிற்று. அவ்வரசரும் புலவரும் பண்டைக் காலத்தே, நமக்குச் சிறந்த நிதியாகப் பாடித் திரட்டி வைத்துள்ள செய்யுள்கள் பல. அவைகளைப் புற நானூறு, அக நானூறு, பத்துப் பாட்டு, ஐங்குறு நூறு, முதலிய நூல்களைக் கொண்டு அறியலாம். அவைகளே பண்டைக் காலத்து நம் நாடு இருந்த நிலையை அறிவதற்குப் போதிய சாதனங்களாம். அவைகளுள் பத்துப் பாட்டுள், "பட்டினப் பாலை" என்று ஒரு பாட்டுள்ளது. அது "கடியலூர் உருத்திரங் கண்ணனார்" என்னும் புலவர் பெருமான் பாடியது. இதில் "கரிகால் பெரு வளத்தான்" என்னும் சோழனது பராக்கிரமமும் செங்கோலும் அழகாகக் கூறப்பட்டிருப்பதோடு, சோழ நாடும் காவிரி நதியும் மிகச் சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளன. இதில் "**காடு கொன்று நாடாக்கி, குளந்தொட்டு வளம் பெருக்கி, பிறங்கு நிலை மாடத் துறந்தைபோக்கி, கோயிலொடு குடிநிறீஇ, வாயிலொடு புழையமைத்து, ஞாயிறேறும் புதை நிறீஇ,**" என்றுள்ள பகுதியில் கரிகால் பெரு வளத்தான் தன்னுடைய ஆட்சிக் காலத்தில், காடுகளை அழித்து, நாடு உண்டுபண்ணி, பழைய ஊர்களைப் புதுப்பித்து, புதிதாக அநேகம் பட்டினங்களை நிருமித்து, அநேக குளங்களும் கால்வாய்களும் வெட்டி, விவசாயிகளின் நலத்தைப் பெருக்கி, கோயிலமைத்து, தன் இராஜதானியைச் சுற்றி மதிலெழுப்பி, தேசத்தைப் பாது காத்தான் என்று கூறியிருத்தலால், அக்காலத் தரசர் தேச நலத்தைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்து வந்ததும், சிறந்த நாகரிக முடையதாகச் செய்ததும் நன்கு விளங்கும்.

இவனுக்குத் தலைநகராக இருந்தது "பூம்புகார்" என்னும் காவிரிப்பூம் பட்டினமாம். இது, கப்பற் றுறைமுகப் பட்டினமாக அக்காலத்து மிகச் சிறந்து இருந்தது. அந்நிய நாடுகளிலிருந்து குதிரைகளும், மிளகு பொதிகளும் வேறு பலவும் வந்திறங்கின. பலபொருள்கள் ஏற்றுமதியாயின. இதனை, "நீரின் வந்த நிமிர்பரிப்புரவியுங், காரின் வந்த கருங்கரி மூடையும்" என்பன வாதியாகவுள்ள அடிகளால் அறியலாம். "அரியவும்" என்பதற்கு சீன முதலிய இடங்களினின்றும் வந்த கருப்பூரம், பனி நீர், குங்குமம் முதலியனவும் என 'உரையாசிரியர்' எழுதியிருப்பது கவனிக்கத் **தக்கது.** இப்பட்டினத்தில் கப்பல்கள் திசைமாறிப் போகா திருத்தற்பொருட்டு "தீபஸ்தம்பங்கள்" வைக்கப்பட்டிருந்தன. இதனை இப்பொழுது ஆங்கிலத்தில் "லயிட் ஹவுஸ்" என்று சொல்லுவர். அக்காலத்தில் "கலங்கரை விளக்கம்" எனப் பெயரிட்டிருந்தனர். இதனை "இலங்கு நீர் வரைப்பில் கலங்கரை விளக்கமும்" என்ற சிலப்பதிகார வடியிற் காண்க. பண்டக சாலைகளில் அளவில்லாது வந்து இறக்குமதி ஏற்றுமதி

எல்லோரும் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

யாகும், பண்டப் பொதிகளின் மீது சோழரது அடையாளமாகப் புலிப் பொறி பொறித்தலும், சுங்கம் கொள்ளுதலும் வழக்கமாக இருந்திருக்கிறது என்பது.

> " நிலத்தினின்று நீரப்பரப்பவும், அளந்தறியாப் பலபண்டம்
> வரம்பறியாமை வந்தீண்டி, அருங்கடி பெருங் காப்பின்
> வலியுடை வல்லணங்கின் நோன், புலிபொறித்து புறம்போக்கி "

என்ற அடிகளால் அறியக் கிடக்கின்றது. சுங்கங்கொள்ளும் உத்தியோகஸ்தர்களை 'நல் லிறைவன் பொருள் காக்கும் தொல்லிசைத் தொழின்மாக்கள் எனக் கூறியிருத்தல்கொண்டு அவ்வுத்தியோகஸ்தர்க ளெல்லாம் அரசனுக்கு மிக்க நம்பிக்கை உண்டாகும் வண்ணம் பொருளைச் செவ்வனே பாதுகாத்து வந்தார்களென்பதும், அதனால் நாட்டாராலும் அரசனாலும் நன்கு மதிக்கப் பட்டார்க ளென்பதும் விளங்கும். இங்கு அரசனை "நல் லிறைவன்" எனக் கூறியிருத்தலால் அவர்கள் உழைப்பிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்ப அரசன், சன்மானிக்கும் குணமுடையவனா யிருந்தான் என அறியலாம்.


பாலகவி இராமநாதன் செட்டியார்

வியாபாரத்தின் பொருட்டு, பல அன்னிய தேசங்களி லிருந்து பல மொழிகளைப் பேசுவோர் களாகிய பல சாதியார்கள் வந்து இப் பட்டினத்துள்ளார்களோடு இனிது பழகி இருந்தார்கள். இவர்களைப் "புலம் பெயர் மாக்கள் பல் லாயமொடு பதி பழகிக் கலந் தினிதுறையும்" என்று கூறப் பட்டுள்ளது. இவ்விடத்தில் "மாக்கள்" என்பதற்கு உரை யெழுதுமிடத்து "மாக்கள்" என்றார் ஐயறிவேவுடையராதலின்: என்றது, "சோனகர், சீனர் முதலியோரை" எனவும், கலந்தினிதுறையும் என்பதற்கு, ஈண்டை நன் மக்களோடே கூடி நன்றாக இருக்கும்' எனவும் உரை எழுதப்பட்டிருத்தல் கொண்டு, அத் தேயத்தார்கள் பகுத்தறிவு படைத்தவர்களல்லர் என்பதும், இத்தேயத்து நல்லாரோடு பழகிய பின்பே நல்லறிவு படைத்தனர் என்பதும் ஊகித்தறியக் கிடக்கின்றன. இத்தகைய கப்பற் றுறைமுகப் பட்டினங்கள் தொண்டி, முசிரி முதலியனவாகச் சிறந்திருந்தன, மேலும் பல. நில வியாபாரச் சிறப்பையும் கைத்தொழிற் பெருக்கையும் சிலப்பதிகார ஊர்காண் காதையி லுள்ள மதுரை—அங்காடி வீதிச் சிறப்புப் பகுதியையும், மதுரைக் காஞ்சியிற் கூறப்பட்டுள்ள ஷை பகுதியையும் பட்டினப்பாலை ஆவண வீதிச் சிறப்புப் பகுதியையும் படித்து அறிந்து கொள்ளலாம். எலி மயிரினால் வஸ்திரம் செய்ததாகக் கூறப்பட் டிருக்கிறது. மிக நுண்ணிய நூல்களால் ஆடை நெய்திருக்கிறார்கள். இவற்றைச் சிலப்பதிகாரத்துள்ள, "நூலினும் மயிரினும் நுழை நூல் பட்டினும் பால்வகை தெரியாப் பன்னூறடுகத்து, நறுமடி செறிந்த அறுவை வீதியும்" என்ற அடிகளால் அறிக. இயந்திரங்களெல்லாம் இப்பொழுது அந்நிய நாட்டாரால் நுண்ணிதிற் காணப்பட்டன வென்றும் நம் நாட்டார் எக்காலத்தும் அவைகளை அறிந்திலர் என்றும், போர் செய்யும் வன்மையை யுடையவர்கள் இந் நாட்டில் எப் பொழுதும் இருந்ததில்லை யென்றும், வேறு சில குறைகளையும் நவீன அறிவாளி களிற் சிலர் சொல்லுகின்றனர். அவர்கள் அங்ஙனம்கூறுவதற்குக் காரணம் நம் பண்டை நூல்களில் பயிற்சி யில்லாக் குறையே யன்றி வேறில்லை.

நம் நாட்டார் அக்காலத்து தம் நுண்ணறிவு கொண்டு செய்து கோட்டை மதில்களில் பல வேறு செய்கைகளை யுடைய அளவிலாப் பொறிகளை வைத்திருந்தார்கள். இதனை, 'முழுமுதல் அரணம்' என்பதற்கு அது வஞ்சனை பலவும் வாய்த்து, "தோட்டிமுள்" முதலிய பதித்த காவற்காடும், அதனுள்ளே கிடங்குகள் முதலிய உள்ளுடைத்தாகிய இடங்களும் புறஞ்சூழ்ந்து, யவனர் இயற்றிய பல பொறிகளும், ஏனைப் பொறிகளும், பதணமும், மெய்ப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்த எழுவும், சீப்பும் முதலியவற்றா லமைந்த வாயிற் கோபுரமும் பிற இயந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டதாம் என" நச்சினார்க்கினியர் எழுதிய உரையாலும்

> " மாற்றவர் மறப்படை மலைந்து மதில் பற்றி
> னாற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியும்
> தோற்றமுறு பேய்களிறு துற்று பெரும் பாம்பும்
> கூற்றுமன கழுகு தொடர் குந்தமொடு கோண்மா "

வாய் நாற்றத்தைப் போக்குவதில் சிறந்தது எல். பழனியப்பாஸ்' பற்போடி

என்பனவாதிய சிந்தாமணிச் செய்யுள்களாலும் "சமர்முகப் பொறிகள் மிக்க தடமதிற் குடுமி" என்ற பாரதச் செய்யுள் அடியாலும், சிலப்பதிகாரத்தில் மதுரை மதிலில் வைத்திருந்ததாகக் கூறப்பட்ட, பொறி விசேடங்களாலும் நன்கறியலாம். கம்ப நாடர் இராமாயணத்தில் 'சினத்தயில் கொலைவாள்' என்ற செய்யுளால் கொதுகின் இனத்தையும், உவணத்து இறையையும், இயங்குங்காலையும், இதமல நினைவார் மனத்தையும், எறியும் பொறியுள வென்றால் மற்று இனி யுரைப்ப தென்மன்னோ" என்று மொழிந்துளார். இதனால் நம் நாட்டார் இயந்திரங்கள் செய்தலில் எவ்வளவு தேர்ச்சியடைந்திருந்தார்களென்பதை அறியலாம். மேற் கவியில் சொல்லியபடி காற்றையும், தீச் செயல்களை நினைப்போர்களுடைய மனத்தையும் அழிக்கக் கூடிய இயந்திரங்களை அந்நிய நாட்டார் இன்றும் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை—ஆகாயத்திற் பறக்கக்கூடிய விமானம் செய்யும் விதத்தை இந்தியர் வெகு காலத்துக்கு முன்னரே அறிந்திருந்தார்கள். இதற்குச் "சச்சந்தன்" என்னும் அரசன் தச்சனைக் கூவி "இயந்திரவூர்தி இயற்றுமின்" என ஆகாய வழியாய் செல்லுதற்குரிய இயந்திரம் ஒன்றைச் செய்யும்படி கட்டளை யிட்டதாகவும், "பல் கிழியும் பயினும் துகில், நூலொடு, நல்லரக்கும் எழுகுன் நலன் சான்றன; வல்லனவுமமைத் தாங்கு எழு நாளினுட் செல்வதோர் மாமயில் செய்தனனன்றே" என்றபடி மயிலுருவுடையதோர் இயந்திரத்தைச் செய்து அரசனிடம் கொடுத்ததாகவும், சிந்தாமணியிற் கூறப்பட்டுள்ள சரித்திரம் சான்றாம். இனித் தமிழர் போர் முறையைக் காண்போம். தமிழர் போருக்குப் பசுக்கவர்தலை முதலாகக் கொண்டிருந்தனர். நாள் நிமித்தம் இவைகள் பார்த்தே போருக்குப் புறப்படுவர். போருக்கு முன்னதாக அங்கிருக்கத் தகாதோரையெல்லாம் அகற்றி விடுவார். தோற்றவன் நாட்டை தீக்கிரையாக்கி, கழுதையால் உழுவித்து, வரகு விளைவிப்பர். தம் புண்ணைத் தாமே கிழித்துக் கொண்டு இறப்பர். இவர்களிற் சிறந்த வீரர்களுக்கு, ஏனாதி, காவிதி முதலிய பட்டங்கள் அளிப்பதுண்டு. "மழவர்" என்போர் தற்காலத்துச் சீக்கியர்களைப்போல் அக்காலத்துப் புகழ் பெற்றிருந்தார்கள். அரசாங்கத்தில் "வீர முரசு" என்ற ஒரு முரசு உண்டு. அதனைப்பாதுகாக்கும் விதத்தையும், அது செய்யும் விதத்தையும் அறிந்தால், தமிழர் வீரம் தெற்றென விளங்கும். அக்காலத்தில் தமிழ்த் தாய்மார்களெல்லாம் வீரமில்லாப் பிள்ளைகளைப் பெற்றால் மிக வருந்துவார்கள். இதனை "உன் மிகச் சிறிய புதல்வன் போரிற் புறங்கொடுத்தான்" எனச் சிலர் சொல்ல, "அங்ஙனம் போரிற் புறங்கொடுத் திருப்பானாயின் அவன் பாலுண்ட இத்தனத்தை அறுத்தெறிவேன்" எனக் கோபித்துக் கையில் வாளேந்திச்சென்று போர்க்களம் முழுதும் தேடிப் பகைவரோடு எதிர்த்து நின்று இறந்து கிடந்த தன் மகன் உடலைக் கண்டு, அவனைப் பெற்ற தினத்தில் அடைந்த மகிழ்ச்சியினும் பெரிது மகிழ்ந்தனள்" என்ற பொருளையுடைய "நரம்பெழுந் துலறிய நிரம்பாமென்றோள், முளறி மருங்கின் முதியோள் சிறுவன், படையழிந்து மாறினன் என்று பலர் கூற மண்டமர்க்குடைந்தனன். ஆயின் உண்ட என், முலையறுத்திடுவன் யான் எனச் சினை இக் கொண்ட வாளொடு படுபிணம் பெயரா, செங்களந் துழவுவோள். சிதைந்து வேறாகிய, படுமகன் கிடக்கை காணூஉ; ஈன்ற ஞான்றினும் பெரிதுவந்தனளே" என்பதால் அறியலாம். இனி அதிகச் செலவைத் தருவனவும், மிக்க கேட்டைத் தருவனவும், மனத்தை மயக்குவனவுமாகிய நம்முடைய இப்போதைய உணவுகளைப்போன்ற உணவுகளால் அக்காலத்தார் நாகரிகம் பெறவில்லை. அற்ப நிலத்திலே விளையக்கூடியதும், சொற்ப விலையுள்ளதுமாகிய வரகு முதலியவைகளால் இனிய வுணவுகளைச் செய்து உண்டுமகிழ்ந்து நாகரிகர் என விளங்கினார்கள்.

---


## புலவர் உலகம்

ஆசிரியர் : ஜெகவீர பாண்டியனார்

தமிழ் உலகிற்கு இது ஒரு புதிய விருந்து. மாதம்தோறும் உயர்ந்த பதிப்பில் வெளி வருகின்றது. பண்டைக் காலத் திலிருந்த புலவர் பெருமக்களுடைய அருமைச் சரிதங்களும், கவிச் சுவைகளும், கலைப் பண்புகளும் நிறைந்துள்ளன. சித்திரையில் தொடங்கியது.

முதலில் "கம்பன் கலை நிலை" இதில் கனிந்து வருகின்றது.

இதன் வருடச் சந்தா ரூ. 4-0-0

உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொண்டு தமிழின் சுவையையும் கலைச் செல்வத்தையும் கண்டு மகிழுங்கள்.

விலாசம்

திருவள்ளுவர் நிலையம்
127, மேலமாசி வீதி
மதுரை


பற் பூச்சிகளை ஸம்ஹரிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

Supplement to INDIRA issue dated 1-10-41




பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள்

சான்றோரால் போற்றப்பட்டு வரும் நம் தமிழ் நாடு கொடையில் தலை சிறந்தது என்பதை மறுப்பவரும் உண்டோ! தனக்கென வாழாப் பிறர்க்குரியரான வள்ளல்கள் பலரை ஈன்று மகிழும் பெருமை நம் தமிழ்த் தாய்க்கே வாய்ந்தது. ஆன்றோரை அப்போதைக் கப்போது தோற்றுவித்துக் கொண்டே இருக்கின்றார் நம் தமிழன்னையார். அறச் செல்வி மணிமேகலை யாரை ஈன்றவர் யார்? ஓரறிவு வாய்ந்த முல்லைக் கொடிக்கும் தேரீந்த பாரியாரைப் பெற்றவர் எவர்? சிறு பறவைக்கும் தன் தசையரிந்தீந்த சிபிச்சக்கரவர்த்தியார் எத்தாய் உதரத்துதித்தெழுந்தார்? இங்ஙனம் அறக்கொடியை நட்டு தானமணியையடித்து உலகிற்கு அன்புடையராய்த் திகழ்ந்த தமிழ்ச் செல்வர் பல்லோராவர். இவர்களைப் பற்றிய செய்தியை நீளச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இவ்வாறு நம் தமிழ் மக்கள் பல தானங்களைச் செய்துவரினும், பொதுவாகத் தானங்களுள் சிறந்தது அன்னதானம் எனச் சொல்லப்படும் வழக்கு ஒன்றுண்டு. ஆயினும் இதைக் காட்டிலும் உயரியதும், என்றும் இன்பத்தையே தரக்கூடியதுமான தானம் வேறொன்றுண்டு என்பதை அறிஞர் அறியாமலில்லை. அது, பிறருக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பதனாலும், வாரி வாரி இறைப்பதனாலும், தனக்குப் பல்வகையால் பயன் படுத்திக் கொள்வதனாலும் சிறிதும் குறைவு படுதலில்லை. அதன் பயன் பல பிறவிகளுக்கும் தொடர்ந்து வருமென நூல்கள் பறைசாற்றுகின்றன. அதனால் மக்களுக்கு உண்டாகும் அகமலர்ச்சியும், முகப்பொலிவும் அன்னதானத்தைப் போன்று ஒரு நாளில் குறையுந் தன்மையுடையதல்ல; அவை ஆயுள் மட்டும் குறையாமலிருத்தலே யல்லாமல் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேவரும். இவை மட்டுமோ, அஃது இவ்வுலக நலத்திற்கேற்ற பொருளையும், மறு உலகச் சிறப்பிற்கேற்ற ஞானத்தையும் ஈயும் கருவியுமாகும்! இது யாதோ எனில் அறிஞரால் போற்றப்படும் கல்வியே எனக் கொள்க. இதை ஞான விளக்கெனக் கூறலாம். அன்றியும் இதை ஆன்மாவை ஒளிரச் செய்யும் மங்கல தீபமெனப் பகரினும் குற்றமாகாது. ஈதன்றோ அழியாத் தானமெனப்படுவது.



பண்டிதை கிருஷ்ணவேணி அம்மாள்

இவ்வுலகில் பிறந்ததன் பயனை எய்துதற்குத் தோன்றிய நம் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் இத்தானத்தின் சீர்மையை நன்குணர்ந்துள்ளார்கள். இத்துணைக் கல்வி தானத்தை ஈதற்கு இப்பெரியார் எத்துணை நலம் வாய்ந்த நிலையத்தை நிறுவியுள்ளார்! அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்றன்றோ அதற்குப் பெயர் வாய்ந்துளது! எவ்வளவு சுருங்கிய காலத்தில் எத்தகைய கீர்த்தியைப் பெற்றுள்ளது! அஃது எத்தனைக் கலைகளை வெளிப் பரப்புகிறது! எத்துணை இளைஞரை, எத்துணை பெரியோரைக் கல்வி அறிவில் உருப்படுத்துகிறது! இதற்குள் எத்தனை மாணாக்கரை வெளியனுப்பியுள்ளது! அம்மாணாக்கரின் தமிழறிவு என்னே! அவ்விளைஞர், தம்மை அண்ணாமலைப்

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

பல்கலைக் கழக மாணவர் எனச் சொல்லிக் கொள்ளுதலே தமக்குப் பெருமை எனக் கருதும் பெருமிதமன்றோ அக்கழகத்திற்கு உள்ளது! அஃது மாணவருக்குப் போதிப்பதன் பொருட்டு எத்தனை அறிஞருக்குத் தன்னுள் இடம் கொடுத்துள்ளது! பல்கலை வல்லுனர் பலர், வயதான தம் காலத்தைப் பயனுறக் கழித்தற்குச் செட்டியார் அவர்களின் கழகத்தை யன்றோ நாடிச் செல்லுகின்றனர்! இம்முறையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எத்தனை அறிஞர் மனத்தைக் கவருகின்ற தென்பதை நோக்குக! தமிழ்த் தாயார் அங்குத் தவழ்ந்து விளையாடுகிறார். தமிழே அக்கழகத்தின் உருவம் எனக் கூறல் மிகையாகாது.

இத்துணைச் சீரிய தானத்திற்குத் தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணஞ் செய்துள்ள செட்டியார் அவர்களை யாருக்கு ஒப்பிட்டுக் கூறுவது! இச்செயல் எல்லாராலும் செய்தற்குரியதோ! சில பெரியோர்க்கே இயல்வதாகும்.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்"

என்பது பொய்யாமொழி.

பெரும் பொருள் படைத்தவர் எத்தனைப்பேர் நம் நாட்டில் இல்லை. பொருளிருந்தால் மட்டும் போதுமோ! உயரிய எண்ணம், நுட்ப அறிவு வேண்டாமா! இப்பெரியார் செய்த செயல் கல்லின்மேல் எழுத்துப் போன்றதன்றோ! புலவர் இவரைப் புகழ்ந்து பேசுதற்குச் சொற்கள் கிடைத்தல் அருமையே! பலவேறு தருமங்களும் இவர்பால் முகிழ்த்தெழும்பினும் அவற்றுள் இத்தருமமே தலைசிறந்து நிற்பதாகும். தமிழ்த் தாயார் இவரைப் பார்த்துப் பார்த்து உவகை பூத்து நிற்கின்றார் என்பதில் ஐயம் யாது? இச் சான்றோரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கண்டு உண்மை மகிழ்வுகொள்ளப் போகின்றவர் யார்? தமிழ்த் தாயாரே யாவர்! தம் தவப் புதல்வரின் விழாவைக்கண்டு மகிழ அவரல்லரோ விரைந்து கொண்டிருக்கிறார்! பெற்ற தாயாரை இழந்த இவர் தம்மை வளர்த்த தமிழ்த் தாயாரின் ஆநந்தத்திற்கு ஆளாதல் எத்துணைச் சீர்மையுடையது! இவரல்லரோ உலக நண்பர்! கலைச்சோதரர்! மாணவர் தலைவர்! தமிழ்த்தாயின் அருமருந்தன்ன புதல்வர்!

இத்துணைச் சீர்மைகள் பலவும் வாய்ந்த ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் உடல் வன்மையையும், மனோ ஊக்கத்தையும் ஆன்ம நலத்தையும் பெற்று பல்லாண்டுகள் வாழவும், இவர்களால் இன்னும் பல நற்பணிகள் தமிழ் நாட்டில் ஓங்கி வளரவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.


# புதிய ஜவுளி ஹால்

100 நெ. நூல் சேலைகளில் தற்காலத்திற்கேற்றவாறு பேன்ஸி பார்டர், செக் பேட்டன், பேட்டு, & ஜரிகை தினுசுகளும் நவ நாகரீக, பெங்களூர், காஞ்சீவரம் கை நெசவு பட்டு சேலைகளும் குவிந்துள்ளன. ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

**சூப்பர்ஹான்ஸ் லூம்ஸ் கம்பெனி**
பிரபல ஜவுளி வியாபாரிகள்
37, வெங்கலக் கடைத்தெரு
மதுரை

பற்களை உறுதி செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

Supplement to INDIRA issue dated 1-10-41



# பருந்தும் பாட்டும் அல்லது தமிழ் சங்கீதம்



டி. கே. சிதம்பரநாத முதலியார் பி.ஏ. பி.எல்.

நாற்பது வருஷத்துக்கு முன்பு, ஆங்கில பாஷையை வைத்து எதையும் சாதித்து விடலாம் என்ற சித்தாந்தந்தான் நம்மவர்க்கு. நமக்கு ஒரு ஏகாதிபத்தியமே வேண்டும். சரி, ஆங்கில பாஷை இருக்கிறது. நம்மவர் வாழ்க்கையும் கொள்கையும் சரியாக இல்லை; அதற்கும் ஆங்கில பாஷை இருக்கிறது. பெண்களுடைய வாழ்க்கையை உயர்த்த வேண்டுமா? வெகு எளிய காரியம் அது. ஏதோ பத்துப் பதினைந்து பேரை—ஆங்கிலம் தெரியாத பெண்டுகளைத்தான் கூட்டவேண்டியது, அவர்கள் முன்னிலையில் ஒரு பிரசங்கம் ஆங்கிலத்தில் விளாச வேண்டியது.

இப்படிப்பட்ட யுகத்தில் அதாவது நாற்பது வருஷத்துக்கு முன், தென்காசிக்கு (திருநெல்வேலி ஜில்லாவில் தாலூக்காக் கச்சேரியுள்ள சாமானிய ஊர்) எஸ். கே. நாயர் வந்தார். எஸ். கே. நாயர் அந்தக் காலத்துக் காங்கிரஸ் பிரசாரகர். தலை வெட்டு, முட்டுக் கொடுக்கும் கன்னத்துக்கோர், எல்லாம் பாம்பே வீரரான மேத்தாவின் அச்சுதான். பேச்சோ சுரேந்திரநாத பானர்ஜியின் கர்ச்சனைதான். சுரேந்திரநாத பானர்ஜி என்றால் வாக்கு வன்மையின் அதிதேவதை என்றே சொல்லுவார்கள்.

எஸ். கே. நாயர் ஒரு குட்டி சுரேந்திரநாத பானர்ஜி. பிரசங்கம் செய்வதை நாயர் தொழிலாகவே வைத்து வந்தார். ஒரு பட்டணத்துக்கு வந்ததும் கலெக்டரையும் ஜில்லா ஜட்ஜையும் போய் முதலில் பார்த்து விடுவார். அப்படியேதான் தாலூக்கா செண்டருக்குப் போனாலும் முதலில் தாசில்தாரைப் பார்த்து விடுவார். ஜில்லா கலெக்டரைப் பார்த்த செய்தியெல்லாம் தாசில்தாருக்கும் தெரியும்.

வழக்கம் போல தாசில்தார் பிரசங்கத்துக்கு ஏற்பாடு பண்ணினார். உள்ளூர்ப் பண்ணையார்களையும் பக்கத்து ஊர்ப் பண்ணையார்களையும் கூப்பிட்டு விட்டார். சாயங்காலம் ஆறு மணிக்குப் பள்ளிக்கூடத்தில் எஸ். கே. நாயர் பிரசங்கம் செய்யப்போகிறார். எல்லாரும் வந்து சேர வேணும். நாயருக்கு மரியாதையும் பண்ண வேண்டும், குறைந்தது ஐம்பது ரூபாயாவது கொடுத்தனுப்ப வேண்டும், என்று சொல்லி அனுப்பினார்.

பள்ளிக்கூடத்து ஹாலில் சுமார் அறுபது பேருக்கு நாற்காலி பெஞ்சி எல்லாம் போட்டு, உட்கார இடம் பண்ணி யிருந்தது. கோட்டு தலைப்பாகையோடு சுமார் நாற்பது பண்ணையார்கள் பள்ளிக்கூடத்துக்கு நாலு மணிக்கே வந்து சேர்ந்து விட்டார்கள். அங்கேயே அறுபது ரூபாய் வசூல் ஆய்விட்டது.

ஆறு மணி அடிக்கவும் தாசில்தார், சப் மேஜிஸ்திரேட்டு பள்ளிக்கூடத்து (மூன்றாவது பாரந்தான் உயர்ந்த வகுப்பு) தலைமை ஆசிரியர் ஆகிய மூன்று பேரும் வந்தார்கள். அவர்கள், வந்திருந்த பண்ணையார்களையும் கடை முதலாளிகளையும் ஆசனங்களில் உட்காரச் சொன்னார்கள். எல்லாரும் உட்கார்ந்தார்கள். ஹெட் மாஸ்டரைத் தலைமை வகிக்க ஏற்பாடு செய்தார்கள். "காங்கிரஸ் கூட்டம்" ஆனதால் தாசில்தாரும் சப்மேஜிஸ்திரேட்டும் தலைமை வகிக்கவில்லை.

நாயர் எழுந்து நின்றார். கழுத்து முதல் உள்ளங்கால் வரை, உடை ஒரே தடபுடல்: கழுத்தில் ஸ்டிப் காலர், நெக்டை; கோட்டு, லாங் கோட்டு; விலையுயர்ந்த மோயர் ரகத்தில் தைத்தது; அப்படியே கால் சட்டை, பூட்ஸைப் பற்றிச் சொல்ல வேண்டாம்.

இந்த தோரணையில் எழுந்து நின்று பேச ஆரம்பித்தார். அழகாகப் பேசினார். ஒரு வாக்கியத்தை இடது கோடியைப் பார்த்து ஆரம்

கண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்பொடியை உபயோகியுங்கள்

பிப்பார். வட்டம் சுற்றி விட்டு வலது கோடிக்குப் பார்வை போகவும் வாக்கியம் முடியும். அப்படியே மாறிவரும், அடுத்த வாக்கியம். கைகளை லாகவமாக வீசியும் உயர்த்தியும், பாவங்களைக் காட்டும்போது குறைந்தது நாலு கையாவது கொடுத்திருக்கக் கூடாதா பிரம்மா என்றுதான் சொல்லத் தோன்றும்! வந்திருந்தவர் அறுபது பேராய் இருந்தாலும் பதினாயிரம் பேர் கூடிய மகா நாட்டுக்கே பேசியதாகத் தோன்றும். தொனியும் ஆவேசமும் அவ்வளவு.

ஒன்றே கால் மணி நேரம் பேசி முடித்தார். நவரஸங்களும் பேச்சில் வந்து ஒரு நாட்டியம் ஆடிவிட்டுத்தான் போயின. எல்லாரும் (அறுபத்து மூன்று பேர் ஒரு கணக்கு) ரொம்ப ரொம்ப அனுபவித்து விட்டார்கள். எனக்கா ஒரு வியப்பு. ஹெட் மாஸ்டர், சப்மாஜிஸ்திரேட்டு, தாசில்தார் மூன்று பேருக்குத்தானே இங்கிலீஷ் தெரியும்; மற்றவர்கள் எப்படி அனுபவித்திருக்கக் கூடும், என்று! மேலே சொன்ன மூன்று பேரைத் தவிர மற்றவர்களுக்கு இங்கிலீஷ் அக்ஷரமே தெரியாது. எழுதத் தெரியாவிட்டாலும் பேசத் தெரியுமோ என்று கேட்க வேண்டாம். அவர்கள் ஆங்கிலேயரும் அல்ல சட்டைக்காரரும் அல்ல. வெறும் தமிழர்கள் தான். அவர்களிற் சிலரைப் பேச்சு எப்படி இருந்தது என்று கேட்டேன். ஓ, ரொம்ப நன்றாய் இருந்தது என்று அவர்களும் உற்சாகமாய்ச் சொன்னார்கள். விஷயம் விளங்கியதா, என்று கேட்டேன், விஷயம் தெரியவில்லை தான். இங்கிலீஷில் பேசியதால் தெரியவில்லை. அதனால் என்ன. ஒன்றே கால் மணி நேரம் அல்லவா பேசினார், பேச்சு ரொம்ப ஜோராய் இருந்தது என்று சொன்னார்கள். கொஞ்சம் கூட லஜ்ஜை யில்லாமற் சொன்னார்கள்.



டி. கே. சிதம்பரநாத முதலியார்

இதெல்லாம் நாற்பது வருஷத்துக்கு முன்பு. இந்தப் பட்டிக்காட்டுத் தனத்தை பட்டிக்காட்டுப் பிராந்தியங்களிற் பார்க்க முடியாது இப்போது. ஏனென்றால் நாட்டுப்புரத்தில் உள்ளவர்கள் இங்கிலீஷ் பேச்சை ஒப்புக் கொள்ளுகிறதில்லை. காலஞ் சென்ற எஸ். கே. நாயரே வரட்டும், தள்ளப்பா தள்ளு என்றுதான் சொல்லி விடுவார்கள்.

அவர்களுக்குப் பதிலாகப் பட்டிக்காட்டு ரகத்தைச் சேர்ந்தவர்கள், பட்டணங்களில்தான் இருக்கிறார்கள், மலிந்தே இருக்கிறார்கள்.

ஆங்கிலக் கல்வி நிறைந்த தமிழ்நாட்டு நகரங்களில் நன்றாய்ப் பார்க்கலாம். ஆங்கிலக் கல்விக்காகப் பட்டம் பெற்றவர்கள் அநேகர் சங்கீதக் கச்சேரிக்கு வருகிறார்கள். இப்போது அது ஒரு நாகரிக அம்ஸம். முன் அணியில் உட்காருவார்கள். பாடகர் முதலிலிருந்து மங்களம் முடிய தெலுங்கிலேயே பாடித் தீர்ப்பார். தமிழ்ப் பாட்டென்று ஒன்றும் இராது. முன்னணியில் உள்ளவர்களோ பொறுமையாய்த் தலை யசையாமல் உட்கார்ந்திருப்பார்கள். சில வேளைகளில் தலையசைக்கவும் செய்வார்கள். அனுபவித்து அல்ல. கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது முகத்தில் நன்றாய்த் தெரியும். பார்ப்பதற்குப் பரிதாபமாகவே இருக்கும். இருந்தாலும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். கச்சேரியை அனுபவித்ததாகவே சொல்ல வேண்டும். கொட்டாவி இட்டுக்கொண்டாவது சொல்லித் தீரவேண்டும்?

பட்டிக்காட்டுப் பாங்கு என்பது இது அல்லாமல், வேறொன்றிருக்கவா செய்கிறது?

பாஷை விளங்கவில்லை, சங்கீதம் எல்லாம் வாத்திய சங்கீதமாய்ப் போய்விட்டது என்று சொல்ல தைரியம் வருகிறதில்லை. வாஸ்தவத்தில் தெலுங்கு தெரியவில்லை என்று சொல்லுவதிலும் அது காரணமாக சங்கீதத்தை அனு

பழனியப்பா'ஸ் பற்பொடியே பற்களை கெட்டிப் படுத்தும்

பவிக்க முடியவில்லை என்று சொல்லுவதிலும் யாதொரு அவமானமும் இல்லை. தாங்களே ஒரு அவமானத்தை எழுதி வருத்தித் தலையில் போட்டுக்கொண்டார்கள். இது அவசியமே இல்லை.

ஆனால் சமீபத்தில், மேலே சொன்ன கூட்டத்தில் சிலர் பாட்டின் பொருள் விளங்காததால் தெலுங்குப் பாட்டைக் கேட்பது கஷ்டமாய்த் தான் இருக்கிறது என்று சொல்லி வருகிறார்கள். நல்ல காலந்தான்.

* * *

தியாகய்யர் கீர்த்தனங்களில், பக்தி பாவம் இருக்கிறதென்று ரொம்ப ரொம்பச் சொல்லுகிறார்கள். இருக்கவும் செய்யலாம். ஆனால் பாடுகிறவர் பாஷை தெரியாமல் விஷயம் தெரியாமல் பாடும்போது பக்தி பாவத்தைப் பற்றிப் பேசவும் இடம் இருக்கிறதா? பாடகர் சம்பந்தமாகவே பக்தி பாவத்தைப் பற்றிப் பேச வேண்டாம் என்றால், கேட்பவர்கள், பாஷை தெரியாமல் கேட்பவர்கள், பக்தி பாவத்தை உணர்ந்து விட்டோம் என்று சொல்லுவது ஏமாற்றம் அல்லவா?

இதோடு இன்னொரு படாடோபம்: சங்கீதம் தனியான பாஷை, வழங்கும் பாஷையோடு கலக்க வேண்டாம் என்று சொல்லுவதுதான் அது. இதற்குப் பொருளே இல்லை.

காலஞ் சென்ற வீணை தனம்மாள் பாவங் கொண்ட தமிழ் சங்கீதத்துக்கு உறைவிடமாயுள்ளவர். அவர், தமிழ்ப் பதத்தில் ஒரு சீரையோ இரண்டு சீரையோ பாவம் உருவெடுக்கும் படியாகப் பாடுவார். அதுவே அற்புதமாயிருக்கும். அந்த சாகித்திய உறுப்பையே, உடனே, வீணையில் வாசிப்பார். முன் வந்ததை விட உயர்ந்த சங்கதி உற்பத்தியாய் வரும். அதை நாம் வியந்து முடியாது. அனுபவித்து முடியாது. அவ்வளவு அற்புதமாயிருக்கும். கானம் தேவகானமாகவே இருக்கும். நாம் சங்கீதத்தில் அப்படியே உருகி விடுவோம். வார்த்தையை வைத்து பாவத்தின் வழியை அந்த விதம் காட்டாவிட்டால், வீணையில் வார்த்தையில்லாமல் சங்கதி வரும்போது பாவத்தைக் கண்டு பிடிக்க முடியாது, அனுபவிக்க முடியாது. ஏதோ செவியிலுள்ள சவ்வுக்கு நன்றாயிருக்கலாம்: ஆனால் சங்கீதத்துக்கு உயிராயுள்ள உணர்ச்சியின் ரூபத்தைப் பாராது விட்டு விடுவோம். சாமானியப்பட்டவர்கள் சம்பந்தமாக இது முற்றிலும் உண்மை.

* * *

அபிநயத்தில் அபூர்வமான பாவம் ஒன்றைக் காட்டும்போது, ஒருவன், ஆளை அடையாளங் கண்டுவிட்டேன் என்று எக்களிப்போடு சொன்


உங்களுக்குப் பரிபூரணத் திருப்தியைத் தரவல்லது

காரைக்குடி

**ஆனந்தாஸ் மாவ்யூபாக்சரிங் கம்பெனியாரின்**

கலப்பற்ற காபித்தூள்

தேயிலை, சாப்பாட்டு நெய் தான்.

நிறம், மணம், குணம் நிறைந்தது.

★

நேரில் அல்லது

போன் நே. 60-ல் பேசுங்கள்.



**எல்லாவிதமான**

**தமிழ் புத்தகங்கள்**

**செல்லப்பா அன் ஸன்ஸ்**

**தினமணி கலைமகள்**

**இந்திரா பத்திரிகைகளின்**

**- ஏஜண்ட் -**

குறிப்பு:

மலிவான விலைக்கு படங்களுக்கு கண்ணாடி சட்டம் போட்டுக் கொடுக்கப்படும்


வெற்றிக்கொடி நாட்டியது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

னால், என்ன பொருளோ அதேதான் ஒரு சங்கதியில் அபூர்வமான பாவம் ஒலிக்கவும் அந்த பாவத்தை விட்டு விட்டு இது ஒரு புது சங்கதிதான் என்று சொல்லுவது.

ஸ்ரீமதி ஜெயம்மாள் (தனம்மாளின் அருமைப் புதல்விதான்) தாயுமானவரிலிருந்து "எத்தனை விதங்கள்தான் கற்கினும் கேட்கினும்" என்ற அடியை முதலில் பாவத்தோடு பாடுகிறார். அதாவது உண்மையான உணர்ச்சியோடு பாடுகிறார். பிறகு ஒரு சங்கதி வருகிறது. அது உணர்ச்சியை அதிகரிக்கிறது. பிறகு ஒரு சங்கதி; அதுவும் அப்படியே உணர்ச்சியை அதிகரிக்கிறது. எல்லாம் பாவமான சங்கதிகள். நாம் தாயுமானவருடைய ஏக்கத்துக்குள்ளேயே போய் விடுகிறோம். இதைவிட மேலான காரியம் ஒன்றில்லை சங்கீதம் சாதித்து விடுவதற்கு.

ஆனால் அவ்வளவு சங்கதிகளையும் வீணையிலோ பிடில் வாத்தியத்திலோ, வார்த்தைகளின் சேர்க்கையில்லாமல் வாசிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். ஏதோ ஒருவர் இருவருக்கு அதுவும் முன்னமேயே வாய்ப்பாட்டாகக் கேட்டு அனுபவித்தவர்களுக்குத்தான் சிறிது நேரம் கேட்கலாம். பிறகு சலித்துத்தான் போய்விடும். அப்படியெல்லாம் கேளாதவர்களுக்கு ஏதோ ராகத்தை இப்படியும் அப்படியும் சமாளிக்கிறதாகவே தோன்றிவிடும். நம்மை இது விஷயமாகக் கொஞ்சம் பரீக்ஷைக்கு உட்படுத்திக்கொண்டால் விஷயம் விளங்கி விடும். நமக்குத் தெரிந்த பாஷையின் உதவியில்லாமல் பாவத்தைக் கண்டு விடுகிறோம் என்பது வீணான காரியந்தான் என்று நன்றாய்த் தெரிந்து விடும்.

*　　　*　　　*

இதெல்லாம் காரணமாகத்தான் தமிழர்களுக்குப் பாட்டுக் கச்சேரி வைக்கிறதென்றால் பாட்டெல்லாம் தமிழிலேயே இருக்கவேண்டும் என்று சொல்லுகிறோம். கேட்பவர்களோ,—வார்த்தை, ராகம், பாவம் மூன்றையும் முதலிலிருந்து கடைசி வரையும் பாடுகிறவரோடு இதயத்தை ஒட்டி வைத்து, ஒரு அம்ஸமும் விட்டுப் போகாதபடி கேட்கவேண்டும். பருந்தும் நிழலும் போலக் கேட்கவேண்டும் என்று சொல்லுவார்கள் முன்னோர்கள். இதெல்லாம் வேண்டாம் என்றால் எஸ். கே. நாயரைக் கேட்டுவிட்டு இங்கிலீஷ் தெரியாதவர்கள் வெகு ஜோர் என்று சொன்ன கணக்குத்தான். இது நமக்கு அவமானமான காரியம் அல்லவா?

செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தமிழ் சங்கீதத்துக்காகச் செய்து வரும் அரிய முயற்சியிலிருந்து ஆறு மாசத்துக்குள்ளேயே தனித் தமிழ்ப் பாட்டுக் கச்சேரிகளைக் கேட்க வசதி ஏற்படும் என்று எண்ணலாம். அதிலிருந்து நமக்கு சங்கீதத்தில் ரஸ பாவ உணர்ச்சியெல்லாம் சீக்கிரத்தில் உண்டாகப் போகிறது.

இவ்வளவெல்லாம் தமிழ்ப் பாட்டு சம்பந்தமாக எழுதுகிறோம் என்றால், தெலுங்குப் பாட்டு விளங்கவில்லை என்கிறதுதான் விஷயமே ஒழிய, தெலுங்குப் பாட்டு வெறுக்கத்தக்கது என்பது எவ்விதத்திலும் ஏற்படாது. தெலுங்கு பாஷையிடம் துவேஷத்தைக் கற்பிக்கிறதாகப் பயப்படுகிறவர்கள் பச்சைத் தமிழர்கள்தான். ஆந்திரர்கள் இது விஷயமாக ஒருவிதமான புகாரும் சொல்லுவதில்லை. ஏனென்றால், தமிழ்ப் பாட்டுகள் தங்களுக்குத் தெரியாது, அது காரணமாக அனுபவிக்க முடியவில்லைதான் என்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அப்படிச் சொல்ல அவர்கள் நாணுவதில்லை; பயப்படுகிறதோ, இல்லவே இல்லை. தமிழர்களாகிய நாமும் கூசாமல் தெலுங்குப் பாட்டு, பாடுகிறவர்களுக்கும் விளங்காது, கேட்பவர்களுக்கும் விளங்காது என்று யாதொரு லஜ்ஜையும் இல்லாமல் சொல்லலாம். அப்படிச் சொன்னால்தான் தமிழ்ப்பாட்டுக்கு ஊர்ஜிதம் ஏற்படும். நமக்கும் உண்மையான சங்கீத ஞானம் ஏற்படும். எஸ். கே. நாயர் பிரசங்கத்துக்குப் போன பண்ணையார்கள் என்று நம்மைப் பார்த்து மற்ற நாட்டார் ஏளனமும் செய்யமாட்டார்கள்.

உயர்ந்த ரகம் !!　　　சகாய விலை !!!

ஓம்.

**SRI KATHIRESAN STORES, MADURA**

**ஸ்ரீ கதிரேசன் ஸ்டோர்ஸ்**

அசல் திருப்பூர் சுத்தக் கதர் & சுதேசி ஜவுளி வியாபாரம்

**22, மேலக் கோபுர வீதி, மதுரை**

எங்களிடம் அசல் திருப்பூர் சுத்தக் கதர் & சுதேசி ஜவுளி தினுசுகளும், நாட்டு சேலைகள் தாவணி தினுசுகளும் நேராக வரவழைத்து சகாய விலைக்குக் கொடுத்து வருகிறோம். நண்பர்கள் ஒரு முறை வந்து விஜயம் செய்யுங்கள்.

Pro. த. பழ. நடேசன் செட்டியார் & சன்ஸ்

ஸ்ரீ கதிரேசன் ஸ்டோர்ஸ்,
மதுரை.

**டாக்டர்களால் அங்கீகரிக்கப் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே**

Supplement to INDIRA issue dated 1-10-41

# வாழ்த்து



ஆசிரியர் 'இந்திரா'

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் யாவராலும் போற்றக்கூடிய ஓர் உயர்ந்த தனவந்தர். சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோயிலுக்கு அவர் செய்திருக்கும் தொண்டிற்கு அளவே இல்லை. தெய்வ பக்தி உடையவர். சிறந்த கொடையாளி. அண்ணாமலைச் சர்வ கலாசாலைக்கு செய்திருக்கும் தொண்டிற்கு சரித்திரத்திலேயே இவருக்கு ஒரு பெயர் அளிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. தமிழ் இலக்கியத்திற்கு அளவிலாத ஊக்கம் அளித்து வருபவர். சமீபத்தில் நடந்த தமிழ் சங்கீத மகாநாட்டிற்கு இவர் அளித்த ஆதரவுக்கு அளவே இல்லை. பணம் படைத்த எல்லோரும் தரும சிந்தனையுடன் இருப்பார்களென நினைப்பதற்கில்லை. ஆனால் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் இதற்கு நேர்மாறு. அவருடன் கூட இருந்து பழகுவதே ஒரு ஆனந்தம். இவ்வளவு தர்ம சிந்தனையுள்ள ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு தில்லை ஸ்ரீ நடராஜன் தீர்க்க ஆயுளையும் மேன்மேலும் அவரது தர்ம சிந்தனை ஓங்கிவளர கருணை புரிய பிரார்த்திக்கின்றேன்.

தங்கள் அன்புள்ள,

**எஸ். சத்யமூர்த்தி**

---

இருபத்தைந்து வருடங்களாக, ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள், கலையபிவிருத்திக்கும், மதத் தொண்டிற்கும் செய்துள்ள நன்மைகள் இணையற்றன. அவருடைய ஷஷ்டியப்த பூர்த்தியை நாம் வரவேற்கிறோம். இன்னும் பல வருடங்கள் வாழ்ந்து மாணவர்களுக்குக் கல்வி போதிக்க உதவுமாறு நாம் விரும்புகிறோம்.

**சர் சி. வி. ராமன்**

* *

ராஜா சர் அண்ணாமலை செட்டியாரவர்கள் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை ஒரு மலர் வெளியிடுவதன் மூலம் கொண்டாடுவதைப் பெரிதும் போற்றுகிறேன். அவர் பொதுஜனங்களுக்குச் செய்துள்ள நன்மைகள் எண்ணற்றவை. கல்விக்காக, அதிலும் பெண் கல்விக்காக அவர் செய்துள்ள நற்காரியங்கள் என்றும் மறக்கற்பாலது. அவர் இன்னும் பலகாலம் மக்களுக்கு உதவி வாழ்ந்துவர நான் போற்றுகிறேன்.

**ஆஸ்டின்,**

ஸி. ஐ. இ., ஐ. ஸி. எஸ்., ஆலோசகர், சென்னை.

These two messages are reproduced from Rajah of Chettinad Commemoration Volume.

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

Supplement to INDIRA issue dated 1-10-41



# உதாரண புருஷர்

ப. நீலகண்டன்

தமிழ் நாட்டுக்கும் தன வணிகர்களுக்கும் ஒரு உதாரண புருஷர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள். உலகில் பிறந்துவிட்ட நாம் என்ன செய்ய வேண்டும்? நல்ல வழியில் சம்பாதிக்க வேண்டும், சேமிக்க வேண்டும், அள்ளி வழங்க வேண்டும். இதைத்தான் ராஜா சர் அவர்கள் செய்தார்கள், செய்து வருகின்றார்கள்.

உலகில் எத்தனையோ மக்கள் இருக்கின்றார்கள். அவர்களில் வெகு சிலர்தான் கோடிக் கணக்கான மக்களின் இருதயங்களில் குடி கொண்டிருக்கிறார்கள். பண்டிதர், பாமரர், ஆண், பெண் அனைவரின் அன்பையும் ஒருங்கே ஒரு சிலர்தான் பெற முடியும். அவர்களில் ராஜா சர் ஒருவர்.

முன்னர் அரச பதவியை யடைய மக்கள் எத்தனையோ வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள். ஆனால் அவை சரியானவையல்ல. மக்களின் நலத்திற்கு வழிகோலித்தான் மனிதன் மன்னனாக வேண்டும். இவ்வாறு கொடை கொடுத்து அரசரானவர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள். அரசாங்கத்தார் இவர்களை அரசராக்கினர். அதுமட்டுமன்று. மக்களெல்லாம் இவர்களை மன்னர் என்று வாழ்த்துகின்றனர். இப்படி கோடிக் கணக்கான இதயங்களின் வாழ்த்துதலை ஒருங்கே பெறும் உத்தமர்கள் உலகில் வெகு சொற்பம்தான். இவர்கள் கல்விக்காகச் செய்துள்ள தர்மம் கணக்கிலடங்காது. ஒரே ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், கல்வி என்று ஒன்று உலகில் உள்ளளவும் இவர்கள் பெயர் நிலைத்து நிற்கும்.

இவர்கள் யாரையுமே பார்க்க மறுப்பதில்லை. விரும்புபவர்கள் இவர்களைச் சந்திக்கலாம். யாரையும் அன்புடன் வரவேற்று உபசரிப்பார்கள். அவர்களை ஒரு முறைகண்டவர்கள் அவர்களின் அன்பு ததும்பிய இன்சொற்களை மறக்கவே முடியாது.

அவர்களிடத்தில் ஆக்ரஷ்ண சக்தியிருக்கிறது. தேஜஸ் மிளிர்கிறது. களை பொங்கி வழிகிறது. பரந்த முகம், விசாலமான நெற்றி, அறிவின் தோற்றம். கலை மகளும் திரு மகளும் ஆனந்த நர்த்தனம் புரிகிறார்கள். அவர்களைப் பார்ப்பவர்களுக்கு அவர்களுடைய தோற்றம் ஒருவித பக்தியையும் விசுவாசத்தையும் உண்டாக்குகிறது. அவர்களுடைய சொற்கள் கணீர் கணீர் என்று வெண்கல நாதத்தை நினைவூட்டுகின்றன. ஆனால் அதிலே ஒரு அன்பு தவழ்வதை யாரும் காணாமலிருக்க முடியாது.

பாரி போன்ற வள்ளல்களைப் பற்றி புத்தகங்களில் படிக்கிறோம். அந்த வரிசையில் வைத்தெண்ணத் தக்க வள்ளல் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களை நேரில் காணும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய வள்ளல் இவர்கள். பாரி ஒரு கொடிக்குத் தன் தேரைக் கொடுத்தான். நமது தமிழ்க்கொடிக்குக் கொழுகொம்பு கொடுத்தார்கள் நமது இராசா சர் வள்ளல். இராசா சர் அவர்கள் அறியாமை இருளை அகற்றிய ஒளி. தமிழர்கள் விருந்தோம்பும் தன்மையுடையவர்கள் என்பதற்கு உதாரணமாக விளங்குகிறார்கள் இவர்கள். இவர்கள் கலைகளிடத்து ஆர்வமுள்ள தமிழ்ப் புரவலர்.

பணமுடையோர் அதை என்ன செய்யவேண்டும்? கொடைச் சிறப்பை எங்கும் காண முடியாது. மிக மிக அரிது. செல்வமுடையோர்க்கெல்லாம் இராசா சர் அவர்கள் ஒரு உதாரண புருஷராக விளங்குகிறார்கள்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
இன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

எல்லோராலும் புகழப்படுவது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

ஒரு ஏழைக்கு எழுத்து அறிவித்தால் கோடி புண்ணியம். ஒருவருக்கல்ல, எத்தனையோ பேருக்குக் கல்வி யளித்துள்ளார்கள் இவர்கள். இவை தானா? அன்ன சத்திரமும் கட்டியுள்ளார்கள். ஆலயமும் நாட்டியுள்ளார்கள். கோடி கோடி புண்ணியம் அவர்களை நாடுக!

வள்ளல்கள், கொடை கொடுத்து அதனால் இன்பமடைகிறார்கள். கொடை பெற்றோர் இன்பமுறுவதைக் கண்டு இவர்கள் மகிழ்கிறார்கள். உலகில் இதுதான் தலை சிறந்த இன்பம். இதற்கு ஈடு இணை கிடையாது. இப்படிப்பட்ட இன்பத்தை மிகக் குறைவானவர்களே அனுபவிக்கிறார்கள். இராஜா அவர்கள் கொடை கொடுத்து கொடை பெற்றோர் மகிழ்வதைக் கண்டு இன்ப மடைகின்றார்கள்.



ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்கு சென்னைச் சர்வ கலாசாலையினர் டாக்டர் பட்டம் அளித்தபோது எடுத்தது

இத் தமிழ் நாடு பரம்பரையாகவே அறச் செல்வர்களை ஈன்று வந்திருக்கிறது. அவர்களது வழித் தோன்றல் இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள். தென்னாட்டுச் சரித்திரத்தில் இவர்களது பெயர் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படும். வரையாது வழங்கும் இம் மன்னரும் அவர் தம் குடும்பமும் வாழ்க, வாழ்க. நீடு வாழ்க!

---


‘இந்திரா’ இனிமையான மாதப் பதிப்பு
நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டீர்களா?

எல். பழநியப்பா போட்டோ மார்க் பற்பொடியை உபயோகியுங்கள்

Supplement to INDIRA issue dated 1-10-41

# "அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

சு. அ. இராமசாமி

"தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்"

மணிவாசகப் பெருமான் திருவாசகத்திலே மேற்கண்டபடி அண்ணாமலையானைப் பாடியிருக்கிறார். இன்று நாமுந் தண்ணார் தமிழளிப்பவருந் தண்பாண்டி நாட்டாருமாகிய அண்ணாமலையாரைப் பாடவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கிறது.

நமது இராசா சர் அண்ணாமலையார் தண்ணார் தமிழளிப்பவர். தண்பாண்டி நாட்டிலே பிறந்து வளர்ந்து வாழ்பவர். இவர் தம் பெற்றி இயம்பற்கரிது. தமிழுலகஞ் செய்த தவப்பயனாகத் தோன்றியவர் அண்ணாமலையார். ஈட்டும் வகையாற் பொருளை யீட்டிச் செலவு செய்யத்தக்க நன்மார்க்கத்தை நன்கறிந்து அத்துறைக் கண்ணே தாராளமாகச் செலவு செய்பவர். அண்ணாமலையாரின் புகழ் இன்று குன்றிலிட்ட விளக்கெனக் குவலயத்திற் பிரகாசிக்கின்றது. அண்ணாமலையாரின் ஒப்பற்ற பெருங்கொடையால் தமிழன்னை இன்று தனிச் சிறப்புடன் திருக்கொலுவமர்ந் திருக்கின்றாள்.

அண்ணாமலையாரின் அருளால் எண்ணற்ற பேர் இன்று தரணியில் தமிழ்ப் புலவர்களாகத் திகழ்கின்றனர். உலகில் மனிதன் செய்ய வேண்டிய கடமைகளை யெல்லாம் நமது அண்ணாமலையார் செய்து பெரும்புகழ் பெற்றிருக்கின்றார். அண்ணாமலையாரின் பலவகைத் தரும கைங்கரியத் திருத்தொண்டுகள் அளவிடற்கரியன. அரசாங்கத்தினர் நமது அண்ணாமலைக்கு "அரசர்' பட்டம் அளித்துச் சிறப்புச் செய்தது சாலவும் போற்றத்தக்கதே. செயற்கருஞ் செயல் செய்யும் நமது அண்ணாமலையார் இன்று தனது அறுபதாவ தாண்டு நிறைவை யடைகிறார். அண்ணாமலையாரின் பேருதவியால் தமிழ்ப் புலவர்களாகித் தமது உலக வாழ்க்கையை இனிமையாக நடத்தும் அறிஞர்களனைவரும் இன்று அண்ணாமலையாருக்கு மனமார்ந்த வாழ்த்துக் கூறுவர். இன்னும் பல்லாண்டு அண்ணாமலையார் இந்தப் பூவுலகிலே வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்து சிறப்படைய வேண்டுமென்று நாமும் வாழ்த்துக் கூறுகிறோம்.

அறுசீராசிரிய விருத்தம்

பூங்கமலத் தயன்படைக்கப் பரந்திடுநற்
புவனமிதிற் பொற்புற் றென்றும்
தேங்குபுகழ்த் திருப்பாண்டி நன்னாட்டிற்
பெருவளத்தாற் சீரார் செம்மை
ஓங்குபுகழ் படைத்தகிலத் துலவுவதா
மும்பருல கென்ன நின்று
ஈங்குலகோர் கானாடு காத்தானென்
றியம்புமொரு எழில்சேர் நகரம் (1)

செப்புமிந்த மாநகரில் வாழ்ந்திருந்த
முத்தையச் சீரி யோனும்
ஒப்பில்புகழ் கற்பாலே யுலகமிதி
லிணையில்லை யென்ன நின்ற
தப்பில்புக ழவன்றேவி மீனாட்சி
யாமிருவர் தவத்தி னாலே
இப்பாரில் தமிழ்தழைக்கத் தவந்தழைக்க
எழின்மிகுநல் லறமு மோங்க (2)

மயிலூருங் கந்தனையும் மாதங்க
முகத்தனையும் மகிழ்வாய்ப் பெற்ற
கயிலாச நாதர் நித்ய கல்யாணி
யம்மையிவர் கருணை யாலே
ஒயிலாரு மைந்தனொரு வன்பிறந்தா
னவனுக்கு முவகை யோடே
சயிலாதி திலகவண்ணா மலைப்பெயரைச்
சான்றோர்கள் சாற்றி னாரால் (3)

சாற்றுமண்ணா மலைப்பெயரோன் தாரணியிற்
செய்சடங்கு சதுராய்ப் பெற்றுப்
போற்றுபல கலையுணர்ந்து புந்திமிக
மிளிர்வடைந்து பூத லத்தில்
ஏற்றமருள் திருமகடன் எழில்நோக்கும்
பூரணமாய் இயையப் பெற்றான்
நாற்றிசையும் போற்றுபுகழ் நாளுமிவ
னுக்குநனி யோங்கிற் றன்றே. (4)

இம்மையிலே யன்றிமறு மையிலேயும்
பயன்கொடுப்ப திந்தப் பாரில்
செம்மைமிகும் அறமேயா மிதற்கணுவு
மையமில்லை தெரிக்குஞ் செய்தி
மெய்ம்மைகண்ட நல்லோனண் ணாமலையும்
பேரறங்கள் மிகவுஞ் செய்தான்
தம்மைநனி புரப்பார்கள் செய்தொழிலுங்
குவலயத்தில் தருமந் தானே. (5)

வெற்றிக் கொடி நாட்டியது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

பொற்புமிகு பேரறங்கள் பூமியிலே
நனிசிறப்பப் போற்றிச் செய்தான்
சிற்பரனுக் காம்பணிசெய் தனவணிகத்
திருமரபிற் செனித்த வின்னோன்
பற்பலவாய்ச் செய்பணிகள் முழுவதையு
மினிதெடுத்துப் பகர வேண்டில்
நற்பணியே முயன்றிடினு நவின்றிடுத
லருமையென நாட்ட லாமால். (6)

பூவுலகத் தேதோன்று சீவர்கடாங்
கலையறிவைப் பொருந்தா ரென்னில்
மாவுலகில் துயருறுவார் அன்னவர்தம்
அறிவுதனை வளரச் செய்தல்
பாவுலகிற் பெரும்புகழை வளர்த்திடுமென்
பதையறிந்து பரிவு கொண்டு
காவுலகில் நல்லண்ணா மலைச்சர்வ
கலாசாலை மகிழ்ந்து கண்டான். (7)

இன்னவன்றன் தமிழுலகில் நாட்டியநற்
சர்வகலா சாலை யாலே
உன்னுபுகழ் ஆங்கிலமும் உயர்ந்திடுநற்
செந்தமிழும் உவப்பக் கற்று
மன்னுகலை பெற்றுயர்ந்தோர் பன்னூறு
கோடியென மலிய லானார்
தன்னிகரில் புகழ்கொடுப்ப தறிவல்லால்
தரணிதனிற் பிறிது முண்டோ. (8)

செந்தமிழ்தேர் புலவோர்க ளாண்டுதொறு
மீண்டிருந்து செனித்து வந்தார்
பைந்தமிழின் சுவையறிந்த வன்னவரும்
ஊர்தோறும் பாங்காய்ச் சென்று
உந்துபுகழ்ப் பண்டிதராய் கல்விநில
யங்களிலே யுவந்தி ருந்து
தந்தொழிலைச் செய்துலகில் வாழ்க்கைதனைச்
சதுராக நடத்த லானார். (9)

பண்டிதர்க ளீங்கடைந்து பாங்காகத்
தொழில்புரிந்து பரந்த செல்வங்
கண்டிதத்தை யடைந்தார்கள் கலைமகளும்
பலர்மனையிற் கலக்க லானாள்
எண்டருநல் லறிவுபெறின் எண்டிசையும்
புகழுடைவ ரென்று மேலோர்
விண்டமொழி பொய்யாமோ மேதினியில்
இந்நாளில் விளங்கக் காண்மின். (10)

பாங்காரும் பூவுலகில் நமதண்ணா
மலைப்புகழுதான் பரவக் கண்டு
ஆங்கிலநல் லரசாங்கத் தார்களுமே
பலபட்டம் அன்பா யீந்தார்
ஆங்கவற்றால் இராசாவும் ஆகினான்
நமதண்ணா மலையு யோங்கி
யீங்குலகில் அன்னவன்றன் பன்னெடுநா
ளிலங்கிமிகச் சிறப்பாய் வாழி. (11)

மண்ணாரும் பூவுலகில் இருமுப்ப
தாண்டடைந்த மாட்சி மிக்க
அண்ணாநன் மலையுமவன் சந்ததியும்
வழிவழியே அமைந்தென் ஞான்றும்
தண்ணாருந் தில்லைவளர் நடராசன்
தன்னருளால் வாழ்க என்று
பண்ணாருந் துதிபுரிந்து வாழ்த்திமிகப்
பல்லாண்டு பாடுவோமே. (12)

மலரின் உள்ளே வெளியாகியுள்ள
எல்லா பிளாக்குகளும் சென்னை
ஆந்திரா பிராசஸ் ஸ்டுடியோ
கம்பெனியாரால் தயாரிக்கப்
பட்டவை

ஆந்திரா பிராசஸ் ஸ்டுடியோ
78, செயின்ட் ஜேவியர் தெரு, சென்னை

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

Supplement to INDIRA issue dated 1-10-41

# குமாரராஜாவுடன் ஒரு மணி நேரம்

ராம. பழ

ஆகஸ்ட் மாதம் 12உ பிற்பகல், சுமார் மூன்று மணி இருக்கும். சென்னை அடையாரிலுள்ள குமாரராஜா சர் முத்தையா செட்டியாரின் விடுதிக்குச் சென்றோம்.

குமார ராஜா புன்முறுவல் பூத்த முகத்தோடு எங்களை வரவேற்றார்கள். சிறிது நேரம் அளவளாவி சம்பாஷணை புரிந்தோம்.

அவர்களுடைய பேச்சிலே காம்பீர்யம் மிளிர்கிறது; அமைதி நிலவுகிறது. அவர்களுடன் சம்பாஷிப்பதில் பரம திருப்தி யுண்டாகிறது. அவர்கள் "உங்களைக் கண்டதில் எனக்கு ரொம்ப திருப்தி" என்று கூறினார்கள். அவர்களுடைய முகம் அளவுகடந்த திருப்தியை எடுத்துக் காட்டிற்று.

குமார ராஜாவை ஒருமுறை பார்த்து விட்டால், அவர்களுடைய உருவம் நமது இதயத்தில் பதிந்து விடுகிறது. என்றைக்குமே மறக்க முடியாது. நல்ல உயரம், பரந்த முகம், விசாலமான நெற்றி, அன்போடு பேசும் தோரணை, இன்சொற்கள், உபசரிக்கும் தன்மை. இப்படிப் பட்டவர்களை யாராலேயாவது என்றைக்காவது மறக்க முடியுமா?


**அருணகிரிநாத சுவாமிகளியற்றிய திருப்புகழ்**

பெரிய சுத்தமான பதிப்பு

"மதுரம்" பழுத்துத் தேன் துளிக்கும் சந்தச் சுவை வாய்ந்து படிப்போருள்ளத்தையும் கேட்போருள்ளத்தையும் பரவசப்படுத்திப் பேரானந்தப் பெருக்கிலாழ்த்தும் சிறப்பு வாய்ந்த பாடல்களடங்கியுள்ளன.

சந்தக் குறிப்பும், அரும்பதப் பொருளுஞ் சேர்ந்துள்ளன

642(பாடல்கள்)முதற் பாகம் ரூ. 2 0 0
511 ,, 2-ம் பாகம் ரூ. 2 0 0
மேற்படி இரண்டு பாகங்களும்
ஒரே பைண்டிங் செய்தது விலை ரூ. 3 0 0

**மதுரைத் தமிழ்ப் பேரகராதி**

2000 பக்கங்கள் அடங்கிய புதிய பிரதி

"இவ் வகராதியில் இல்லாத தமிழ் வார்த்தையே உலகில் இல்லை" என்று கூறி விடலாம். பத்திரிகைகளில் போட்டிப் பந்தய விடை எழுதுபவர்களுக்கு மிகவும் உதவி புரிவது இவ் அகராதியே.

மஹா மஹோபாத்யாய தக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் முன்னுரையுடன் கூடியது

விலை ரூ. 10 0 0

★

**நன்னூல் மூலமும்**

முகவை. இராமானுசக் கவிராயர் இயற்றிய விருத்தியுரையும்

நெடுங்காலமாக இந்நூலாசிரியர் உரைப்பிரதி கிடைக்கப் பெருமலிருந்து பல பண்டிதர்களின் வேண்டுகோளுக்கிணங்க சென்னை கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களால் எழுதப் பெற்ற குறிப்புரையுடன் வெளியிடப்பட்டுள்ளது. புதிய பதிப்பு. 520 பக்கங்கள் கொண்டது. அழகிய காலிகோ பயிண்ட் செய்யப்பெற்றது. விலை ரூ. 3—0—0,

கிடைக்குமிடம் :—**இ. ம. கோபாலகிருஷ்ணக் கோன்**

புத்தக வியாபாரம், கிராமதூதன் பிரசுரகர்த்தர், மதுரை

**ஜெகமெங்கும் புகழ் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி**

அவர்களுக்குத் தமிழின் மீதுதான் எவ்வளவு காதல். தமிழ் வளர்ச்சியில் அவர்களுக்கு அளவு கடந்த ஆர்வம் இருக்கிறது. அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் இது நன்றாகத் தெரிகிறது. அவர்கள் தமிழிலேயே பேச விரும்புகிறார்கள். அனைவரும் படித்து ரசிக்கக் கூடிய முறையில் நமது பழைய இலக்கியங்கள் எல்லாம் எளிய முறையில் எழுதப்பட வேண்டுமென்பது அவர்களது விருப்பம். தமிழ்நாட்டுச் சரித்திரங்கள் அனைவராலும் அறியத்தக்க விதத்தில், வெளிவர வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். கலாசாலைகளில் பாடங்களைத் தமிழிலேயே சொல்லித் தர வேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். பாடங்களைத் தமிழில் போதிக்க முடியாதென உபாத்தியாயர்கள் கருதுவது தவறென்றும், சிரமமாக இருக்கும் என்று அவர்கள் கருதுவதாலேயே இப்படிக் கூறுகிறார்களென்றும் குமார ராஜா எண்ணுகிறார்கள்.

தமிழ் சங்கீத அபிவிருத்தியில் குமாரராஜா அவர்கட்கு அபரிமிதமான ஆர்வம் இருக்கிறது. பண்டைத் தமிழ் நாடகக் கலையையும் சங்கீதக் கலையையும் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்பதை அவர்கள் மிக உணர்ச்சியோடுமொழிந்தார்கள். இவ்விஷயத்தில் ரேடியோ நிலையங்கள் தக்க முறையில் தொண்டாற்றலாம் என்பது அவர்களது விருப்பம்.

கடைசியில் இந்தியா-பர்மா ஒப்பந்தம் விஷயமாகப் பேச்சு ஆரம்பமாகியது. அந்த ஒப்பந்தம் இந்தியர்கட்கு மிகுந்த பாதகத்தை விளைவிக்கத்தக்கது என்பதை எடுத்துக் காட்டினார்கள்.

தமக்குச் சரியென்று தோன்றியதைப் பட்டவர்த்தனமாக அறிவிக்க குமார ராஜா என்றுமே பின்வாங்குவதில்லை. இந்த அரிய குணம்தான் அவர்களுக்கு உறுதியையும் முன்னேற்றப் பாதையிலே ஒரு உற்சாகத்தையும் அளித்திருக்கிறது. அவர்களுடைய உடலிலும் உள்ளத்திலும் இளமை ததும்புகிறது. அவர்கள் என்றும் இளமையோடு எல்லா இன்பமும் பெருகி வாழ்க...!



செட்டி நாட்டுக் குமாரராஜா முத்தையா செட்டியாரவர்கள்
சென்னை மாகாணக் கல்வி மந்திரியா யிருந்தபோது (36-37)

பற்களுக்கு நீடித்த ஆயுளைத் தருவது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

Supplement to INDIRA issue dated 1-10-41

# ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சரித்திரம்



## செட்டிநாடு

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் நாடு செட்டிநாடு. செல்வம் பெருகி நிற்பது செட்டி நாடு. சிவபக்தி ஓங்கி நிற்பது செட்டி நாடு. செட்டிநாடு என்பது பெரும்பகுதி இராமநாதபுரம் ஜில்லாவிலும் சிறிது புதுக்கோட்டை ஸ்டேட்டிலும் உள்ளது. இவர்களுடைய ஊர்கள் தொண்ணூற்றாறு. இவர்களை நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள், தனவணிகர்கள், தனவைசியர்கள் என்று கூறுகிறோம். இவர்களைத் தென்னிந்தியாவின் செல்வர்கள் என்று கூறுவதுண்டு. இவர்கள் தமிழ்நாட்டின் பெரும் பகுதியிலும் வடநாட்டிலும், எண்ணிலடங்காத தர்மங்கள் செய்துள்ளனர். இவர்களால் கட்டப்பட்ட கோயில்கள் பல, செப்பனிடப்பட்ட ஆலயங்கள் பல. இவர்களால் நிறுவப்பட்ட அன்ன சத்திரங்கள் ஆயிரம். வைத்தியசாலைகள், கல்விச்சாலைகள் கணக்கற்றவை. நகரத்தார் நாடுகடந்து சம்பாதிக்கின்றனர். சம்பாதிப்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகின்றார்களோ அப்படியே தர்மம் செய்வதிலும் ஆர்வம் காட்டுகின்றார்கள். இக்குலத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட வேதபாடசாலைகளும், தேவாரத் திருவாசக மடாலயங்களும் பல. பசு மடங்கள் பல.

## கானாடுகாத்தான்

நகரத்தார் வசிக்கும் ஊர்களில் நடுநாயகமாயுள்ளது கானாடுகாத்தான் என்ற ஊர். இயற்கையிலேயே அழகு பொருந்திய நகரம் இது. செல்வச் சீமான்கள், வரையாது கொடுக்கும் வள்ளல்கள், பெருமைசால் பெருங் குடிமக்கள் இங்கே பிறந்திருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களை யெல்லாம் ஈன்றெடுக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறது கானாடுகாத்தான்.

## குடும்பத்தின் சிறப்பு

ஏறக்குறைய நூறு ஆண்டுகட்கு முன் இந்நகரில் சாத்தப்ப செட்டியார் என்பவர்கள் தொன்மைகால் பெருங்குடியில் பிறந்து வாழ்ந்து வந்தார்கள். அவர்களுடைய திருக்குமாரர் இராமநாதன் செட்டியார் என்பவர்கள். அவர்களுடைய அருந்தவப் புதல்வராகப் பிறந்து நிறைந்த செல்வத்தையும், பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்றுத் திகழ்ந்தவர்கள் முத்தையா செட்டியாரவர்கள்.

## சமூகத் தலைவர்

ஸ்ரீமான் முத்தையா செட்டியாரவர்கள் செட்டிநாட்டுக்கே திலகம்போன்று விளங்கினார்கள். செட்டிநாட்டிலுள்ளவர்கள் வியாபாரம், பஞ்சாயத்து முதலிய விஷயங்களில் இவர்களிடம் ஆலோசனை கேட்டுவந்தார்கள். வியாபாரத்தில் நிபுணர். இவர்கள் தம் குடும்பத்தைப் பின்பற்றி வள்ளலாக விளங்கினார்கள். சிதம்பரம் நடராஜர் ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினார்கள். கரூரிலுள்ள கோயிலுக்குத் திருப்பணி செய்தார்கள். கரூரில் இவர்கள் பல தருமங்கள் செய்தார்கள்.

காசியில் நகரத்தார்கள் தங்குவதற்காக ஒரு சத்திரம் கட்டினார்கள். இச்சத்திரம் தசவவமதா கட்டத்தில் இருக்கிறது. இங்கே தினந்தோறும் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் தங்கிச் செல்கின்றனர். இவர்களுடைய இரக்க சிந்தைக்கு இஃதொன்றே எடுத்துக்காட்டாகும்.

அவர்களுடைய இல்லக்கிழத்தி ஸ்ரீமதி மீனாட்சி ஆச்சி என்ற உத்தம ஸ்ரீமதியாவர். இவ்விருவரின் அன்புக்கும் எடுத்துக் காட்டாக அவதரித்தவர்கள் சிதம்பரம் செட்டியார், இராமசாமிச் செட்டியார், **அண்ணாமலைச் செட்டியார்** என்ற மூன்று இரத்தினங்கள்.

எல். பழநியப்பா'ஸ் பற்பொடி தந்த ரோகங்களை நிவர்த்திக்கிறது

## மூதாதைகளின் சிறப்பு

### பொன் வேய்ந்த தந்தை

இக்குடும்பத்தினர் சீருஞ் சிறப்பும் செல்வப் பெருக்குமாக இனிது வாழ்ந்தார்கள். இக் குடும்பத்தினருக்குத் தென்னாட்டின் சிறந்த சிவஸ்தலமாகிய சிதம்பரத்தினிடம் ஒரு தனி அபிமானம் இருந்தது. அந்நகர்பால் அளவற்ற பற்றிருந்தது. முத்தையா செட்டியாரவர்கள் அங்கு சென்றார்கள். **பொன் வேய்ந்தார்கள்.** ஆலயத் திருப்பணி செய்தனர், அன்ன சத்திரம் கட்டினர்; பசுமடம் ஏற்படுத்தினர்; தேவார பாடசாலை நிறுவினர்; நந்தவனம் நாட்டினர்; நல்லறம் பல புரிந்தனர். நானிலமெங்கும் அவர்கள் புகழ் ஓங்க ஆரம்பித்தது.

### புனல் பெய்த தமையன்

இராமசாமிச் செட்டியாரவர்கள் தில்லையம் பதியைத் தமது திருநகராகக் கொண்டார்கள். அந்நகர வாசிகளின் க்ஷேமத்திலும் நகர அபிவிருத்தியிலும் கவனம் செலுத்தினார்கள். அந்நகரின் நகராண்மைக் கழகத்தில் பல ஆண்டு தலைவர் பதவி வகித்துப் பணி பல புரிந்தார்கள். பலவருஷம் தாலுகா போர்டின் தலைவராக இருந்தார்கள். மக்கள் வாயார வாழ்த்தினர். மனமாரத் துதித்தனர். இன்றைக்கும் அந்நகர மாந்தர் அவர்களை எண்ணி எண்ணி உருகும்படி அளப்பரிய நன்மைகளைச் செய்தார்கள். மக்கள் இவ்வுலகில் வாழ தண்ணீர் எவ்வளவு இன்றியமையாதது. குடிதண்ணீருக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சிதம்பரம் வாசிகளைக் கை தூக்கி விட்டவர்கள் இராமசாமிச் செட்டியாரவர்கள். கொள்ளிடத்திலிருந்து பிரிந்து செல்லும் வாய்க்காலி லிருந்து தண்ணீர் கொண்டுவரச் செய்து குழாய்கள் மூலம் நகரெங்கும் **புனல் பெய்தார்கள்** அப் புண்ணியவான். இந்நாடு முன்னேற்றமடைய, மக்கள் நன் மக்களாக வாழ கல்வி அவசியமல்லவா?

அவர்கள் ஒரு உயர்தரக் கலாசாலை நிறுவிப் பேருபகாரம் புரிந்தார்கள். இன்னும் இந்தக் கலாசாலை **"இராமசாமிச் செட்டியார் உயர்தரக் கலாசாலை"** என்ற பெயரால் சிறந்து விளங்குகிறது. இவர்களின் பொது நலத் தொண்டுகளின் பிரதி யுபகாரமாக அரசாங்கத்தார் திவான் பகதூர் என்ற கௌரவ பட்டத்தைக் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

திவான்பகதூர் ராமசாமி செட்டியாரவர்கள் தான் செட்டியார்களில் முதன் முதலாக அசெம்பிளியில் அங்கம் வகித்தவர்கள்.

## பாலப் பருவம்

இப்படிப்பட்ட அரிய பெரிய குடும்பத்தில் அண்ணாமலைச் செட்டியா ரவர்கள், விஷு ஆண்டு புரட்டாசித் திங்கள் பதினாறாம் தேதி (*30-9-1881*) பிறந்தார்கள். இவர்கள் பாலப் பருவத்திலேயே பலராலும் பாராட்டப் பட்டார்கள். இவர்களுடைய புத்தி தீட்சண்யத்தையும் சுறுசுறுப்பையும் கண்ட பெரியவர்கள் இவர்கள் எதிர்காலத்தில் மிக உன்னதமான நிலைமை யடைவார்களென்று ஆசீர்வதித்தனர். எவ்விஷயத்தையும் கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் இவர்களுக்குப் பால்யத்திலேயே இருந்தது. வாலிபப் பருவத்திலேயே இவர்கள் தொழிற் கல்வியில் தேர்ந்தார்கள்.

## திருமணம்

மிகவும் பிரபலமும் கண்யமும் பொருந்திய பள்ளத்தூர் திருவாளர் பழனியப்ப செட்டியாரவர்கட்கும், ஸ்ரீமதி உண்ணாமலை ஆச்சிக்கும், பிறந்தவர்கள் ஸ்ரீமதி சீதை ஆச்சி, திருவாளர் அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கும் ஸ்ரீமதி சீதை ஆச்சி அவர்கட்கும் *1898*-ம் ஆண்டு பள்ளத்தூரில் விவாகம் மிகப் பிரபலமாக நடந்தது.

அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் அருமைத் தந்தையார் இவர்களுடைய 18-வது வயதில் காலமானார்கள். *1901*-ம் ஆண்டு இவர்கள் தம் சகோதரர்களிட மிருந்து பாகம் பிரித்துத் தனியாகத் தொழில் நடத்தி அந்த வியாபாரத்தை மேலும் பல இடங்களில் ஸ்தாபித்து மிகப் பிரபல்யமாக நடத்தினார்கள். சுமார் 10 வருஷம் தொடர்ந்து குறிப்பாகத் தொழில் முறையையே கவனித்து வந்தார்கள். இதன் காரணமாக இவர்கள் வியாபாரத்தில் நிபுணராக இருக்கின்றார்கள். அதன் பின்னர்தான் இவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டார்கள்.

## காரைக்குடி சேர்மன்

*1910*-ம் ஆண்டு முதல் 13-ம் ஆண்டுவரை காரைக்குடி யூனியன் சேர்மனாக இருந்தார்கள். அப்பொழுது தினந்தோறும் காலை $5\frac{1}{2}$ மணிக்கு குதிரை சாரட்டில் கானாடு காத்தானிலிருந்து காரைக்குடி போய், அங்குள்ள யூனியன் வேலைகளைப் பார்த்துவிட்டு 8 மணிக்குள் திரும்பி வந்துவிடுவார்கள்.

## கானாடுகாத்தான் அரண்மனை

கானாடுகாத்தானில் பெரிய வீடு ஒன்று கட்டினார்கள். நகரத்தார்கள் கட்டும் வீடு

பூரண மனத் திருப்தியளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே



கானாடுகாத்தானிலுள்ள ராஜா சர் அவர்கள் அரண்மனை

ஊக்கமளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

களின் மாதிரியையே பின்பற்றித்தான் இதுவும் இருக்கிறது. ஆனல் அதே சமயம் நாகரிகமான வசதிகளுடன் கூடிய பங்களாவாகவும் கட்டப்பட்டிருக்கிறது. பெரிய ஹால்களும் வராந்தாக்களும் இருக்கின்றன. இது புது மாதிரியான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ கவர்னர்களும் உலகப் பிரமுகர்களும் இங்கே விஜயம் செய்துள்ளனர். பல வருஷங்களுக்குமுன் இப்படி நாகரிகமான பல வசதிகளுடனும் கூடிய கட்டிடம் கட்டுவதற்கு மிகுந்த நுண்ணறிவு வேண்டும்.

## இங்கிலாந்து சென்ற முதல் தனவணிகர்

1910-ம் ஆண்டு இவர்கள் லண்டன் சென்று சுமார் 9 மாதங்கள் தங்கியிருந்தார்கள். தனவைசியர்களில் முதன் முதலில் இங்கிலாந்து சென்றவர்கள் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியாரவர்கள்தான்.

## ஒரு துணிகரச் செயல்

அண்ணுமலைச் செட்டியாரவர்கள் எப்பொழுதும் வீர உள்ளம் படைத்தவர்கள். பொது நன்மை யென்று தெரியும் காரியங்களில் தைரியத்தோடு இறங்கிச் செயல்புரியும் தன்மையுடையவர்கள். 1913-ம் வருஷம் ஓரிரவு திருமயத்திற்கும், கானடுகாத்தானுக்கும் இடையில், தபால் கொள்ளை போய்விட்டது. அன்றிரவே அண்ணுமலை செட்டியார் அவர்கள் சில பண்ணை ஆட்களைத் தயார்செய்து கொள்ளைபோன தபால்களைத் திரும்பக் கொண்டுவந்தார்கள். அவர்களுடைய துணிகரச் செயலுக்கு இதொன்றே உதாரணம்.

## ராவ் பகதூர் பட்டம்

1910-ம் வருஷம் பசுமலையிலுள்ள அமெரிக்கன் மெஷின் ஸ்கூலுக்கு ஹாஸ்டல் ஒன்று கட்டிக் கொடுத்தார்கள். இப்பொழுதும் அந்த ஹாஸ்டல் ராவ் பகதூர் ஹாஸ்டல் என்ற பெயராலேயே வழங்கப்படுகிறது.

இவர்களின் அரியபெரிய பொது ஜனத் தொண்டைக் கருதி 1913-ம் ஆண்டு அரசாங்கத்தார் ராவ்பகதூர் பட்டம் அளித்துக் கௌரவித்தார்கள்.

சென்னை செட்டியார்கள் சங்கத்தை 1917-ம் ஆண்டில் ஏற்படுத்தி மூண்ட் போர்டு புது அரசியல் திட்டப்படி அசெம்பிளியில் ஒரு ஸ்தானம் வாங்கிக் கொடுக்க இவர்கள் அரும் முயற்சி எடுத்துக்கொண்டார்கள். இச்சங்கத்திற்கு இவர்கள் பல வருஷம் தலைவராக இருந்து பற்பல சந்தர்ப்பங்களில் பல தொண்டாற்றியுள்ளது பொது மக்களுக்கும் நகரத்தார்களுக்கும் நன்கு தெரியும். செட்டியார்கள் யாபார நிமித்தம் சென்றுள்ள வெளியூர்களிலெல்லாம் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இவர்கள் அடிக்கடி சொல்லி வந்துள்ளார்கள். சங்கங்கள் மூலமாகத் தான் தொண்டு பல புரிய முடியுமென்பதில் இவர்களுக்குப் பலமான நம்பிக்கை இருக்கிறது. அயல் நாடுகள் சென்றபோதெல்லாம் இது குறித்துப் பல பிரசங்கங்கள் செய்துள்ளார்கள்.

## செட்டி நாட்டிற்கு முதலில் வந்த கவர்னர்

லார்டு பெண்ட்லண்டும் ராஜா சர் அவர்களும் நெருங்கிய நண்பர்கள். லார்டு பெண்ட்லண்டு தான் செட்டி நாட்டிற்கு விஜயம் செய்த முதல் கவர்னர். இவர் அங்கு வந்திருந்தபோது ராஜா சர் அவர்கள் வீட்டில் இரண்டு நாள் விருந்தினராகத் தங்கி இருந்தார். செட்டி நாட்டிலுள்ள லேடி பெண்ட்லண்டு ஆஸ்பத்திரிக்கு அஸ்திவாரக் கல் நாட்டினர். செட்டி நாட்டில் முதன் முதல் ஏற்பட்டது இந்த ஆஸ்பத்திரிதான். இந்த ஆஸ்பத்திரி இப்பொழுதும் மிகப் பிரபலமாக விளங்குகிறது.

இந்த ஆஸ்பத்திரிகளுக்குப் பின்னர்தான் சிற்சில கிராமங்களில் பெண்களுக்காக சிறிய டிஸ்பென்சரிகள் தோன்றலாயின.

## அபூர்வமான யோசனை

ராவ்பகதூர் அவர்கள் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும் அதை வெற்றிரமாக முடிக்க வேண்டுமென்ற ஆர்வ முள்ளவர்கள், இந்த யோசனையைத்தான் அவர்கள் பலருக்கும் சொல்வார்கள். யாராவது ஒருவர் வந்து, ரூபாய் பத்தாயிரத்தில் ஒரு ஆஸ்பத்திரி கட்டப் போகிறேன் என்று சொன்னல் அதற்கு இவர்கள் "ரூபாய் மூவாயிரத்தில் கட்டடம் கட்டுங்கள், ரூபா ஏழாயிரத்தை மூலதனமாக வைக்க வேணும்" என்று சொல்வார்கள். பலமான அஸ்திவாரத்தின் மீதுதான் எப்பொழுதும் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்பது இவர்கள் கருத்து.

1921-ம் ஆண்டு கவுன்சில் ஆப் ஸ்டேட் **(Council of State)** தேர்தலில் பெருமிதமான வோட்டுக்கள் பெற்று வெற்றியடைந்தார்கள். சிதம்பரத்தில் மீனட்சி கல்லூரியை ஸ்தாபித்தார்கள். பின்னர் திருவேட்களமென்ற நகரில் சுமார் நூறு ஏக்கர் நிலம் வாங்கிக் கட்டடம் கட்ட ஆரம்பித்தார்கள்.

## திவான் பகதூர் பட்டம்

1922-ம் ஆண்டு சர்க்கார் திவான் பகதூர் பட்டம் அளித்தார்கள். இதே ஆண்டுதான் இவர்களின் பர்மாப் பிரயாணம் நிகழ்ந்தது.

டாக்டர்களால் நன்கு மதிக்கப் பெற்றது கண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்பொடி



செட்டிநாடு ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்திலுள்ள ராஜா சர் அவர்கள் பங்களா

மனத்திற்கு உற்சாகம் அளிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

1923-ம் ஆண்டு திருவேட்களத்தில் ஆரம்பித்த கட்டடவேலை பூர்த்தியாகியது. இவர்களது அருங்கொடை விசேஷத்தாலும் பெருமுயற்சியினலும் ஸ்ரீ மீனட்சி கல்லூரி உயர்தரக் கல்லூரியாகியது.

## சர் பட்டம்

23-ம் ஆண்டிலேயே இவர்களுக்கு சர் பட்டம் கிடைத்தது. கானடுகாத்தானில் ஆரம்பித்த லேடி பெண்ட்லண்டு ஆஸ்பத்திரி லார்டு கோஷனல் திறந்து வைக்கப் பெற்றது. இதற்கு சுமார் மூன்று லட்ச ரூபாய் செலவாகி யிருக்கிறது. சமூகத்தில் பெண்களுக்கும் தகுந்த மரியாதை கொடுக்க வேண்டு மென்பதில் சர் அவர்கள் பெரும் ஆர்வம் கொண்டவர்கள். பெண்கல்வியின் அவசியத்தை நன்கு உணர்ந்தவர்கள். இதனல் தான் இவர்கள் சென்னையில் "தி வில்லிங்டன்" என்ற கிளப்பை ஆரம்பிக்க இரண்டு லட்ச ரூபாய் கொடுத்தார்கள். இவ்விரண்டும் இவைபோன்ற இன்னும் பல காரியங்களும் ராஜா அவர்களுக்குப் பெண்கள் முன்னேற்றத்திலுள்ள ஆர்வத்தைக் காட்டுவனவாயிருக்கின்றன.

## ஸ்ரீ மீனட்சி கல்லூரி முன்னேற்றம்

இவ்வள்ளலின் பேருபகாரத்தால் ஸ்ரீ மீனட்சிக் கல்லூரியில் ஆரிய மொழிக்கும், தமிழ் மொழிக்கும் தனித் தனிக் கல்லூரிகள் நிறுவப்பெற்றன. பண்டித பயிற்சிக் கல்லூரியும் சேர்க்கப்பட்டது. இவ்வாறு பதினேழு லட்சம் ரூபா செலவில், ஸ்ரீ மீனட்சிக் கல்லூரி மிகச் சிறப்பாக நடந்து வந்தது.

1925-ம் ஆண்டு கவுன்சில் ஆப் ஸ்டேட் தேர்தலில் பெருமிதமான வெற்றி பெற்ருர்கள்.

## மதுரைக் கல்லூரிக்கு இடம் தானம்

இவர்கள் மதுரையில்தான் காலேஜ் ஏற்படுத்த முதலில் யோசித்தார்கள். அதற்காக சுமார் ஐம்பதினயிரத்திற்கு இடம் வாங்கினர்கள்.



வள்ளல் சர் அண்ணமலைச் செட்டியா ரவர்கட்கு
ராஜா பட்டம் கிடைத்ததைப் பாராட்டி தோண்ணூற்ருறூர் நகரத்தார்கள் கோயிலூரில்
விழா கொண்டாடியதன் ஒரு தோற்றம்

பின்னர் இந்த அபிப்பிராயம் மாறுபட்டபோது அந்த இடத்தை மதுரை இந்து கல்லூரிக்கு தானம் கொடுத்துவிட்டார்கள்.

## மதி பெய்த மன்னன்

### கல்லூரி சர்வ கலாசாலை யாகுதல்

மிக உன்னதமாக நடந்து வந்த ஸ்ரீ மீனாட்சிக் கல்லூரியை சர்வ கலாசாலையாக அமைக்க வேண்டுமென இவர்கள் விரும்பினார்கள். அதற்காக இருபது லட்ச ரூபாய் கொடையளிக்க முன்வந்தார்கள். நாட்டின் கல்வி நலத்திற்கு இவ்வளவு தாராளத் தன்மையுடன் உதவ முன்வந்த சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களின் ஆர்வத்தைப் பாராட்டி சர்க்காரும் அவர்கள் கொடுக்கும் நன்கொடை யத்தனை தொகை தாங்களும் அளிக்க முன் வந்தார்கள். இவ்வாறாக சிதம்பரத்திற்கருகில் அண்ணாமலைச் சர்வ கலாசாலை தோன்றலாயிற்று.

1929-ம் வருஷம் அண்ணாமலை யூனிவர்சிட்டி சம்பந்தப்பட்ட சட்டம், ஒரே நாளில் ஒரே கூட்டத்தில் ஏகமானதாக நிறைவேறியது. இது உலக ரிகார்டு என்று கூறப்படுகிறது. 1929-ம் வருஷம் மேஃ 11வ இசைக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டு இக் கலாசாலையுடன் இணைக்கப்பட்டது. மேலும் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், இக்கலைக் கோயிலுக்கு உபசின்னங்களாக, மாணவ மாணவியர்களின் விடுதிகள், உணவுச் சாலைகள், மருத்துவச் சாலை, விளையாட்டு மைதானம், புத்தக நிலையம், தாவர சாஸ்திரங்கள் முதலிய ஆராய்ச்சிகட்கு வேண்டிய உபகரணங்கள் குவிக்கப் பெற்ற நிலையங்கள், வாதம் புரியும் மண்டபம், பட்டமளிப்பு மண்டபம் முதலியன ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் சம்பந்தமாக சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் தமது சொந்தப் பொறுப்பிலிருந்து ரூ. 48 லட்சம் முதல் 50 லட்சம் வரை செல விட்டிருக்கிறார்கள்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கட்டினபோது

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் ஒரு திட்டம் போட்டால் உடனே அதை




கோயிலூரில் தொண்ணூற்ருறூர் நகரத்தார்களால்,
ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கு
அளிக்கப்பட்ட தங்கப்பேழை



சர் அண்ணுமலைச் செட்டியா ரவர்களுக்கு
ராஜா பட்டம் கிடைத்ததைப் பாராட்டி
சென்னை நகரப் பொதுமக்கள் வில்லிங்டனில் விருந்து நடத்தியபோது எடுத்த படம்

நிறைவேற்றிவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பார்கள். இதற்குச் சரியான உதாரணம் அவர்கள் யூனிவர்சிட்டி கட்டிடம் கட்டியபோது எடுத்துக்கொண்ட சிரமமும் உழைப்புமே யாகும். ஒவ்வொரு வேலையையும் இவர்கள் நேரடியாகக் கவனித்தார்கள். ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமானல், இவர்களுடைய முன் அனுமதி யின்றி ஒரு வேலையும் நடைபெறவில்லை என்று சொல்லலாம்.

## பரம்பரை ராஜா பட்டம்

1929-ம் ஆண்டு சர் அண்ணுமலைச் செட்டியாரவர்கட்கு, சர்க்காரால், பரம்பரை ராஜா பட்டம் அளிக்கப்பட்டது.

இந்தப் பட்டம் கிடைத்தது குறித்து நாடு முழுமையும், சந்தோஷப் பட்டது.

இது குறித்துவந்த பாராட்டுத் தந்திகளும் கடிதங்களும் ஆயிரக் கணக்கானவை.

## நகரத்தார்கள் பாராட்டு

கோயிலூர் என்பது நகரத்தார்களுக்கே முக்கியமான ஊர். சமூக விஷயமாக ஒரு முடிவுக்கு வர நகரத்தார்கள் இங்கே கூடித்தான் முடிவு செய்வார்கள். நகரத்தார்களுக்கு இது பொதுவான ஸ்தலம்.

ராஜா பட்டம் கிடைத்ததை முன்னிட்டு, தொண்ணூற்றூறூர் நகரத்தார்கள் கோயிலூரில் கூடி மிகப் பெரிய பாராட்டுக் கூட்டம் நடத்தினர். பாராட்டு விழா மிகப் பிரபலமாக ஏற்பாடு செய்யப்பட்டது. நூற்றுக்கணக்கான பேர் பல மாதங்கள் ஏற்பாடு செய்தனர். ஆயிரக்கணக்கான பேர் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர்.

இந்த விழாவுக்கு மகாகனம் சீனிவாச சாஸ்திரிகள் தலைமை வகித்தார். இப்படிப்பட்ட பாராட்டுதலுக்கு ராஜா சர் அவர்கள் எவ்வளவு தகுதி வாய்ந்தவர்கள் என்பதை சாஸ்திரிகள் அழகாக எடுத்துக் காட்டினர்கள்.

டாக்டர்கள் புகழ்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

பிரம்மாண்டமான உற்சவமாக நடந்தது அந்த விழா. கானாடுகாத்தான் நகரத்தார்கள் ஒரு பாராட்டு விழா நடத்தினர். சிதம்பரம் நகர சபையினர் உபசாரம் செய்தனர்.

### அயல் நாட்டில் வரவேற்பு

கொழும்பு சென்றார்கள். அங்கே கொழும்பு நகரத்தார்களும், பிரஜைகளும் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் தலைமையில் டவுன் ஹாலில் வரவேற்று மிகக் குதூகலமாக விழா நடத்தினர்.

இதே ஆண்டுதான் இவர்கள் தம்முடைய கடைகளை யெல்லாம் ஒன்றுபடுத்தி லிமிடெட் ஆக்கி இந்தியன் கம்பெனிச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்தார்கள்.

அக்டோபர் மீ சுமத்ரா, ஜாவா முதலிய இடங்களுக்குப் போய்விட்டு 30-ம் வருஷம் ஜனவரி முதல் வாரத்தில் இந்தியா திரும்பி வந்தார்கள்.

### டாக்டர் ஆனார்கள்

1930-ம் ஆண்டு கவுன்சில் ஆப் ஸ்டேட்டுக்குப் பெருமிதமான ஓட்டுக்களால் வெற்றியடைந்தார்கள். 1932-ம் வருஷம் சென்னைச் சர்வ கலாசாலை ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களுக்கு டாக்டர் என்ற பட்டத்தை அளித்தது.

### 'செட்டிநாடு ஹவுஸ்'

ராஜா சர்அவர்கட்கு கட்டிடம் கட்டுவதில் தனிப்பட்ட பிரியம் இருக்கிறது. இவர்கள் இங்கிலாந்தில் பலவிதமான கட்டிடங்களையும் பார்த்திருக்கிறார்கள். அதன் பயனாக அடையாரிலுள்ள "செட்டிநாடு ஹவுஸ்" மிக அழகாக அமைந்திருக்கிறது. போதுமான வெளிச்சமும் காற்றோட்டமும், சுகாதார வசதியும் நிரம்பி யிருக்கிறது இக்கட்டிடம். ஒருபுறம் கடல், மற்றொருபுறம் பார்க். கண்ணுக்கினிய காட்சி.

செட்டிநாட்டில் ஒரு கட்டிடம் மிக உயர்ந்த முறையில் கட்டப்பட்டு வருகிறது.

### மின்சாரம்

கானாடுகாத்தானில் எலக்ட்ரிக் கம்பெனி ஏற்படுத்த இவர்கள் பெரிதும் உதவி செய்தார்கள்.



ராஜா சர் அண்ணாமலைச் செட்டியா ரவர்களுக்கு கொழும்பு நகரப் பொதுமக்கள் ஸர் பொன்னம்பலம் ராமநாதன் தலைமையில் நடத்திய உபசாரம்

## இங்கிலாந்து பிரயாணம்

1935-ம் வருஷம் பர்மா பிரிவினை சம்பந்தமாக பிரதிநிதியாக இங்கிலாந்து சென்றார்கள். இராணி ஸ்ரீமதி சீதை ஆச்சியும் உடன் சென்றார்கள். ராஜா சர் அவர்களும் ராணியும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைச் சந்தித்தார்கள். இன்னும் சர் சாமுவேல் ஹோர், ஆர். ஏ. பட்லர், லார்டு விண்டர்டன், மற்றபார்லிமெண்டு அங்கத்தினர் முதலிய பிரமுகர்களைப் பார்த்தார்கள். ராணி சீதை ஆச்சிதான் தனவணிகப் பெண்களில் முதல் முதல் இங்கிலாந்து சென்றவர்.



செட்டிநாடு ராஜா சர் அண்ணாமலைச் செட்டியா ரவர்களும்
ராணி ஸ்ரீமதி சீதை ஆச்சி அவர்களும்
(லண்டனில் எடுத்த படம்)

## அனுபந்தம்

### ராஜா சர் அவர்களின் நன்கொடைகள்

ராஜா சர் அவர்கள் குடும்பத்தினர் தில்லை நடராசர் திருக்கோயிலுக்குப் பல இலட்சக் கணக்கான ரூபாய்கள் செலவழித்துத் திருப்பணி செய்துள்ளார்கள். அங்கே ஏழை மக்களுக்காக நிலையம் ஒன்று ஏற்படுத்தியுள்ளார்கள்.

### ஏழை மாணவர்கட்கு உதவி

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள், வருடந்தோறும் பல ஏழை மாணவர்கட்கு இலவச உண்டியளித்து கல்வி கற்க வசதிசெய்து கொடுக்கிறார்கள். சர்வ கலா சாலை விளையாட்டுப் பந்தயங்கள், போட்டிகள் முதலியவைகளுக்குப் பரிசளித்து வருகிறார்கள்.

### கல்வி ஸ்தாபனங்களுக்குக் கொடை

அண்ணாமலை சர்வ கலாசாலை மட்டுமின்றி பலகல்வி ஸ்தாபனங்கட்கும் பல சந்தர்ப்பங்களில் கொடுத்திருப்பது கணக்கி லடங்காது. டேஹ்ராடூனிலுள்ள இந்தியன் பொதுஜனப் பாடசாலைக்கு மட்டும் சுமார் அரை லட்சம் ரூபாய் உதவியுள்ளனர். இன்னும் டெல்லியிலுள்ள இர்வின் பாடசாலை, கம்பை, கொழும்பு, முதலிய இடங்களிலுள்ள கல்விக் சழகங்கள் சென்னையிலுள்ள இராமகிருஷ்ண கல்வி நிலையம் முதலியனவும் இவர்களுடைய நன்

கொடையைப் பெற்றுள்ளன. இவர்களுடைய நன்கொடையால் தேவார திருவாசக பாடசாலை கள் நிறுவப் பட்டுள்ளன.

பெண்கள் முன்னேற்றத்திற்கு உதவி புரியும் கலாசாலைகட்கும் கழகங்கட்கும் ஏராளமான பொருள் அளித்துள்ளார்கள். அண்ணாமலை நகரி லுள்ள பெண்கள் கிளப், சென்னை வெலிங்டன் கிளப், செட்டி நாட்டிலுள்ள லேடி பெண்ட் லண்ட் தர்ம வைத்தியசாலை, ஆம்தில் நர்ஸ் அசோசியேஷன், சென்னையிலுள்ள ஸேவா சத னம் முதலியவைகளுக்கு அவர்கள் செய்துள்ள உதவியே அவர்கள் அரிய குணத்திற்கு எடுத் துக் காட்டாகும்.

இந்தியன் செஞ்சிலுவைச் சங்கம், (Red cross Society) கிறிஸ்துவ வாலிபர் சங்கம், சிதம்பரத்தி லுள்ள அண்ணாமலை டவுன்ஹால் முதலியவை கள் இவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கின்றன.

### யுத்த நிதிக்குப் பேருதவி

சென்ற 1914—18-ல் நடந்த யுத்தத்தின் போது, தாராளமாக வேண்டிய அளவு அநே கம் தடவை பொருளுதவி செய்துள்ளார்கள். தற்பொழுது நடக்கும் யுத்தத்தில் இவர்கள் லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்தார்கள்.

### ஆலயத் திருப்பணிகள்

சிதம்பரம் தில்லை கோவிந்தராசப் பெரு மானின் திருவாலயமும், அண்ணாமலை நக லுள்ள பசுபதீஸ்வரர் ஆலயமும், தில்லை நடர சப் பெருமானின் ஆலயமும் கரூரிலுள்ள பசு தீஸ்வரர் ஆலயங்களுமே அவர்களுக்கு ஆலய திருப்பணிகளில் உள்ள அன்பை எடுத்து காட்டுகின்றன.

### கலைவளர்க்கும் மன்னன்

கலைவளர்க்கும் கழகங்களுக்கும், தமிழ்வளா



கோவிலூரில் தொண்ணூற்றுறார் நகரத்தார்கள் ராஜா சர் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்தியபோது அமைக்கப்பட்டிருந்த பிரசங்க மண்டபம்

கும் மன்றங்களுக்கும் பலவாறு தர்மங்கள் செய்துள்ளனர்.

அண்ணாமலை சங்கீத கலாசாலையுடன் மட்டுமின்றி பொதுவாக சங்கீதத்திற்காக அவர்கள் அளவற்ற உதவி செய்துள்ளார்கள். சமீபத்தில் அவர்கள் தமிழ் சங்கீதத்திற்காக, பத்தாயிரம் ரூபாய் நன்கொடை நல்கியுள்ளார்கள்.

சுருங்கச் சொல்லின் இவர்கள் தர்மத்திற்காக ஒன்றரைக்கோடி ரூபாய்க்குமேல் செலவழித்துள்ளார்கள். இத்தகைய செயல்களே இவர்களுக்கு நன்மதிப்பையும், தென்னிந்தியாவின் அரும்பெரும் கொடை வள்ளல் என்ற பெயரையும் அளித்திருக்கின்றன.

## குணாதிசயங்கள்

சுறுசுறுப்பே இவர்களது பூஷணம். அன்பே இவர்களது தோற்றம். நுண்ணறியும் தன்மை, ஈகை இப்படிப்பட்ட உயர்குணங்களுக்கு இவர்கள் இருப்பிடமாக விளங்குகிறார்கள். **Strive, save and serve** என்பது இவர்களது வாழ்க்கைக் கொள்கை. ஈட்டல், காத்தல், கொடைகொடுத்தல் என்பதே இதன் பொருள். இரவில் படுக்கைக்குச் செல்லும் பொழுது கூட இவர்களிடம் ஒரு நினைவுக் குறிப்பும் எழுதுகோலும் இருக்கும். மிக அதிகாலையில் எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து ஆகவேண்டிய வேலைகளைக் கவனிப்பார்கள். எவரையும் அன்புடன் வரவேற்று உபசரிக்கும் தன்மை இவர்களிடம் இருக்கிறது. இவர்களுக்கு அதிசயிக்கத்தக்க ஞாபகசக்தி இருக்கிறது. அனைவரும் உடற்பயிற்சி செய்ய வேண்டுமென்று அவர்கள் அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

## தன வைசியர்களுக்குச் செய்த நன்மை

தன வைசிய சமூகத்தினர் ஒரு பெரிய சமூகத்தினர் என்பதையும், வியாபாரத் துறையில் தேர்ந்தவர்களென்பதையும், வள்ளல்கள் என்பதையும் உலகத்துக்கு எடுத்துக் காட்டியவர்கள் இராஜா சர் அவர்கள்தான்.

## விரிந்த மனப்பண்பு

ராஜா சர் அவர்கள் தனவைசிய சமூகத்திற்கு அளப்பரிய நன்மைகள் செய்துள்ளார்கள். தனவைசியர்களுக்கு நன்மை என்று ஒரு காரியத்தைச் செய்தார்கள் என்றால், அது எக்காலத்தும் எக்காரணங் கொண்டும் மற்ற சமூகத்தினருக்கு இடைஞ்சலாக இராது. அது மட்டுமின்றி, தனவைசியர்களுக்கு நன்மை செய்ய முயற்சிக்கும்பொழுதே பொதுவாக இந்தியர்களுக்கும் அந்தக் காரியம் நன்மை பயப்பதாக இருக்குமாறு செய்வார்கள்.

## ஜாதிமத பேதமற்ற தர்மம்

இவர்கள் தருமம் செய்யும்பொழுது ஜாதிமத பேதம் பார்ப்பதில்லை. அமெரிக்கன் கல்லூரிக்கும் மற்றும் பல ஸ்தாபனங்கட்கும் இவர்கள் செய்துள்ள நன்மைகளே இதற்கு எடுத்துக்காட்டாகும். அண்ணாமலை சர்வகலாசாலையில், எவ்வித மான ஜாதிமத பேதமும் கிடையாது. எந்த ஜாதி மாணவரும் இதில் சேர்த்துக் கொள்ளப் படுவர்.

## உயர்ந்த நிலையும் நேயர்களும்

இவர்களுடைய உயர்ந்த அந்தஸ்தின் காரணமாகவும், இவர்கட்கு கண்யம் பொருந்திய ஆங்கில நண்பர்கள் பலர் காரணமாகவும் இவர்கள் இந்தியாவுக்கும் குறிப்பாக தனவைசிய சமூகத்திற்கும் நன்மைகள் பல செய்ய முடிந்தது. பர்மா அசெம்பிளியில் செட்டியார்கட்கு ஒரு ஸ்தானம் வாங்கிக் கொடுத்ததும், இண்டோ சைனாவில் செட்டியார்கள் நால்வர் நாடு கடத்தியபோது அந்தத் திட்டத்தை மாற்றியதுமே இவர்களது மேம்பாட்டிற்குத் தக்க உதாரணங்களாகும்.

வியாபார விஷயங்களில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கடிதம் எழுதும் தனித்திறமை இவர்களிடம் இருக்கிறது. சில நிமிஷ நேரங்களில், எத்தனையோ வியாபார ஸ்தலங்களுக்கு இவர்களே பதில் எழுதுவார்கள்.

தமிழ் நூல்களில் குறிப்பாக திருக்குறளில் இவர்களுக்கு நல்ல பாண்டித்திய மிருக்கிறது. திருக்குறள் போன்ற பல நூல்களை எப்பொழுதும் படித்துச் சுவைப்பார்கள்.

## சுற்றுப் பிரயாணங்கள்

இவர்கள், சிலாங்கூர், சிங்கப்பூர், மலாக்கா, கிள்ளான், செய்கோன், இரங்கூன், கம்பை, மோபீன், மாந்தலை முதலிய இடங்களுக்குச் சென்ற பொழுதெல்லாம் அங்குள்ளோரின் வேண்டுகோளின் மீது தொழில், கல்வி, சமூகம் முதலியவைகளைப் பற்றி அரிய சொற்பொழிவுகள் பல நிகழ்த்தியுள்ளார்கள். இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, அமெரிக்கா முதலிய விடங்களுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். இவர்கள் இங்கிலாந்திலிருந்த பொழுது அங்குள்ள பல பிரமுகர்களுடன் பழகியுள்ளார்கள். ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டார்கள். இவர்களது பெரு முயற்சியின் பயனைத்தான் பர்மா பிரதிநிதிகள் சபையில் தனவைசியர் சங்கத்தினருக்கு ஒரு ஸ்தானம் கிடைத்திருக்கிறது.

ஏழைகட்கும் தனவந்தர்சட்கும் ஏற்றது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி

## குடும்பம்

இவர்களுக்கு, மூன்று குமாரர்களும் நான்கு குமாரத்திகளும் இருக்கிறார்கள். பேரன் பேத்திகளிருக்கின்றனர். குமாரர்களில் முதல்வர் குமார ராஜா சர் முத்தையா செட்டியாரவர்கள், இளையவர் திரு. இராமநாதன் செட்டியாரவர்கள், மூன்றாமவர் திரு. சிதம்பரம் செட்டியாரவர்கள்.

முதல் குமாரத்தி ஸ்ரீமதி வள்ளியம்மை ஆச்சி. இவ்வம்மையாரின் கணவர் கோட்டையூர் ஸ்ரீமான் பெ. மு. அ. லெ. அளகப்ப செட்டியாரவர்கள். இவர்கள் ராஜா சர் அவர்கள் தமக்கையின் ஒரே புதல்வர். இவர்களுக்கு ஒரு பெண்ணும் ஒரு ஆணும் இருக்கின்றனர். இவர்களுடைய பெண்ணுக்கும், பள்ளத்தூர் திவான் பகதூர் முருகப்ப செட்டியாரவர்களின் மூன்றாவது குமாரர் ஸ்ரீமான் அருணாசலம் செட்டியாருக்கும் திருமணமாகி ஒரு குழந்தை இருக்கிறது. குமாரன் திரு. லெட்சுமணனுக்கும் பள்ளத்தூர் திவான் பகதூர் முருகப்ப செட்டியா ரவர்கள் பேத்தி வள்ளியம்மைக்கும் விவாகம் ஆகியிருக்கிறது.

இரண்டாவது குமாரத்தி ஸ்ரீமதி மீனாட்சி ஆச்சி. கானாடுகாத்தான் ஸ்ரீமான் க. வெ. சித. வெங்கடாசலம் செட்டியாரவர்களின் வாழ்க்கைத் துணைவி. இவர்கட்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கின்றன. (திருவாளர் சி. வி. சிடி. வெங்கடாசலம் செட்டியார் அவர்களைப் பற்றிய முழு விவரம் பிறிதோரிடத்தில் வெளியாகியிருக்கிறது).

மூன்றாவது குமாரத்தி ஸ்ரீமதி உண்ணாமலை ஆச்சி. இவரது கணவர் கோட்டையூர் ஸ்ரீமான் ஏ. கே. சி. டி. ஏ. எல். சிதம்பரம் செட்டியாரவர்கள். இவர்களுக்கு மூன்று பெண்களும் ஒரு குமாரனும் இருக்கிறார்கள். திருவாளர் சிதம்பரம் செட்டியாரவர்கள் ரங்கூன் கார்ப்பொரேஷனில் கவுன்சிலராக இருந்திருக்கிறார்கள். இவர்களது மூத்த பெண்ணுக்கும் புதுவயல் திருவாளர் ஏ. மு. முத்தப்ப செட்டியார் குமாரன் திரு. விஸ்வநாதன் செட்டியாருக்கும் சமீபத்தில் மிகப் பிரபலமாகத் திருமணம் ஆகியிருக்கிறது.

நான்காவது குமாரி ஸ்ரீமதி லட்சுமி ஆச்சி. இவரது வாழ்க்கைத் துணைவர், கண்டனூர் ஸ்ரீமான் லெ. சித. லெ. பழனியப்ப செட்டியாரவர்களின் குமாரர் திரு. லட்சுமணன் செட்டியாரவர்கள். இவர்கட்கு ஒரு ஆண் குழந்தை இருக்கிறது.

## வாழ்க, வாழ்க

வள்ளல் தன்மையே பூஷணமாகக் கொண்டவர்கள் இக்குடும்பத்தினர். இவர்கள், தனவைசிய சமூகத்தினராலும் பிறராலும் போற்றிப் புகழப்படுகின்றனர். அரசாங்கத்தாரால் நன்கு மதிக்கப்படுகின்றனர். ராஜா சர் அவர்களும் ராணியாரும், குடும்பத்ினரும் பல்லாண்டு வாழவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

---

**E. S. வரதராஜய்யர்**

வாழிமனை மக்களுடன் வள்ளலண் ணாமலைமன்
வாழியவன் பேரான் வளர்கழகம்—ஆழி
யிடங்கொண்டோன் காண வெழிற்றில்லை மன்றுள்
நடங்கொண்டோன் தன்னருளால் நன்கு.

---


**VANISH**

MAGIC CURE FOR PIMPLES, RINGWORM CURE.

**"வானிஷ்"**

முகப் பருவிற்குச் சிறந்த ஔஷதம். இது படை, புழுக்கடி, பித்த வெடிப்பு, கரப்பான், கட்டிகள், தேமல், கக்கூஸ் பத்து, தீப்பட்ட புண் மற்றும் சர்ம ரோகங்களுக்குச் சிறந்தது.

Prepared by

Dr. V. S. S. MANI, L.M.S., M.B.H.(Cal.)

MANI NATIONAL PHARMACY

KARAIKUDI.


மனதிற்கு உற்சாகம் அளிப்பது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

## கோவிலூரில் தொண்ணூற்றாறூர் நகரத்தார்கள் ராஜா சர் அண்ணாமலை செட்டியா ரவர்களுக்கு வரவேற் பளித்த பொழுது மகா கனம்

# ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் ஆற்றிய சொற்பொழிவு

ராஜா சர் அவர்களே! சீமாட்டிகளே!
சீமான்களே!

யாருடைய சக்தியினால் உலகம் சுழலுகின்றதோ அத்தகைய முழுமுதற் கடவுள் நம் அனைவரும் ஒன்று கூடத் தகுந்த சந்தர்ப்பத்தை நமக்கு அளித்திருக்கின்றார். சென்ற சில ஆண்டுகளாக என்னுடைய உத்தியோக நிலை, உற்ற உறவினர்கள், அத்யந்த நண்பர்கள் முதலியவர்களுடன் கூட அளவளாவி விசேஷ சந்தர்ப்பங்களில் பங்கெடுத்துக் கொள்ள இடமளிக்கவில்லை. இத்தகைய அரிய கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப் பட்டதற்கு விசேஷ மகிழ்ச்சி யடைகின்றேன். இத்தகைய பெரிய சந்தர்பத்தில் ஒரு முக்கியமான பங்கெடுத்துக் கொள்ள என்னை அழைத்ததற்கு நான் மிகவும் மகிழ்ச்சி யெய்துகிறேன். என்னை அவர்கள் அழைத்த காலையில் யான் சிறிதும் தயக்கமின்றி மணமகளைக் காண விழையும் மணமகன் போன்று ஆர்வத்துடன் முன் வந்துள்ளேன். நம்முடைய விருந்தினராக விஜயம் செய்துள்ளவர் உங்கள் அனைவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டவர் என்பதை யறிய நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். என்னை சேர்மனாகத் தேர்ந்தெடுத்ததற்கு முக்கியமான காரணங்களுடனேயே தேர்ந்தெடுத் திருப்பது பொருத்தமே யென்று ஒரு நண்பர் கூறினார்.

எனக்கும் ராஜா சர் அவர்களுக்கும் உள்ள ஒற்றுமையைக் கண்டே என்னைச் சேர்மனாகத் தேர்ந்தெடுத் துள்ளார்கள். அத்தகைய சந்தர்ப்பம் எனக்குப் பெருமையை அளிக்கிறது. இத்தகைய செல்வமும், சீரும் பெற்று விளங்கும் நாட்டில் நான் பிறக்கவில்லை யென்று நினைக்குங் காலையிலும், பார்மெம்பராக சென்னையிலோ அன்றி இதர நகரங்களிலோ இருக்கவில்லை யென்று எண்ணுங் காலையிலும், துரைத்தனத்தை ஒழுங்காக நடத்துவதாக எண்ணப்படும் சட்டங்களை இயற்றுபவர்கள் கோஷ்டியில் இல்லாமலும், தற்பொழுது ஒரு விதத்திலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டு அனைவரு மறிந்தவனாக இருக்கவில்லை யென்றும் எண்ணும் எனக்கு இத்தகைய சந்தர்ப்பம் என்றும் மறக்கற்பாலது. உலக மக்களுக்கே ஒரு வித சந்தர்ப்பத்தை யளிக்கும் இத்தகைய மகத்தான சம்பவம் என்றும் என்னால் மறக்க முடியாது.

பட்டங்களையும், புகழையும் நாம் நன்கறிவோம். ஆனால் அத்தகைய புகழும் பட்டங்களும் சிற்சில நன்மைகளினாலேயே மக்களை வந்தடைகின்றன. இத்தகைய மகத்தான விழா என் முக்கியமான தெனில் நம்முடைய உயர் திரு ராஜா அவர்கள் உலகமறிந்தவர். அத்துடன் இந்த ராஜதானியிலேயே அவருக்கு எல்லையற்ற மதிப்புண்டு. பரம்பரை ராஜ பட்டம் அவருக்கு அளிக்க சக்கிரவர்த்தி முன் வந்ததற்கு நாம் அனைவரும் இது உத்தமமான காரியம், உயர்ந்த பரிசு என்று கூற முன் வருவோமன்றோ? அத்தகைய அரிய விழா எனக்குப் பெருமையை யளித்திருப்பதால் விழாவை ஆரம்பித்து வைத்து அதன்படி நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கலாம் என நம்புகிறேன். நிகழ்ச்சி முறைகளை ஆரம்பித்து வைக்க நான் மிகுந்த மகிழ்ச்சியுள்ளவனா யிருக்கிறேன்.

## கானாடுகாத்தான் கனம் ராஜா **ஸர். சா. ராம. மு. அ. அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கு** நாட்டுக்கோட்டை நகரத்துத் தனவைசியர் அளிக்கும் உவகைப் பத்திரம்

**மாட்சிமிக்க ஐயா!**

தங்கள் வாணாள் உயர்க; நலம் வளர்க;
செல்வமும் அறமும் புகழும் மென்மேற்
சிறந்து ஓங்குக.

தெய்வீகப் பெருமை வாய்ந்த சிதம்பர தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நடராஜப் பெருமானுக்கு இடையறாது இயற்றிவரும் சிறந்த சிவபுண்ணியப் பயனாக எல்லா நலங்களும் நிரம்பப்பெற்று விளங்குவதும், சிறந்த தத்துவஞானியாகிய பட்டினத்து அடிகள் என்னும் துறவறச் செல்வரைக் குலமுதல்வராகக் கொண்டதும் ஆகிய பரம்பரைச் செல்வக்குடியில், இத்தலம் புகழும் முத்தையவேளும் நங்குலமும் இத்தமிழ் நிலமும் செய்த தவப்பயன்களெல்லாம் ஒருங்கு திரண்டு உருவெடுத்தாங்கு கருவிலே திருவுடையராக 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்னும் பொய்யில் புலவர் பொருளுரைக்கிலக்காகத் தோன்றி இளமையிலேயே நுண்ணறிவும் ஆங்கிலத்திலும் தமிழிலும் பயிற்சியும்

ஜெகமெங்கும் புகழ் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

பெற்று அன்புடைமை முதலிய சிறந்த பல உயர்ந்த குணங்களுக்கு நிலயமாக விளங்குந் தங்கள் பெருமையை என்னென்பேம்.

**கண்ணியமிக்க அண்ணலே,**

மக்களாய்ப் பிறந்தார்க்கு அரிதின் அமையத் தக்க மதிநுட்பம், விடாமுயற்சி, அன்புடைமை, எத்தகைய அரிய காரியங்களாயினும் நன்கு சூழ்ந்து எளிதின் முடிக்குந் திறன், பலதுறைப்பட்ட செயல்களினும் ஆட்சி வன்மை, மடியின்மை, நிறுத்துணர்ந்து பேசும் உரைவன்மை, ஒன்னலராயினுந் தம் வயப்படுத்தும் இன்சொலுடைமை, செருக்கின்மை, ஒப்புரவு, முதலிய உயர்ந்த குணஞ்செயல்கட்கெல்லாம் இருப்பிடமாக விளங்குகின்றவர்களும், 'எல்லார்க்கும் நன்றாம் பணிதலவருள்ளுஞ், செல்வர்க்கே செல்வந் தகைத்து' என்னுந் திருமொழிக்கு எடுத்துக் காட்டாக நினைக்கத் தக்கவர்களும் தாங்களே யன்றோ.

**பொருட்கொடைமிக்க அருட்குண வள்ளால்!**

பலர்க்கும் பயன் செய்யும் ஒப்புரவு அறமே சிறந்த தென்றுட்கொண்டு பல்லாயிரம் மாணவர்கள் உண்டியும் உறையுளும் பெற்று உயிர்க்கு இதஞ்செயுங் கல்வித்துறையிற் சிறந்து விளங்கும் வண்ணம் எல்லாக் கலைகளுக்கும் இருப்பிடமாகிய சிதம்பர தலத்தில் ஆங்கிலம் தமிழ் வடமொழி ஆகிய மும்மொழிகளுக்கும் தக்க கல்லூரிகளை அமைத்து அவற்றிற்கும் தமிழ் நாட்டிலுள்ள ஏனைக்கல்லூரிகளுக்கும் தலைமணியாக விளங்கும் வண்ணம் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுதற்கு எந்நாட்டிலும் யாரும் தனிமையிற் செய்திராத பெருங்கொடையாகப் பன்னூறாயிரம் பொருள்களை மனமுவந்து வாரி வழங்கிய தங்கள் வண்மைப் பெருமையைப் பாராட்டாதார் யாரே? உலகமுழுதும் ஒருங்கு புகழும் இக்கொடைப் பெருமையை நினையுங்கால் எங்கள் உளம் மிகவும் இன்புறுகின்றது.

**முயற்சியிற் றிறம்பா அயர்ச்சியில் பெரும!**

தங்கள் அருந்திறன் நோக்கியன்றே, நம் சென்னை ராஜதானிக்குட்பட்ட குடிமக்களுட் பலரும் தகுதியுடையரெனத் தெரிந்து இரண்டு முறையும் ஒருங்கே வாக்களிக்க இந்திய அரசாங்கத்தார் மகிழ்ந்தேற்றுத் தம் இராஜாங்க சபையில் பல்லாண்டுகளாகத் தங்களைச் சூழ்ச்சித் துணைவராகக் கொண்டு தங்கள் மதிநுட்பத்தை ஆட்சிமுறையிற் பயன்படுத்தி வருகின்றனர். சென்னைப் பல்கலைக் கழகத்தார் கல்வி வளர்ச்சிக்கு வேண்டுவன கூறத் தங்களை வாழ்நாள் உறுப்பினராகக் கொண்டுள்ளார்கள். வாணிகத் துறையில் தங்கள் தூயவினைத் திட்பத்தின் பெருமையை நோக்கியன்றோ பிரபல பாங்குகளும் வர்த்தக சங்கங்களும் தங்கள் சார்பை விரும்பிப் பெற்று மிகவும் வளம்பெறுகின்றன. இன்னும் பல பொதுநல மன்றங்கள் தங்கள் சார்பினாலும் உழைப்பினாலும் கொடையாலும் பெற்று வரும் பயன்கள் மிகப்பலவாகும்.

**வேந்தர்கள் புகழும் ஏந்தலே!**

பிறரிடத்துக் காண்டற்கரிய இன்னோரன்ன உயர்ந்த குணஞ் செயல்களின் பெருமை நோக்கியன்றே கதிரவன் ஒளிமறைவுகாணாக் கடல் நிலவரைப்பு ஆட்சியுடைய மாட்சிமிக்க நம் ஆங்கில அரசாங்கத்தார் தங்களுக்கு ராவ் பஹதூர், திவான் பஹதூர், சர், ராஜா என்னும் உயர் சிறப்புப் பட்டங்களை முறையே வழங்கி அவற்றால் தங்களையும் தங்கள் முகமாக நம்மரபினரையும் சிறப்பிப்பாராயினர். இப்புதிய ஆங்கில ஆண்டின் தொடக்கத்தில் மாட்சிமிக்க நஞ் சக்கரவர்த்திப் பெருமான் "ராஜா" என்னும் மிகவுயர்ந்த சிறப்புப் பட்டத்தைத் தங்களுக்கும் தங்கள் பரம்பரைக்கும் உரிமையாக்கி அளித்துச் சிறப்பித்திருத்தலை அறிந்து யாங்கள் மனமுவந்து பெரிதும் பாராட்டுகின்றோம். இப்பெருமை நம் மரபினரெல்லோர்க்கும் கிடைத்ததாகவே உட்கொண்டு மகிழ்கின்றோம். இம்மகிழ்ச்சியை யாங்கள் தெரிவித்துக்கொள்ளும் பொருட்டு இற்றைஞான்று தாங்கள் எங்கள் நேரிற்காட்சிக்கெளியராகி எங்கள் அன்புரிமை உபசாரத்தை ஏற்றுக்கொள்ள முன்வந்ததற்குத் தங்கள்பாற் பெரிதும் நன்றியறிவுடையேம்.

**தாய்மொழி பேணும் வாய்மைசால் ஐய!**

சிதம்பர தலத்தில் தங்கள் பெருங்கொடையால் நிறுவப்பெறும் புதிய பல்கலைக் கழகத்தில் நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழிக்குச் சிறந்த தானமளித்து அதனைச் சொற்பொழிவு ஆராய்ச்சி முதலிய பல்லாற்றானும் வளர்த்துத் தமிழன்னையின் தலைமகனாக விளங்கவேண்டுமென்பது எங்கள் உண்மை விருப்பமாகும். புதிய பல்கலைக் கழகத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக இதனைத் தாங்களுட்கொண்டு வேண்டுவன செய்ய வேண்டுகின்றோம். இன்னும் நம் மரபினர் மாட்சிமிக்க அரசினர்பால் வேண்டும் நலங்களைத் தங்கள் முகமாகப்பெற்று இன்புறுவரென்னுந் துணிவு பெரிதும் உடையேம்.

தங்களுக்குக் கிடைத்த சிறப்பால் நம்மரபு அடைந்துவரும் பெருமைக்கு யாங்கள் செயக்கடவ கைம்மாறு யாதுளது?

"இன்னமுந் தில்லை வாழெம் இறைவன்
அருளினாலே
பன்னரும் புகழ்மை குன்றாப் பாக்கியம்
நினக்குண்டாக"

டாக்டர்கள் சிபார்சு செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்போடி

என்று தங்கள் வாணாள், உடல் நலம், செல்வம், அறம், புகழ் இவற்றின் வளர்ச்சி குறித்து ஸ்ரீமந் நடராஜப் பெருமான் திருவருளை வேண்டி வாழ்த்துவோமாக.

இங்ஙனம் தங்கள் அன்புரிமை மிக்க

கோவிலூர், 6-4-1929. } நாட்டுக்கோட்டை நகரத்தார்.

## செட்டிநாட்டு கனம் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கு கொழும்பு நாட்டுக்கோட்டை நகரத்தார் அளித்த வரவேற்பு

அன்புமிக்க ஐயா!

கொழும்பு நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்க அங்கத்தினர்களாகிய நாங்கள் தங்கள் வருகையைக் கண்டு மகிழ்ச்சியெய்துவதுடன், இச்சிறு தீவில் சின்னாட்கள் தங்கி மகிழுமாறு வேண்டுகிறோம்.

தங்களை எல்லா மக்களும் போற்றிப் பாராட்டுவதற்கும், மேன்மை தங்கிய சக்கிரவர்த்தியவர்கள் அன்புக்குப் பாத்திரமாகவும் தாங்கள் பொது மக்களுக்குச் செய்த எண்ணற்ற உதவிகளே காரணமாகும். சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், மக்கள் முன்னேற்றமடையத் தங்களை உதவிசெய்யத் தூண்டியது தங்களுடைய எண்ணற்ற தென்னிந்திய பிரயாணங்கள் தாமெனத் துணிவுடன் கூறலாம்.

வியாபாரத் துறையில் தாங்கள் கொண்டுள்ள முக்கிய பங்கு திறமையுடன் நிர்வகித்துவரும் பொருளாதார இயக்கத்திற்குக் குறைந்ததல்ல. அதனுடைய தன்மை இந்தியா, சிலோன் இன்னும் கீழ்த் தேசங்களிலும் வியாபாரத் துறையிலுள்ள மக்களிடையே பரவி அவர்களுடைய நிலன்களை விஸ்தரித்து அதனால் அதிக ஊதியமடையும்படி செய்துள்ளது. அத்தகைய ஒரு செயலே தங்களுக்கு இந்த சமஸ்தானம் பெரிய கௌரவத்தை யளிக்க இடமளித்திருக்கிறது. தங்களுடைய பொருளாதார முறைகள் பல விடங்களில் நன்கு பரவியிருப்பதுடன், தங்களுடைய பெயராலேயே நிறுவப்பட்டிருக்கும் பெரிய கல்வி ஸ்தாபனம் அரிய திறமையுடன் நிர்வகிக்கப்படுகிற தென்பதைக் கண்டு மகிழ்வுறுகின்


# இலவசம்!

## மாதம் 675 ரூபாய் சம்பாதியுங்கள்

மாதம் ரூ. 675 வரை சம்பாதிக்க வேண்டும் என்று உங்களுக்கு அக்கறை யிருந்தால், எங்களது உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு, ஏஜென்சியை தயவு செய்து பெற்றுக் கொள்ளுங்கள். இந்தத் தங்கத்தை உரை கல்லில் உரைத்தால் உண்மைத் தங்கம் போல மாற்றுக்கொடுக்கும். இதை உண்மைத் தங்கத்தைப் போலவே தகடுகளாக அடிக்கலாம்—கம்பிகளாக நீட்டலாம், அதன் நிறம் ஒரு போதும் மாறுவதில்லை. எங்கள் தங்கத்தால் செய்த எல்லா விதமான நகைகளும் எங்களிடம் கிடைக்கும். நாலு தோலா அமெரிக்கன் நியூகோல்டு, ஒரு ஜோடி அழகிய வளையல்கள், ஒரு ஜோடி கடுக்கன்கள், ஒரு பம்பாய் ரோஸ்தர் மோதிரம்—இவைகள் மாதிரியாக அனுப்பப்படும். ஊக்கமும், செல்வாக்குமுள்ள ஏஜெண்டுகளுக்கு சகலவித வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

இலவசம்:—நகைகளின் பூரா கேட்லாக்கும், ஏஜெண்டு நிபந்தனைகளும் இலவசமாக அனுப்பப்படும். இன்றே எழுதுங்கள்.

**American New Gold Company,**

**POST BOX No. 61, (D 1473) LAHORE (India).**


பற்பொடிகளில் சிறந்தது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

# அழகுக்கு அழகு

*தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமல மன்ன*
*தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாரு மஃதே*
*வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்?*
*ஊழ்கொண்ட சமயத் தன்னா னுருவுகண் டாரை யொத்தார்.*

மிதிலைமாநகரின் வீதி வழியே இராமன் செல்கிறான். அந்த மிதிலை நகரத்துப் பெண்களெல்லாம் அவனைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள், தேன் கூட்டை ஈ மொய்ப்பதுபோல. மேல் மாடங்களில் நின்று மடந்தையர் பலர் பார்க்கின்றனர். அவர்கள் ஏன் அப்படி உற்றுப் பார்க்கிறார்கள்? என்றுமே கண்டிராத ஒளி பொருந்திய நட்சத்திரம் ஒன்று வீதியில் நடந்து செல்லுமானால் யாருடைய கண்களைத்தான் இந்தக் காட்சி கவராது? அவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள்? இமை கொட்டாது பார்க்கிறார்கள். இமை கொட்டும் அந்த நேரத்தில் அழகைப் பருக முடியாமல் போகுமல்லவா? ஒரு விநாடி கூட வீண் போகக்கூடாது என்று பார்க்கிறார்களே, அந்த அழகு முழுமையும் அனுபவிக்கிறார்களா?

வில்லிறுத்த தோளைக் கண்டவர்கள், தோளையே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் அழகையே இன்னும் பார்த்து முடியவில்லையே! எல்லையில்லாத அந்தப் பேரழகில் வீழ்ந்துவிட்ட கண்களை பிறிதொன்றில் செலுத்த முடியவில்லை. வீரக்கழலையுடைய, தாமரை மலரையொத்த திருவடிகளைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் அதையே பார்த்து நின்றார்கள். பெரிய திருக்கைகளின் அழகைக் கண்டவர்களும் அவைகளையே நோக்கிக் கொண்டிருந்தார்களாம். வாளையொத்த கண்களையுடைய மகளிர்களுள் இராமனின் திருமேனி யழகு முழுமையும் முடியக் கண்டவர் யார்? ஒவ்வொரு அவயவத்திலும் அவ்வளவு அழகு.

## ஒரு உண்மை

நான்காவது அடியிலே, மூன்று அடிகளின் கருத்துக்கு உதாரணத்தையும் பெரியதொரு உண்மையையும் புகுத்தியுள்ளான் கவிஞன்.

உலகில் எத்தனையோ மதங்கள், எத்தனையோ தெய்வங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இவர்களெல்லாம் இராமனின் அழகில் மயங்கிய பெண்களைப் போல, ஒரே பரம்பொருளின் பற்பல வடிவங்களைக் காண்கின்றனர். ஏதோ ஒரு முறையைக் கொண்ட ஒரு மதத்தில் முழு உண்மையும் அடங்கி விடவில்லை. அது ஒரு பாகம்தான். பரம்பொருளின் அழகைக் கண்டு மயங்கினார்களென்றால் அவர்கள் ஒவ்வொரு பாகத்தைத்தான் கண்டார்கள். முடியக் கண்டார்களில்லை. எப்படி, பற்பல மதத்தினர்களைப் போல.



ேறும். இதிலிருந்து பொருள் சிக்கன முறை வேறு, தர்ம கைங்கர்ய முறை வேறு என்பதைப் பாகுபடுத்தித் தாங்கள் அறிவுறுத்தி யிருப்பது நன்கு புலனுகின்றது. பிற்கால மக்களாகிய மாணவர்கள், கடவுளுக்கு சேவை புரியவும் அவன் முன்னிலேயில் நல்லொழுக்கத்துடன் நடந்தும், அரசனுக்கு இராஜ விஸ்வாசத்துடன் பணி செய்யவும், தக்க வழிகாட்டியாயிருக்க கடவுள் அருள்புரிந்து இக்கலாசாலையை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய ஆர்வத்துடன் வழிபாடு செய்கிறேம்.

தாங்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பிற்கே ஒரு தூண்டா விளக்காய் துலங்குகின்றீர்கள். தங்களுடைய விசாலமான நோக்கங்களும் ஒப்பற்ற முயற்சியும், தொழிலில் தங்களுக்குள்ள திறனும், நிர்வாகத் தன்மையும், சாந்தமான அரசியல் நுட்பமும் எங்களனைவரையும் ஆச்சரியமடையுமாறு செய்கின்றன.

எங்களே ஒரு பொருட்டாக எண்ணித் தாங்கள் இங்கு விஜயம் செய்ததற்கு மனப்பூர்வமாக வந்தனம் செலுத்துகிறேம். இத்தீவிலுள்ள மக்கள் தாங்கள் இயற்றியுள்ள அரிய பெரிய நன்கொடை, தியாகங்கள் முதலியவைகளுக்கு என்ன கைம்மாறு செய்யவியலும்?

அனைவரும் இவ்விடத்தில் ஒருங்கே கூடித் தங்களுடைய சேவைகளேப் போற்றிப் பாராட்டி இன்னும் தேச மக்களுக்கும் தங்கள் வகுப்பினருக்கும் தகுந்த சிறந்த உதவிகளேப் புரிந்து மக்களிற் சிறந்தவரெனப் பாரக மடங்களும் பரவும் படி புகழ்படைத்து அரசனின் அன்புக்குப் பாத்திரமாகி பரிபூர்ண ஆதரவுபெற்று நீண்டகாலம் இந்நில வுலகத்தே, பெரியோர்களின் நடுநாயகமாக விளங்கி வரவேண்டுமென வாழ்த்துவதே நாங்கள் தங்களுக்குச் செலுத்தும் கப்பமும், கடமையுமாகுமென வந்தனத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

இப்படிக்கு

கொழும்பு, 19-5-1929. } தங்கள் அன்பர்களாகிய கொழும்பு நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்.

## கொழும்பில் ராஜா சர் அண்ணுமலேச் செட்டியாரவர்கட்கு சர் பொன்னம்பலம் ராமனுதனவர்கள் தலைமையில்

### கொழும்பு நகரவாசிகள் வரவேற்பளித்தபோது ராஜா சர் அவர்கள் அளித்த பதில்

**சர் ராமனுதன் அவர்களே, சகோதர நகரத்தார்களே, சீமான்களே, சீமாட்டிகளே!**

தாங்கள் அன்பின் மிகுதியால் எனக்களிக்கும் இவ்வரவேற்புக்கு யான் மிகுந்த மகிழ்ச்சியெய்துகின்றேன். சர் ராமநாதன் அவர்களின் தலைமையின் கீழ் நடக்கும் இம்மாபெருங் கூட்டத்திற்கு யான் விஜயம் செய்யச் செய்துள்ள பாக்கியம் அளவு கடந்ததெனவே கொண்டுள்ளேன். அவர் கொழும்பிலுள்ள, அரும்பெரும் படிப்பாளிகளில் சிறந்தவராயிருப்பதுடன், தமிழர்களின் தலைவருமாவார். அவருடைய சுற்றுப் பிரயாணங்களும், ஆழ்ந்த கல்வியறிவும், அவரை ஒரு ஒப்பற்ற அரசியல் நிர்வாகியாக்கி, முதல் ஸ்தானம் பெறும்படி செய்துள்ளன. ஒரே தொகுதியினரென்று அளிக்கப்படும் இவ்வரவேற்பை நான் மிகவும் போற்றுகிறேன். இந்த வரவேற்பு நாட்டுக்கோட்டை நகரத்தார்களால் மட்டும் அளிக்கப்பட்ட போதிலும், இம்மண்டபத்தில் குழுமியுள்ள இதர வகுப்பினர்கள் தங்களுக்கு நகரத்தார்பாலுள்ள அன்பை வெளிப்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்திருத்த இந்த வகுப்பினர், கொழும்பிலும், இந்தியாவிலும், இன்னும் கீழ் தேசங்களிலுமியற்றியுள்ள நன்மைகளை நன்கு அறிந்து அதைப் போற்றுகிறுர்கள்.

இத்தகைய இயற்கை வளங்கள் நிரம்பிய தீவுக்கு நான் வர நேர்ந்த பாக்கியத்தை எண்ணி மகிழ்ச்சி யுறுகின்றேன். அத்துடனின்றி கோடைகாலத்தில் இராஜோபசாரங்கள் புரிந்து எனக்குப் புனித வரவேற்பளித்தது மகிழ்ச்சியளிக்கின்றது. உண்மையான, வெள்ளையுள்ளம் படைத்த, உண்மையை ஆதரிக்கும் மக்கள் வாழும் நாடு எந்நாளும், மேலும் மேலும் சீரும் சிறப்பும் பெற்று வாழுமென்பதில் ஐயமில்லை. உங்களனைவருடைய உயர் நோக்கங்களுக்கும் கடவுள் அளிக்கும் முடிவு இதுதான்.

இந்த நாட்டில் ஏராளமான நன்மைகள் புரிந்து நகரத்தார்கள் அடைந்துள்ள நன்மதிப்பில் யானும் ஒரு துளி பங்கெடுத்துக்கொண்டு இந்நாட்டின் கௌரவத்திற்கு உகந்தவனுக இருக்க ஆவலுறுகின்றேன்.

தாங்கள் அளித்த வரவேற்பில் யான் பாங்க் தொழிலில் முன்னேறி யிருப்பதைக் குறித்திருக்கின்றீர்கள். நம்முடைய தொகுதியினர்க்கியல்பாயுள்ள ஊக்கம், விடாமுயற்சி, முன் எச்சரிக்கை முதலியவைகளே நன்கு உபயோகித்துவரின், தொழிலும் நன்கு உணர்ந்துகொண்டு நடத்துவதற்கு இயல்பு உண்டாகும். அதன் மூலம் நாம் பாங்கிங் தொழிலே நன்கு சிரத்தை

பற்பொடிகளில் சிறந்தது பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

யுடன் நடத்தி வரலாம். நம்மை நவீனமுறைப்படி தயாரித்துக்கொள்ள நம்முடைய பண்டைய பழக்கவழக்கங்களை உதறிவிடாது அவைகளைக்கொண்டே நம் வாழ்க்கையில் முன்னேற்றமடைய முயலவேண்டுமென்பதே எனது முக்கிய கோரிக்கை. புதுமையான கொள்கைகளையும் நோக்கங்களையும் கைக்கொள்ளவேண்டும். ஆனால் அத்தகைய நோக்கங்களையும், கொள்கைகளையும் கைக்கொள்ளுங் காலையில் நம்முடைய பண்டைய உரிமைகளைக் காப்பற்றிக்கொண்டு, அவைகளினின்று வழுவாது முறையுடன் நடந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். என்னுடைய இத்தகைய சொற்கள் பொதுஜனங்களின் கட்சியின் சார்பாகப் பேசப்படுபவைகளாகக் கொள்ளப்படும். ஆனால் நான் குறிப்பிடுவது அதுவன்று. எளிதில் நன்னிலையை அனைவருமடைந்து முன்னேற்றத்துக்கு வந்து மற்றவர்கள் நம்மைக் கண்டு கௌரவிக்கத் தகுந்த முறையில் வாழ்க்கை இலக்ஷியங்களை நாம் அடையத் தகுந்த பாதையில் வாழ்க்கையை நடத்தி வரவேண்டுமென்பதே எனது விருப்பம்.

என்னுடைய சமூக சீர்திருத்தங்களை நீங்கள் சிறந்த முறையில் சிலாகித்திருக்கின்றீர்கள். பெண்கள் முன்னேற்றமடைய எத்தகைய உதவிகள் புரிய வேண்டுமென்றே என் மனம் எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருந்தது. வெகுகாலமாக நாம் நம்முடைய பெண் சமூகத்தை மூலையில் ஒதுக்கிவிட்டோம். பெண்களை ஒதுக்கி வைத்திருக்கும் பிரச்னையை இந்த இடத்தில் எழுப்புவது முறையல்ல. ஏனெனில் பெரும்பாலும் பெண்களுக்கு சம உரிமை யளித்து, அவர்களை நடத்துவது இந்தியாவைவிட இங்கு அதிகமாயிருக்கலாம். பெண்கள் பிரசவ காலத்திலும் குழந்தைகளின் தேகாரோக்யத்திற்கும் இந்தியாவைவிட இவ்விடத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு உதவிசெய்து வருகின்றார்கள். இன்னும் சில நாட்களில் இம்முயற்சி அதிகரித்து நாட்டிற்கு நலனை யளிக்குமென நாமனைவரும் நம்புகிறோம்.

நான் கல்விக்களித்துள்ள சிறிய உதவிகளும், தாங்கள் எனக்களித்துள்ள வரவேற்பில் கண்டிருக்கிறது. நம்முடைய பண்டைய கலையை யபிவிருத்தி செய்ய ஆவல்கொண்டு, சங்கீதக் கலாசாலைகள் ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. நான் கண்டவரையில் அவைகளின் நிலை நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து வருவதுடன் நவீன சாதனங்களுடன் கூடிய கீழ்நாட்டு புதுமுறையான கல்விநிலயங்களும் நிறுவப்பட்டு வருகின்றன. அத்தகைய முயற்சியினால் கீழ் தேசங்களிலுள்ள பாஷை மேல் நாடுகளுக்கு நன்கு அறியப்படுமென்பது எமது துணிபு. இந்த எண்ணத்தை நிறைவேற்றி இரண்டுவிதமானவர்களும், ஒருவருடன் ஒருவர் நெருங்கிப் பழக இரண்டு வகுப்பினரையும் அண்மையில் இருத்திவைப்பின் நலம். சில ஆண்டுகளுக்கு முன்னர் யான் நிறுவிய சங்கீதக் கல்லூரி மிகவும் சிறியதாக விருந்தது. தற்பொழுது அது இத்தகைய உயர் நிலை யெய்துவதற்குக் காரணம் தென் நாட்டின் சங்கீத அபிமானிகளும், கல்வியறிவுள்ள பிரமுகர்களும் போற்றி வருவதே. சங்கீதக் கல்லூரியைப் பற்றித் தாங்கள் குறிப்பிட்டிருந்தது எனக்கு அளவற்ற பெருமையை யளிக்கிறது. நான் தென்னிந்தியாவுக்குச் செய்த சிறிய ஊழியம் கொழும்பிலுள்ள மக்களையும் கவரும்படி செய்துவிட்டது. யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கென்று உயர்ந்த கல்வியை நிறுவி, நிர்வகித்து வரும் ஸ்ரீ பொன்னம்பலம் ராமநாதனவர்களே அத்தகைய கௌரவத்தை யடைந்தவர்களுக்கு ஒரு உதாரணமாக விளங்குகிறார். கொழும்பிலுள்ள மாணவர்கள் உயர்தரக் கல்வியின் பொருட்டும், கல்வியறிவை வளர்க்கும் பொருட்டும், ஏராளமாக சிதம்பரம் சர்வ கலாசாலைக்கு வந்து சேருகின்றார்களோ அந்நாளே யான் கண்டு இன்புறும் ஒளி பொருந்திய நந்நாள்.


THE LOTUS BISCUIT FACTORY COIMBATORE

லோடஸ்
பிஸ்கெட் பேக்டரி
கோயமுத்தூர்

சரீர சுகத்திற்கு
சத்துள்ள உணவுகள் :

உயர்ந்த ரகம் பிஸ்கெட்டுகள், கேக்குகள் ரொட்டி தினுசுகள் யாவற்றிற்கும்

ஒருமுறை நமது ஷோரூமுக்கு விஜயம் செய்யுங்கள்.

ஆர்டர்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படும்.

விபரங்களுக்கு :—
லோடஸ் பிஸ்கெட் பேக்டரி
கர்னாடிக் டாக்கீஸ் சமீபம், கோயமுத்தூர்.


தந்த ரோகங்களை நிவர்த்திப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

சிதம்பரத்திலுள்ள ஆலயத்திற்குக் கொழும்பு மக்கள் ஏராளமாக வருடந்தோறும் வருவது இயற்கையாகி விட்டது. நடராஜப் பெருமான், தன்னைத் தொழ வரும் கொழும்பு மக்களைப் போன்று, கல்வியை யபிவிருத்தி செய்ய மாணவர்களை வரும்படி கிருபை செய்வாராயின் என்னுடைய பெரிய ஆவல் நிறைவேறி விட்டதாக எண்ணுவேன். என்னுடைய பிரியமுள்ள அவா அனைத்தும் கல்வியைப் பற்றியே, மனிதன் எவ்வளவு செய்யவேண்டுமோ, அதில் நான் எவ்வளவு செய்யினும் ஆயிரத்தில் ஒரு பங்குகூட வராது. நான் இத்தகைய காரியங்கள் செய்வது பிற்கால மக்கள் இம்மாதிரியான வழிகளில் பிரவேசித்து நாட்டிற்கு நலன்கள் புரியவேண்டுமென்ற நன்நோக்கம் பற்றியே. துரைத்தனத்தார் எனக்குச் செய்துள்ள இந்த மரியாதைகள் என்னுடைய வகுப்பினருக்குச் செய்துள்ளதாகவே யான் கருதுகிறேன். என்னுடைய வகுப்பினர் எனக்களிக்கும் கௌரவத்தை என்னுடைய வாழ்க்கையிலேயே உயர்ந்த இலக்ஷியமாகக் கருதுகிறேன்.

பொருளாதாரத் துறையிலும், வியாபாரத்திலும், கைத்தொழிலிலும் முன்னேற்றமடைந்து பல நாடுகளில் வசித்துவரும் என் வகுப்பினர் எனக்குச் செய்யும் கௌரவத்தைக் கண்டு யான் பெருமையை யடைகின்றேன். நீங்கள் அனைவரும் எனக்குச் செய்த மரியாதைகளுக்கு முழுமனதுடன் வந்தனம் செலுத்துகிறேன்.

இத்தகைய தருணத்தில் என் உள்ளத்தின்கண் ஆழ்ந்து கிடக்கும் உணர்ச்சிகளை விவரிப்பதென்பது இயலலரிது. ஏனெனில் நான் என்னுடைய வகுப்பினரும் பிறரும் இயற்றியுள்ள வந்தனோபசாரங்களினால் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து இன்புறுகின்றேன். நீங்கள் அனைவரும் எனக்களித்த அன்புக்கு யான் என்ன கைம்மாறு அளிப்பேனெனில் உண்மையுடன் உலகினருக்கும், என்னுடைய வகுப்பினருக்கும், தேசத்தின் நலத்துக்கும் பாடுபடுவேனென்பதே.

## மாந்தளை நகர மக்கள் ராஜா சர் அவர்களுக்கு அளித்த வரவேற்பு

ஐயா,

பர்மிய மக்களின் நாகரிகத்திற்கும், பண்புக்கும் அரசாட்சிக்கும் உறைவிடமாயிருந்த மாந்தளையின் மக்களாகிய யாங்கள் தங்களுடைய வரவைப் பெரியதொரு இன்பமாகக் கொண்டு மகிழ்ச்சி யடைகின்றோம்.

இந்தியர்களும், பர்மியர்களும், இருமதத்தினர்களா யிருப்பினும், வியாபாரம், சமூகம் முதலிய விஷயங்களில் சகோதரத்வத்துடனேயே இருக்கின்றார்கள் என்பதற்கு இந்தியாவைக் காட்டிலும், மாந்தளையே தக்க சான்றாகும்.

தாங்கள் இந்தியாவிலும், பர்மாவிலும், சமூகம், ஒழுக்கம், பொருளாதாரம், முதலிய துறைகளில் இயற்றியுள்ள |. நலன்களனைத்தும் உலகில் பல பாகங்களிலுள்ள மக்களாலும் போற்றப்பட்டு வருகின்றனவென்பதை அறியத் தாங்கள் மிகுந்த மகிழ்ச்சி யடைவீர்களென நம்புகிறோம்.

தன் நலம் கருதாது பிறருக்கு இன்பமளித்து வர, தாங்கள் செய்துள்ள ஒப்பற்ற, தியாகங்களும், ஏழைகளுக்கு அளித்து வரும் குன்றாத உதவிகளும், அவர்களிடம் தாங்கள் காட்டும் அநுதாபங்களும் எத்தகையவர்களையும் தங்கள் பால் அன்புகாட்டிப் போற்றும்படி செய்கின்றன. தாங்களியற்றிய இத்தகைய அரிய பெரிய சேவைகளுக்கு இருசாராரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

மக்களுக்கு இன்னும் ஆக்கமளித்து அன்புடன் உதவி செய்யுமாறு இன்னும் பல்லாண்டு தங்களுக்கு இன்ப வாழ்க்கையை யளிக்க எல்லாம் வல்ல இன்னிறைவனை அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

இங்ஙனம்

மாந்தளை, 22-12-1929. } வரவேற்புக் கழகத்தார்.



## மேன்மை தங்கிய ராஜா சர் சா. ராம. மு. அண்ணுமலைச் செட்டியார், கானுடுகாத்தான்

அன்புள்ள ராஜா,

பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தின் அங்கத்தினர்களும், தலைவருமான நாங்கள், பர்மாவில் உங்களுக்கு ஒரு மனமார்ந்த வரவேற்பை அளிக்கிறோம்; மேலும் இந்த மாகாணத்தில் தாங்கள் சந்தோஷத்துடன் தங்கியிருப்பதை விரும்புகிறோம். உங்களுடைய மேலான குணமும், தவருத ஆசாரமும் எல்லோரிலும் மேலாக உங்களை அருமையாக்கி உள்ளன.

பலவிதத் தொழில்களில் தங்களுடைய சிறப்படைந்த போக்கும், முயற்சிகளும், எங்கள் எல்லோராலும் மிகுந்த ஆச்சரியத்துடனும் பெருமையுடனும் பின்பற்றப்பட்டுள்ளன.

உங்களுடைய தொழில் யுக்தியும், ஊக்கமும், மேலும் களைப்பற்ற விடாமுயற்சியும், இந்தியா, பர்மா, கொழும்பு, மேலும் அதிக தூரத்திலுள்ள கிழக்குப் பாகத்திலும் உள்ள கிளைஸ்தாபனங்களோடு ஒரு பெரிய லேவாதேவிப் பொறுப்பை ஏற்படுத்தவும், எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தவும் உங்களுக்கு இயலச் செய்துள்ளன. இந்த முன்னேற்றம் வியாபார முறைகளினல் உங்கள் புத்தியை விரிவுபடுத்தியுள்ளது. மேலும் இந்த தேசங்களில் லேவாதேவித் தொழிலின் தேவைகட்கும், பொதுப் பணத்தை நிர்வாகம் செய்வதற்கும் உதவும்படி, நவீன முறைகளைக் கொண்டு செட்டிநாடு பாங்கை தாங்கள் சமீபத்தில் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். தாங்கள் எண்ணிறந்த தர்மசம்மந்தமான காரியங்களில் ஏராளமான பொருளைச் செலவிட்டிருக்கிறீர்கள். அண்ணுமலை நகரிலுள்ள, அண்ணுமலைப் பல்கலைக் கழகம், உங்களுடைய பிரயாசையின் மூலம் மனப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. கல்வி சம்மந்தமான காரியங்களில் உங்களுடைய சிறந்த உதார குணத்திற்கு, இப்படிப்பட்ட ஊக்கத்தின் பயன் நிலைத்து நிற்கும் ஞாபக ஸ்தம்பமாக விளங்கும். உங்களுடைய அரிய குணங்கட்கும், ஒரு உண்மையான முன்னேற்றமுள்ள முயற்சிக்கும், தோற்றத்தில் காணும் அமைதிக்கும், புத்தி தீக்ஷண்யத்திற்கும் நீங்கள் நெடுநாளாகப் புகழப்பட்டு வருகிறீர்கள்.

உங்களுடைய தொண்டுகள் வேகமான சுழற்சியில் எல்லா பாகங்களிலும் தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகம், உங்களை அதன் பிரதிநிதி சபையின் வாழ்க்கை அங்கத்தினராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது. மாண்புமிக்க அரச சக்கரவர்த்தி உங்கட்குப் பல பட்டங்களை அளித்து கௌரவித்திருக்கிறார்.

தெய்வம், தேசம், அரசன், இவைகள் காரணமாக ஏற்படும் உங்களது மேன்மையான தொண்டுகள், தடையின்றி நடைபெற பலப்படுத்தப்பட்டு, நீண்ட ஆயுளும், தொடர்ந்த நல்ல தேகாரோக்கியமும், தங்களுக்குக் கிட்ட வேண்டுமெனக் கடவுளை நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம்.

உங்கள் விருப்பமுள்ள நண்பர்கள்,
தலைவர், அங்கத்தினர்கள்

ரெங்கோன், 12-12-1929. } பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்களின் சங்கம்

## சிங்கப்பூர் நாட்டுக்கோட்டை நகரத்தார் கானுடுகாத்தான் கனம் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார்

அவர்களுக்கு வாசித்துக் கொடுத்த வந்தனோபசாரப் பத்திரம்

அன்புள்ள ஐயா,

### தங்கள் வரவு நல்வர வாகுக

நமது காருண்யமுள்ள அரசாங்கத்தாரால் நன்கு மதிக்கப் பெற்று நம் இந்தியாவிற்குத் திலகமாய் விளங்குவதோடு நம் தன வணிக மரபிற்கும் பெருந்தகையாய் கிடைத்தற் கருமையாகிய பெரும் பதவிகளையும் பரம்பரையாய் "ராஜா" என்ற பதவியையும் பெற்று "அன்றறிவா மென்னு தறஞ்செய்க" என்றபடி செய்தற்கரிய பெருந் தருமங்களையும் செய்து பொதுஜன ஊழியத்தையும் பெரிதாகக் கருதிச் செய்து வரும் தாங்கள் எந் நாட்டினும் சிறந்த நன்னுடாகிய இம் மலாய் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தில் செல்வம் செழித்தோங்கிய இச் சிங்கைமா நகருக்கு இன்று விஜயம் செய்து எங்களைப் பெருமை பெறச் செய்த உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறோம்.

இன்னமும் மென்மேலும் பெரிய உயர் பதவிகள் கிடைக்கப் பெற்று திடகாத்திரத்தோடு தங்கள் வாழ் நாளும் தங்கள் சந்ததியார்களின் வாழ்நாளும் செழித்தோங்குமாறு ஸ்ரீஷண்முகப் பெருமானை மிக மிக வாழ்த்துவோமாக.

சுக்கிலவுஸ ஐப்பசிமீ 12உ }

இங்ஙனம்,
**நாட்டுக்கோட்டை நகரத்தார்.**

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

## செட்டிநாட்டரசர் ஹானரபிள் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

### அவர்கட்கு அளித்த நல்வரவேற்புப் பத்திரம்

**மன்னர்கள் மகிழும் மணியே வருக!**

தென்னா டுடையோர் செய் தவப்பேற்றால் தோன்றி, தமிழ் ஆங்கில மென்னும் இரு மொழியிலும் மதி நுட்பம் வாய்ந்து, வாங்குகை வருந்த மன்னுயிர்க் களிக்கும் வள்ளன்மையான் மிக்க தங்கள் புகழ்மணம் யாண்டும் கமழ்கின்றதை நினைந்து பெரிதும் இன்புறுகின்றோம்.

**பிறர்க்கற முயலும் பெரும!**

"ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து" என்னும் வள்ளுவர் வாய் மொழிக் கேற்ப, சிதம்பரத்தலத்தில் மக்கள் என்றும் இதம் பெற நிறுவிய பல்கலைக் கழகத்தின் மாட்சி என்னென்பேம்! ஆங்கு நிகழும் கலை மகளின் நடன ஒலித் திரள் கேட்டு உலக முழுது மன்றோ இறும்பூ தெய்துகிறது!

**நல் அருந்தூழமைச்ச!**

தங்கள் அறச் செயலனைத்தும் நினைந்தன்றோ நமது மாக்ஷிமை தங்கிய மன்னர் பிரான் தங்களுக்கு ராவ் பகதூர், திவான் பகதூர், சர், பரம்பரை ராஜா என்னும் உயர் சிறப்புப் பட்டங்களை முறையே வழங்கியும் தங்களை இராஜாங்கச்சபையில் அங்கத்தினராகவும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வாழ் நாள் உறுப்பினராகவும் கொண்டு பாராட்டிப் பயன்பெற்று வருகின்றனர்.

**கல்விப் பயிர் வளர்க்கும் கருணை முகிலே**

இப் பர்மிய நாட்டில் பல கல்வி நிலையங்களிருப்பினும் நமது குழந்தைகட்கு நம் தொழிலுக்கேற்ற முறையில் வேண்டிய கல்வி நலனை விரைந்து கற்பித்தற்கும், அவர்கள் உடல் நலமும் குண நலமும் பெற்று, வருங்காலத்தில் இன்னும் சிறப்புற்று வாழ்வதற்கும், கல்வி நிலையம் குருகுலமுறையில் வேண்டியது இன்றியமையாதாயினமை யறிந்து பர்மா நகரத்தாரவர்களால் நிறுவப் பெற்றுள்ள இந் நிலையத்தில், கல்வி வளர்ச்சிக்குப் பெருங் கொடை அளிக்கும் வள்ளலாகிய தங்களை முதன் முறையாக வரவேற்கும் பேறு கிடைத்தமைக்குப் பெரிதும் களிபேருவகை எய்துகின்றோம்.

**குலத்தினர்ப் பேணும் குல நல முடையாய்!**

தாங்கள் நம் மரபினர்பாற் கொண்டுள்ள அன்பும், அவர்கட்கு எவ்வெவ் வழியில் நலமியற்றலா மென வெண்ணும் தூய சிந்தையும் முன்னின்று தொண்டாற்றும் தளரா ஊக்கமும், ஆகிய தங்கள் பெருந் தன்மை ஒவ்வொருவர் மனதிலும் பதிந்திருக்கின்ற தென்பதற்கு நம் சமூகத்தின ரனைவரும் மகிழ்ச்சியுடன் கோவிலூரில் பெரு விழாக் கூட்டித் தங்களைப் பாராட்டிய பொன்னுரைகளே சான்றாம்.

**அன்பே உருவாய் அமைந்த ஐய!**

"செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்று நின் வல்வரவு வாழ்வார்க்குரை" என்ற திருக்குறள் பிறந்த தமிழ் நாட்டினராகிய நம் மரபினர் தத்தம் வாழ்க்கைத் துணை நலத்தைப் பிரிந்து ஈண்டுறையும் வழக்கம் மாறுதலடைந்து, துணையுடன் வரும் நன்னாளை எதிர் நோக்கி நிற்பார் பலர் என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், நமது சமூகத்தின் இவ் வழக்க மாறுதலுக்குத் தங்கள் ஆதரவையும் விரும்புகின்றோம்.

**உலகம் போற்றும் உயர் தனிச் செல்வ!**

தங்கள் தரிசனம் ஈண்டெஞ்ஞான் றெய்துங் கொலோவென வரம்பிகந்த அவாவுடையேமாகிய எங்கள் விருப்பத்திற் கிணங்கி இங்கு வந்தருளிய தங்கள் பெருந்தகைமையினைப் பெரிதும் பாராட்டி மகிழ்கின்றோம்.

**தங்கள் வாழ் நாள் உயர்க!**

இரங்கூன்
கம்பை
14-12-29

இங்ஙனம் தங்களன்புள்ள,
**தன வைசியர் கல்வி நிலையக்
கழக அங்கத்தினர்கள்**

செட்டி நாட்டரசர் ஹானரபிள் ராஜா

### சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கட்கு அளித்த நல்வரவேற்புப் பத்திரம்

**பேரன்புடைய பெரியீர்!**

தங்கள் வரவு நல்வரவாகுக! தாங்கள் பர்மாவுக்கு விஜயம் செய்துள்ள இச் சந்தர்ப்பத்தில் நாங்கள் சரித்திரப் பிரசித்தியான எங்கள் நகரத்தில் மிகுந்த குதூகலத்தோடு தங்களுக்கு நல்வரவு கூறவந்த நன்னாளை இந் நாட்டின் இன்பார்ந்த ஓர் திருநாளெனக் கொண்டு மகிழ்கின்றோம்.

**பிறர்க்கென வுழைக்கும் பெரும!**

ஆனந்த மயமான புத்த சமயத்தினரின் பரோபகார சிந்தை மேவிய இந் நாட்டில் ஜாதி, சமயப் பிரிவினைப் பந்தங்களினின்று முற்றும் விலகி இவ்வுலகத்தின் பற்பல பாகங்களிலுமுள்ள இதர மக்களோடு நாங்கள் கலந்து இதனையோர் சந்தோஷம் நிறைந்த குடும்ப வாழ்வெனக் கொண்டு இந்நாட்டின் ஜனாபிவிருத்தி,

வெற்றிக்கோடி நாட்டியது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

விவசாயக்கைத்தொழில், முன்னேற்றம் முதலியவைகளில் நேரான பாத்தியம் கொண்டாடப் பங்கு பெற்றுள்ளோமெனும் பெருமையை உணர்ந்து வருகின்றோம். நாங்கள் அனைவரும் ஒரே விதமாகப் பிரஜா நேசர்களா யிருந்து வருவதுடன் இந்நாட்டு மக்களோடு செய்து வருகின்ற எங்கள் **லேவாதேவி** முறைகளும், நெருங்கிய கூட்டுறவுகளும், பரஸ்பர நம்பிக்கையையும், முற்றிய அன்பையும் உண்டாக்கி யிருக்கின்றன.

**பொது நலங்காணும் புகழீர்!**

தங்கட்கு என்றும் இந் நாட்டின்பாலுள்ள பிரியம் அளவிடற்கரியது. தங்கட்குத் தொழிலினிடத்துள்ள தளரா ஊக்கமும், முன்னுணர்ச்சியும் இந் நாட்டில் தங்களுடைய வியாபாரத்தைப் பிரபலப்படுத்தி யிருக்கின்றன. சமீபத்தில் தங்களால் நிறுவப்பெற்றுள்ள செட்டிநாட்டு (பாங்க்) நாணயச் சாலையினின்று இந் நாட்டில் வதிந்துள்ள நமது சமூகத்தினரனைவரும் போதிய பலம் பெற்று வாழ்ந்து வருவோமென்னும் நல்லுணர்ச்சி யெங்கள் மனத்தே வேரூன்றி யுள்ளது.

**சமூக வளர்ச்சித் தனிப்பெருந் துணையீர்!**

நமது சமூகத்தினர் சகல துறைகளிலும் பயிற்சி பெறுதற்கின்றி நாணய சாலைகளை மாத்திரம் வைத்து நடத்தத் தக்கவர்களா யிருந்து வருவதையும், மிகச் சிறிய தொகையினர் வேறு சில துறைகளிலிறங்கி நிற்பினும் அநுபவக் குறைவு முதலிய இடையூறுகளால் ஊக்கத் தளர்ச்சியுற்று வருகின்றனரென்பதையும் நாங்கள் வெகு காலமாக அறிந்து வருகின்றோம். அவ்வாறு புதிய துறைகளில் பிரவேசித்து வருகின்றவர்களைச் சிறிது தூரம் நடத்திச்சென்று வழிகாட்டுவது நமது சமூகத்தினர்களின் பொறுப்பாகும். அவ்விதப் பொறுப்பைத் தங்களிடமிருந்தேனும் தங்கள் மூலமாகவேனும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

**ஆரியசாந்தத் தூரிய அழதீர்!**

தாங்கள் எப்பொழுதும் எங்களுக்குரிய பிரகாசக் குறியாயிருந்து வருகின்றீர்கள். நமது சமூகத்தில் மிகுந்த தாராள சிந்தையுடன் ஏராளமான திரவியங்களை பகிரங்க அந்தரங்க தர்மங்களின் சார்பாக வாரி யிறைத்து வருகின்றவர்களின் சங்கியை நூற்றுக்கணக்காய் இருப்பதிலென்ன சந்தேகம்? நமது சமூகத்தினரின் பொதுநல உணர்ச்சிக்கும், தயாள தன்மைக்கும் அறிகுறியாக இந்தியாவின் பற்பல பாகங்களிலும் நூற்றுக்கணக்கான ஆலயங்களும், வைத்தியசாலைகளும், பாடசாலைகளும், சத்திரங்களும் காணப் பெறுகின்றன. ஆனால், தங்களுடைய வள்ளற்றன்மையான நன்கொடையும், அக்கொடையால் அமைக்கப் பெற்றிருக்கும் அண்ணாமலை பல்கலைக் கழகமும், மேற் கூறப்பெற்ற சகல தருமங்களுக்கும் மேலாக விளங்குவதோடு கூட தற்காலீக நாகரிகக் கல்விப் பயிர்ச்சிக்குரியனவாயும், நமது ஆன்றோர்களின் ஆச்சரியமான வித்வப் பயிற்ச்சி முறையைப் பாதுகாத்து அதனுடைய பூர்வீக ஸ்திதியிலிருத்தத் தக்கனவாயுமிருக்கின்றன.

**இகபரமேன வருமிரு சுகவுபவீர்!**

தங்களுடைய போற்றத் தகுந்த ஆற்றலாதிகளுக்கேற்ற பல மரியாதைப் பட்டங்களும், சமீபத்தில் சிறப்பித்துக் கொடுக்கப்பெற்ற பரம்பரை ராஜா என்னும் பட்டமும் நமது சமூகத்தினரனைவரையும் கௌரவப்படுத்துகின்றனவென்று கருதி நாங்கள் பெருமை யடைகின்றோம்.

சர்வ வல்லமையுள்ள பராபர வஸ்துவானவர் தங்கள்மீது ஆனந்தமயமான திருக்கருணை கூர்ந்து தங்களுக்கு நீண்ட ஆயுளும், அரோக திடகாத்திரமும், பொதுநலப் பணியியற்ற தளரா ஊக்கமும் தந்து ரக்ஷித்தருளுமாறு அவருடைய திருவருளை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தங்கள் அன்பார்ந்த
**தன வைசிய சமூகத்தினர்கள்.**

மாந்தளை
23-12-29


**Allies & Enemies**

(The English and The French) (The Germans)

AND

*The Best Brains of*

**CONGRESS AND HINDU MAHA SABHA**

**C. RAJAGOPALACHARIAR,** *(Ex-Premier of Madras.)*

**Barrister V. D. SAVRKAR,** *(President, All India Hindu Maha Sabha.)*

All have used and Certified

**KESARI**

**108 BAR SOAP**

*(Antiseptic, Light Scented, Best Quality for Cheap Price.)*

Why not you, please?

Apply for Sole Agency Terms to the Manufacturers:

KESARI SOAPS & CANDLE WORKS, LTD.

SHEVAPET, SALEM


பற்களை உறுதி செய்வது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

Supplement to INDIRA issue dated 1-10-41

# செட்டி நாட்டு ஜோதி

எப்.ஜி. நடேசய்யர்

உலகத்தில் எவ்வளவோ மக்கள் சொல்ல முடியாத கஷ்டங்களில் உறைந்து தவிக்கிறார்கள். உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி, புசிக்கக் கஞ்சியின்றி அல்லாடுகிறார்கள். இவர்கள் தொகைதான் அபரிமிதம்—நடுத்தரமான நிலையில் ஏதோ ஒருவிதமான ஜீவனத்திற்கு வழி யுள்ளவர்கள் அடுத்தபடியான தொகை. வெகு சிலரே பிரபுக்களாகப் பிரகாசிக்கிறார்கள். அவர்களில் சிலர் பரம்பரை பிரபுக்கள்—சிலர் தங்கள் பிரயத்தனத்தினால் நூதனமாய் பிரபுத்துவ மடைந்தவர்கள். இரு பாலர்களிலும் பெரும்பான்மையோர் தம்முடைய சொந்த சுக சௌகரியங்களில்மட்டும் கண்ணும் கருத்துமாயிருந்து தம்மைச் சுற்றியிருக்கும் ஏழை மக்களைப்பற்றி யாதொரு கவலைக்கும் இடம்கொடாதிருப்பவர்கள். வெகு சிலரே தம்முடைய குபேர ஸம்பத்தினால் பாதிக்கப்படாமல் தமக்கு ஏற்பட்டிருக்கும் அந்தஸ்தும், ஸம்பத்தும், பகவானால் அளிக்கப்பட்டதென்றும், அதன் மூலம் தர்மத்தை ஸ்தாபனம் செய்து, தரித்திரத்தை நீக்கி, ஞானத்தையும், வித்தையையும், கலையையும் போஷித்து அஞ்ஞானத்தைப் போக்கி, மனித சமூகத்தை நல்வழியில் ஏகும்படி உதவுவதுதான் தம்முடைய கடமை யென்று உணர்ந்து அதன்படியே நடந்து வருகிறார்கள். இச்சிறு கோஷ்டியில் சேர்க்கப்படவேண்டிய பிரபு செட்டி நாடு ராஜாவாக விளங்கும் ஸ்ரீமான் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள். அவர்களுடைய 60-ம் வயது பூர்த்தியாகி 61-வது பிறந்த தினத்தன்று நடைபெறவிருக்கும் ஷஷ்டியப்த பூர்த்தி விழாவை முன்னிட்டு "இந்திரா" பத்திரிகாசிரியர் ஒரு விசேஷப் பதிப்புக் கொண்டு வருவது எல்லோராலும் போற்றத் தக்கது.

செட்டிநாடு ராஜா அவர்கள் பரம்பரை தனவந்தர்—நகரத்தார்களுக்குள்ளே மிகவும் கீர்த்தியும், புகழும், நற்பெயரும், பெருமையும் வாய்ந்த பிரக்யாதியான பெரிய உயரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். நகரத்தார்களால் தங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட பெரியார். லக்ஷ்மி கடாக்ஷம் பரிபூரணமாய்ப் பெற்ற கோடீச்வரர்—தாக்ஷிணாத்திய குபேரர்—ஸரஸ்வதி தேவியின் அனுக்கிரகத்தையும் பெருவாரியாய்ப் பெற்றவர். கட்டான தேகம், பரந்த முக விலாசம், சாந்தமான பார்வை, திருநீறுபூண்ட விசால நெற்றி, புத்தி நிறைந்த பெருத்த சிரசு, அன்பும், தயையும், தாராளமும் ததும்பும் ஹிருதயத்தைக் காக்கும் அகண்ட மார்பு, நீண்ட வரனளிக்கும் அதிர்ஷ்ட ரேகைகள் கொண்ட கரங்கள், கம்பீரமான தோற்றம்—இவையாவன செட்டிநாடு ராஜா அவர்களின் அம்சங்கள்—இதற்குமேல் அன்னவர்களுடைய நடை, உடை, சம்பாஷணை, எல்லாம் அவரை கௌரவிக்கின்றன—செட்டியாரவர்களைச் சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு ஆச்சர்யத்தை விளைவிக்கும். ராஜா என்கிற முறையில் ஒரு பெரிய படாடோப மனிதராகக் கருதி அவரைப் பார்க்கப் போகிறவர்கள் ஏமாந்து போவார்கள். அவ்வளவு எளிய முறையில் காணப்படுவார்—"நிறைகுடம் தளும்பாது" என்ற வசனம் செட்டியாரவர்களுக்குத்தான் பொருந்தும்.

தமிழ் நாட்டில் யாதொரு மகத்தான வித்தியாசாலையும் தனி மனிதர்களால் சர்க்கார் உதவியை எதிர்பாராமல் ஏற்படாமலிருந்த சமயத்தில் ராஜா அண்ணாமலைச் செட்டியாரவர்கள் முன்வந்து தன் சொந்தப் பொறுப்பிலே யாவராலும் போற்றும்படியான முறையில் அண்ணாமலை சர்வ கலாசாலையைச் சிதம்பர க்ஷேத்திரத்தில் நிலை நாட்டினார். வடநாட்டில் அநேக வித்தியாசாலைகள் இவ்விதம் நிறுவப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் காசி க்ஷேத்திரத்தில் பண்டித மதன் மோஹன் மாளவியாஜியால் ஏற்படுத்தப்பட்ட ஹிந்து சர்வகலாசாலை வட இந்தியாவின் தேச பக்தியையும், ஹிந்து சமூகத்தினிடையே உள்ள ஊக்கத்தையும் தெரிவித்தது. அதே மாதிரி அலிகார் என்கிற இடத்தில் முஸ்லீம் சமூகத்திற்காக ஒரு பெரிய சர்வகலாசாலை ஏற்

வாய் நாற்றத்தைப் போக்குவதில் சிறந்தது எல். பழநியப்பாஸ்' பற்போடி

படுத்தப்பட்டு அதனால் அச் சமூகத்திற்காக அநேக நன்மைகளைச் செய்து வருகிறது—அதே மாதிரி மகாராஷ்டிரம். ஆந்திரம், முதலிய பிரதேசங்களில் சர்வ கலாசாலைகள் நடந்தேறி வருகின்றன. ஆனால் நமது தாய் நாடாகிய தமிழ் நாட்டில் ஒருவரும் முன் வரவில்லை. நமது தேசத்தில் பிறக்காவிட்டாலும் இத் தேசத்தையே தன் ஜன்ம பூமியாகக் கருதி அதன் நலத்திற்கு எல்லாத் துறைகளிலும் கட்டுப்பட்டு கடைசியில் நம்மிடையே கால வியோகமான அம்மை அன்னி பெஸன்டு அவர்கள் இது விஷயம் எடுத்துக்கொண்ட சிரத்தையும், சிரமமும், அளவிடக் கூடாதது—ஆனாலும் அவர்களுடைய முயற்சியும் பலிக்க வில்லை. செட்டிநாடு ராஜா அவர்கள்தான் இம் முயற்சியில் வெற்றி பெற்றார். எதிர்காலத்தில் தமிழ் நாடு தனி இராஜதானி யாகும்பொழுது அதன் சர்வகலாசாலை அண்ணாமலைச் சர்வகலா சாலைதான் என்பதற்கு ஐயமில்லை. தமிழ் நாட்டில் எக்காலமும் செட்டிநாடு ராஜா அண்ணாமலைச் செட்டியாரவர்களின் பெயர் செழித்தோங்கி வருவது நிச்சயம்.

செட்டியாரவர்கள் பொதுப்படிப்பு விஷயத்தில் மட்டும் மனம் செலுத்தி திருப்தியடைய வில்லை. மனிதன் வாழ்விற்கு அதி முக்கியமான கலை, சங்கீதம், ஆடல், பாடல், முதலிய இகபர சாதகமான வித்தியாப்பியாஸங்களில் ஈடுபட்டு அவைகளின் முன்னேற்றத்திற்குச் சாதகமான முறைகளைத் தனது சர்வகலாசாலையில் விசேஷமாக அப்பியசிக்க இடமளித்திருக்கிறார். தமிழையும், தமிழர்களையும், தமிழ் நாட்டையும், இவை மூலம் பாரத தேசத்தையும், அபிவிருத்தி செய்வதில் ஆர்வம் கொண்ட கலைஞர் நம் அண்ணாமலைச் செட்டியார். அன்னவர்களால் ஆதரிக்கப்பட்ட சத்சங்கங்கள், தர்ம ஸ்தாபனங்கள், ஆலயங்கள் பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், கலாபிவிர்த்தி சபைகள், ஸங்கீத ஸமாஜங்கள், முதலியவை கணக்கற்றவை. வியாபாரம், தொழில், நாணயம், இவை விஷயங்களில் செட்டிநாட்டு ராஜா அவர்கள் முதல் ஸ்தானம் பெற்றிருக்கிறார். இன்னும் எவ்வளவோ பிரம்மாண்டமான பொதுநல விஷயங்கள் அவர் மூளையை இருப்பிடமாகக் கொண்டிருக்கின்றன.

ராஜா அண்ணாமலைச் செட்டியாரவர்களை நான் சுமார் ஐம்பது வருஷங்களாக அறிவேன். பால்யத்தில் நாங்களிருவரும் மாணாக்கர்களாக விருக்கும்போது புதுக்கோட்டையில் முதல் முதல் சந்தித்தோம். அப்பொழுது அவருக்கும் எனக்கும் பரஸ்பரம் ஏற்பட்ட அன்பும், மதிப்பும், இதுகாறும் குன்றவேயில்லை. நான் செட்டியாரவர்களுடன் நெருங்கிப் பழகினவர்களில் ஒருவன். அவர்களுடைய வாழ்க்கையை நன்றாகக் கவனித்திருக்கிறேன். அவருடைய நன்மையான சுவபாவத்தில் நான் யாதொரு மாறுதலையும் கண்டதில்லை. சாதாரணமாகத், தன் பெரியோர்களுடன் தங்கி தொழில் பார்க்க வந்த சமயமும் சரி, பின்னால், தான் குடும்பத்தின் தலைவனாக வந்து கோடிக்கணக்கான ஆஸ்திக்கு அதிபதியாய் வந்தபோதும் சரி, ராஜாவாக ஆனதற்குப் பிறகும் சரி, முன்னும்சரி, புரசவாக்கத்தில் சாதாரண ஒரு பங்களாவில் இருந்தபோதும்சரி, அடையாற்றில் தற்பொழுது அமைக்கப்பட்டிருக்கும் செட்டிநாடு அரண்மனையில் வாழும் போதும் சரி, ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் எப்போதும் ஒரே மாதிரிதான் நடந்து கொண்டு வந்திருக்கிறார்கள்—ஒரே சாந்தம், ஒரே அமைதி, ஒரே நிதானம், ஒரே நிர்ணயம், ஒரே நோக்கம், ஒரே இடைவிடாத அல்லும் பகலும் உழைப்பு, ஒரே முடிவு—வெற்றிமேல் வெற்றி.

இப்பெரியார் இறைவனருளால் ஆயுராரோக்ய, திடகாத்ர, ஐஸ்வர்யாதி அனுக்கிரகத்தைப் பெற்று பாரதத்தாயின் அருந்தவப் புதல்வராய் நீடூழி வாழவேண்டுமென்று எல்லோரும் பிரார்த்திப்போமாக.

ஆங்கிலேயர்கள், பிரான்சுக்காரர்கள்
ஜெர்மனியர்கள்
இந்திய தேசீய காங்கிரஸ், இந்து மஹாசபை இவைகளின்
சிறந்த அறிவாளிகளான
C. இராஜகோபாலாச்சாரியார், V. D. சாவர்க்கார்
முதலியவர்கள் உபயோகித்து சிறந்தவை என்று
நற்சாக்ஷிப் பத்திரங்கள் அளிக்கப்பட்ட
**கேஸரி**
**108 பார் சோப்**
நீங்கள் ஏன் உபயோகிக்கக்கூடாது.
விஷக்கிருமிகளை ஒழிக்கவல்லது! நல்ல வாசனை!!
உயர்ந்த முறை! குறைந்த விலை!!
உபயோகித்துப் பாருங்கள்
ஏஜென்ஸி நிபந்தனைகளுக்கும், மற்ற விபரங்களுக்கும்
அடியிற்கண்ட உற்பத்தியாளருக்கு எழுதவும்:—
கேஸரி சோப்ஸ் & கேண்டில் ஒர்க்ஸ்,
லிமிடெட்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

பற் பூச்சிகளை ஸம்ஹரிப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

**Supplement to INDIRA issue dated 1-10-41**




தமிழ்நாடு தன்னரசு பெற்றிருந்த நாளில் தமிழ் மொழி சிறப்புற்றிருந்தது. கலைநலம் வாய்ந்த புலவர்களை ஆதரித்துப் புகழ்பெற்ற புரவலர் பலர் இருந்தனர். அவர் சிறப்பும் சீலமும் அழியாக் கவியிலமைந்து இலங்குகின்றன. பழம் பதியாகிய பாண்டி நாட்டையாண்ட பெருமன்னர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வாயிலாக ஆன்ற தமிழறிஞரை ஆதரித்து அழியாப் புகழ் பெற்றார்கள். சோழ நாட்டை வளநாடாக்கிய கரிகால் வளவன் பட்டினப் பாலைபாடிய கவிஞர்க்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசிலாக வழங்கிய செய்தியைப் பரணிப் புலவர் பாராட்டுகின்றார். இங்ஙனம் பெருங்கொடையளித்துப் புலமையை வளர்த்த மன்னரைப் பின்பற்றிக் குறுநில மன்னரும் இருநிதியாளரும் கவிஞரை ஆதரிக்கத் தலைப்பட்டார்கள். இவர்களுள் தலை சிறந்தார் எழுவரைக் 'கடையெழு வள்ளல்கள்' என்று தமிழ் நூல்கள் போற்றுகின்றன. தெய்வமணக்கும் தேவாரப் பாசுரத்தில் கொடைக்கு வரம்பாகக் குறிக்கப்பட்ட பாரி இவ்வள்ளல்களுள் ஒருவனாவன். அப்பெருந்தகை பாண்டி நாட்டின்கண் அமைந்த பறம்பு நாட்டின் தலைவனாகத் திகழ்ந்தான். பறம்புக்கோட்டை யாழேந்திய புலவர்க்கு எளிதாகவும், வாளேந்திய பகைவர்க்கு அரிதாகவும் விளங்கிற்று. இந்நாட்டிலே பாரீச்சுரம் என்னும் ஊரொன்று இருந்ததாகச் சாசனம் கூறும். 'புலனழுக்கற்ற அந்தணாளன்' என்று பொய்யறியாப் புலவர்களாற் போற்றப்பட்ட கபிலர் பாரியின் உயிர் நண்பராயிருந்தார். இப்புலவர் பெருமானும் தென்பறம்பு நாட்டிலுள்ள திருவாதவூரிற் பிறந்தவர். பறம்பு நாட்டுக் கோமானாகிய பாரியும், தென்பறம்பு நாட்டிலே தோன்றிய கபிலரும் ஒத்த உணர்ச்சியுடையராய் இருந்ததோடு ஒரு நாட்டவராகவும் அமைந்தமையால் உயரிய நட்புக்கு ஒரு சான்றாக விளங்கினார்கள்.

சோழநாட்டில் பெண்ணை யாற்றுக்கும் வெள்ளாற்றுக்கும் இடைப்பட்ட நிலங்களை ஆண்டுவந்த அதிகமான் என்னும் அரசன் மற்றொரு சிறந்த வள்ளல். நல்லிசைப் புலமை மெல்லியலாருட் சிறந்த ஔவையாரை ஆதரித்த பெருமை அவனுக்கே சிறப்பாக உரியதாகும். இந்நாளில் தருமபுரியென வழங்கும் தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதிகமான் அரசு புரிந்தான். தகடூர்க் கோட்டையைச் சேரமான் ஒருவன் தகர்த்தெறிந்தானேனும் இவ்வள்ளலின் பெயர் நாட்டிலே நன்கு நிலைபெற்றிருக்கின்றது. தருமபுரிக்குத் தெற்கே ஐந்து மைல் தூரத்திலுள்ள அதமன் கோட்டையென்னும் ஊரின் பெயர் அதிகமான் கோட்டையின் சிதைவாகும். அன்றியும் கெடில நதிக்கரையிலமைந்த திருவதிகை யென்னும் மூதூர் அதிகமானோடு தொடர்புடையதாகத் தோற்றுகின்றது. அதிகனூர் என்பது அதிகையாகக் குறுகி யிருத்தல் கூடும். அருள் வடிவாய்த் திகழ்ந்த திலகவதியாரது விண்ணப்பத்திற்கிணங்கி அன்னவரின் பின்னவராய திருநாவுக்கரசரை இறைவன் ஆட்கொண்டருளிய அரும்பதி யாதலால் திரு என்னும் அடைபெற்று அவ்வூர் திருவதிகையாயிற்று. இக்காலத்தில் அது இன்னும் குறுகி, திருவதியென வழங்குகின்றது.

தமிழ்க் கவிஞரின் வறுமையை நீக்கத் தன் தலையையும் கொடுக்க இசைந்த குமணவள்ளலின் கதையை அறியாதார் இந்நாட்டில் எவரும் இரார். தம்பியின் கொடுமையால் நாடும் செல்வமும் இழந்து கொங்குக் காட்டிலே கரந்துறைந்த வள்ளலைத் தமிழ்க் கவிஞர் ஒருவர் கண்டு கொண்டார்; தன் மனையை வாட்டி

ஜெகமெங்கும் புகழ் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

நின்ற கொடுமையை ஒரு பாட்டால் அறிவித்தார். அவர் பாட்டைக் கேட்டபோது குமணன் நாட்டை யிழந்த நிலையில் அடைந்த துயரினும் அதிகத் துயருற்றான். தமையனது தலை கொண்டு வருவார்க்கு நல்ல விலை தருவதாகத் தம்பி பறை யறைந்திருந்த செய்தியறிந்து பாடி நின்ற புலவரிடம் தன் உடைவாளைக் கொடுத்து தலையை அரிந்து செல்ல வேண்டினான். அம்மொழி கேட்டுத் திடுக்கிட்டார் கவிஞர். உடைவாளைப் பெற்றுக்கொண்டு காட்டினின்றும் ஓடினார். குமணன் தம்பியின் அவைக்களத்தில் வாளேந்திய கையராய் நின்று கல்லும் புல்லும் கரைந்துருகப் பாடினார். தமிழ் வாணரைத் தலையளித்து ஆட்கொள்ளும் தகைமை வாய்ந்த வள்ளல் கடும்புலி வாழும் காட்டில் உறைதல் தகுமோ என்று முறையிட்டார். உருக்கமான பாட்டைக் கேட்டபொழுது தம்பியின் கண்கள் பாசத்தால் நேசத்தாரைகள் சொரிந்தன. அந்நிலையில் தமையனை நாட்டிற்கு அழைத்து வருமாறு கவிஞரை வேண்டினான் தம்பி. குமணனை அழைத்து வந்து உடன்பிறந்தார் இருவரையும் ஒருமைப்படுத்தினார் கவிஞர். இத்தகைய நல்லிசைப் புலவர் பெருந்தலைச் சாத்தனார் என்னும் பெயரினர். பெருந்தலை யென்னும் கொங்கு நாட்டு ஊரிலே பிறந்தமையால் பெருந்தலைச் சாத்தனார் என்று அவர் பெயர் பெற்றார் போலும். பெருந்தலையூர் என்னும் ஊர் ஒன்று கொங்கு நாட்டில் உண்டு. குமணவள்ளலும் கொங்கு நாட்டுக் கோமானே யாவர். கொங்கு நாட்டில் அவர் பெயரால் அமைந்த குமணம் என்ற ஊர் கொழுமம் எனச் சிதைந்து வழங்குகின்றது.

இங்ஙனம் அருந்தமிழை ஆதரித்த பெரு நில வேந்தரும் குறுநில மன்னரும் மறைந்த பின்னர் தமிழ் வாணர் மறுக்க முறும் காலம் வந்துற்றது. "பாட்டும் உரையும் பயிலாத ஓட்டைச் செவி" யுடையார் நாட்டில் ஆதிக்கம் பெற்றனர். தேவாரம் பாடிய பெரியாரும் திருவாய்மொழி யருளிய ஆழ்வாரும் நாட்டின் நிலை கண்டு வருந்தினர். தமிழ் அறிந்தோரை நோக்கி, 'பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்' என்று நொந்துரைத்துப் போந்தார் சுந்தரர். "வம்மின் புலவீர்! நும்மெய் வருத்திக் கைசெய்து உய்ம்மினோ, இம்மன்னுலகிற் செல்வர் இப்போதில்லை நோக்கினோம்" என்று வருந்தியுரைத்தார் நம்மாழ்வார்.

இவ்வாறு ஆன்றோர் பழித்துரைத்த இருட்காலம் கழிந்து அருள் ஒளி எழுந்தது. சைவ சமய நாயன்மார்களும் வைணவ சமய ஆழ்வார்களும் தமிழ் நாடு முழுதும் போந்து பாடிய பாடல்கள் மாந்தர் மனத்தைக் கவர்ந்தன. தெய்வ உணர்ச்சி எங்கும் பொங்கித் ததும்பிப் பூரணமாய் நின்றது. பெரு நில வேந்தரும் திரைகடலோடித் திரவியம் தேடிய இளங்கோக்களும் 'கோயில் இல்லா ஊரிற் குடியிருத்தல் ஆகாது' என்னும் கொள்கை யுடையராய், எங்கும் ஆலயங்களைக் கட்டினார்கள்; பழைய கோவில்களைப் புதுக்கினார்கள்; பாடல் பெற்ற பதிகளைப் பண்படுத்தினார்கள். ஆலயங்களை அடுத்து அறச்சாலைகளும் மடங்களும் எழுந்தன.

இந்நிலையில் மேலைநாட்டு நாகரிகம் தமிழகத்தில் தலைகாட்டத் தொடங்கிற்று. வர்த்தகம் புரியக் கருதி வந்தடைந்த மேலை நாட்டார்க்குத் துரைத்தனமும் வாய்த்தது. ஆங்கில ஆட்சி இந்நாட்டில் நிலைபெற்ற பின்னர் ஆங்கிலக் கல்வி எங்கும் பரவிற்று. அதன் பயனாக முன்னைய குறிக்கோளும் மனப்பான்மையும் மாற்றமுற்றன.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
இன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்னும் பாரதியார் பாட்டு இக்காலத்திய மாந்தரின் மனப்பான்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. அற நிலையத் தலைவர்களா யமர்ந்து பெரும் பொருளை ஆள்வோரும், அரும் பொருள் ஈட்டும் அறிஞரும் கலை ஞானத்தை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். திருப்பனந்தாள் மடத்தின் தலைவராக விளங்கும் தம்பிரான் சுவாமிகள் சென்னைச் சர்வ கலாசாலையில் ஆண்டுதோறும் தனித் தமிழ்ப் புலமைத் தேர்வில் முதலிடம்

பசு & கன்று மார்க் அசல் நெய்



புத்தம்புது வெண்ணெயால்
தயாரித்தது உத்திரவாதமானது
வேண்டிய அளவுகளில்
புதியலீவர்லிட் டின்களில்
கிடைக்கும்.




V. முத்துவீரண்ண செட்டி & ஸன்.
SOLE PROP: ராஜாவெங்கிடராம செட்டி கோயமுத்தூர்.

எல்லோராலும் புகழப்படுவது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

பெறும் அறிஞர்க்கு ஆயிரம் ரூபாய் பரிசளித் தற்குரிய பெருங்கொடையை மனமுவந்து வழங்கி யுள்ளார்கள். ஒவ்வோ ராண்டிலும் பரிசு பெறுபவர் ஒவ்வொருவரேயாயினும் தமிழ் மாணவர் பலர் அதனைப் பெறக்கருதித் தமிழ் நூல்களை ஆழ்ந்து கற்றுப் பெரும் புலமை யடைகின்றனர்கள். இன்னும் தில்லையம் பதியின் எல்லையில் திக்கெலாம் புகழுறும் செட்டி நாட்டரசர் நிறுவிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் மொழிக்குப் புத்துயிர் அளிக்கும் தகுதி வாய்ந்ததாகும். இவ்வரசர் இயலோடு இசைத் தமிழையும் போற்றி வளர்க்கும் ஆர்வ முடையவர்கள் என்பது அண்மையில் இசைவாணர்க்கு அவர்கள் வழங்கிய பெருங்கொடையால் விளங்கும்.

'ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்'

என்னும் பொருளுரையைக் கடைப்பிடித்து வாழும் தனவணிக நாட்டார்க்கும் ஏனைய பெருஞ் செல்வர்க்கும் செட்டி நாட்டரசர் புதியதோர் அற நெறி காட்டினர்கள் என்று அறிஞருலகம் வியந்து பாராட்டுகின்றது. தமிழ்நாட்டுத் தொன்மை சான்ற முறைமைக்கேற்ப, இவ்வண்ணல் நிறுவிய பல்கலைக் கழகமும் அதனைத் தன்னகத்தே கொண்ட திரு நகரும் அவர் பெயர் தாங்கி நிலவும் பெருமை பெற்றன. ஆனந்தக் கூத்தர் ஐந்தொழிலின் முறைமையை விளக்கியருளும் பொன்னம்பலத்தினருகே, கண்ணெனத்தகைய எண்ணும் எழுத்தும் அறிவுறுத்தும் அண்ணாமலைக் கழகம் தமிழ்நாட்டின் நல்லணியாக என்றும் நின்று நிலவும் வண்ணம், அம்பலவாணர் திருவருளை வேண்டுகின்றேன்.

---


# கவலை வேண்டாம்!

## உங்களை ஆரோக்கியத் தன்மையுடையவராக்குவதற்கு இணையற்ற மருந்து ஆப்பிள் அய டானிக்

*ரிஜிஸ்டர் நெ. 313*

இருதய பலம், நரம்புகளின் பலம், மூளை பலம், ரத்த விர்த்தியுடன் சரீர ஆரோக்யத்தை உண்டு பண்ணுவதில் சிறந்தது. ஜீரண சக்தி கொடுப்பதில் வல்லது.

**தீரும் வியாதிகள் :**—வெட்டைச் சூடு, வெட்டை வாய்வு, மூத்திரக் கெடுதல், வரட்சி, இருமல், பித்த மயக்கம், காங்கை, தேக எரிவு, நெஞ்செரிவு, புளிச்சேப்பம், மூலம் மூலாதாரக் கொதிப்பு இவைகளைக் குணப்படுத்தி இடுப்பு வலி, முழங்கால் வலி, முழிக் குடைச்சல்களைப் போக்கி, தாது கருவிகளைப் பலமுறச்செய்து இந்திரியத்தை கெட்டியாகச் செய்வதில் சிறந்தது. நற்சாக்ஷியும் பரிசும் பெற்றுள்ளது **நமது ஆப்பிள் அய டானிக்** ஒன்றே.

ஆண், பெண், சிறுவர், விருத்தர் முதலிய யாவரும் சாப்பிடலாம். பாலிலாவது, தண்ணீரிலாவது ஒரு டீஸ்பூன் டானிக் சேர்த்தருந்தவும்.

**காலை மாலை இருவேளை சாப்பிடவும். பத்தியமில்லாதது**

ஏஜண்டுகளிடம், கமிஷன் நீக்கி விலை ரூ. 1—4—0

**தாதுவிருத்திக்கு நிகரற்றது. பரீட்சுத்துப் பாருங்கள்**

விநியோகிப்பவர் — தபாற் செலவு 0—9—0

**டாக்டர் T. S. கமால்தீன்** — **T. S. K. Co., மெடிகல் ஒர்க்ஸ்,** சோளமாதேவி, கோயமுத்தூர் ஜில்லா

டிஸ்டிரிபியூட்டர் **V. M. P. சிவம் & Co., வெஸ்ட் டாக்கீஸ், புதுக்கோட்டை**

ஏஜண்டஸ் : **செட்டிநாடு ஸ்டோர்ஸ், செட்டிநாடு**

மற்றும், அயத் தங்க மாத்திரைகள், எவரஸ்ட் மோஷன் பில்ஸ், காலாமிசிரி லேகியம், ராமா கல்நார் பற்பொடி, கமலா மிருதம் முதலியன கிடைக்கும்

விவரமான கேட்லாக்கிற்கு எழுதவும்

**எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை**



## வாழ்த்துப்பா

தில்லைப் பதியுடையான் சிற்றம் பலம்தன்னில்
அல்லும் பகலும் நின் றாடுகின்றான்—எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து.

சீருயரும் வணிகர் குலம் சிறக்க வந்தோன்
　　தில்லையிலே கலைவளரக் கழகம் கண்டோன்
பாரதநன் னாடெங்கும் புகழ்விரித்தோன்
　　பாடுமிசைத் தமிழ்வளரப் பண்ணைசெய்தோன்
மாரியென வழங்கியறம் வளர்க்குஞ் செல்வன்
　　வள்ளலண்ணா மலையரசன் சுற்றத்தோடு
வாரிதிசூ ழிவ்வுலகில் வாழ்க மாதோ!
　　வளர்பிறைபோல் வளர்ந்துநிதம் தழைக
　　　　　　　　　　மாதோ!!

சி. தேசிகவிநாயகம் பிள்ளை

எல். பழநியப்பா போட்டோ மார்க் பற்பொடியை உபயோகியுங்கள்

Supplement to INDIRA issue dated 1-10-41

# குழந்தைப் பாடல்கள்

சோ. முருகப்பா ஆசிரியர் 'குமரன்'

உலகில் காணப்படும் இனிய பொருள்களுள் மிகவும் இனியபொருளாகக் காணப்படுவது குழந்தைகளே யாவர். குழந்தைப் பருவமே மக்கள் பருவத்தில் இனிப்புடைய தென்பதில் ஐயமில்லை. இந்த இனிமைப் பருவமானது ஒவ்வொருவருக்கும் கிட்டினாலும் அதனைத் தானே உணர முடிகிறதில்லை. வயதான ஒருவர் குழந்தையாக இருந்து பார்க்க முடியாது. குழந்தையாக இருக்கும்போது அதனைத் தானே அனுபவிக்கும்படியான அறிவு ஏற்படுவ தில்லை. எப்படியும் குழந்தைப் பருவ இன்பத்தை அனுபவிப்பதற்கு இன்னும் ஒரு குழந்தையைக் கொண்டுதான் அனுபவிக்க வேண்டி யிருக்கிறது. குயிலைக் கேட்டும் மயிலைக் கண்டும் கிளியைக் கொஞ்சியும் இன்பம் நுகர விரும்பும் மக்கள் குழந்தைகளைப் பலவாறு பாராட்டி அனுபவிக்க ஆசை கொள்வது இயல்பு. குயிலும், மயிலும், கிளியும் வேறு பொருள்கள். ஆனால் அனுபவிக்க விரும்பும் மக்களிடம் அகப்பட்டது குழந்தைப் பருவம். குழந்தைப் பருவம் தன்னிடத்துச் சில நாள் இருந்த போதிலும் அதன் இன்பத்தைப் பிறர் அனுபவிக்க முடிந்ததே யன்றித் தான் அனுபவிக்க முடியாமற் கழிந்து போய்விட்டது. ஆதலால்தான் மக்கள் குழந்தை இன்பத்தில் பெருங் காதல்கொண்டு தவிக்கின்றார் போலும்.

நூல்களியற்றிய ஆசிரியர் பலரும் குழந்தைகளைப் பற்றிப் பாடி யிருக்கின்றனர். சில பாடல்களை மட்டும் இங்கே காணலாம். பெரிய காவியங்களில் — புராணங்களில் — பிற நூல்களில் குழந்தைகளைப் பற்றிய பிரஸ்தாபங்கள் மிகச் சொற்பந்தான். வள்ளுவர் நீதி நூலிலும் குழந்தைகளைப் பற்றிப் பாடல்கள் காணப்படுகின்றன.



சோ. முருகப்பா

குழலினிது யாழினி தென்பர்தம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

குழந்தையின் இயற்கை இசையை நுகர முடியாதவர்தாம் செயற்கைக் குழலையும் நரம்பையும் பாராட்டுவர் என்று கூற முற்பட்டால் வள்ளுவரின் மனோவேகம் எவ்வளவு இதில் பாய்ந்திருக்கிற தென்பது விளங்கும். இசையறிவு கைவரப்பெற்ற புலவர் பெருமக்களால் பாடப்படும்போது யாழும் குழலும் தேனூற்றாகித் திளைப்பிக்கிற தென்பதை யாரே மறுப்பர்? அப்படிப்பட்ட இசைவெள்ளம் கேட்போரின் பிற புலன் வழியை அடைத்துச் செவி யறிவொன்றையே பெருக்கி ஒரு வழிப்படுத்தி பாய்ந்து உருக்குவதை யுணர்கிறோம். என்றாலும் பிள்ளைப் பேரின்பத்தின் முன்னே இவை புறங் காட்டுகின்றன வென்பதை வள்ளுவர் உணர்ந்துரைக்கின்றார்.

கம்பர் நூலில் பிள்ளையைப் பற்றிய பாடல்கள் காணப் படவில்லை. அம்பிகாபதி இறந்துபோன துயரத்தை எழுப்புமென்று பாடவில்லையோ? அல்லது பாடிய பாடல்கள் வெளியேறிப் போய்விட்டனவோ? யாரறிவார்! அடுத்த இடத்தில் சிதறிய துளியாக இரண்டொரு குறிப்புகள் கிடக்கின்றன.

தாலி யைம்படை தழுவும் மார்பிடை
மாலை வாயமு தொழுகு மக்களைப்
பாலின் ஊட்டுவள் செங்கைப் பங்கயம்
வானி லாவுறக் குவிவ மானுமே

பிள்ளையின் வாணீரும் பாலும் தாயின் அன்பும் அவளது கையும் நிலாவும் தாமரையும் கம்பனின் உள்ள வெள்ள உணர்ச்சிப் பெருக்கில் கலந்து பாட்டாக ஒழுகி வருவது உணர்ந்து களிக்கத் தக்கதாகும். புறநானூற்றி லிருந்து ஒரு பாடல்,

வெற்றிக் கொடி நாட்டியது எல். பழனியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறும் மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே

எல்லாச் செல்வத்தையும் பெற்று உண்டு உடுத்து உதவி புரியும் பெருஞ் செல்வரானு லென்ன? லட்சக் கணக்காகப் பணத்தை வைத்து வளர்த்து வருகிற ஈகையற்ற செல்வரை இங்கே ஒதுக்கி நிற்கிறது பாட்டு. அவர்கள் உடைப் பெருஞ்செல்வரல்லர்; வறுமை நிறைந்த பெருஞ்செல்வர் என்று வைத்துக்கொள்ளலாம். செல்வத்தின் பயனை யடைந் தின்புறுகின்ற செல்வராயினும், அந்த இன்பக்கடலினிடையே குழந்தை இன்பம் கூடிக் கலவா விட்டால் அத் தனையும் பாழ்; அங்கே இன்பம் வறுமை தட் டிப்போகிறது. அறிவில் நிறைந்த உள்ளத்தை அறிவு நிரம்பப் பெருத குழந்தைகள் தம் செய லால் மயக்கி விடுகின்றன வென்பது இந்தப் பாடலில் குறிப்பிடப்பட் டிருக்கிறது. திருத்த முருத செய்கையும் திருத்த முருத பேச்சும், உலகினரின் திருத்தங்களை யறியாத உள்ளமும் சிறந்த மேதாவி யென்று கருதப்பட்டு நிமிர்ந்து விரைத்திருக்கிற பெரிய ஆளை மயக்கி இழுத்துப் பணியச் செய்யும் குழந்தைத் தன்மையை உற்று நோக்கினல் ஆச்சரியமாக இருக்கிற தல்லவா? பின் வந்த ஆசிரியர்களும் தங்கள் நூல்களில் பிள்ளைகளைப் பற்றிய பாடல்களைப் பாட ஆசையுற்றிருக்கின் றனர். வில்லிபுத்தூரார்,

கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுது ஓடித் தொடர்ந்துபற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை என்னும்?

என்று கேட்டார். கல்யாணம் செய்து கொண் டால் அதற்கு அடுத்த இன்பம் பிள்ளை யின் பந்தான்! முன்தானையைப் பற்றித் தொடர்ந்து செல்வதே ஒரு காட்சி. அதிலும் அழுதுகொண் டே தொடர்தல் மற்றொரு காட்சி. கண்ணீரும் வாநீரும் மூக்கு நீரும் வடிந்து வடிந்து ஒன் ருகக் கலந்து வயிற்றுக்குள் போவதையும் கவனித் திருந்தால் அதையும் பிள்ளை யின்பத்தில் கவிகள் கலந்து பேசிப் பாராட்டி விடுவார்கள். காரணமென்ன? பிள்ளை யிடத்தில் அவ்வளவு கிறுக்கு ஏற்பட்டு விடுகிறது. 'தெருவிலிருந்து புழுதியளைந்து' என்று ஒருவர் பாராட்ட வில்லையா? புழுதி அதிலும் தெருவிற் கிடக்கிற நாற்றப் புழுதி அதிலிருந்து அதனை அள்ளிக் குளித்துப் பிள்ளை விளையாடுவதைப் பாராட்டிப் பாட்டு என்ருல் பிள்ளை இன்பத்தில் மக்கள் மனம் எப்படிப் பாய்ந்திருக்கிற தென்பதைக் கவனிக்க வேண்டும். நளவெண்பாவில் ஒன்று,

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை இங் கில்லாத வர்.

பிரபுலிங்க லீலை என்ற நூலில் சிவப்பிரகாச சுவாமிகள் குழந்தையைப் பற்றிச் சில பாட்டுக் களைத் தொகுத்துள்ளார்கள். சந்யாசி குழந்தை யைப் பற்றிப் பாடி யிருப்பது படிக்கத்தக்க தல்லவா? அதிலும் பெண் குழந்தையைப்பற்றி அவர் ஜாக்கிரதையாகப் பாடி யிருக்கிருர். பிள்ளை யின்பத்தைப் பற்றி யன்று. அதை அவர் கள் வளர்த்த மாதிரியைப் பற்றித்தான். அதை யும் படிப்பவர் படித்துப் பார்க்கட்டுமே?

மாயைப் பெயர்கொள் மகளைநறு
மஞ்சள் திமிர்ந்து கணைக்காலின்
ஏயக் கிடத்தி நீராட்டி
இணைக்கண் உந்தி நீரூதி
நேயத் துகிலின் மெய்துடைத்து
நெகிழ்மென் முலையோ டுறத்தழுவி
வாயில் திவலை கொடுதேய்த்து
மண்பொட் டணிந்து நீறிட்டு

கண்ணிற் கமைய மையெழுதிக்
காற்குச் சதங்கை பொற்றண்டை
நண்ணப் புனைந்து பொன்னரைஞாண்
நடுவிற் பூட்டிப் புலியுகிர்சேர்
வண்ணப் பசும்பொன் அணிமார்பில்
வனைந்து சிறுமென் தொடிசேர்த்தி
பெண்ணிற்கரசி திருநுதல் பொற்
பிறைமேல் சுட்டி ஒன்றணிந்து.

போக்கும் பொருளால் கண்மிச்சில்
போக்கி அன்பால் முலையூட்டி
தூக்கும் பவளக் கால்பசும்பொன்
தொட்டில் மலியக் கிடத்தியே
பார்க்கும் சுவைவான் அமுதமே
பார்வேந் தணியே என்துயரம்
தீர்க்கும் கரும்பே கண்மணியே
திருவே என்று சீராட்டி.

இப்படியே பல நூல்களிலும் உண்டு. இவை களைத் தவிர பிள்ளைகளைப் பற்றியே பிரபந்தங் களைத் தனியாகப் பாடவும் பிற்காலத்தில் புலவர் பெருமக்கள் விரும்பி யிருக்கிருர்கள். அதன் பயனுகவே பிள்ளைத் தமிழ்கள் பல தோன்றின. பிள்ளைகளின் செய்கை யின்பத்தை துருவித் துருவிக் கண்டு பிடித்துப் போட்டி போட்டு பிள்ளைத் தமிழ்களைப் பாடிக் குவித்திருக்கின்ற னர். அவற்றுள் பல கிழவன் தமிழாகவும் முடிந் தன வெனில் மிகையன்று. பிள்ளைப் பருவத் தைப் பாடக் கையிருப்பில்லாமல் பெரியவனை பிறகும் கிழவனை பிறகும் என்னென்ன செய் யப் போகிரு னென்பதையும் பிள்ளையினுள்ளே

டாக்டர்களால் அங்கீகரிக்கப் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

புகுத்திப் பார்த்துப் பாட்டைப் பாடித் தள்ளியிருக்கிறார்கள். எதைப் போல? இனி வரப் போகிற பெரிய ஆலமரம் ஒரு சிறிய விதைக்குள்தானே இருக்கிறது. விதையைப் பற்றிப் பாட விஷயம் தட்டுகிறபோது உள்ளே இருக்கிற பெரிய ஆலமரத்தைப்பற்றி சண்டப் பிரசண்டமாகப் பாடலாமல்லவா? அதைப்போல வருகிறது மதுரை குமர குருபரர் வாக்கில்,

தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறும்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்ப ருளக் கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றெடுத்த
வாழ்வே வருக வருகவே.

இந்தப் பாடல் வீட்டிலும் தெருவிலும் விளையாடித் திரிகின்ற இயற்கை மகவைப் பற்றியெழுந்ததன்று. மக்கள் மனத்தில் அப்பாலுக்கப்பாலாக விளங்கும் பரம்பொருளே உலகில் பிள்ளை யுருக்கொண்டு தோற்றிய அவசரத்தை அறிந்து அன்புபெருகிப் பாடிய பாடல் இது. இந்த வகையை ஒட்டிப் பாடப்பட்ட திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழி லிருந்து ஒரு பாடல். குழந்தைக்குப் பசி வந்துவிட்டது. பசி தோன்றியபின் அடுத்து நிகழும் நிகழ்ச்சிகளைப் பற்றி இப்பாட்டு:

எள்ளத்தனைவந் துறுபசிக்கும்
இரங்கிப்பரந்து சிறுபண்டி
எக்கிக்குழைந்து மணித்துவர்வாய்
இதழைக் குவித்து விரித்தழுது
துள்ளித் துடித்துப் புடைபெயர்ந்து
தொட்டி லுதைந்து பெருவிரலைச்
சுவைத்துக் கடைவாய் நீரொழுகத்
தோளின் மகரக் குழைதவழ
மெள்ளத் தவழ்ந்து குறுமூரல்
விளைத்து மடியின் மீதிருந்து
விம்மிப் பொருமி முகம்பார்த்து
வேண்டும் உமையாள் களபமுலை
வள்ளத் தமுதுண் டகமகிழ்ந்த
மழலைச் சிறுவா வருகவே
வளரும் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா வருகவே.

எடுப்பும் முடிப்பும் இடர்ப்பாடுதான். எள்ளத்தனை பசிக்கு இவ்வளவு ஏற்பட்டது கொஞ்சம் பெரிய காரியந்தான். 'வளரும் களப' விஷயம் பிள்ளையைச் சேர்ந்ததல்ல. பின்னாலே நடக்கப்போவதல்லவா? இங்கே கொஞ்சம் பிள்ளைத் தமிழ் இலக்கணத்தைத் துணைப்பற்றி இளவட்டத் தமிழாகி யிருக்கிறது. இந்த தோரணையில்தான் பிள்ளைத் தமிழ் பல பாடப்பட்டுள்ளன. முன்னை நூல்களில் பிள்ளைகளின் செயல்களும் பிள்ளையைக் கண்ட பெரியவர்கள் அடையும் இன்பமும் பிள்ளைகளால் பெறும் பயனும் நன்கு தேடிக் கண்டு கூறப்பட்டுள்ளன. நேருக்கு நேராகப் பிள்ளையைப் பார்த்துப் பேசும் முறை பிள்ளைத் தமிழ்களில் காணப்படுகிறது. முன்னோர் மொழி பொருள்களை யேற்றுப் புதுக்கியும், புதிய கருத்துக்களை அச்சமின்றி அள்ளி அழுத்தி வழங்குவதிலும் நிகரற்று விளங்கிய கவி பாரதியாரின் பாடல்களிலுள்ள பகுதிகளையும் பார்ப்போம். நேருக்கு நேரே சிறு குழந்தை யொன்றினைப் பார்த்துப் பாடும் பாட்டு இது.

பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே!
அள்ளியணைத்திடவே—என்முன்னே
ஆடி வருந் தேனே!
ஓடி வருகையிலே—கண்ணம்மா
உள்ளம் குளிருதடி
ஆடித்திரிதல் கண்டால்—உன்னைப்போய்
ஆவி தழுவுதடி
உச்சி தனைமுகந்தால்—கருவம்
ஓங்கி வளருதடி
மெச்சி உனை ஊரார்—புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி.
கன்னத்தில் முத்தமிட்டால்—உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி
உன்னைத் தழுவிடிலோ—கண்ணம்மா
உன்மத்த மாகுதடி.
சற்றுன் முகஞ்சிவந்தால்—மனது
சஞ்சல மாகுதடி.
நெற்றி சுருங்கக்கண்டால்—எனக்கு
நெஞ்சம் பதைக்குதடி.

பிள்ளையை நேருக்கு நேராக நிறுத்தி உள்ளங் குழைந்து பாராட்டும் முறையில் பாடிய இப்பாட்டு தமிழ் நாட்டுக்கு ஒரு விருந்தாகும். நேருக்கு நேராகக் குழந்தை இன்பத்தை அனுபவிப்பதன் பெருமையைக் கூறும் ஒரு அடி இப்பாடலின் சிகரமாகி நிற்பதைக் காண்கிறோம்.

இன்பக் கதைக ளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வ துண்டோ.

மற்றொரு பிள்ளைப் பாடல். ஒரு பிள்ளை மற்றொரு பிள்ளை செய்யும் குறும்புகளைப்பற்றிக் கூறுவதாக. அன்பு—தாங்க முடியாத குறும்பில் தோன்றும் அன்பு—அதிலே நிறைந்திருக்கிற

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே

ஹாஸ்யம்—எளிய பாடலில் துளளிக் குதிக்கும் ஆர்வத்துடன் பாட்டு மலர்கிறது.

புள்ளாங் குழல்கொண்டு வருவான்—அமுது
பொங்கித் ததும்பும்நற் கீதம்படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே—அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம்

அங்காந் திருக்கும்வாய் தனிலே—கண்ணன்
ஆறேழு கட்டெறும் பை ப்போட்டு விடுவான்

இப்படிக் குழந்தை உள்ளத்தில் கலந்து குழைந்து பாடும் பாடல் சாலச் சிறந்ததன்றோ ?

குழந்தையைப் பற்றிப் பாடுவதையும், குழந்தைகளை நோக்கிப் பாடுவதற்கு இயைந்த பாடல்களைப் பாடுதல் தமிழ் நாட்டில் புதியதொரு துறை யென்பதில் சந்தேகமில்லை. பாரதியார் தான் தொடங்கினார். கவி. தேசிகவிநாயகம் பிள்ளை இத்துறையில் வெற்றி பெற்றார்.

வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா—உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா.
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா—கண்ணில்
சற்றுந் தெரியாம லாகுதம்மா.

சந்திரனின் வளர்வும் தேய்வும் குழந்தைப் பாட்டில் வந்திருக்கிற மாதிரியைப் படித்துப் படித்து இன்புறல் வேண்டும்.

இறந்துபோன குழந்தையைப் பற்றி அதன் தோழமைப் பிள்ளை கூறுவதாக,

தும்பி பாடுதம்மா—கிளிபயில்
சோலை தேடுதம்மா.
தம்பி எங்கே அம்மா—விளையாடத்
தனியே நின்றேன் அம்மா.

குயிலைத் தேடானோ—கிளியொடு
கொஞ்ச வாரானோ
மயிலை நோக்கானோ—நம்மை யெல்லாம்
மறந்தும் போனானோ ?

இந்த விசேஷ மலரின் ராப்பர் முதல் பக்கத்திலுள்ள 3 வர்ணப் படத்துடன்
மலரிலுள்ள எல்லாப் படங்களையும் தயாரித்தவர்கள்

# தி பிரஸ் ஆர்ட் சர்விஸ்

★

ஸ்கூல் புத்தகங்களும், நாவல்களும், விளம்பரங்களுக்கும் தேவையான வாஷிலன் கலர் டிராயிங்குகளும் நூதன அழகிய விதமாய் முழு திருப்திகரமாய் வரைந்து தரப்படும்.

★



★

நல்ல முறையில் ஸினிமா கலர் ஸிலேடுகளும் தயார்செய்து கொடுக்கப்படும்.

★

ஒருமுறை பரீக்ஷை செய்யின் உண்மை விளங்கும்.

★

விலாசம் : **தி பிரஸ் ஆர்ட் சர்விஸ்** 146, பிராட்வே, மதராஸ்

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே



# குமார ராஜா ஸர் முத்தையா செட்டியாரவர்கள்

## சரித்திரம்

கொடையையே பூஷணமாகக் கொண்ட வள்ளல் செட்டிநாட்டரசர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரவர்களின் அருந்தவப் புதல்வரான குமார ராஜா சர் முத்தையா செட்டியாரவர்கள் 1905-ம் ஆண்டு பிறந்தார்கள்.

இவர்கள் இளவயதிலேயே, கல்வி கற்பதில் பெரும் ஆர்வம் காட்டினார்கள். பொதுக் காரியங்களில் கலந்து தொண்டாற்றுவதில் இவர்களுக்கு அளவுகடந்த பிரியம் பால்யத்திலேயே ஏற்பட்டுவிட்டது.

### திருமணம்

குமார ராஜா அவர்களுக்கும், பள்ளத்தூர் திருவாளர் உ. அ. உ. க. ராம. ராமசாமி செட்டியாரவர்கள் அருந்தவப் புதல்வி ஸ்ரீமதி மெய்யம்மை ஆச்சிக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது.

1924-ம் வருஷம் ஏப்ரல் மாதம் பிரசிடென்சி காலேஜில் பி. ஏ. பட்டம் பெற்றார்கள். இவர்கள் காலேஜைவிட்டு வெளிவந்தது முதல் இந்த மாகாண அரசியலில் கலந்து கொண்டார்கள்.

### சென்னையின் முதல் மேயர்

சென்னைக் கார்ப்பொரேஷன் தலைவரை மேயர் என்று அழைக்க வேண்டுமென்ற சட்டத்தை ஏற்படுத்த முதன்மையாக நின்றவர்கள் இவர்கள்தான். இவர்களே முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். இந்தியாவில் மிகக் குறைந்த வயதில் மேயராக வந்தவர்கள் இவர்கள்தான். 21-1-33 அன்று திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் சட்ட சபையில் கீழ்க்கண்டவாறு பேசினார்கள்: "வெகு நாட்களாகக் கவனிப் பாரற்றுக் கிடந்த தீர்மானத்தை நிறைவேற்றி சென்னையின் முதல் மேயராக அங்கம் வகித்த செட்டிநாடு குமார ராஜா அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். கல்கத்தா, பம்பாய் முதலிய நகர்களில் மேயர் என்ற பட்டமிருக்க, சென்னையில் மட்டுமில்லாதது வருந்தத் தக்கது. அந்தக் கவலை நீங்கியதற்குக் குமார ராஜா அவர்களுக்கு மறுபடியும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

குமார ராஜா முத்தையா செட்டியாரவர்கள் 5 வருஷம் கார்ப்பொரேஷன் கவுன்சிலராக இருந்தார்கள். அப்பொழுது அவர்கள் பொது மக்களுக்கு செய்த நன்மைகள் அனந்தம். 1932-33-ல் அவர்கள் மேயராக வந்ததற்கு அவர்களுடைய பொதுஜன உழைப்பே காரணம்.

குமார ராஜா அவர்கள், 21-10-33ல், தம்முடைய அடையாரிலுள்ள செட்டிநாடு ஹவுசில், கவர்னருக்கு ஒரு தோட்டவிருந்து நடத்தினார்கள். அதை லண்டனில், லண்டன் மேயர் பிரதம மந்திரிக்குச் செய்யும் விருந்திற்கு ஒப்பிடலாம்.

31-10-33-ல் ரிப்பன் கட்டிடத்தில் நடந்த கூட்டம்தான், குமார ராஜா மேயராகத் தலைமை வகித்த கடைசிக் கூட்டம். அக் கூட்டத்தில், "செட்டிநாடு குமார ராஜா எம். ஏ. முத்தையா செட்டியாரவர்கள் சென்னை மேயராக இருந்து ஆற்றிய கடமைகளைப் பாராட்டுகின்றோம்" என்று தீர்மானம் நிறைவேறியது. சகோதர அங்கத்தினர்கள் மாலைகள் அணிவித்துத் தங்கள் மகிழ்ச்சியை அறிவித்துக் கொண்டார்கள். ஒவ்வொரு அங்கத்தினர்களும் இவர்களுடைய சேவையைப் பாராட்டிப் பேசினார்கள். இவர்கள் மேயராக இருந்த பொழுதுதான் கார்ப்பொரேஷனுக்குக் குறைந்த $4\frac{3}{4}$% வட்டி விகிதத்தில் 10 லட்சம் ரூபாய் கொடுக்கும்படி அரசாங்கத்தைத் தூண்டினார்கள்.

ஜெகமெங்கும் புகழ் பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி

### இவர்கள் வகித்த பதவிகள்

1928-ம் ஆண்டு பச்சபாஸ் சாரிட்டீஸின் டிரஸ்டியாக இருந்தார்கள். 1929-ம் ஆண்டு மாகாண பாங்கிங் என்குயரி கமிட்டியின் அங்கத்தினராக இருந்தார்கள். 30 முதல் 37 வரை அசெம்பிளி அங்கத்தினராக இருந்து ஆற்றிய தொண்டுகள் பல. 1932-ம் ஆண்டு சென்னைக் கார்ப்பொரேஷனின் பிரசிடெண்டாக இருந்தார்கள். 33-ம் வருஷத்தில் சென்னையின் அதிபால்ய முதல் மேயரானார்கள். 34-ம் வருஷத்திலும் மேயராக இருந்தார்கள். 34-35 ம் ஆண்டுகளில் தென்னிந்திய வியாபார சங்கத்தின் உபதலைவராக இருந்து அளப்பரிய நன்மைகள் செய்தார்கள். இந்தியன் பாங்க், மெட்ராஸ் டெலிபோன் கம்பெனி, டெக்கான் ஷுகர் அண்டு ஆப்காரி கம்பெனி, இம்பீரியல் பாங்க் முதலியவைகளில் டயரக்டராக பதவி வகித்தார்கள்.

1937-ம் ஆண்டு கல்வி, சுகாதார மந்திரியாக இருந்தார்கள். அப்பொழுது இவர்கள் மந்திரியானதைக்குறித்து காரைக்குடி நகரத்தார்களும், கானாடுகாத்தான் நகரத்தார்களும் இவர்களைப் பாராட்டினார்கள்.

இவர்கள் 36-37-ம் ஆண்டில் சென்னை யூனிவர்சிடியின் புரோ சான்சலராக இருந்தார்கள்.

37-ம் ஆண்டில், சென்னை மாகாணக் கல்வி மந்திரியாக இருந்தார்கள். அப்பொழுது இவர்கள், செட்டிநாட்டிலும் மற்ற இடங்களிலுமுள்ள கல்வி ஸ்தாபனங்கட்கு விஜயம் செய்தார்கள். இவர்கள் வகித்துள்ள பதவிகள் பல.

### இப்பொழுது வகித்துவரும் பதவிகள்

இப்பொழுது சென்னை அசெம்பிளியின் அங்கத்தினர். தென்னிந்திய வியாபார சங்கத்தின் தலைவர். மிட்லண்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் சேர்மன், வைசிராய் இந்தியப் பாதுகாப்புக் கமிட்டியின் அங்கத்தினர்.

செட்டிநாடு பாங்க் லிமிடெட், புதுக்கோட்டை; செட்டிநாடு கார்ப்பொரேஷன் லிமிடெட், புதுக்கோட்டை; சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் லிமிடெட், புதுக்கோட்டை; சௌத்



செட்டி நாட்டுக் குமாரராஜா சர் முத்தையா செட்டியாரவர்களும்
குமாரராணி ஸ்ரீமதி மெய்யம்மை ஆச்சி அவர்களும்
குமாரராஜா அவர்கள் மேயராக இருந்தபோது எடுத்த படம்

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழனியப்பா'ஸ் பற்பொடியே

இந்தியா கார்ப்பொரேஷன் லிமிடெட், சென்னை; மதுரை செளத் இந்தியா கார்ப்பொரேஷன், மதுரை; பர்மா கமர்ஷியல் கார்ப்பொரேஷன், ரங்கூன்; கிர்லாஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட்; தி மைசூர் கிர்லாஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட் முதலிய கம்பெனிகளிலும், ஸ்தாபனங்களிலும் டைரக்டராயிருந்து வருகிறார்கள். சென்னை யூனிவஸிர்டியின் செனட் மெம்பர், காஸ்மாபாலிட்டன், மெட்ராஸ் போட் கிளப், ரேஸ் கிளப் முதலிய பல கிளப்புகளில் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள்.

### ஸர் பட்டம்

இவர்கள் ஆற்றிவரும் பொதுநலத் தொண்டின் தன்மையையறிந்து இவர்களுக்கு அரசாங்கத்தார் 1941 ஜூன் மீ 12வ ஸர் என்ற வீரப்பட்டம் நல்கியுள்ளனர்.

### உயர்தரமான பாராட்டு

கல்கத்தா கார்ப்பொரேஷன் இதுவரை இருவருக்கு உபசாரம் செய்திருக்கிறது. முதல் முதலாகக் காந்திஜீ தான் இந்த உபசாரத்தைப் பெற்றவர். அடுத்தபடியாக குமாரராஜா அவர்கள் உபசரிக்கப் பட்டார்கள். இவ்விருவரைத் தவிர கல்கத்தா கார்ப்பொரேஷன் வேறு யாருக்கும் உபசாரம் செய்ததில்லை.

### பிரயாணம்

இவர்கள் இந்தியா முழுமையும் பிரயாணம் செய்துள்ளார்கள். பர்மா முதலிய இடங்களுக்கும் சென்றிருக்கிறார்கள். மேற்கண்ட பல இடங்களிலும் இவர்களுக்குக் கண்யம் பொருந்திய நண்பர்கள் பலர் இருக்கின்றனர். பெரிய பதவிகளில் உள்ள ஆங்கிலேயர்கள் பலர் இவர்களுக்கு நண்பர்களாக இருக்கின்றார்கள்.

### இவர்களுடைய குணாதிசயம்

இவர்களுக்கு தமிழின்மீது அளவற்ற பிரியம் உண்டு. தமிழ் வளர்ச்சிக்காக இவர்கள் தாராளமாக உதவி செய்துள்ளார்கள். தமிழ் வளர்ச்சி



குமார ராஜா முத்தையா செட்டியாரவர்கள் சென்னை மாகாணக் கல்வி மந்திரியாகவும் சென்னைச் சர்வ கலாசாலையின் புரோசான்ஸ்லராயுமிருந்தபோது எடுத்த படம்

எல்லோராலும் புகழப்படுவது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

பற்றிப் பல இடங்களில் பேசி இருக்கிறார்கள். சங்கீத அபிவிருத்தியில் இவர்களுக்குப் பேரார்வம் இருக்கிறது. நல்ல ரசிகத்தன்மை யுடையவர்கள். யாருடனும் அன்புடன் பழகும் தன்மை யுடையவர்கள். பார்க்க வருபவர்களை நன்கு உபசரிக்கும் குணம் மிகவும் பாராட்டத் தக்கது.

இவர்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு பிரசங்கம் செய்யும் வன்மை நிரம்பியவர்கள். இவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கல்வி ஸ்தாபனங்களும் கழகங்களும் பல. இவர்கள் வியாபார விஷயங்களில் நல்ல தேர்ச்சி யுடையவர்கள்.

இவர்களுக்கு இரண்டு குமாரர்கள் இருக்கின்றனர்.

இந்தியர்களுக்காகவும், குறிப்பாக தனவணிகர்களுக்காகவும் இவர்கள் எவ்வளவோ நன்மைகள் செய்துள்ளனர். இளவல் குமார ராஜா நீடூழி வாழப் பிரார்த்திக்கின்றோம்.

---




# வெற்றிமுரசு

வாரப் பத்திரிகை

யுத்தச் செய்திகள், கதைகள், கட்டுரைகள், ஹாஸ்யக் குறிப்புகள் முதலியன வெளிவருகின்றன

'ஆனந்த விகடன்' பகுத்தறிவுப் போட்டி, 'நாரதர்' சித்திரப் போட்டி, 'இந்திரா' கலை அறிவுப் போட்டி முதலியவைகளுக்கு தீர்க்கமான விடை விமர்சனம் ஞாயிறுதோறும் வெளிவருகிறது

**தனிப் பிரதி 0—1—6**

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 0—2—3 ஸ்டாம்பு அனுப்பவேண்டும்

**ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை**

மானேஜர்,

**'வெற்றி முரசு'**

நேமத்தான்பட்டி (Ramnad Dt.)

---

**மனதிற்கு உற்சாகம் அளிப்பது கண்டனூர் எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே**

**கண்டனூர், இராமநாதபுரம் ஜில்லா.**

# இந்தியன் பாங்க்

## லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ் :: நார்த் பீச் ரோட்

மதராஸ்

*தென்னிந்தியாவெங்கும் கிளை ஆபீஸ்கள்*

| | |
|---|---|
| அதிகார மூலதனம் | 60,00,000–0–0 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | 47, 92,800–0–0 |
| செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 100 ஷேர்களில் ரூ. 50 வீதம் செலுத்தப்பட்ட 20,000 ஷேர்கள் | 10,00,000–0–0 |
| ரூ. 100 ஷேர்களில் 10 வீதம் செலுத்தப்பட்ட 27,928 ஷேர்கள் | 2,79,280–0–0 |
| ரிஸர்வ் பண்டும், இன்னும் மற்ற பண்டுகளும் | 19,18,060–10–3 |

*செக்ரடரி*

**N. கோபால அய்யர்.**

**Supplement to INDIRA issue dated 1-10-41**

## திருவாளர் சி. வி. சி. டி.

# வெங்கடாசலம் செட்டியாரவர்கள்

திருவாளர் க. வெ. சித. வெங்கடாசலம் செட்டியாரவர்கள் 21—10—1906-ல் கானாடு காத்தானில் மிகப் பிரபலமான குடும்பத்தில் பிறந்தார்கள். இவர்களது தந்தை சிதம்பரம் செட்டியாரவர்கள் செட்டி நாட்டில் செல்வாக்கு உடையவர்கள்.

திருவாளர் வெங்கடாசலம் செட்டியாரவர்கட்கும், ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள் இரண்டாவது குமாரி ஸ்ரீமதி மீனாக்ஷி ஆச்சிக்கும் நள௵ பங்குனி௴ 27-௳ கானாடு காத்தானில் விவாகம் மிகச் சிறப்பாக நடந்தது.

இவர்கள் அதிபால்யத்திலேய பொது நலத் தொண்டில் ஆர்வம் காட்டினார்கள். 1931-ம௵ கானாடுகாத்தான் பஞ்சாயத்து போர்டு அங்கத்தினரானார்கள். அதன் பிறகும் ஒரு முறை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். பிறகு பஞ்சாயத்து போர்டின் தலைவராக இரண்டு முறை பதவி வகித்து நகர் நலத்திற்கான காரியங்கள் பல செய்தார்கள். 1934-ல் இராமநாதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1937-38 இரண்டு வருடங்கள் இவர்கள் வட இராமநாதபுரம் ஜில்லா போர்டின் தலைவராக இருந்தார்கள். இந்த சமயம் இவர்கள் பல அரிய பெரிய தொண்டுகள் செய்தார்கள். 18 புதிய ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தினார்கள். 150-மைல் அளவு புதிதாக ரோடு வசதி செய்யப்பட்டது. சுமார் 3-லட்சம் நன்கொடை வசூலித்து முக்கியமான பல காரியங்களைச் செய்தார்கள். இந்த ராஜதானியில் எந்த ஜில்லா போர்டாரும், பெண்களுக்கென ஹைஸ்கூல் ஏற்படுத்த வில்லை. ஆனால் இவர்களது அரிய முயற்சியின் காரணமாக, சிவகங்கையில் ஒரு உயர்தர பெண்பாடசாலை ஏற்படுத்தப்பட்டது. திருப்பத்தூரில் உயர்தர ஆண் பாடசாலை ஏற்படுத்தினார்கள். ஒன்பது லேடி டாக்டர்களை நியமித்து பொதுமக்கட்குப் பெரிதும் உபகாரம் செய்தார்கள். இவர்கள் பதவியிலிருந்து செய்த நன்மைகளைக் குறித்து இன்னும் மக்கள் பேசிக்கொண் டிருக்கின்றனர். திருப்பத்தூர் டிராவலர்ஸ் பங்களாவில் இவர்களது உருவப் படம் திறந்து வைத்து ஒரு பாராட்டு உபசாரம் நடத்தினபோது அன்பர்கள் பலர் இவர்களின் அரிய திறத்தைப் பாராட்டிப் பேசினர். தங்களுடைய தேவையைத் தெரிவிக்கப் போகும் யாரையும் அன்புடன் வரவேற்று அவர்களுடைய குறையை பொறுமையோடு கேட்டு உதவி செய்யும் அருங்குணம் இவர்களிடம் இருக்கிறது.

இவர்கள் சாதிமத வித்தியாசமின்றி யாருடனும் அன்புடன் பேசுவார்கள், பழகுவார்கள்.

இவர்களுக்கு அரியக்குடி திருவேங்கடவன் பால் அளவற்ற அன்பு. அரியக்குடி கோவிலுக்கு இவர்கள் அளப்பரிய நன்மைகள் செய்துள்ளனர். தென்திருப்பதி என்னும் அரியக்குடி திருமாலின் திருக் கோயிலுக்கும் குன்னக்குடி ஐந்து கோவில் தேவஸ்தானத்திற்கும் இவர்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினராக இருக்கிறார்கள். கானாடுகாத்தான் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பொரேஷனுக்கு 9 வருஷங்களாக மானேஜிங் டைரக்டரா யிருந்து திறம்பட நிர்வகித்து வருகின்றார்கள். இன்னும், இந்தியன் பாங்க், இண்டோ கமர்ஷியல் பாங்க், சௌத் இந்தியா கார்ப்பொரேஷன் (மதராஸ்) லிமிடெட், காரைக்குடி, செட்டிநாடு கார்ப்பொரேஷன் லிமிடெட், புதுக்கோட்டை, செட்டிநாடு பாங்க் லிமிடெட் புதுக்கோட்டை, மிட்லண்ட் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,மதராஸ், முதலிய கம்பெனிகளுக்கு டைரக்டராக இருந்து வருகிறார்கள். தென்னிந்தியா ரயில்வே கம்பெனி அட்வைசரி போர்டு மெம்பராகவும், மதராஸ் பிரசிடென்சி எலக்ட்ரிக் லைசென்ஸீஸ் அசோசியேஷன் மானேஜிங் கமிட்டி மெம்பராகவும் இருந்து வருகிறார்கள்.

இவர்கள், காம்பீர்யத் தன்மையும் வாக்கு வன்மையும் நிரம்பியவர்கள். ஜன சமூகத்தினிடை இவர்களுக்கு நல்ல மரியாதை இருக்கின்றது. செட்டிநாட்டில் சி. வி. சிடி என்றால் தெரியாதவர்கள் இல்லை.

சர்க்கார் இவர்களுக்கு, 1941-ம் வருஷம் ஜூன்௴ 12-௳ ராவ் பகதூர் பட்டம் அளித்துக் கௌரவித்தார்கள். இவர்களது பொதுஜனத் தொண்டுக்கு இந்தப் பட்டம் மிகவும் பொருத்தமானதே. இவர்கள் இவ்வுலகில் இன்னும் பல காலும் வாழ்ந்து பொது ஜன சேவை செய்ய இறைவன் அருள்புரிவானாக.

---

மார்க்கெட்டில் முதன்மை பெற்றது எல். பழநியப்பா'ஸ் பற்பொடியே



Rao Bahadur. C. V. CT. Venkatachalam Chettiar
ராவ்பகதூர் க. வெ. சித. வெங்கடாசலம் செட்டியார்.

# கவர்ச்சியானது !
# தேர்ந்தெடுத்த தினுசுகள் !!
# நம்பகமானது !!!

★

**சித்திர வேலைப்பாடமைந்த எல்லாவிதமான தங்க, வெள்ளி நகைகளுக்கும், வெள்ளிப் பாத்திர தினுசுகளுக்கும்**



## P. A. ராஜா செட்டியார் & பிரதர்

**ஷராப் மர்ச்செண்ட்ஸ்**

பெரிய கடை வீதி :: கோயமுத்தூர்

டெலிகிராம்: ராஜா    போன் நெ. 81

# வாழ்த்து—(சுந்தரேச சாஸ்திரிகள்)

## राजा सर श्लोकाः

जलाशया अप्यमृताम्बुपूर्णाः
रथ्याश्च नानातरुछन्नसूर्याः ।
अभ्रंलिहाग्राणि गृहाणि सौधैः
विनिर्मिता येन विभान्त्यजस्रम् ॥ १

भृत्यर्पणेनानुदिनं त्वसंख्यान्
कर्मैकजीवानवति प्रमोदात् ।
यः प्रीणयत्याश्रितमप्रमत्तः
यत्प्रीतिमभ्यर्थयतोऽखिलोपि ॥ २

स्वजन्मदेशादतिदूरनिष्ठे
यो हूणभूपस्य तिकेतनेपि ।
अन्यूनभावादुपचर्यमाणः
प्रवर्धते पूर्णशशीव नित्यम् ॥ ३

पुण्यैरनल्पैस्समवापनीयम्
राजेति सवर्त्र विराजमानम् ।
शब्दं समाप्नोत्यखिले.षतव्यम्
जातो जनिष्यंश्च यदीयवंशे ॥ ४

मुद्धार्यवश्योत्तमपुण्यमूर्ते
कलालतादत्तकरावलम्ब ।
अण्णामलैनामपदाभिधेय
प्रभो चिरंजीव सुखेन नित्यम् ॥ ५

### இதன் பொருள்

அமிர்தம் போன்ற நீர் நிரம்பிய பற்பல தடாகங்களையும், அடர்ந்து வளர்ந்த மரங்களால் சூரிய வெப்பத்தைத் தணிக்கும் ரஸ்தாக்களையும், அநேக உப்பரிகைகளுடன் ஆகாயத்தையளாவும் கோபுரங்களையுமுடைய அரண்மனைகள், வீடுகள் முதலியவைகளையும் நிர்மாணிப்பவரும்,

தினந்தோறும் உழைத்துப் பிழைக்கும் ஜனங்களை, தக்க ஊதியம் அளித்து, சந்தோஷத்துடன் காப்பவரும், தஞ்சமென்றடைந்தோரை ஆதரவுடன் சந்தோஷிக்கச் செய்பவரும், சகல ஜனங்களும் விரும்பக்கூடிய அன்பு வாய்ந்தவரும்,

தனது தாய் நாட்டிற்கு வெகு தூரத்திலிருக்கும் ஆங்கில சாம்ராஜ்யத்திலும் நமது நாட்டைப்போல் என்றும் உபசரிக்கப் படுபவரும், நிரைமதியைப்போல என்றும் விளங்குபவரும் உயர்ந்த புண்ணியத்தால் அடையத் தகுந்ததும், எல்லோராலும் விரும்பத் தகுந்ததும், அகிலமெங்கும் பிரகாசிக்கும் "ராஜா" என்ற பட்டத்தைப் பெற்றவரும், பிறந்தோர்களும், இனிப்பிறப்போரும் பெருமை பெறும் வம்சத்தில் பிறந்தவரும்,

முத்தையா என்ற வைசியதிலகம் செய்தபுண்யத்தின் உருவே, கலையெனும் கொடிக்கு ஆதரவளித்து ஓங்கச் செய்பவரே, அண்ணமலையெனும் பெயரால் அழைக்கப்படுபவரே, பிரபுவே நீர் எப்பொழுதும் சுகத்துடன் நீடூழி வாழ்வீராக.

உயர்தரமான கலர் பிளாக்குகள்
ஆப்டோன் பிளாக்குகள் செய்யும் இடம்!



விபரங்களுக்கு:—
எம். சி. அப்பாசாமி செட்டி
அண்டு கோ.,
14, ஜோன்ஸ் தெருவு, மண்ணடி மதராஸ்.

இந்த மலர் கலர் முகப்புப்படம் இக் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டது.







# " புகழாய பொருளோடு "

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர்

திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார் (M. A.) அவர்கள் பாடியது

(பல தாழிசைக் கொச்சகக் கலிப்பா)

புகழாய பொருளோடு புலமைசா னலத்தோடு
தகவுகூர் திறமெய்தித் தணிவில்சீர்த் தாளாற்றி
மகப்பலவே யாற்றியும் மாணறங்கள் ஆக்கியும்
அகனமர்ந் தளித்திட்டும் முகனமர்ந் தியம்பியுஞ்
செகமுள்ள திசையெல்லாஞ் செட்டிநாட் டிசைசெல்ல
வுகப்புடனே வாழ்தரும் உயரண்ணா மலைமன்னே.

(இது தரவு)

முன்னொருநாட் பாரி முல்லைக்குத் தேரளித்தான்
இன்றொரு நாள்போல எந்நாளுஞ் சோறளிக்கும்
நின்வண்மை யிருந்தவா தில்லைமு வாயிரர்க்கே.

கரவாமே யிரவலர்க்குக் காரியென்பான் புரவிதந்தான்
இரப்பார்கள் யாவருக்கும் எளிதினிலே சோறளிக்கப்
பரம்பரையாய்ச் சத்திரங்கள் பரவுதில்லை வைத்தனையே.

ஆலமர் செல்வற்கே யருங்கலிங்கம் ஆயளித்தான்
மேலவாந் தில்லையினின் மேவிடுங் கூத்தன்மால்
ஆயிரு பேர்க்கும்மே யறப்பணி வகுத்தனையே.







அருநெல்லிக் கனிதன்னை யதிகமான் கொடுத்திட்டான்
தருகலைகள் பலபயிலுங் கழகத்தே புலவருக்கும்
அருங்கலைகள் பயில்வார்க்கும் பலாயிரங்கள் தந்தனையே.

உள்ளிவரும் இரவலர்கட் குவந்தீந்தா னொருநள்ளி
உள்ளாதே யிருப்போர்க்கு முவந்தீயும் வேளண்ணுல்
தள்ளாத மாணவர்க்குத் தனியுதவி செய்குவையே.

பேகனென்பான் பெருங்கனுடன் பீலிக்குப் படாமளித்தான்
ஆகவத்திற் கதிகபணம் அந்நாள்போ லிந்நாளும்
ஆகுலமில் செட்டிநாட் டாரரசே யளித்தனையே.

ஆடுவார் மறந்தாரே பாடுதற்கே ஓரியினைப்
பாடல்சொல் பள்ளியினிற் பற்பலவா மன்றுகளில்
ஆடுகோள் நின்பெயர்தான் அடிக்கடியே சொல்லுவரே.

(இவை எழுந்தாழிசை)






எனவாங்கு,

நின்றிற முற்றும் பாடுநர்க் கடங்கா
அன்னையாந் தமிழை யளிக்கும் வள்ளலே
மன்னரும் விழையும் அண்ணு மலையே
துன்னருஞ் சீர்த்தித் துணைவி மக்களொடு
பன்னெடுங் காலம் பாரினுள் வாழ்கவே.

(இது சுரிதகம்)



## மதுரையில்

தங்குவதற்கு வசதியான இடமும், சுசி, ருசியான, காபி, சாப்பாடும் கிடைக்குமிடம்



### உடிப்பி போர்டிங் லாட்ஜ்

(போடி ஜமீன் பங்களா)

159, மேலமாசி வீதி, மதுரை

யாத்ரீகர்களுக்கும், சகல ஜனங்களுக்கும் சௌகரியமாய், நவீன, நாகரீக, சுகாதார வசதிகளுடன், குடும்பஸ்தர்களும், கனவான்களும் தங்குவதற்கு வசதியான, காற்றோட்டமுள்ள அறைகள், மின்சார விளக்கு, விசிறி முதலிய நூதன பர்னீச்சர் பிட்டிங்ஸ், கார்கள் நிறுத்துவதற்கு ஷெட்டுகளுடன் நடைபெற்று வருகிறது.

ப. நரசிங்கராவ்,
புரோப்ரைட்டர்.

ஹெட்டாபீஸ் :

உடிப்பி ஹிண்டு ரெஸ்டாரண்டு
71, மேலக்கோபுரத் தெரு, மதுரை

USE ALWAYS

# PERRY'S DINNER BISCUITS

FOR BABIES




# பெரீஸ் டின்னர் பிஸ்கோத்

குழந்தைகளுக்கு ஓர் சிறந்த ஆகாரம்

Supplement to INDIRA issue dated 1-10-41

# தமிழ் இசை நலம்

கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A. M.L., தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பண்டைத் தமிழ் நாட்டிலே மலையிலும், காட்டிலும், நாட்டிலும், கடற்கரையிலும், பாலை நிலத்திலும் தமிழிசை ஓங்கி வளர்ந்ததென்பது வெவ்வேறு நிலங்களுக்கு வெவ்வேறு யாழும், பறையும் அமைந்திருந்தமையால் அறியப்படும். முத்தமிழுள் இசையானது நடுவில் வைத்து வழங்கப்படுகிறது. மனக் கருத்தின் இனிமையை இலக்கியம் வாயிலாகவும், சொல்லின் இனிமையை இசை வாயிலாகவும், செயலின் இனிமையைக் கூத்தின் வாயிலாகவும் நமது முன்னோர் புலப்படுத்துவா ராயினர். இயற்றமிழ் நயங்களைப் புலவரும் இசைத்தமிழ் நயங்களைப் பாணரும், நாடகத் தமிழ் நயங்களைக் கூத்தர் அல்லது பொருநரும் உலகிற்கு இனிது விளக்கிப் போந்தனர். கைக்கிளை, விளரி, துத்தம், இளி, குரல், உழை, தாரம் என்பன ஏழிசைகளின் பெயர்களாக வழங்கின. தாரம் என்பது ஏழிசையின் முதலில் தோன்றுவதென்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கூறியுள்ளார். தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும் அதனுட் கைக்கிளையும் தோன்று மென்பது பழம்பாட்டொன்றினால் அறியலாகும்.

> தாரத்துள் தோன்றும் உழையுழை உள்தோன்றும்
> ஓருங் குரல்குரலின் உள்தோன்றிச்— சேரும்இனி
> உட் டோன்றுந் துத்தத்துள் தோன்றும் விளரியுட்
> கைக்கிளை தோன்றும் பிறப்பு.

கைக்கிளை முதலாக ஒன்றினொன்று ஒலி மிகுத்துத் தோன்றுவது போலும். இவற்றிற்குக் குறியீடாக ஏழு நெட்டுயிர்களும் ஆதியில் வழங்கப்பட்டன. இன்னிசைக் கருவிகளில் யாழுங் குழலுஞ் சிறந்தன வென்பது பண்டையோர் கருத்து. யாழ் நிலந்தோறும் வேறுபட்டிருப்பதோடு பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் எனப் பலவகைப்படும். இவற்றிற்கு முறையே இருபத்தொன்று, பத்தொன்பது, பதினான்கு, ஏழு நரம்புகள் இருந்தன. வீணை யென்பது யாழின் விகற்பமேயாகும். அதற்கு ஏழு நரம்பிருத்தலால் அது செங்கோட்டி யாழின் வகையோ என்று ஐயுற இடமுண்டு. ஆயிரம் நரம்புடைய பேரியாழொன்று இருந்ததெனச் சிலப்பதிகாரவுரையாசிரியர் கூறுகின்றார். யாழிலிட்டு வாசிக்கப்பட்ட பண்கள் பலவகைப்படும். பண்களிலிருந்தே இராகங்கள் கிளைத்தன வென்று சாரங்கதேவர் என்பவ ரியற்றிய வடமொழி நூலுள் கூறியுள்ளார். இவ்வுண்மையைக் காலஞ் சென்ற ஆபிரகாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் என்னும் பெரு நூலில் விரித்து விளக்கினர். ஆதியிற் பண்கள் நூற்று மூன்றிற்கு மேற்பட்டு விரிந்திருந்தன வென்றும் தேவாரத்திற்குப் பண் வகுத்த காலத்தில் இருபத்து நான்கு பண்களே சிறந்து விளங்கின வென்றும் சரித்திர வாராய்ச்சியாற் புலனாகின்றன. பாலை, செவ்வழி முதலிய பண்களுக்குத் தனித்தனி சிறப்பாக உரிய யாழ்களிருந்தன வென்பது ஆராய்ச்சியாற் தெரிய வருகின்றது. பண்ணினங்கள் திறமெனப்பட்டன. பரிபாடலின்கண் பாலைப்பண் பெரும்பான்மையும், காந்தாரம் சிறுபான்மையும் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. சிந்தாமணியில் காந்தருவ தத்தையாரிலம்பகத்தில் வீணை யென்ற சொல் யாழைக் குறிக்கப் பயன் படுகின்றது. தத்தையின் வீணை குன்றமாகவும், அதில் எழுந்து நிகழும் பண் குன்றத்து வீழ் அருவியாகவும் உருவகிக்கப்பட்டன.

> ‘திருமணி வீணைக் குன்றத்திழிந்த தீம்பாலை நீத்தத்
> தருமுடியர சராழ் வரம்மனை யறிவலென்றாள்.’

என்றது காண்க. பாலைப் பண்ணானது செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப் பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, மேற் செம்பாலை, விளரிப்பாலை யென ஏழுவகைப்படுமென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். அவ்வாறே ஆதியில் ஒவ்வொரு பண்ணும் பலவகையாக விரிந்து விளங்கிற்று. அவற்றின் விரிவெல்லாம் ஆராய்ச்சிக்குரியனவே. திறங்களும், தாளங்களும் பலபட விரிந்து வழங்கின.

பிற்காலத்தில் இசை நூற் சொற்களெல்லாம் பிறமொழி மயமாயின. தமிழிசையே கர்நாடக சங்கீதமெனப் பெயர் பெற்றது. கர்நாடகம் என்ற சொல் பழமையை யுணர்த்துமென்பர் ஒரு சாரார். கரை, நாடு, அகம் என்ற சொற்கள் ஒருங்கியைந்து கர்நாடக மென்றாயினவென்பதும் உண்டு. கரை நாடகம் என்பது கருநட நாட்டிற்குச் சிறப்புப் பெயராக விருந்தும் அது தென்னிந்தியாவைக் குறிக்கும்

பற்பொடிகளில் சிறந்தது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

## நீங்கள் சந்தாதாரராகச் சேர்ந்து விட்டீர்களா?

# இந்திரா

இனிமையான தமிழ்

மாதப் பதிப்பு

★

இனிமையான சிறு கதைகள், ஹாஸ்யக் கட்டுரைகள், இலக்கிய வியாசங்கள், தொடர் கதை, மாதர் பகுதி, சினிமா விமர்சனங்கள் முதலியன வெளிவருகின்றன.

தமிழ் நாட்டிலுள்ள பிரபல எழுத்தாளர்கள் எழுதுகின்றனர்

★

சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா } சிலோன் } | ஒரு வருடம் | .... | 1—8—0 |
| பர்மா | ,, | .... | 2—0—0 |
| மலேயா | ,, | .... | 2—8—0 |

இந்தியாவில் தனிப்பிரதி இரண்டணா

★

★

செட்டிநாடு

இராமநாதபுரம் ஜில்லா

பொதுவான சொல் லென்னலாம். விந்தியத்திற்குத் தெற்கேயுள்ள திராவிட நாடுகளில் வழங்குகின்ற இசைமுறைகளெல்லாம் அடிப்படையில் ஓரினத்தனவே. இடந்தோறும் சிறு பான்மை வேறுபாடுடையன. விந்தியத்திற்கு வடக்கேயுள்ள இசைமுறை இந்துஸ்தானி யெனப்படும். அதுவும் இசைவிரிவில் ஒரு பகுதியில் அடங்குவதே.

சிலர் தமிழ்ச் செய்யுளோசை விகற்பங்களையும், அவற்றிற்கேற்ற தாள விகற்பங்களையும் இசைத் தமிழின்பாற் படுத்துப் பேசுவதுண்டு. அவர்கள் தாழிசை, வண்ணம் முதலியவற்றைத் தமிழிசைச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர். எவ்வகை இனிய ஓசையினையும் இசையென்பார் கருத்திற்கு அது இணங்குவதாகும்.

இசையில் இயைபு இசை, இன்னிசை என இருபெரும் பகுதி பேசப்படும். பல இசைக் கருவிகளின் ஒற்றுமையா லெழும் ஓசை நயத்தை இயைபிசை (Harmony) என்பர். அது மேலை நாடுகளில் சிறப்பாக விரிவடைந்துள்ளது. இசையின் இனிமை விகற்பங்களை ஒழுகிசைத் திறங்களென்பர் (Melody). அதுவே தமிழிசையின் சிறப்பு நயமாகும். இசை விகற்பங்களின் அடிப்படைகளைச் சுரம் என்பர். ஒவ்வொரு பண் அல்லது இராகத்திற்கு வெவ்வேறு சுரங்கள் குறியீடாக உள்ளன. சுரம் இரண்டு இணைந்து வருவதைக் கமகம் என்பர். கமகம் இல்லாமல் இசை நயத்தின் இனிமை புலனாவதில்லை என்பர் இசை யறிஞர்.

இயற்றமிழ்க் கருத்துக்கள் அளவில்லாமல் விரிவதுபோல, தமிழிசை வகைகளும் அளவில்லாமல் விரிவன வென்பது இசைநூலார் கருத்து. திருஞான சம்பந்தப் பெருமான் பாடியருளிய தேவாரப் பதிகத்தின் இசை, யாழினைக் கடந்து நிற்பதைக் கண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது யாழினை முறிக்கத் தொடங்கியபோது இசையின் தன்மை அளவிலடங்காததென்று சம்பந்தர் பாணர்க்கு அறிவுறுத்தினமை காண்க. "அளப்பில கீதஞ் சொன்னார்க்கடிகள்தாம் அருளுமாறே" என்ற அப்பர் தேவார அடிக்குப் பொருள் கூறுமிடத்து அளப்பில என்னும் சொற்றொடரைக் கீதத்திற்கும் அருளுமாறு என்பதற்கும் தனித்தனி யியைத்துக் கொள்க.

தமிழிசை வளர்ச்சி குன்றிய பிற்காலத்தே தெலுங்கில் இசைப் பாட்டுகள் மிகுந்தன. இசை வகைகளுக்கு அவைகள் சிறந்த உதாரணமாயின. தமிழினுந் தெலுங்கு இனியதென்றும் தெலுங்கிலேதான் இசை கற்பிக்க இயலுமென்றும் சிலர் கூறுவதெல்லாம் பற்றுள்ளத்தின் பயனே யன்றி உண்மையாகாதென வுணர்க. தமிழ் என்ற சொல்லே இனிமை என்னும் பொருளுடையது. தெலுங்கிசையின் தோற்ற வளர்ச்சிக்கு முன்னும் பின்னும் எண்ணிறந்த இசைப் பாடல்கள் தமிழிலே தோன்றியுள்ளன. இசைக் கலையின் சில பகுதிகளுக்கு ஏற்ற தமிழ்ப் பாடல்கள் பேணப்படாது மறைந்திருத்தல் கூடும். அவற்றிற்குப் பதிலாகப் புதுப் பாடல்கள் அமைத்தல் எளிதே. அம் முயற்சி தழைக்குமாறு மாட்சிமை தங்கிய செட்டிநாட்டரசர் அளித்திருக்கும் நன்கொடைக்குத் தமிழுலகம் என்றுங் கடமைப்பட்டுள்ளது. விரைவில் தமிழிசை தனது பண்டைப் பெருமையை அடையுமென்பது திண்ணம்.

தமிழின்னிசையானது உயிரையும், உள்ளத்தையும், ஊனையும் உருக்குந் தன்மையது. அமுத ஓசையால் உடல் வளர்ச்சியும் மாறிய ஓசையால் உடலழிவும் ஏற்படுமென்பது மந்திர நூலார் கருத்து. பண்டைத் தமிழர் நாவினால் தீண்டிக்கொல்லும் அசுணமாவை யாழிசையினால் தீங்கில்லாமல் மெலிவித்தும் பறையோசையால் கொல்வித்தும் வழி நடந்தனரென்பது நூல்களாலறியக் கிடப்பதொன்றும்.

இசை யென்பது எல்லாவற்றையும் இசைவித்து ஒன்றுபடுத்துந் தன்மையது. உலகமொடுங்கிய பின் அதனை மீட்டும் படைப்பதற்கு இறைவன் இனிய ஒலியை எழுப்புகின்றானென்பார் 'வருங் கடல் மீள நின்றெம் மிறை நல்வீணை வாசிக்குமே' என்றார். பசுக்களைக் காக்கும் கண்ணன் குழலூதுவதனால் அவற்றை ஒற்றுமைப்படுத்தித் தன்பால் சேர்த்துக்கொள்கின்றான் என்ப. இக் கருத்தே பற்றிச் சம்பந்தர்

'கனைத்த மேதி காணாதாயன் கைமேற் குழலூத
அனைத்துஞ் சென்றங் கணையுஞ்சோலை
அண்ணாமலையாரே'

என்றார். இசையானது கீழ்ப் பிராணிகளையும் இன்புறுத்துந் தன்மையதென்பதும், இரக்கம், வீரம், காதல், இறையன்பு முதலிய வுணர்ச்சிகளை எளிதில் எழுப்பும் என்பதும் யாருமறிந்த வுண்மைகளாகும்.

யாழினிசையால் மதயானையை வசப்படுத்திய செய்திகள் பெருங் கதையிலும், சிந்தாமணியிலும் தெள்ளிதிற் காணப்படும். பெரிய புராணத்திற் போந்த ஆனாயர் வரலாற்றில் இசையின் தனிப்பெருமை அழகாக விதந்தோதப்பட்டுள்ளது. மாறுபட்ட பிராணிகளாகிய மயிலும் பாம்பும், சிங்கமும் யானையும், புலி

வாய் நாற்றத்தைப் போக்குவதில் சிறந்தது எல். பழநியப்பாஸ்' பற்போடி

யும் மானும் ஓரிடத்தில் ஒன்றையொன்று வருத்தாது நின்றன வென்றும், காற்று அருவி முதலிய அசை பொருள்கள் அசைவற்றிருந்தன வென்றும் ஆசிரியர் சேக்கிழார் கூறும் நயம் பாராட்டத் தக்கது. அக்கருத்தை யுணர்த்தும் இரண்டு பாட்டுகள் வருமாறு.

நலிவாரு மெலிவாரு முணர்வொன்ற நயத்தலினல்
மலிவாய்வெள் ளெயிற்றரவ மயின்மீது
மருண்டுவிழும்
சலியாத நிலையரியுந் தடங்கரியு முடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.

மருவியகால் விசைத்தசையா மரங்கள்மலர்ச்
சினைசலியா
கருவரைவீ ழருவிகளுங் கான்யாறுங் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப்
புனல்சோரா
இருவிசும்பி னிடை முழங்கா வெழுகடலு
மிடைதுளும்பா.

ஆனாயர் மெய்யன்புடன் திருவைந் தெழுத்தைப் பாடினமையால் அவருடைய இன்னிசை கேட்டு மகிழ்ந்து மாதொரு பாகனார் அவரிருக்கும் இடத்திற்கு வந்தருளிக் காட்சி கொடுத்தனர் என்பார்,

ஆனாயர் குழலோசை கேட்டருளி யருட் கருணை
தானூறு திருவுள்ள முடையதவ வல்லியுடன்
கானூறு திகாரணராய் கண்ணுதலார் விடையுகைத்து
வானூறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ.

என்றார்.

இயலும், இசையும் கலந்த விடத்துத்தான் உள்ளத்திற்கும், செவிக்கும் ஒத்த வின்பம் புலப்படும். இசைப் பாட்டின் பொருள் விளங்காது. இசை யொலி நலத்தை மாத்திரம் நுகர்தல் உள்ளக் கிளர்ச்சிக் கேதுவாகாது. ஆதலின் தமிழ் மக்கள் தமிழிசைப் பாடல்களையே ஆதரிக்க முயலல் வேண்டும். அறிவியல் நூல்களைத் தமிழில் தற்காலத்திற் கற்பிப்பதுபோல இசையையுந் தமிழிலேயே கற்பித்தற்கு வேண்டிய முயற்சிகள் தமிழ் மக்கள் எல்லாராலும் ஆங்காங்குச் செய்யப்படல் வேண்டும். பொருள் விளங்குந் தமிழ்ப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு உலகிலுள்ள வெவ்வேறு இசை முறைகளை அவற்றிலமைத்துப் பாடுவதை ஆதரித்தல் குற்றமாகாது. இயலையும், இசையையும் வேறு பிரித்தலே தவறாகும். பிற நாட்டினர்க்குத் தத்தம் மொழியிலும் இசையிலுமுள்ள பற்றுத் தமிழ் நாட்டினர்க்கு இயற்றமிழிலும், இசைத் தமிழிலும் உண்டாக்கப் பெற்று இசைத் தமிழ் தழைத்தோங்க வேண்டுமென்று முத்தமிழ்த் தெய்வத்தை மன, மொழி, மெய்களால் வேண்டுவோமாக.

---


### இனி அழுக்கினால் ஆபத்தில்லை

## ரிஜிஸ்டர் நெ. 11

**ரெங்கா சோப்புகளையே உபயோகியுங்கள்!**

ரெங்கா சோப்புகள் உயர்ந்த ரசாயன முறையில் அனுபோகமுள்ள ஆட்களைக் கொண்டு தயாரிக்கப் படுகிறது. துணிகளின் அழுக்கைப் போக்கி வெண்மையாக்கி துணிகளைப் பாதுகாப்பதில் அரசனென்றே சொல்லலாம்.

எல்லா அளவுகளிலும் எங்கும் கிடைக்கும்

**ஏஜண்டுகள் தேவை**

விவரங்களுக்கு எழுதவும்:
ரெங்கா சோப் பேக்டரி, சேலம்

புரோப்ரைட்டர்:
டாக்டர் G. R. R. Chary, L. I. M.

### "இரண்டு குடும்ப பொக்கிஷங்கள்"

## ஸ்திரீ புருஷ தத்துவம்

இதனால் காணாத சிற்றின்ப மர்மங்களும், லீலைகளும், வேறு எந்த நூலிலும் கிடையாது. இதுவரை நாம் தெரிந்து கொள்ளாத நூற்றுக்கணக்கான இன்பமடையும் முறைகளும் அநேக ஆப்டோன் படங்களும் உள்ளன. ஜாதிவகை, அமுதநிலை, லீலாமுறைகள் முதலிய ஏராளமான விஷயங்கள் அடங்கிய இப்புஸ்தகத்தின் விலை தபால் செலவுடன் ரூ. 2-6-0.

முன்பணம் அனுப்பவேண்டும்.
வி. பி. கிடையாது.

## கொக்கோகம்

இது பழைய மதன சாஸ்திரத்தைத் தழுவி, புதிய ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டது. 500 பக்கங்கள் 64 அத்தியாயம், 50 அழகிய படங்கள்.

விலை தபால் செலவுடன் ரூ. 2-10-0
முன்பணம் அனுப்பவேண்டும்.
வி. பி. கிடையாது.

**கமலா புத்தகசாலை,**
19, தெற்குச் சித்திரை வீதி, மதுரை.

# இந்திரா மாதப் பதிப்பின் ஏஜண்டுகள்

1. எஸ். மாரியப்பக் கோன், நெ. 42, வடக்குச்சித்திரை வீதி, மதுரை.
2. எம். கே. பொன்னையா பிள்ளை, நெ. 105, நோரீஸ் ரோட், கொழும்பு.
3. கே. எ. எம். பி. மீரா சாகிப், 8-9, வார்ட் ஸ்டிரீட், கண்டி.
4. எம். நாராயண நாயர், கீழராஜ வீதி, புதுக்கோட்டை.
5. எஸ். கே. சங்கரசுப்பிரமணியஞ் செட்டியார், அம்பாசமுத்திரம், வீரநல்லூர்.
6. எஸ். கே. முத்து ரெத்தினம், c/o ராமானுஜா டிபோ, செவ்வாபேட்டை, சேலம்.
7. டி. எம். கருப்பணன், மனேசியப்பா தெரு, தஞ்சாவூர்.
8. வசந்தா நியூஸ் ஏஜன்சி, சௌராஷ்டரபெட், பெங்களூர் சிட்டி.
9. கே. எஸ். நாராயணசாமி, டபீர் தெரு, கும்பகோணம்.
10. எஸ். சுந்தரேச அய்யர், நியூஸ் ஏஜண்டு, செட்டிநாடு.
11. செல்லப்பா அன் சன்ஸ், கல்லுக்கட்டி, காரைக்குடி.
12. கே ராமசாமி நாயுடு, நியூஸ் ஏஜண்டு, பஸ் ஸ்டாண்டு, திருப்பத்தூர்.
13. ஆர். சீனிவாசன் அன் கோ., கீழச்சிவல்பட்டி.
14. சி. என். நாராயணன், நியூஸ் ஏஜண்டு, ராஜாத் தெரு, கோயமுத்தூர்.
15. ஏ. சுவாமிநாதன், டிப்புத் தெரு, திருவனந்தபுரம்.
16. என். கிருஷ்ணன், நியூஸ் ஏஜண்டு, நான்குநேரி.
17. கே. சுப்பிரமணியம் நியூஸ் ஏஜண்டு, திருப்பூர்.
18. சி. கே. கணேசன், நியூஸ் எஜண்டு, நாகர்கோவில்.
19. வி. கே. ரமணி, நியூஸ் ஏஜண்டு, சிதம்பரம்.
20. வெற்றிக்கொடி ஆபீஸ், விஜய நாராயணதாஸ் ரோடு, மவுண்ட் ரோடு, சென்னை.
21. தி. கா. பிரமநாயகம் பிள்ளை, திருநெல்வேலி.
22. கே. வி. சங்கபதி நாயுடு, கரூர்.
23. ஸ்ரீ வெங்கட்டரமண ஸ்டோர்ஸ், நெ. 60, உஸ்மான் ரோடு, தியாகராய நகர், மதராஸ்.
24. வி. வி. சுந்தரராஜலு நாயுடு, நியூஸ் ஏஜண்டு, பெரியகுளம்.
25. பால சுப்பிரமணியம் மார்ட், நியூஸ் அண்டு ஜெனரல் மெர்ச்செண்ட்
நெ. 27, புசித் தெரு, பாண்டிச்சேரி.
26. ஏ. பொன்னுச்சாமி பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, பெரிய பஜார், பழநி.
27. ஏ. எம். அந்தோணி, நியூஸ் ஏஜண்டு, கண்ணபிரான் தெரு, ராபர்ட்சன்பேட்டை,
(K. G. F.)
28. எஸ். கே. அப்துல்ரஹீம், நியூஸ் ஏஜண்டு அண்டு புக்ஸ்டால், பாம்பன்.
29. K. கோபால் செட்டியார், நெ. 40, மெயின் ஸ்டீர்ட், ஹட்டன், சிலோன்.
30. சித. உ. சிதம்பரம் செட்டியார், நியூஸ் ஏஜண்டு, ராமச்சந்திரபுரம், திருமயம்.
31. A. கோபால், நியூஸ் ஏஜண்டு, பவானி.
32. A. G. சீனிவாசாச்சாரியார், நியூஸ் ஏஜண்டு, செங்கல்பட்டு.

33 K. ராமய்யா பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, பிடாரி கோவில் தெரு, திருவாரூர்.
34. K. சீனிவாசன், சென்டிரல் நியூஸ் ஏஜன்ஸி, லாங்பஜார், வேலூர்.
35. செல்லம் அண்ட் கம்பெனி, நியூஸ் ஏஜண்டு, திருச்செங்கோடு.
36. ஏ. எஸ். பொன்னுச்சாமி பிள்ளை, பொடி வியாபாரம், சீர்காழி.
37. P. சண்முகம், மெர்ச்சண்ட் அண்டு நியூஸ் ஏஜண்டு, ஈரோடு.
38. டி. குஞ்சிதபாத தேசிகர், 30, சிவலிங்க முதலி தெரு, கூடலூர் O. T.
39. கே. வி. ஆர். லிங்கம் அண்டு கம்பெனி, நெ. 66, பெரிய பஜார், திருச்சினப்பள்ளி.
40. எஸ். கோவிந்தராஜலு, குத்தாலம், மாயவரம்.
41. லெ. அருணசலன், தேவகோட்டா நியூஸ் ஏஜன்ஸி, தேவகோட்டை.
42. ஆர். எஸ். மணி அய்யர், நியூஸ் ஏஜண்டு, திருவண்ணமலை, N. A. Dist.
43. கே. வி. ஜெயராம் நாயுடு, ஜெனரல் மெர்ச்சண்ட், மன்னர்குடி.
44. வி. ஆர். கே. குப்புசாமி பிள்ளை, ஜெனரல் மெர்ச்சண்ட் அண்டு நியூஸ் ஏஜண்டு, நெ. 6, கெண்டபோலா.
45. டி. தம்பித்துரை, நியூஸ் ஏஜண்டு, நெ. 67, கச்சேரி ஜங்ஷன், யாழ்ப்பாணம் (ஜாப்ன) சிலோன்.
46. கே. ஆர். சங்கரன், நியூஸ் ஏஜண்டு, ஆம்பூர், N. A. (M. S. M. Ry.)
47. நா. சங்கரன், நேஷனல் நியூஸ் மார்ட், நாராயண செட்டித் தெரு, தூத்துக்குடி.
48. கேப்ரியல் மிராண்டா அன் சன்ஸ், மாஸ்கேலியா, சிலோன்.
49. எல். ஜி. பிச்சை, நியூஸ் ஏஜண்டு, பரமக்குடி.
50. எம். ஓ. முருகேச பிள்ளை அண்டு சன்ஸ், ஜெனரல் மெர்ச்சண்ட், நாவலபிட்டியா (சிலோன்)
51. கே. சுப்ரமண்யன், நியூஸ் ஏஜண்டு, நேஷனல் ஹோம், போளூர் N. A.
52. கே. எம். மதன், நேஷனல் நியூஸ் ஏஜன்ஸி, கோடகிரி, நீலகிரி.
53. இண்டியன் நேஷனல் நியூஸ் மார்ட், ஸ்லேவ் அயலண்டு, கொழும்பு, சிலோன்.
54. சுதேசமித்திரன் புக் ஸ்டால், மவுண்ட் ரோடு, மெட்ராஸ்.
55. பி. என். நரசிம்மன் c/o பி. பி. நடேசன், நெ. 185, மேற்கு அக்ரகாரம். கொடுமுடி, S. I. R.
56. எஸ். அமீர் அலி, மவுண்டெய்ன் நியூஸ் ஹால், உதகமண்டலம்.
57. வேதம் அண் கோ., ஸ்டேஷனரி சப்ளையர் அண்டு ஏஜன்ஸி, நெ. 86, மொகல் ஸ்டீரீட், ரெங்கோன்.
58. சுந்தரம் பிள்ளை, நியூஸ் ஏஜண்டு, மெர்ச்சண்ட் ஸ்டீரீட், டாங்கோ.
59. அப்துல்குத்தூஸ், பஸ் ஸ்டாண்டு, தருமபுரி.

**எல்லா சுதேசமித்திரன் ஹிக்கின்பாதம்ஸ் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்**

---


## AGENCY WANTED

தாங்கள் தயாரிக்கும் பொருள்களைப் பரப்பவும் இதர வியாபாரங்களை விருத்தி செய்யவும் கீழ்க்கண்ட ஜெனரல் ஏஜெண்டுக்கு எழுதினால் இலாபம் அடையலாம்.

GENERAL AGENT: **S. N. MUNUSAMY RAJU,**
No. 4, MAIN BAZAAR SALEM, S. I.

தந்த ரோகங்களை நிவர்த்திப்பது எல். பழநியப்பா'ஸ் பற்பொடி ஒன்றே

கோவை

கந்தன் & கோ.

தயாரிக்கும்

நடிகர்கள் :

P. B. ரங்காச்சாரி

M.R. சந்தானலக்ஷ்மி

T. S. துரைராஜ்

நடிக்கும்

ஆராய்ச்சிமணி

அல்லது

மனுநீதிகண்ட சோழன்

விரைவில் எதிர்பாருங்கள்

மற்ற விபரங்களுக்கு :

கந்தன் & Co., கோயமுத்தூர்

Supplement to INDIRA issue dated 1-10-41



# வாரும் தோழரே!

எம்.கே.எஸ்

இராகம்—சுருட்டி தாளம்—ஆதி

## பல்லவி

வாரும் தோழரே! விரைவுடனே
வாரும் தோழரே! வாரும் தோழரே!

## அனுபல்லவி

சீரும் திருவும் பொலி செல்வ செட்டி நாடெனும்
பேரும் புகழும் நிறை பெரும் பதி தனக்கே நீர் வாரும் தோழரே!

## சரணங்கள்

அண்ணாமலைப் பல்கலைக் கோயில் ஆக்கிய கீர்த்தி
அண்ணாமலை அரசின் ஆனந்த விழா காண வாரும் தோழரே!

ஆறுபத்தாண்டு பூர்த்தி ஆகா அதென்ன நேர்த்தி!
கூறுதற்கு வொண்ணுமோ கோமான் விழாவின் சீர்த்தி வாரும் தோழரே!

விண்ணும் வியக்கும் வியன் வேந்தன் அண்ணாமலைப்பேர்
கண்ணுக் கினியன் விழா கண்டின் புறுதற்கே தான்! வாரும் தோழரே!

மன்னவர் கண்டுமனம் மகிழ் நிறைக் கடலாழ்ந்தார்
எண்ணரிய தவத்தோன் எழில் விழா கண்டுவந்தார் வாரும் தோழரே!

பாரத நாடு செய்த பாக்கியமாய் உதித்தோன்
ஆரமுதம் போல் மக்கட் கான கலை அளித்தோன் வாரும் தோழரே!

முத்தமிழ் வல்ல பெரும் முதியர் அறிஞர்களும்
நித்தியானந் தமுறும் நகரில் நல்விழா காண வாரும் தோழரே!

செல்வத் திருமடந்தை சேய நீ வாழி யெனச்
சொல்லச் சரஸ்வதி யாழ் செய்யும் இசை பருக வாரும் தோழரே!

## வள்ளல் ராஜா சர் அண்ணாமலை

அவர்களை வாழ்த்தி

ஆசிரியர் M. N. முத்துக்குமாரசாமி பாவலர் அளித்த

# வாழ்த்துப் பாடல்கள்

(உலகமீதேனோ வீணாசை—என்ற மெட்டு)

இராகம் : மாண்டு தாளம் : ஆதி

பல்லவி

ஆண்டு விழா நாமே—காண
ஆவலுடன் வருவீர்—அறுபது (ஆ)

அனுபல்லவி

யாண்டுமே அண்ணாமலை வள்ளல் பேரே
ஆனந்தமாய்ப் பாடி—அனைவருமே கூடி (ஆ)

வாணிபர்க்கதிபன் வாழ்ந்து பல்லாண்டு
வையமே இன்புறும் ஐயன் அண்ணாமலையின்
வாழ்த்துவோம் ஒன்றாய் வாரீரே (ஆ)

(எந்தனிடதுதோளும்—என்ற மெட்டு)

இராகம் : கரஹரப்ரியா தாளம் : ஆதி

பல்லவி

எங்கள் தமிழிசையை
என்றும் வளர்க்கப் பெரும்
இன்ப வழி கண்டதைச் சொல்—சொல்—
சொல்—கிளியே (எங்)

அனுபல்லவி

மங்கள சுபகர மன்னன் அண்ணாமலையார்
மகிழ்ந்து செய்தார் தொண்டு—பார்—பார்
—பார்—கிளியே (எங்)

சரணம்

தங்கும் பொறுமைகுண சங்கசேவை மிகுத்
தோன்
துங்கமிலங்கும் வள்ளல், தான்—காண்
—மாண்பு மிகும் (எங்)

மங்காத பேருடையார் பங்காளன் ஏழை
கட்கே
பாங்காய் பல்லாண்டு வாழ—சொல்—சொல்
சொல்—கிளியே (எங்)


## கிருஷ்ணகுமார்

மதுரை, திருநெல்வேலி, திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், மைசூர் ஸ்டேட் ஆந்தரா நாடுகளின் உரிமையாளர்கள்.

☆

## ஜீவன் ஜோதி

உன்னத தெலுங்கு படம்

வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல் பட், சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராம னாதபுரம், திருநெல்வேலி, திருவாங்கூர், கொச்சின் ஸ்டேட், மலபார், தஞ்சை, திருச்சி னாப்பள்ளி, புதுக்கோட்டை, நீலகிரி, பாண் டிச்சேரி, காரைக்கால்—முதலிய நாடுகளின் உரிமை.

விசாலக்ஷிமி பிலிம்ஸ், சேலம்.

மாயவரம்

## R. S. கிருஷ்ணா & கோ.,

ஒரிஜினல் Regd. No. 25723

அசல் தென்னமரக்குடி எண்ணை ஒன்றே!

கைகால் ஒடிதல், சுளுக்கு, சகல வாய்வு, ஆருத ரணம், சொரி, நமைச்சல், படர்தாமரை, மூச்சுப் பிடிப்பு, முதலியவைகளுக்கு அளவற்ற குணம் தரும்.

## R. சந்தான கிருஷ்ண நாயுடு,

ஷாப், கலவைச்சந்தனம், தென்னமரக்குடி எண்ணை, F. L. சோப் மேக்கர், மாயவரம்.

தந்தி : பிலிம்சிங் டெலிபோன் : 86170

# ஏ எல். ஆர் எம். கம்பெனி,

## 24, Pantheon Road, Egmore, Madras.

1. **பவளக்கொடி** :—K சுப்ரமண்யம், B.A.B.L. டைரக்ட் செய்தது. M. K. தியாகராஜ பாகவதர், S. D. சுப்புலக்ஷிமி, S. S. மணி பாகவதர் மற்றும் பலர் நடித்தது. (கலர் படம்)

2. **சந்திரஹாஸா** :—(தமிழ் புராணப்படம்). M. R. சந்தானலக்ஷிமி, P. B. ரங்காச்சாரி, V. N. சுந்தரம் மற்றும், பலர் நடித்தது.

3. **மடசாம்பிராணி** —(முழுதும் தமிழ் ஹாஸ்யப் படம்).

4. **மாத்ருபூமி**:—கிருஹலக்ஷிமி புகழ் பெற்ற H. M. ரெட்டி, டைரக்ட் செய்தது. P. U. சின்னப்பா, T. S. சந்தானம், K. K. பெருமாள், T. V. குமுதினி, A. K. ராஜலக்ஷிமி, கோல்டன் சாரதாம்பாள் முதலியவர்கள் நடித்தது. ஹாஸ்ய நடிகர், காளி N. ரெத்தினமும் இதில் நடிக்கிறார்.

5. **தற்போதைய யுத்த சமாசாரங்கள்**:—முழுநீளமுள்ளதும், ஏராளமான பொருள் சிலவிலும் தயாரிக்கப்பட்டது.

6. **ஊர்வசி சாகசம்**—M. R. கிருஷ்ணமூர்த்தி, K. சாம்பமூர்த்தி (பவானி), P. மஹாதேவன், P. B. ரங்காச்சாரி, பரத நாட்டியம் K. சுப்புலக்ஷிமி, மற்றும் பலர் நடித்தது.

**[தஞ்சாவூர், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு டிஸ்ட்ரிக்ட், மதராஸ், மட்டும்]**

7. **மணி மாலை**—(ஒன்றில் நான்கு)
   1. **ஆஷாடபூதி**:—P. B. ரங்காச்சாரி, T. V. சேதுராமன், T. S. ஜெயா, K. S. ஆதிலக்ஷிமி முதலியோர்கள் நடித்தது.
   2. **மைனரின் காதல்**:—T. S. துரைராஜ், M. R. சுவாமிநாதன், P. R. மங்களம், K. S. ஆதிலக்ஷிமி முதலியோர்கள் நடித்தது.
   3. **அப்பூதி அடிகள்**:—P. B. ரங்காச்சாரி, P. G. வெங்கடேசன், V. N. சுந்தரம், மாஸ்டர் சிவம், T. N மீனாட்சி, கிருஷ்ணபாய் முதலியோர்கள் நடித்தது.
   4. **நவீன மார்க்கண்டேயா**:—காளி N. ரத்னம், T. R. ராமச்சந்திரன், K. ஹிரண்யாய்யா, ரத்னப்பா, T. V. அன்னபூரணி முதலியோர் நடித்தது.

**[சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு, பாண்டிச்சேரி, ஆந்திரதேசம், எப். எம். எஸ். & பாரின், மட்டும்]**

## கனிவு நிறைந்த கவி



சி. தேசிக விநாயகம் பிள்ளை

இவர்களுடைய கனிவு நிறைந்த கவி பிறிதோரிடத்தில் வெளியாகியுள்ளது.

## "கல்கி"யின் கடிதம்

★



ரா. கிருஷ்ண மூர்த்தி

ஆசிரியர்: 'கல்கி'

இவர்களுடைய அன்பு நிறைந்த கடிதம் பிறிதோரிடத்தில் வெளியாகியிருக்கிறது.

★

VISIT

**A. K. & SONS**

FOR

FASHION SAREES, ETC.,

CHEAPEST HOUSE

CONJEEVARAM

TIRUNELVELI

SALEM

S. INDIA

ஒரே விலை

உயர்ந்த பட்டுப் புடவைகளும், மற்றுமுள்ள நவீன ஜவுளி ரகங்களும், சரசமாய் கிடைக்குமிடம்

காஞ்சீபுரம்

**அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்**

காசி கராச்சி பட்டு ஜவுளி வியாபாரம்

ஆடிசன்பேட்டை காஞ்சீபுரம் | கடைவீதி சேலம் S. I. R. | கீழரதவீதி திருநெல்வேலி

# ஐ. எஸ். எஸ். ஐயங்கார் அண்டு கம்பெனி

**17, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ்**

தந்தி :

ரைஸ்மில்









எல்லாவித பம்பு சாமான்களும்

மெஷினரி சாமான்களும் கிடைக்கும்

பிராஞ்சு ஆபீஸ்கள் :

**ரயில்வே ஸ்டேஷன்**

மாயவரம்

**29, மண்டி தெருவு,**
வேலூர்

**பெனிங்டன் ரோடு,**
தஞ்சாவூர்

**27, அருணாஜல ஆசாரி தெருவு,**
சேலம் டவுன்

# தமிழ் மறுமலர்ச்சி :: வித்தும் விளைவும்

**பி. ஸ்ரீ.**

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்து என்று சொல்லவேண்டும், ஆசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய **மனோன்மணீயம்** என்ற நவீன நாடகத்தை. ஆங்கில இலக்கிய கருத்துக்களோடு பொருந்தும்படி எழுதப்பட்ட இந் நாடகம் முதலாவதாக கி. பி. 1891-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இது **ஷேக்ஸ்பியர்** நாடகங்களின் ரகத்தைச் சார்ந்தது. **லிட்டன் பிரபு** செய்யுளாக இயற்றியிருந்த '**இரகசிய வழி**' (The Secret Way) என்னும் ஆங்கிலக் கதையை முதல் நூலாகக் கொண்டது. எனினும், இதுவும் ஒரு புதிய கலா சிருஷ்டியாகிய முதல் நூலேயாகும்.

*　　　*　　　*

தமிழ் இலக்கியத்தில் 'நாடகம்' அபிவிருத்தியடையவில்லை. முத்தமிழில் நாடகமும் ஒன்றாக மதிக்கப்பட்ட போதிலும், நாட்டியம் அல்லது கூத்தையே பழைய தமிழர்கள் 'நாடகத் தமிழ்' என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அந்த நாடகத் தமிழை நாளடைவில் நாடக இலக்கியமாக வளர்க்கக்கூடிய ஆற்றலும் தமிழர்களிடமிருந்தது. ஆனால் போர் வெறி கொண்ட பண்டைப் பழங்காலத் தமிழர்களுக்கு நாடகத் தமிழைச் சிறந்த கலையாக்குவதற்கு உரிய அவகாசமும் இல்லை; மனப்பான்மையும் இல்லை. இந்நாட்டில் பரவிவந்த **ஜைன பௌத்தக்** கொள்கைகளும் நாடகக் கலையின் வளர்ச்சிக்குப் பிரதிகூலமாகவே அமைந்தன. இந்த நிலையில் தமிழ் வடமொழியைத் தழுவி வளர்ந்த காலத்திலும், காளிதாஸன் பவபூதி முதலான ஆசிரியர்களின் நாடகத் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே, ஆசிரியர் சுந்தரம் பிள்ளை தமது 'மனோன்மணீய'த்திற்கு **ஷேக்ஸ்பியரை** முன்மாதிரியாகக் கொள்ளவேண்டியதாயிற்று.

*　　　*　　　*

லிட்டன் பிரபுவின் கதையை ஒரு தமிழ்க் கதையாகவே உருமாறி பிறக்கும்படி செய்துவிட்டார் நமது ஆசிரியர். "தமிழ்ச் சரித்திர சம்பந்தமான ஒரு கதையோ?" என்று கூடப் பிரமிக்கும்படி செய்துவிட்டார். இந்தக் கதையில் வரும் பிரதான பாத்திரங்களெல்லாம் **லிட்டனுடைய** ஆங்கிலக் கதையிலே காணப்படுகின்றன. கதாநாயகியான **மனோன்மணி**, அவள் தந்தையான **ஜீவகன்**, இவர்களுடைய குருவான **சுந்தர முனிவர்**, மந்திரியான **குடிலன்**, சேர மன்னனாகிய **புருஷோத்தமன்** இவர்களெல்லாம் இரவல்—பாத்திரங்களே. சுந்தரம் பிள்ளையின் சுந்தர முனிவருக்குப் பக்தி அதிகம்; குடிலனுக்கு **அயோக்கியதை அதிகம். அவ்வளவுதான்.** கதாநாயகியும் அவளுடைய தந்தையும் நாடக பாத்திரங்களாவதற்கு இன்றியமையாத மாறுதல்களையே பெற்றிருக்கிறார்கள். மற்றப்படி கதையின் முக்கிய அம்சங்களிலும், சில சில்லரை அம்சங்களிலும்கூட இந்த நாடகம் குறித்த ஆங்கிலக் கதைப் போக்கைத் தழுவிச் செல்லுகிறது. ஆனால், கதையை நாடகமாக்குவதற்காகக் கூட்டியும் கழித்தும் இவர் கைக்கொண்டிருக்கும் உபாயங்களெல்லாம் ஷேக்ஸ்பியரைத், தழுவிய ஒரு புதிய முறை. கதையைத் தமிழ்க் கதையாக்குவதற்கு இவர் கைக்கொண்டிருக்கும் உபாயங்களும் பாராட்டத் தக்கன. உயர்ந்த லட்சியங்களையும் வேதாந்தக் கொள்கைகளையும் தமிழர் உள்ளத்திற்கு அமுதமாகும்படி அமைத்திருக்கும் ரீதியும் பாராட்டத் தக்கது. எனவே, இந்த நாடகத்தைத் தமிழ் இலக்கியத்தில் ஒரு புதிய சிருஷ்டி என்றே தைரியமாகச் சொல்லலாம்.

*　　　*　　　*

நாடக பாத்திரங்களின் குணாதிசயம் நன்றாகச் சித்திரிக்கப்படுகிறது—ஆம், உலக இயற்கைக்குப் பொருத்தமாக. சம்பாஷணைகளாலும் செயல்களாலும், குணாதிசயங்கள் வளர்ந்துகொண்டே வருகின்றன. கதாநாயகி தோன்றும் காட்சிகள் சிலவே. எனினும், மனோன்மணிதான் கதாநாயகி என்று ஒப்புக்கொள்ளும்படி அவளுடைய குணாதிசயம் எங்கும் ஊடுருவிக் கிடக்கிறது. கதாநாயகியும், அவளுடைய காதலனான புருஷோத்தமனும், சுந்தர முனிவரும், நாராயணன் நடராஜன் என்ற கதா பாத்திரங்களும், குடிலனுடைய அயோக்கியதையை முடிவில் வென்று ஒழிக்கும் சக்திகளாக அமைந்திருக்கின்றன. மனோன்மணியின் தோழியான **வாணியும்** உறுதியான குணமுள்ள கதா பாத்திரமாக அமைக்கப்படுகிறாள். ஆனால், தலைவிக்கு அறிவுத்திறம் அதிகம்; தோழிக்கு உணர்ச்சி அதிகம். மனோன்மணி பழைய கொள்கைகளின் சாரத்தைப் பொன்போல் போற்றுகிறாள்: வாணியையோ ஒரு புதுமைப் பெண் என்றே சொல்லிவிடலாம். வாணியின் காதலனான நடராஜன் தனிமையையும் இயற்கை அழகுகளையும் காதலிக்கும் கவியுள்ளம் படைத்தவன். ஜீவக மன்னன் ராஜ பரம்பரையில் வரும் சாதாரண மன்னன்தான். வீரமன்னன்; எனினும் உறுதியான உள்ளமும் உலகத்தை அறியும் அறிவுத் திறமும் படைத்தவனில்லை. எனவே, குடிலன் ஆட்டிவைத்தபடி யெல்லாம் ஆடுகிறான். இப்படி அரசனை ஆட்டிவைக்கும் குடில மந்திரியின்

வரம்பு கடந்த சுயநலமும் பேராசையும் சூழ்ச்சித் திறமும் இந்த நாடகம் முழுமையும் வியாபித்திருக்கின்றன. அரசனுக்கு மனித சுபாவத்தை அறிந்துகொள்ளும் அறிவு இல்லையென்றால், அமைச்சனுக்கு மனிதனுடைய யோக்கியதையில் நம்பிக்கையே கிடையாதென்று சொல்லவேண்டும். "தர்மம், அதர்மம் என்ற வார்த்தைகள் பாமரர்களை ஏமாற்றுவதற்கே கண்டுபிடிக்கப்பட்டவை!" என்பது குடிலன் கொள்கை. இக் கொள்கையே இவன் பகுத்தறிவுக் கண்ணை குருடாக்கி, முனிவரையும் சேர மன்னனையும் உள்ளபடி அறிந்துகொள்ள முடியாமல் செய்து, முடிவில் இவனுடைய சூழ்ச்சிகளையும் துரோகங்களையும் வெட்ட வெளிச்சமாக்கி விடுகிறது. இப்படிப்பட்ட கதாபாத்திரங்களை யெல்லாம் நாடகத்தின் முக்கிய நிகழ்ச்சிக்கு இசையும்படி இசைத்துக் குணதிசயங்களை நம் கண்முன் வளரச்செய்யும் ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் அறிவுத் திறமையும் நாடகத் திறமையும் தமிழறிஞர்களுக்கும், தமிழ் ரசிகர்களுக்கும் ஒரு புது விருந்தேயாகும்.

* * *

ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் நாடகத் திறமை போற்றத்தக்கது. எனினும், இது நடித்து அனுபவிக்கத்தக்க நாடகமன்று; படித்து அனுபவிக்கத் தக்கதுதான். இவரது கவித் திறமையும் விசேஷமானதன்று. பாரதியாரின் கவிதைபோல் சக்தியும் வேகமும் கொண்டு உள் மனத்திலிருந்தும் உள்ளொளியிலிருந்தும் பொங்கி வருவதன்று. புலமைத் திறத்தினாலும் அறிவுப் பெருக்கினாலும் செய்யப்பட்ட இக் கவிதை, ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையின் கவிதைபோன்ற உயர்ந்த கவிதையும் அன்று. எனினும் ஆசிரியர் சுந்தரம் பிள்ளைக்குத் தக்க தமிழ் பயிற்சியுண்டு. புதுமைத் தமிழ் எழுத்தாளர்களின் நடை பெரும்பாலும் ஜான் ஜில்ப்பின் குதிரையை ஞாபகப்படுத்துகிறது; அப்படியில்லை ஸ்ரீ சுந்தரம் பிள்ளையின் தமிழ். இவர், குதிரைவச மாவதில்லை; விரும்பிய இடத்திற்குக் குதிரையை நடத்தும் ஆற்றல் இவருக்கு உண்டு.

* * *

தமிழ் மறுமலர்ச்சியில், சிரத்தை யுள்ளவர்களெல்லாம் மனோன்மணீயத்தை நன்றாகக் கற்க வேண்டும். முதலாவது முயற்சி. ஆதலால் சிரத்தையோடு கற்கவேண்டும். இந்த வித்தின் விளைவாகவே பாரதியாரையும் தேசிக விநாயகம் பிள்ளையையும் கருதவேண்டும். இந்த விளைவு அதிகரித்து அதிகரித்து இனிமேல்தான் புதுமைத் தமிழ் என்ற சோலையாகத் தழைக்கவேண்டும்.

---


# K.M.K. திருப்பரங்குன்றம் கார்த்திகேயன் கம்பெனி

எங்கள் கம்பெனியில் தயாராகும் சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், குளிர்தாமரைத் தைலம், ஹேர் ஆயில், ஸெண்டு, அத்தர்கள், ஊதுபத்திகள், கேசர் பவுடர், நயம்பன்னீர், குல்கந்து, பற்பொடி, வாசனைப் பாக்கு, வாசனைச் சுண்ணாம்பு வாசனை விபூதி, நயம் சந்தன வில்லை, அரகஜா முதலிய வாசனைசாமான்களை வாங்கி உபயோகியுங்கள்.

எங்கும் கிடைக்கும்

ஏஜண்ட்:

**இந்தியன் டிரேடிங் ஏஜன்ஸி,**

4, பந்தர் தெரு, மதராஸ்.

**Stockist: முருகன் & Co.,**

*164, பவளக்காரத் தெரு, மதராஸ்.*



# சேலம் பிராவிடெண்டு சொஸைட்டி லிமிடெட், சேலம்.

## முக்கிய அம்சங்கள்

1. தென்னிந்தியாவிலே முதன்மை ஸ்தானம் பெற்றுள்ளது.

2. புதிய இன்ஷூரன்ஸ் சட்டத்தை அனுசரித்து வேலை செய்து வருகின்றது.

3. பாலிசிதாரருடைய பாதுகாப்பு நிதி 31-8-41 முடிய ரூ. 93,000-க்கு மேல் உள்ளது.

4. நடுத்தர குடும்பங்களுக்கு அவசியமான இன்ஷூரன்ஸ் திட்டங்கள்.

5. சொஸைட்டியால் வாங்கப்பட்ட செக்யூரிடிகள் ரூ. 64,700.

**"எல்லா இடங்களிலும் பொறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை"**

முழு விபரங்களுக்கும் கீழ்க்கண்டவரிடம் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

**V. ராஜகோபால், M.A.,**

காரியதரிசி.

## மகிழ்ச்சி

ஆசிரியர் 'இந்திரா' செட்டிநாடு.

அன்புடையீர்,

ராஜா சர். அண்ணமலைச் செட்டியா ரவர்களின் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியைத் தாங்கள் ஒரு விசேஷ மலர் வெளியிடுவதன் மூலம் கொண்டாடத் தீர்மானித் திருப்பது குறித்து அளவற்ற மகிழ்ச்சி யடைகிறேன். அவர்கள் தனவணிகர்களுக்காகவும், தமிழ் நாட்டாருக்காகவும் செய்துள்ள நன்மைகள் அளப்பரியன. கல்விக்காக அவர்கள் செய்துள்ள தொண்டு இவ் வுலகுள்ளளவும் நிலைத்து நிற்கும். கலைகளை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட தங்கள் பத்திரிகை இவ்வகையில் தொண்டாற்ற முன் வந்தது பாராட்டத் தக்கது.

அரு. அ. அண்ணமலை செட்டியார்
நேமத்தான்பட்டி.


ஏன் கஷ்டப்படுகிறீர்கள் ?
விதியை நினைத்து வருந்துவதில் பயனில்லை !
கஷ்டப்படுபவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் !

என்ன! உடம்பு ரொம்ப பலஹீனமா? கைகால்களில் அசரிக்கையா? தேகத்தில் இரத்த விர்த்தி இல்லையா? இந்திரியம் நீத்தும் போய்விட்டதா? எந்த வேலைகள் செய்யவும் மனம் நாடவில்லையா?

அப்படி தைரியத்தோடு செய்தாலும் அதிக அசரிக்கை தோன்றுகிறதா? நரம்புகள் பலஹீனமா? ஞாபக சக்தி குறைவா? அதிக உஷ்ணமா? சொர்பனஸ்கலிதமா? ஸ்திரீகளிடத்தில் வெட்கிக்க நேர்ந்துவிட்டதா!

எதற்கும் நீங்கள் உடனே

**மேஜிக் ஹல்வாவை உபயோகியுங்கள்**

குணமில்லா விடில் பணம் வாபஸ். பத்தியம் இல்லை. ஒரே வாரத்தில் ஆச்சரியமான குணத்தைத் தரும். ஆண், பெண், சிறுவர் முதல் விருத்தர் வரை யாவரும் சாப்பிடலாம். பூரண குணத்திற்கு ஒரு மண்டலம் சாப்பிட வேண்டும். விலை 24-தோலா ரூ. 5—0—0
12-தோலா ரூ. 3 0 0

Dr. T. M. S.

மேஜிக் கெமிகல் ஒர்க்ஸ், சேலம்.



கைலாஸ்
நியூ ஸ்டுடியோ
மதுரை

பிராஞ்ச் :— 8, செக்காலை ரோடு, காரைக்குடி

போட்டோ

என்லார்ஜ் மெண்டுகள்

கலர் போர்ட்ரெயிட்டுகள் சம்பந்தப்பட்ட சகல வேலைகளும், நவீன முறையில், சிறந்த வேலையாக செய்து தரக்கூடும். தங்கள் ஆதரவு தேவை.

எம். கைலாஸ்.




அ. சிதம்பரநாதச் செட்டியார்

இவர்கள் எழுதிய 'புகழாய பொருளோடு' என்ற கவி பிறிதோரிடத்தில் வெளியாகி யிருக்கிறது.

# ஸிப்கோ' சாமான்களுக்கு - - - - - ஈடெதிர் கிடையாது

**உங்கள் வீட்டிலுள்ள எல்லாவித உலோக சாமான்களையும் சுத்தப் படுத்தி பிரகாசிக்கச் செய்யும் - பவுடர் -**



## ரிட்




'*ரிட்*' என்னும் பாலிஷிங் பவுடர் சமையல்பாத்திரங்களின் மேலுள்ள கரி, அழுக்கு, களிம்பு, எண்ணெய் பசை முதலியவைகளை பிரமிக்கும் விதமாக நொடிப் பொழுதில் சுத்தம் செய்து பிரகாசிக்கச்செய்யும். சாம்பல், மண், புளி, சீயக்காய் தேவையில்லை. தீங்கற்றது.

*காந்தி:* எல்லா உலோகங்களையும் பளபளப்பாக்க எங்கள் '*காந்தி*'யை விட சிறந்த திரவ பாலிஷ் கிடையவே கிடையாது! தகரம் முதல் தங்கம் வரை உபயோகிக்கலாம். கண்ணைப் பறிக்கும் பளபளப்பு உண்டாக்கும்.

'*ஷைனுல்*' உங்கள் மோட்டாரின் பளப்பளப்பான பாகங்களை மினுக்க எதை உபயோகிக்கிறீர்கள்? '*ஷைனுல்*' பாலிஷிங் துணி, தங்கம், வெள்ளி, நிக்கல், பித்தளை, தாம்பிரம், E. P. N. S. முதலிய எல்லா உலோக சாமான்களையும் மின்னொளிபோல் பிரகாசிக்கச்செய்யும். சாமான்களின்மேல் கோடுகள் உண்டாக்காது. உபயோகத்திற்கு சுலபமானது. நீடியகாலம் ஒளியுடன் பிரகாசிக்கச் செய்வது.

*தயாரிப்பவர்கள்:*

**சவுத் இண்டியன் ப்ராடக்ட்ஸ் லிமிடெட்**
**மதராஸ்**

*ஸோல் டிஸ்ட்ரிப்பியூடர்கள்:*

**ஐடியல் ஏஜென்ஸிஸ்**
**148, பிராட்வே :: மதராஸ்**